
திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழி வழி பேரூராதீனம்
கயிலைக்குருமணி சீர்வளர்சீர் தெய்வத்திருப் பெருந்திரு

சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின்
அருள் வரலாறு




தொகுப்பாசிரியர்
கணக்கன்.மு.வேலுச்சாமிக்கவுண்டர்


தவத்திரு. சிவஇராமசாமி அடிகள்


சைவத்திரு. கற்பிணி அம்மாள்


உ
சிவமயம்
திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழி வழி பேரூராதீனம்
அருளாட்சி ஏற்பு விழாவில் குருமகா சந்நிதானம் கயிலைக் குருமணி
சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார்
அவர்கள் (1967)


உ
சிவமயம்
திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழி வழி பேரூராதீனம்
சிவ
சிவ
சிவ
சிவ
கயிலைக் குருமணி சீர்வளர்சீர் அடிகள்
பெருந்தகை அருளாட்சி ஏற்புப்
பொன்விழா (1967-2016)


அருள்நிறைந்த அடிகளார்




முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களுடன்
அடிகளார் அவர்கள்



பேரூர் ஆதீனம் தவத்திரு. சாந்தலிங்க மருதாசல அடிகளார்
அவர்களும் அவருடன் இந்திய குடியரசு துணைத்தலைவர்
மேதகு. சி.பி.இராதாகிருஷ்ணன் அவர்கள்



மெய்ஞானியுடன் விஞ்ஞானி!! – கோவை மாநகரில் 07–09–2013 அன்று நடைபெற்ற தமிழ்ப் பயிற்றுமொழி மாநாட்டில் அடிகளாருடன் அப்போதைய இந்திய குடியரசுத் தலைவர் உயர்திரு. **A.P.J. அப்துல் கலாம்** அவர்கள் கலந்து கொண்ட நிகழ்வு.



அடிகளாரின்
அமைதியான
அருள் தோற்றம்




முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களுடன்
அடிகளார் அவர்கள்



பேரூர் ஆதீனம் தவத்திரு. சாந்தலிங்க மருதாசல அடிகளார்
அவர்களும் அவருடன் இந்திய குடியரசு துணைத்தலைவர்
மேதகு. சி.பி.இராதாகிருஷ்ணன் அவர்கள்




மெய்ஞானியுடன் விஞ்ஞானி!! – கோவை மாநகரில் 07–09–2013 அன்று நடைபெற்ற தமிழ்ப் பயிற்றுமொழி மாநாட்டில் அடிகளாருடன் அப்போதைய இந்திய குடியரசுத் தலைவர் உயர்திரு. **A.P.J. அப்துல் கலாம்** அவர்கள் கலந்து கொண்ட நிகழ்வு.



அடிகளாரின்
அமைதியான
அருள் தோற்றம்



முன்னாள் அமைச்சர் துரை இராமசாமி அவர்கள்
அருட்செல்வர் ஐயா அவர்கள், அடிகளார் அவர்கள்



அடிகளார் அவர்களும்
அருட்செல்வர் அவர்களும்



இராசிபுரத்தில் அடிகளாருடன் மூத்த வழக்கறிஞர் R. காந்தி,
கை. கந்தசாமி மற்றும் வேளாண்குடி மக்கள்



அடிகளார்களுடன்
அடிகளார்கள்



முன்னாள் அமைச்சர் துரை இராமசாமி அவர்கள்
அருட்செல்வர் ஐயா அவர்கள், அடிகளார் அவர்கள்



அடிகளார் அவர்களும்
அருட்செல்வர் அவர்களும்



இராசிபுரத்தில் அடிகளாருடன் மூத்த வழக்கறிஞர் R. காந்தி,
கை. கந்தசாமி மற்றும் வேளாண்குடி மக்கள்



அடிகளார்களுடன்
அடிகளார்கள்



12-வது உலக சைவப்பேரவை மாநாட்டில் புரவலராக இருந்து வழிகாட்டிய பேரூர் அடிகளாருடன் சிவனடியார்கள்.



சென்னை பல்கலைக்கழகம் 2006 செப்டம்பரில் தனது 150-வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடிய போது அடிகளாரின் சீரிய பணிகளைப் பாராட்டி கௌரவித்து முதுமுனைவர் (Doctorate in Literature) பட்டம் வழங்கிய மகிழ்வான தருணம்.





அடிகளாருக்கு பட்டம் கொடுத்ததற்கு பாராட்டு விழாவிற்கு
அடிகளாரை அழைத்து வருதல்.



பாராட்டு விழா மேடையில் தவத்திரு. குமரகுரு அடிகளார் அருட்செல்வர் ஐயா விழாநாயகர் அடிகளார்.



கொங்குவேளாளக் கவுண்டர்கள் பேரவையின் தலைவர் ஐயா. R. தேவராஜன் அவர்கள் அடிகளாருக்கு மரியாதை செய்தல்.



சைவ சமய நெறியைப் போற்றி சிவபெருமானை
வணங்கும் அடிகளார்



பண்ணாரி அம்மன் குழுமத்தின் தலைவர்
உயர்திரு. S.V.பாலசுப்பிரமணியம் அவர்கள்
அடிகளாருக்கு மரியாதை செய்தல்.

திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழி வழி பேரூராதீனம் கயிலைக்குருமணி சீர்வளர்சீர் தெய்வத்திருப் பெருந்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அருள் வரலாறு

தொகுப்பாசிரியர் :

கணக்கன்.**மு.வேலுச்சாமி கவுண்டர்**

தாராபுரம்.

வெளியீடு :

அருள்திரு இராமானந்த மடாலயம்


சதுர்வேத சித்தாந்த சண்மதசமையாதீத

அத்துவித கௌமாரசபை

அன்பர்கள் சிறைத்தோட்டம்,

முதலிபாளையம், அன்னூர்,

கோவை – 641 107.



சாந்தலிங்கர் தாண் மலர் வாழ்க

கோவை மாவட்டம், அன்னூர் வட்டம் முதலிபாளையம், இராமானந்த மடாலயம், சிறைத்தோட்டம் தெய்வத்திருவாளர்கள் சிவராமசாமி சுவாமிகள், கர்ப்பினியம்மாள் அவர்களின் தவப்பயனாய் அவதரித்தவர் திருக்கயிலாய மரபுமெய்கண்டார் வழிவழி தெய்வப் பெருந்திரு சீர்வளர்சீர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரவர்கள், நம் போற்றுதலுக்குரிய அடிகளின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அவர்தம் அருள்வரலாற்று நூல், முதலிபாளையம் முத்தன்குலம் தெய்வத்திருவாளர்கள் இராமணகவுண்டர், இராயாத்தாள் அவர்களின் வழித்தோன்றல்களால் 17.10.2025 வெள்ளிக்கிழமை அன்று பேரூராதீனம் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடத்தில் வெளியிடப்பட்டது.

நூல் குறிப்பு

நூலின் பெயர் : **பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் வரலாறு**

தொகுப்பாசிரியர் : கணக்கன்.**மு.வேலுச்சாமி கவுண்டர்**
கொங்கு குலதெய்வ கோயில்கள் வழிபாட்டுப் பேரவை
தாராபுரம் – 638 656. செல் : 98436 75773

தாள் : மேப்லித்தோ

நூலின் அளவு / தாள் : டெம்மி 1 x 8

எழுத்து : 12 புள்ளிகள்

பக்கம் : 264

படிகள் : 1000

நன்கொடை : ரூ. 150 /–

பதிப்பு : முதல் பதிப்பு

அச்சிட்டோர் : **ஓவியாகிராபிக்ஸ்**, திண்டுக்கல்.
போன் : 98429 30307

அச்சுஎழுத்து : 12 புள்ளிகள்

திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழி வழி பேரூராதீனம்

கயிலைக்குருமணி சீர்வளர்சீர் தெய்வத்திருப் பெருந்திரு.

சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

அருள் வரலாறு

பொருளடக்கம் :–

திருக்கயிலைப் பரம்பரை மெய்கண்ட சந்தானம்
பேரூராதீனம் இருபத்தைத்தாம் குருமகாசந்திதானங்கள்,
கயிலைப்புனிதர் முனைவர் திருப்பெருந்திரு
சாந்தலிங்க மருதாசல அடிகளார் பேரூராதீனம், பேரூர்,
கோயம்புத்தூர் – 641 010. அலைபேசி : + 9198947 61125

Holy Kalash Hentage Mekandar Heirarcy
Perur Maha samasthan,
Maha Mandaleshar, His Holiness
Dr.Santhalnga Marudhasala Adihal
Penur Adheenam, Perur,
Coimbatore - 641 010.
E:omadihal@gmail.com|Perumutt@yahoo.com



அருள்வாழ்த்துரை

"பத்திநெறி அறிவித்து பழவினைகள் பாறும் வண்ணம்" என்பது மாணிக்கவாசகர் திருவாக்கு. இவ்வாக்கிற்கேற்ப நமது பழவினைகளை நீக்கி முத்திநெறியை வழங்கும் நெறி பத்திநெறி. இத்தகைய பத்திநெறி அனைவருக்கும் சமமானதாகவும் அமைதல் வேண்டும். திருக்கயிலாயப் பரம்பரை மெய்கண்ட சந்நிதானம் பேரூராதீனம் இருபத்துநான்காம் குருமகாசந்திதானங்கள் தெய்வத்திருப்பெருந்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் பத்திநெறியை அனைவரும் கொண்டு சேர்க்கும் நோக்கில் அனைவரும் அர்ச்சகர் ஆகலாம். அனைவரும் திருக்கோயிலில் சென்று வழிபாடுகள் செய்தல், தமிழ்த்திருக்குட நன்னீராட்டு ஆகியவற்றை நடத்திய பெருமைக்குரியவர்கள்.

1953ஆம் ஆண்டு பல்வேறு தடைகளுக்கு இடையில் வெள்ளக்கிணறு வெ.சி.சுப்பையகவுண்டர், கோவைகிழார் ஆகிய சான்றோர்களின் ஒத்துழைப்போடு பேரூர்ப் பட்டிப்பெருமான் திருக்கோயிலில் தமிழில் மலர் அர்ச்சனை வழிபாட்டைத் தொடங்கி ஆதீனத்தமிழ்க் கல்லூரியைத் தோற்றுவித்தவர். அடுத்த ஆண்டாகிய 1954ஆம் ஆண்டில் என் தமிழில் வழிபாடுகளைச் செய்யக்கூடாது என்ற கேள்வியுடன் முதன் முதலாக கணபதியில் சிரவையாதீனம் மூன்றாம் குருமகாசந்திதானங்களை இணைத்துக் கொண்டு திருநெறிய ஒண்தீந்தமிழ்நெறி வழிபாட்டை மறுமலர்ச்சி அடையச் செய்த பெருந்தகையாளர். தமிழ்நெறி வழிபாடுகள் தமிழகம் மட்டுமல்லாது அயலகத்தில் சென்று சேர வேண்டும் என்பதற்காக அயலக அடியார்களை அழைத்துவந்து அவர்களுக்குப் பயிற்சிகளை வழங்கினார்கள். அடிகள் பெருந்தகை மீட்டெடுத்த தமிழ் வழிபாட்டு முறைமைகள் இன்று உலகெங்கும் நடைபெற்று வருகிறது.

அதுபோல அனைவரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற உச்சநிதிமன்ற தீர்ப்பு வழங்கியவுடன் அப்போதைய முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் சென்று அனைவரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற திட்டத்திற்கு ஒரு குழு அமைத்து, இன்று ஆறு இடங்களில் அரசு அர்ச்சகர் பயிற்சிப் பள்ளி நடக்கப் பெரிதும் காரணமாக அமைந்தவர். மேலும் எப்பொழுதெல்லாம் தமிழ்வழிக் கல்வி, தமிழ் வழிபாட்டு உரிமைகளுக்கு தடை வருகிறதோ அப்பொழுதெல்லாம் முன்னின்று அவற்றைத் தகர்த்த பெருமையாளர். ஆண்கள் மட்டுமன்றி பெண்களும் கருவறை புகுந்து வழிபாடுகளைச் செய்யவேண்டும் என்ற நோக்கில் கடந்த 30 ஆண்டுகளாகப் பெண்களைக் கொண்டு வேள்வி வழிபாடுகளைச் செய்வதோடு பெண் பயிற்சியாளர்களைக் கொண்டு அவர்களுக்குப் பயிற்சிகளை வழங்கியவர்.

அடிகள் பெருந்தகை அவர்கள் விசுவ இந்து பரிசத் அமைப்பின் தமிழ்நாடு அறவழி காட்டும் ஆன்றோர் பேரவைத் தலைவராகவும், மத்திய அமைப்பின் உறுப்பினராகவும் இருந்து சமயப்பணிகளை ஆற்றியவர். மேலும் அயோத்தி திருக்கோயில் குழு, காசித் திருக்கோயில் குழு உள்ளிட்ட பல்வேறு குழுக்களில் அமைந்து ஆலோசனைகளை வழங்கியவர்கள். நாமும் அவர்தம் வழியில் இக்குழுக்களில் அமைந்து செயலாற்றி வருகின்றோம்.

மேலும் அடிகள் பெருந்தகை அவர்கள் தீண்டாமை ஒழிப்பைத் தலையாய கடமையாகக் கொண்டு ஒடுக்கப்பட்ட மக்கள் என்று கூறப்படுகின்ற மக்கள் வாழும் நூற்றுக்கும் மேற்பட்ட ஊர்களில் இல்லங்கள் தோறும் சென்று திருவிளக்கு வழிபாடுகளைச் செய்து அனைவரிடத்தும் சமத்துவம் மேலோங்க வழிவகைகளைச் செய்தவர், தென் ஆப்பிரிக்கா யூனியன், சிங்கப்பூர், மலோசியா, இலங்கை ஆகிய அயல்நாடுகளில் இருந்து 300க்கும் மேற்பட்ட அன்பர்களை அழைத்து வந்து வாழ்வியல் அருளியல் பயிற்சிகளை வழங்கியவர். அதன் தொடர்ச்சியாகத் தற்பொழுது இருபத்தைந்தாம் குருமகாசந்திதானங்களாகிய நாமும் இணைய வழியாகவும் நேரடியாகவும் இப்பயிற்சிகளை வழங்கி வருகிறோம்.

அடிகள் பெருந்தகை அவர்களின் எண்பதாம் அகவை முத்துவிழாவின் போது ஏற்றத்தாழ்வுகள், தீண்டாமையைப் போக்கும்

வகையில் அதற்குண்டான செயல்திட்டங்களைச் செய்தார்கள். மேலும் கிராம மையம் ஒன்று தொடங்கப்பட்டது. அதுபோல தொண்ணூறாம் அகவை மரகத விழாவின் போது மருத்துவமனை, வனம் இந்தியா, விருப்புடன் திருப்பணி, பல்கலைக்கழகம் அமைப்பது என்ற நான்கு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அவற்றுள் முதல் மூன்று திட்டங்கள் தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இவ்வாண்டு அடிகள் பெருந்தகையின் நூற்றாண்டு விழா, இதையொட்டிய பல்கலைக்கழகம் அமைக்கும் பணியை முன்னெடுக்க உள்ளோம். அன்பர்கள் துணைநிற்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு பல்வேறு அருட்செயல்களைச் செய்த அடிகள் பெருந்தகை அவர்களுக்கு இவ்வாண்டு நூறாம் நாண்மங்கல ஆண்டாக அமைவதையொட்டி அடிகள் பெருந்தகையின் அருள்வரலாற்றை கணக்கன் மு.வேல்லுச்சாமிக் கவுண்டர் அவர்கள் வெளியிட இருப்பது மகிழ்வுக்குரியது. கணக்கன் மு.வேலுச்சாமிக்கவுண்டர் அவர்கள் கொங்கு குலதெய்வக் கோயில்கள் கூட்டமைப்பு உருவாகக் காரணமாக அமைந்தவர்கள். அடிகள் பெருந்தகை அவர்களிடத்தும் நம்மிடத்தும் அளவிலாத ஈடுபாடு உடையவர்கள். ஐயா அவர்கள் அடிகள் பெருந்தகையின் அருள் வரலாற்றினை எழுதியிருப்பது மகிழ்வுக்குரியது.

அவ்வகையில் இந்நூல் சிறக்கவும், கணக்கன் மு.வேலுச்சாமிக் கவுண்டர் அவர்களும் இந்நூல் உருவாகிட உழைத்த அனைவரும் வாழ்வில் எல்லா நலங்களும் வளங்களும் பெற்றுப் பெருவாழ்வு வாழ எல்லாம்வல்ல அருள்மிகு அம்பலவாணப்பெருமாள் இன்னருளையும் அருட்திரு சாந்தலிங்கப் பெருமாள் தண்ணருளையும் இருபத்து நான்காம் குருமகாசந்நிதானங்கள் நூற்றாண்டு நாயகர் கயிலைக்குருமணி தமிழ்நெறி வழிபாட்டு தந்தை தெய்வப்பெருந்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களின் குருவருளையும் நினைந்து வாழ்த்தி மகிழ்வின்றோம்.

வேண்டுந்தங்களன்பு

சாந்தலிங்க மருதாசல அடிகள்

வளமுடன் வாழ! உ வருமருள வேலா!!

குருவே துணை

Dr.Thavathiru Kumaragurubara swamigal
HEAD OF THE MUTT
Siravanapuram
KAMUMARA MATHALAYAM

முனைவர். தவத்திரு.

குமரகுருபர சுவாமிகள்

மடாதிபதி, சிரவணபுரம்,
கௌமார மடாலயம்.



வாழ்த்துரை

பரிதி ஈசன் பராசக்தி மாயவன்
கரிமுகன் குகன் என்னக் கவின்தரும்
பெரிய சத்குரு பொற்பதம் பேணுவார்
அரியதாள் மகரந்தம் அணிந்து உய்வாம்.

கொங்குநாட்டின் தனிச்சிறப்பு பல இருப்பினும் இம்மண்ணில் அவதரித்த அருளாளர்கள் பெருஞ்சிறப்பு அத்தகைய விதத்தில் தமிழைத் துறவாத துறவியாகவும், சைவத்தின் மேன்மையை உலகறியச் செய்துவருமான தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களது வரலாறு பொன்னேட்டில் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

நமது சிரவை ஆதீனம் மூன்றாம் குருமகா சந்நிதானங்களுடன் தீரா நட்புக் கொண்டிருந்தவர் தமிழ் மொழியே தமது மூச்சாகக் கொண்டவர் அத்தகைய விதத்தில், அடிகளார் அவர்களது வரலாற்றை வருங்காலச் சமுதாயம் அறிய வேண்டும் என்ற பெரும் நோக்கில் திரு.வேலுச்சாமி கவுண்டர் அவர்கள் அடிகளார் பற்றிய பல்வேறு நிகழ்வுகளையும் செய்திகளையும் தொகுத்து நூலாக வெளியிட்டுள்ளார்.

இவர் குலதெய்வக் கோயில்களை ஒருங்கிணைக்கும் அமைப்பின் அமைப்பாளராக செயல்பட்டு வருகின்றார். இவ்வமைப்பு நமது அடிகளார் அவர் தொடங்கி வைத்தது என்பது குறிப்பிடத்தக்கது. கொங்குவேளாளக் கவுண்டர் பேரவையின் மாநில மாநாட்டையும் நடத்திய சிறப்புகுரியவர் அவர் அடிகளாரின் ஆசியாலும் ஊக்கத்தினாலும், அருளாலும் இந்நூலை அமைத்து இவர் வெளியிடுவது பாராட்டுதற்குரியது.

பேரூர் ஆதீனம் அடிகளார் அவர்கள் தம் வாழ்நாளில் செய்த பல நிகழ்வுகளையும், திருப்பணிகளையும் தொகுத்து இந்நூலில் பதிவு செய்துள்ளார் ஆசிரியர் தவத்திரு. அடிகளார் அவர்களது முன்னோர்கள் தொடங்கி சுவாமிகளின் பிறப்பு, ஊர், ஊர்பெயருக்கான காரணம் எனப் பல்வேறு செய்திகளை இந்நூல் வழியாக தெரியப்படுத்தியுள்ளார். தமிழ்நாட்டில் தொடங்கி கொங்குநாடு, காங்கேயம் நாடு எனப் பலத்தரவுகளைத் தொகுத்துள்ளார்.

முத்தன் குலம் எவ்வாறு தோன்றியது என்பது பற்றியும் கொங்கு வேளாளர்கள் பெருமைகளையும் கூறத் தவறவில்லை முதலிபாளையத்தில் முத்தன் குலம் என்னும் தலைப்பில் சுவாமிகளின் பிறப்பு, வளர்ந்த முறை ஆகியவற்றை எடுத்துரைள்ளார்.

அடிகளார் அருளுரை இயற்றிய நூல், கவிதை, பதிப்பித்த நூல்கள் ஆகிய அனைத்தையும் இந்நூல் வழியே நாம் அறிய முடிகிறது. தமிழ்நாட்டில் தொடங்கி பல தரவுகளைத் தேடி தேடித் தொகுத்துள்ளார். மேலும் சுவாமிகளைச் சந்தித்த சான்றோர்கள். அடிகளாரின் மருத்துவச் சேவை. அடிகளார் நிகழ்த்திய துறவிகள் மாநாடு. மக்கள் மீது அவர் அன்பு கொண்டு செய்த பல திட்டங்கள் வளர்ச்சிகள், தமிழ் ஆசிரியர்களும் தலைமையாசிரியர்கள் ஆகலாம் என்ற நிலைப்பாட்டை உருவாக்கிய தன்மை எனப் பல்வேறு செய்திகளை இந்நூல் வழியே அறிய முடிகிறது அடிகளாரின் அருள் ஆட்சியில் இறைப்பணி, இலக்கியப் பணி, சமுதாயப்பணி ஆகியவற்றை சுவாமிகள் எவ்வாறு மேற்கொண்டார் என்ற பல தரவுகளையும் இந்நூல் வழியை இந்நூல் ஆசிரியர் திரு. மு.வேலுச்சாமி கவுண்டர் அவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள்.

அடிகளாரின் இறுதிக் காலம் என்னும் தலைப்பில் மூலம் சுவாமிகளது முழு வரலாற்றையும் தான் தெரியப்படுத்தியுள்ள பெருமிதத்தை இவர் கொள்வதை அறிய முடிகிறது. இவர் தொகுத்துள்ள பல்வேறு செய்திகள் அறியப்படாத ஒன்றாகவும் வருங்காலச் சமுதாயத்தினர் அறிய வேண்டிய ஒன்றாகவும் உள்ளது. சுவாமிகள் பற்றி மற்றையோர் கூறிய சில தரவுகளை அவர்கள் கூறியதாகவே இயற்றியுள்ளது சிறப்பு.

இத்தகைய சிறப்பு பொருந்திய இந்நூலினைத் தொகுத்த நூலாசிரியர் திரு.மு.வேலுச்சாமி கவுண்டர் அவர்களது சமயப்பணியும், இலக்கியப் பணியும் ஆன்மீகப் பணியும் மென்மேலும் பெருகவும் சுவாமிகளது நூற்றாண்டு விழாவையொட்டி வெளிவரும் இந்நூல் சிறக்கவும் தண்டமிழ்க் கடவுள் தண்டாயுதபாணிக் கடவுளின் திருவருளையும் ஆதிகுரு முதல்வர் தவப்பெருந்திரு இராமானந்த சுவாமிகளின் குருவருளையும் மனம் மொழி மெய்களால் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துகளுடன்



குருவே துணை

மௌனானளாந்தர் மலர்தாள் வாழ்க

தவத்திரு **மௌன சிவாசல அடிகள்**

திருநாவுக்கரசர் திருமடம், வரன்பாளையம்,

தாராபுரம்.

அன்புடையீர், கலைமகளின் அருள்பெற்றவர், ஔவையார் அவர் நல்லார் குணங்களை உரைப்பதும் நன்று என்று கூறியுள்ளார். சமுகத்திற்கு நன்மை செய்த நல்லவர்களின் வரலாற்றைக் கூறுவதின் வாயிலாக அவர்களின் குணநலன்களை கூறுவதற்கு வாய்ப்பாக அமைகிறது.

திருவாரூர் மண்செய்த தவத்தின் காரணமாக சோழ நாட்டில் இசைக் கலைகளை வளர்ப்பதற்கு மும்மூர்த்திகள் தோன்றினார்கள். கொங்கு மண்டலத்தில் அவிநாசி மண் செய்த தவத்தினால் தமிழையும், சைவத்தையும் வளர்பதற்கு சென்ற நூற்றாண்டில் மும்மூர்த்திகள் அவதாரம் செய்தார்கள். அவர்கள் யாவர் எனில் ஒருவர் அவிநாசி வட்டத்தைச் சார்ந்த முதலிபாளைத்தில் அவதரித்த பேரூராதீனத்தின் 24வது குருமாக சன்னிதாமாக அருளாட்சி செய்த தெய்வத்திருப் பெருந்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள் ஆவார். மற்றொருவர் அவிநாசி அருகில் உள்ள பிச்சாண்டம் பாளையத்தைச் சார்ந்த சிவம் அய்யா ஆவார்கள், இன்னொருவர் கருவலூர் பகுதியைச் சேர்ந்த மணிவாசக மன்றத்தலைவர் ஞானசரஸ்வதி சென்னியப்பனார் ஆவார்கள்.

பேரூர் பெரியசாமிகளின் வரலாற்றை தேனீ பல மலர்களில் இருந்து தேனைச் சேகரிப்பது போல் பல நூல்களைப் படித்து எழுதியுள்ளார். நிகழ்ச்சிகளை ஆங்கிலேயரைப் போல ஆவணப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். கணக்கன் மு.வேலுச்சாமிக் கவுண்டர் ஆவார். கணக்கன் வேலுச்சாமிக்கவுண்டர் அவர்கள் ஒட்டன்சத்திரம் வட்டம் பொருளூர் கிராமம் குருவப்ப நாயக்கன் வலசு ஊரைப் பூர்வீகமாகக் கொண்டவர். தற்போது தாராபுரம் அருகில் வரன்பாளையத்தில் குடி

இருக்கிறார். கோயில் விளங்கினால் குடிமக்கள் மேன்மை பெறுவர் என்ற கொள்கையில் உறுதி கொண்டு குலதெய்வக் கோயில்கள் அரசின் பிடியிலிருந்து விடுதலைப் பெறவேண்டும் என்ற அரும்பணி ஆற்றி வருகிறார். அவருடைய சமுதாயப்பணி சிறப்புற அவர் வாழ்க்கையில் எல்லா நலங்களையும், வளங்களையும் பெற்று நீடுழி வாழ்ந்திட எங்கள் திருமடத்தின் குருமுதல்வர் மௌனசாமிகளை மளமொழி மெய்களால் வேண்டிக்கொள்கிறேன்.

இங்ஙனம்

அன்புள்ள

மௌன சிவாசல அடிகள்

வரன்பாளையம்.

தாராபுரம் வட்டம்.

திருவருள்மிகு இரத்தின மூர்த்தி ஆண்டவர் துணை, திருவருள்மிகு பெரியநாச்சி அம்மன் துணை



தாராபுரம் வட்டம், தென்கரைநாடு,

பெரிய குல.வேணாவுடையார் பரம்பரை

35வது பட்டக்காரர் அரண்மனை,

சங்கரண்டாம்பாளையம், போன்: 9488633973.

பேரூர் ஆதீனம், தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் வரலாறு பதிப்பித்து வெளியிடும் மு.வேலுச்சாமி அவர்களுக்கு பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

கொங்கு நாட்டில் சிறப்பு வாய்ந்த ஆதீனமாக நிகழும் நமது பேரூர் ஆதீனம். தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்கள் தலைமையில் கொங்கு நாட்டிற்கும் தமிழ் பண்பாட்டிற்கும், தமிழனின் ஆன்மீகத்திற்கும் பெரும் சேவை செய்து கொண்டிருக்கிறார். பேரூர் ஆதீனத்தின் பெரு முயற்சியால் பழங்காலத்து கோயில்கள் உயிர் பெற்று புதுபொலிவுடன் விளங்குகிறது. தமிழனின் வாழ்க்கை முறையை அடுத்த தலைமுறைக்கு எடுத்து செல்லும் வண்ணமாக பல நூல்கள் திரு மடத்தின் மூலமாக கொண்டுவரப்பட்டது. எங்கள் முன்னோர்கள் கரிகால் சோழன் தாய்மாமன் இருப்பிடர்தலையார் வம்சாவளியில் வந்த கொங்கு தென்கரை நாடு, சங்கரண்டாம்பாளையம் பட்டக்காரர் வம்சத்தில் பிறந்து, இத்திரு மடத்துடன் பல்லாண்டு தொடர்பில் உள்ளோம். குலதெய்வ வழிபாடு முறையில் கொங்குநாடு சிறந்து விளங்குகிறது. கொங்கு மண்ணிற்கு தனி சிறப்பு குலதெய்வ வழிபாட்டு முறை. அவ்வகையில் சுவாமிகள் அவர்கள் முத்தன் குலத்து, முத்தூர் காணியை சேர்ந்த செல்வகுமார் ஆண்டவர் வழித்தோன்றல் ஆவர்.

சைவ நெறிமுறைகளை கடைப்பிடித்து, சமய பணி சமுதாய பணி, மக்கள் முன்னேற்றம் மருத்துவ பணி கல்வி பணி, ஆகியவை திருமடம் செய்து வருகிறது. சங்கரண்டாம்பாளையம் பட்டக்காரர் அரண்மனை சார்பாக போற்றுதலுடன் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிக்கு

ஸ்ரீமான் பாலசுப்பிரமணியம்

பெரியண்ண வேணாவுடையார்

சங்கரண்டாம்பாளையம், அரண்மனை.

அணிந்துரை

ஒக்கநின் றானை உலப்பிலி தேவர்கள்
நக்கனென் றேத்திடு நாதனை நாள்தொறும்
பக்கநின் றார்அறி யாத பரமனைப்
புக்குநின் றுன்னியான் போற்றிசெய் வேனே.

திருமூலர்

பேரூர் ஆதீனம், காஞ்சிமாநதி என்று சங்க இலக்கியங்களில் குறிப்பிடப் பட்டுள்ள இன்றைய நொய்யலாற்றின் கரையில்,

"பாகான சொல்லிதென் பேரூர் மரகதப் பார்ப்பதிமா
நாகா பரணர்பட் டீசுரர் பாதத்தை நம்பியெங்கும்
போகாத கோமுனி பட்டி முனிக்குப் பொதுநடஞ்செய்
வாகான மேலைச் சிதம்பர முங்கொங்கு மண்டலமே"

என்றும், மேலைச் சிதம்பரம் என்று போற்றப்படும் பேரூரில், 16ஆம் நூற்றாண்டில் திருவாவடுதுறை ஆதீன வழி வந்த துறையூர் சிவப்பிரகாசரின் மாணவர், சாந்தலிங்க அடிகளார் அவர்களால் வீரசைவ நெறிக்காக பேரூர் மடம் தொடங்கப்பட்டது.

சைவ நெறி, அன்பு, ஒழுக்கம், கருணை மற்றும் பணிவு போன்ற உயர்ந்த மனிதப்பண்புகளை வளர்க்கும். இந்நெறி தியானம் மற்றும் இறைநினைவை வலியுறுத்தி, ஆன்மீக முன்னேற்றத்துக்கு வழிகாட்டு கிறது. மேலும், சைவ நெறி சமுதாய சேவையையும், மனிதர் அனைவரிடத்திலும் சமத்துவக் கொள்கையை வலியுறுத்தி சமூகத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து அமைதியை நிலைநிறுத்துகிறது.

அக்காலத்தில் அடியார்கள், துறவிகள், யாத்திரிகர்கள், தவம், பிரார்த்தனை, தியானம் முதலியவை செய்யவும், சைவநெறிசார்ந்த உரைகள் நிகழ்த்தவும், இறைப்பணி மற்றும், சைவநெறிப்பணிகளுக்கும், சைவநெறி வளர்ச்சிக்கும் உருவாக்கப்பட்டதே மடங்களாகும். ஒவ்வொரு சமயங்களும் மடங்களை உருவாக்கிக் கொண்டன. இவற்றில் சைவநெறி மடங்கள், சைவ ஆதீனங்கள் என அழைக்கப்படுகின்றன. அதன் அடிப்படையில் தோன்றியதே பேரூர், சாந்தலிங்கனார் மடம், தற்போது சைவ நெறியைத் தழைத்தோங்கச் செய்யும் முக்கிமான சைவ

ஆதீனங்களில் ஒன்றாக வளர்ச்சி பெற்றுள்ளது. சாந்தலிங்க அடிகளாருக்குப் பின் வாழையடி வாழையாக வந்த திருக்கூட்டச் செந்நெறியில் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரும், அவரைத் தொடர்ந்து தற்போது சாந்தலிங்க மருதாசல அடிகளார் திருத்தொண்டு ஆற்றிவருகிறர்கள்.

இம்மடம், சமுதாயப் பணியிலும், சமயத்தோடு தமிழ் மொழி வளர்ச்சியிலும் திருக்கோயில் திருக்குடநீராட்டு விழா, தமிழ் வேள்விகள் , தமிழ் அர்ச்சனை முறைமை புதுமனை புகுவிழா போன்ற வாழ்வியல் அருளியல் நிகழ்வுகளை தமிழில் ஆக்கிக் தந்து செயல் படுத்திவருகிறது. ஐயாயிரத்திற்கும் மேற்பட்டதிருக்கோயில் களில் தமிழ் முறைப்படி திருக்குட நன்னீராட்டு பெருவிழா ஆதீனத்தால் நடைபெற்றுள்ளன. பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்காக சைவநெறிப் பயிற்சி முகாம் நடத்தப்படுகிறது. தைப்பொங்கல் அன்று வேளாண்மைத் தொழிலில் சிறந்து முன்னோடியாக விளங்குபவர் களுக்குச் சிறப்பு விருதுகள் வழங்கப்படுகிறது. இவ்வாறு சைவநெறிப் பணிகளோடு, சமுதாயம் சார்ந்த பணிகளையும் ஆண்டுதோறும் சிறப்பாக செய்துவருகிறது.

பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார், சைவநெறி, சமுதாயத்தோடு இணைந்த ஒன்றே என்பதை உணர்த்தி மக்கள் தொண்டே இறைபணி என்னும் கருத்தில் முழுமையாகச் செயலாற்றியவர். அடிகளாரின் எளிமையும் சைவத்தமிழ்த் தொண்டும் நாடறிந்தன. அடிகளார் துறவு வாழ்வுக்கு இலக்கணமாக திகழ்ந்தவர். அவரது அத்துறவு அவரைத் தமிழ் மொழியினின்றும், தமிழ் இனத்தினின்றும், தமிழ்ச் சமுதாயத்தினின்றும் பிரிக்கவில்லை. சைவநெறிப் பணி, கல்விப் பணி, தமிழ்ப்பணி, சமுதாயப்பணி ஆகிய அனைத்திலும் அவர் ஆற்றிய தொண்டு மிகச்சிறந்தது.

அடிகளாரின் செயல்களையும், பணிகளையும் குறித்து அருட்செல்வர் அவர்கள் "பேரூர் சுவாமிகள் பல மாநிலங்களுக்கும் யாத்திரையாகச் சென்று உயர்ந்த சிந்தனைகளைப் பரப்பி வருகின்றார். இவரைப் போல் மற்றையோரும் கீழே இறங்கி செயல்படவேண்டும். தமிழகத்தின் சிறந்த தவச்சீலராக விளங்கும் நமது சுவாமிகளின் பணி தென்னாட்டில் மட்டுமின்றி கடல்கடந்த நாடுகளிலும் பரவி வருகிறது " என்று எண்ணக்கிடங்கை பதிவுசெய்துள்ளார்.

சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு மழை குறைந்திருந்த காலகட்டத்தில் நான் பேரூர் படித்துறை சென்றிருந்தபோது அப்பகுதி மிகவும் சிதிலமடைந்து காணப்பட்டது. அதனைப் புனரமைத்து, காசியில் நடப்பது போன்ற ஒரு ஆராதனையை நொய்யல் ஆற்றிலும் நடத்த வேண்டும் என எண்ணியிருந்தேன். இதுகுறித்து, நான் அடிகளாரை சந்தித்துப் பேசினேன். நான் சிறுதுளி அமைப்பில் இருந்தபோது அவ்வமைப்பினரும் பேரூர் ஜெயராமன் உள்ளிட்ட பொதுமக்களும் இணைந்து இந்த சீரமைப்புப் பணிகளை மேற்கொண்டு நொய்யல் ஆராதனை வழிபாட்டை மிகச்சிறப்பாக நடத்தினோம். இந்த ஆராதனை நிகழ்வை அடிகளாரே, முன்னின்று நடத்தியது இந்நிகழ்வுக்கு மேலும் பெருமை சேர்த்தது.

சைவ நெறிப்பணியிலும் சமுதாயப்பணியிலும் தொடர்ந்து சிறப்பாகச் செயற்பட்டு வரும் பேரூர் மடத்திற்கு, புராதன முறைப்படியும், தற்காலத் தேவைகளுக்கு ஏற்ற வகையிலும், திருப்பணி செய்ய தவத்திரு மருதாச்சால அடிகளார் விரும்பினார்கள். அதன்படி மடத்தில் உள்ள திருக்கோயிலின் திருச்சுற்று மண்டபத்தை புனரமைப்புச் செய்தும், மடத்தின் வடக்குப்பகுதியில் பழைய மண்டபம் இருந்த இடத்தில், புதிதாக பழமை மாறாமல் பலவசதிகளைக் கொண்ட ஒரு பன்னோக்கு மண்டபம் அமைத்ததில் எனது பங்கு உள்ளதில் மனநிறைவு கொள்கிறேன். இங்கு அடிகளாரின் சமாதி அமைந்துள்ளதும் சிறப்பு வாய்ந்ததாகும் .

தற்காலத்தில் சைவ நெறியின் தனிச்சிறப்பைத் தமிழகமெங்கும் பரப்பிய அடிகளாரின் தொண்டு இன்றைய இளைஞர்களுக்கு வழிகாட்டியாகவும், புத்துணர்வூட்டுவதாகவும் அமைந்துள்ளது.

இதன் நூலாசிரியர் திரு கணக்கன் மு.வேலுச்சாமி கவுண்டர் தமிழர் மரபுகள் மீது பெரும் பற்றுக் கொண்டவராக இருந்து, அவற்றைப் பாதுகாப்பதோடும் அனைவரிடமும் பரப்பவேண்டும் என்ற ஆவலைக் கொண்டுள்ளார். பண்டைக் கொங்கு நாட்டின் வழக்கப்படி பெயருக்கு முன்னால் கூட்டப்பெயரை குறிப்பிடும் மரபை இன்றும் தொடர்கின்றார். நமது பழம்பெரும் நாகரிகம், பண்பாடு, நாட்டுப்புற வழிபாட்டு முறைகளிலேயே பிரதிபலிக்கும் என்பதில் நம்பிக்கை கொண்டு, குலதெய்வ வழிபாட்டு மரபுகளைச் சமூகத்தில் நிலைநிறுத்தும் நோக்கில் "குலதெய்வக் கோயில்கள் கூட்டமைப்பு" என்ற அமைப்பை நிறுவியுள்ளார். இவர் எழுதிய இந்த நூல் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றை மட்டுமின்றி, தமிழர், கொங்குநாடு, கொங்கு வேளாளர் வரலாறுகள் மற்றும் பேரூர் ஆதீனம் அடிகளாரின் வரலாறுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பன்முக நூலாக அமைந்துள்ளது. அடிகளாரின் தோற்றம் முதல் மறைவு வரை நிகழ்ந்த அனைத்தையும், ஆவணங்கள், நூல்கள், களஆய்வுகள் மூலம் திரட்டி, ஒருங்கிணைத்து மானிடவியல் மற்றும் வரலாற்று அடிப்படையிலான தகவல்களஞ்சியமாக உருவாக்கியுள்ளார். சான்றுகளைக் குவித்த விதம், எழுத்தாற்றல், ஆராய்ச்சி நுணுக்கம் ஆகியவற்றின் மூலம் தனது உழைப்பும் விடாமுயற்சியும் வெளிப்படுத்திய திரு. கணக்கன் மு.வேலுச்சாமி கவுண்டருக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளும் நல்வாழ்த்துகளும்,

சங்கர் வாணவராயர்

ஜமீன் சமத்தூர்

KOVAI MEDICAL CENTER AND HOSPITAL LIMITED
NABH Accredited Hospital Excellence in Healthcare
99, Avanashi Road, Coimbatore - 641 014 |
Phone : (0422) 4323800 | 4324000 | 6803000
Web : www.kmchhospitals.com |
CIN No : L85100TZ1985PLC001659

அணிந்துரை

திருக்கயிலாயப் பரம்பரை மெய்கண்ட சந்தானம் பேரூராதீனம் இருபத்துநான்காம் குருமகாசந்திதானங்கள் தெய்வத்திருப்பெருந்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் நமது வழிபாட்டிற்கு பெருமதிப்பிற்கும் உரியவர். பத்திநெறியைத் தமிழில் அனைவரும் கொண்டு சேர்க்கும் நோக்கோடு தனது வாழ்நாளில் இறுதிவரை செயலாற்றியவர். 1953ஆம் ஆண்டு பல்வேறு தடைகளுக்கு இடையில் வெள்ளக்கிணறு வே.சி.சுப்பையகவுண்டர், கோவைகிழார் ஆகிய சான்றோர்களின் ஒத்துழைப்போடு பேரூர்ப் பட்டிப்பெருமாள் திருக்கோயிலில் தமிழில் மலர் அர்ச்சனை வழிபாட்டைத் தொடங்கி ஆதீனத்தமிழ்க் கல்லூரியைத் தோற்றுவித்தவர். திருநெறிய ஒண்தீந்தமிழ்நெறி வழிபாட்டை மறுமலர்ச்சி அடையச் செய்த பெருந்தகையாளர். அடிகள் பெருந்தகை மீட்டெடுத்த தமிழ் வழிபாட்டு முறைமைகள் இன்று உலகெங்கும் நடைபெற்று வருகிறது.

அடிகள் பெருந்தகை அவர்களின் எண்பதாம் அகவை முத்துவிழாவின் போது நமது மருத்துவமனை சார்பில் காளப்பட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட வீரியம்பாளையத்தில் அடிகளார் அவர்களின் திருப்பெயரில் மருத்துவமனை ஒன்று தொடங்கி இன்றுவரை சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. அதுபோல தொண்ணூறாம் அகவை மரகத விழாவின்போது முன்னெடுக்கப்பட்ட அடிகளார் மருத்துவமனையின் அறக்கட்டளையில் நாமும் அறங்காவலாராக இருந்துவருகிறோம். அடிகளாரின் மன உறுதியையும் பக்திமை நெறிக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தையும் பார்த்து நாம் மிகவும் நெகிழ்ந்துள்ளோம். ஒரு கந்தசஷ்டிக் கவச விழாவின் போது உடல் நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தார்கள். அப்போது அவர் திட உணவுகளை எடுத்தாக வேண்டிய சூழல். ஆனால் விரதத்தின் காரணமாக

எடுக்கவில்லை. அப்போது அவர்கள் என்னிடம், இது அறுபது, எழுபது ஆண்டுகளாகத் தொடரும் பக்திமை நெறி. இதை மாற்றமுடியாது என்று கூறிவிட்டார்கள்.

பல்வேறு அருட்செயல்களைச் செய்த அடிகள் பெருந்தகை அவர்களுக்கு இவ்வாண்டு நூறாம் நாண்மங்கல ஆண்டாக அமைவதையொட்டி அடிகள் பெருந்தகையின்அருள்வரலாற்றைக் கணக்கன் மு.வேலுச்சாமிக் கவுண்டர் அவர்கள் வெளியிட இருப்பது மகிழ்வுக்குரியது. கணக்கன் மு.வேலுச்சாமிக்கவுண்டர் அவர்கள் கொங்கு குலதெய்வக் கோயில்கள் கூட்டமைப்பு உருவாகக் காரணமாக அமைந்தவர்கள். இந்நூலில் அவர் அடிகளார் குறித்த பல செய்திகளை மிகவும் அருமையான முறையில் தொகுத்து வெளியிட இருப்பது மகிழ்வுக்குரியது. அவருக்கு நம் வாழ்த்துகள்.

அடிகளார் அவர்களுக்கு தேவைப்படும்போதெல்லாம் எமது மருத்துவமனையில் சிகிச்சை அளித்ததை நமக்கு மருத்துவமனைக்கும் கிடைத்த பேறாக நாம் இன்றும் என்றும் எண்ணுவோம். அவர்தம் வழியில் வழிபாட்டுநெறி சிறக்க உழைப்போம்.

அன்புள்ள

நல்ல பழனிசாமி

தலைவர்

சொல் சித்தர். ஞானபாரதி. வெ.அனந்தகிருஷ்ணன்,

வே.வாவிப்பாளையம், பொங்கலூர்நாடு.

திருச்சிற்றம்பலம்.



பேரூராதீனம் 24ம் குருமகா சந்நிதானங்கள் கயிலை குருமணி சீர்வளர்சிர் பேரூரடிகளார் அவர்களின் நூற்றாண்டில் தாராபுரம் உழவர் திரு.கணக்கன் மு.வேலுச்சாமி கவுண்டர் அவர்களது அடிகளார் வரலாறு குறித்த செய்திகளை தாங்கும் நூல் வெளிவருவது திருவருள் கருணை. தவத்திரு.மகா சந்நிதானங்கள் அவதாரம் கொங்கு நாடு செய்த தவம். உழவர் குடியில் தோன்றி உயர் சைவ கருத்துக்களை உலகமெல்லாம் விதைத்த வித்தகர் அடிகளார், எளிமையான அணுகுமுறை தெளிந்த தமிழில் ஆழமான கருத்துக்கள் என தன்னை தானே செதுக்கிய சிற்பி முதலிபாளையம் அடிகளார் தோன்றியதால் முதன்மை பெற்றது. சிரவை ஆதீன தவச்சாலையில் தமிழும் சமயமும் அடிகளாருக்கும் வசமானது, பாரெங்கும் பறந்து தமிழைத் தேடிய தேனீ அடிகளார். ஆதலால் தமிழன்னை இவரை தன் அடையாளமாக காட்டினார்.

பேரூராதீனத்தின் 24ம் குருமகா சந்நிதானமாக அருளாட்சி ஏற்று திசை எட்டும் சிவச் சிந்தனையும் தமிழ் முழக்கமும் எட்டிட முரசறைந்தார். தமிழ் கல்லூரி கண்டு அறிஞர் மலர் அவை நிறைய வைத்தார். கொங்கு நாடு தமிழும், பண்பும் மலர்ந்தது இடையில் சற்று இடைவெளி ஆனது. பேரூரடிகளாரும் சிரவை 3ஆம் மகா சந்நிதானங்களும் சான்றோர் பலரது இணைப்பில் ஊர்தோறும் சென்று சமயப் பயிரும் பண்டிப் புரட்சியும் ஏற்படுத்தினர். உழவுக்குக் குரல் கொடுத்த ஒய்வறியா தவசி தவத்திரு பேரூரடிகளார்.

கொங்கு நாட்டில் திருமடங்கள் யாவும் பொலிவு பெற தக்க பெருமக்களை ஆற்றுப்படுத்தி அலங்கரித்தவர் தவத்திரு அடிகளார் இன்று அருள்நெறி ஓசை கொங்கு நாடெங்கும் மிளிர்கிறது. கொங்கு வேளாண் சமுதாய ஒன்றினைப்பினும் குலதெய்வ வழிபாடு மேன்மை அடையவும் அடிகளார் செய்ய முன் எடுப்பதற்கு உடன் நின்றவர் தாராபுரம் திரு.கணக்கன். மு.வேலுச்சாமிக் கவுண்டர் எளிய தொண்டராக தவத்திரு அடிகளாருடன் பயனித்தவர். தற்போதைய பேரூர் மற்றும் சிரவை பழனி தென்சேர் மற்றும் வரன்பாளையம் ஆதினம் குருமகா சந்நிதானங்களுடன் அனுக்க தொண்டர் கணக்கன் மு.வேலுச்சாமிக் கவுண்டர் அவர்கள் அறிதின் முயன்று அவர் கொடுத்த இந்நூல் அடிகளார் திருவடிகளுக்கு ஆகட்டும்.

தில்லையம்பலம்
திருநெறிய தமிழ் தொண்டன்
சிவ. வெ. அனந்தகிருஷ்ணன்,
வே.வாவிப்பாளையம்



புலவர் **சி.இராசப்பன்,** எம்.ஏ., எம்.எட்.,
53/57 B பயனீர்நகர், சோதிபுரம், கோவை – 47.

அணிந்துரை

சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க

கொங்கின் அணிதிகழ் கோவையில் வடக்கே இருபத்தைந்து கல்தொலைவில் அமைந்தது அன்னூர் வட்டம். இங்கு முதலிபாளையம் எனும் சிற்றூரில் முத்தூரைக் காணியாகக் கொண்ட முத்தன் குலத்தவர் காடு திருத்திக் கழனியாக்கி, மேடுபோக்கி மேதினியாக்கி, கேடு கண்ட இடமெல்லாம் அதைச்சாடி வேளாண் தொழிலையே முதன்மையாகக் கொண்டு வாழ்ந்தனர். அத்தகு சிறப்பு மிக்க வேளாண்குடியில் அவதரித்தவர். நம் ஞானத்தந்தை, பேரூர் ஆதினத்தின் இருபத்தி நான்காம் பட்டம், முதுமுனைவர் கைலைக் குருமணி சீர்வளர்சீர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள்

உயிர்களிடத்தில் உளம் நிறைந்த அன்பும் தெய்வீக அருளும் கொண்டு, சமுதாய வாழ்வில் அறநெறியில் நிலைத்து நின்று, தமிழும் சமயமும் இருகண்களெனக் கொண்டு வாழ்ந்தவர். தமிழ் வழிபாட்டு நெறிமுறையினை உலகெங்கும் ஏற்றம் பெறச் செய்தவர். நாம் நாளும் நினைந்து போற்றும் நற்பண்பின் உறைவிடமாகத் திகழ்ந்தவர், நம் ஞானத்தின் திருஉரு நம் அடிகளார் அவர்கள்

கொங்கு வளநாட்டில் வாழ்ந்திடும் கொங்கு வேளாளர்களில் பல குலங்கள் உள்ளன. இக்குலங்களில் கணக்கன் குலம் சார்ந்த பண்பாளர் அவர்கள் தாராபுரத்தில் வேளாண் தொழில் செய்து வரும் திரு.மு.வேலுச்சாமி கவுண்டர் தெய்வப் பெருந்திரு சன்னிதானங்கள் பால் தீராத அன்பும் பக்தியும் கொண்டவர். இவர் தம் இடைவிடாத முயற்சியால் நம் சன்னிதானங்களின் வழிகாட்டுதலின்படி 26.3.2006இல் கொங்கு வேளாளர் கூட்டமைப்பின் சங்கம் என்ற அமைப்பை ஏற்படுத்திய பெருந்தகையாளர். மேலும் கொங்கு குலதெய்வக் கூட்டமைப்பின் வாயிலாக கொங்கு மாவீரன் தீரன் சின்ன மலையின் வீரவரலாறு என்ற

நூலையும் வெளியிடத் துணை நின்று நம் குலமக்களுக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

இப்பண்பாளர் உள்ளத்தில், நம் சன்னிதானங்களின் வாழ்வியல் நெறிகளை கொண்டு சேர்க்கும் எண்ணம் உதயமானது. பெருமைக்குரிய ஒன்றாகும், அவ்வகையில் பேரூராதீனம் இருபத்தைந்தாம் பட்டம் கைலைப் புனிதர் சீர்வளர்சீர் சாந்தலிங்க மருதாசல அடிகளாரின் அருளாசியுடன் இந்நூலை அவர் வெளிக் கொணர்ந்துள்ளார். இந்நூல் முப்பத்திரெண்டு உட்பிரிவுகளுடன் அமைந்துள்ளது. சந்நிதானங்களின் முன்னோர்களின் வழிவழி மரபு பற்றிய செய்திகள் இந்நூலின் இடம்பெற்றுள்ளன.

மிகக் குறைந்த அளவில், பல நூல்களின் துணையுடன் சந்நிதானங்கள் அவதரித்த இடத்தைப் பார்வையிட்டதன் பயனாகவும் இந்நூல் பொலிவடைகின்றது. தலை சிறந்த பல செய்திகளை உள்ளடக்கிய இந்நூல் தெய்வப்பெருந்திரு சன்னிதானங்களின் நூற்றாண்டு நிறைவு விழாவில் வெளியிடுவது சாலச்சிறந்ததாக அமைகின்றது.

இந்நூல் அனைவரது இல்லங்களிலும், அவர்தம் உள்ளங்களிலும் இடம்பெற வேண்டும் என்று விழைகின்றோம்.

இந்நூலை வெளியிட விடா முயற்சி மேற்கொண்ட கணக்கன் குல திரு.மு.வேலுச்சாமிக் கவுண்டர் அவர்களும், அவர்க்கு உற்ற துணையாய் நின்ற சான்றோர் பெருமக்களும் எல்லா நலன்களும், வளங்களும் பெற்று வாழ இறையருளை வேண்டி நிற்போம்.

இப்படிக்கு

புலவர் **சி.இராசப்பன்** எம்.ஏ., எம்.எட்.,



தொகுப்பு ஆசிரியர் :

கணக்கன்.மூ.வேலுச்சாமிக்கவுண்டர்

முன்னுரை

பேரூர் ஆதீனம் மெய்கண்டார் வழிவழி சீர் வளர்சீர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளின் நூற்றாண்டு விழாவினை நாடெங்கும் உள்ள அடிகளாரின் மீது அன்பு கொண்ட ஆன்மீக அன்பர்களும், அறிஞர் பெருமக்களும், தமிழ் ஆர்வலர்களும், அருளாளர்களும் அடிகளார்களும், ஆன்றோர் சான்றோர் பெருமக்களும் அடிகளுக்கு விழா எடுத்துச் சிறப்பு செய்து வருகின்றனர்.

அடிகள் துறவு பூண்டு அருள் பணியும், ஆன்மீகப் பணியும், கல்விப்பணியும் பொதுப்பணிகளையும், நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் சிறப்புடன் செய்து வந்தள்ளார். இந்து சமய தெய்வ வழிபாட்டில் குலதெய்வக்கோயில்களில், குலதெய்வ வழிபாட்டை முதல் வழிபாடாக செய்து வரும் கொங்கு வேளாளர் சமுதாயத்தைச் சார்ந்த கோயில் தலைவர்கள் உடன், நானும் அய்யா பழ.தரும ஆறுமுகம் அவர்களும் பேரூர் சென்று அடிகளாரைச் சந்தித்து குல தெய்வக் கோயில்களை அரசு எடுத்து ஆட்சி செய்கிறது. குல தெய்வக் கோயில்களை மீட்டிட உதவி செய்யுமாறு அடிகளாரை வேண்டுதல் செய்தோம். எங்கள் வேண்டுதலைக் கேட்ட அடிகளார். ஒருநாள் குறித்து அந்நாளில் பேரூர் மடாலயத்திற்கு வருமாறு கோயில் தலைவர்களை அடிகளார் கேட்டுக் கொண்டார். அடிகளார் கூறிய தினத்தில், நானும் பழ. தரும ஆறுமுகம் அய்யா அவர்களும் கோயில் தலைவர்களும் பேரூர் மடாலயத்தில் அடிகளாரைச் சந்தித்தோம். எங்களிடம் அடிகளார் கருத்துகளை கேட்ட பின்பு, கொங்கு நாட்டில் உள்ள அனைத்து கொங்கு வேளாளர் குலதெய்வக் கோயில் தலைவர்களையும் ஒன்றினைத்து ஒரு கூட்டமைப்பை உருவாக்குங்கள். அந்த அமைப்பின் மூலம் குலதெய்வக் கோயில்களை பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபடலாம் என்று கூறிய அடிகளார் என்னையும் பழ.தரும ஆறுமுகம் அய்யா அவர்களையும் குலதெய்வக் கோயில்களை ஒருங்கிணைக்கும் அமைப்பாளர்களாக நியமனம் செய்தார்.

அடிகளார் கூறிய கருத்தை ஏற்று நானும், அய்யா பழ.தரும ஆறுமுகம் அவர்களும் கொங்குக் குலதெய்வக் கோயில் தலைவர்களுக்கு குலதெய்வக் கோயில்களை ஒருங்கிணைக்கும் நடவடிக்கை ஏன் என்று விளக்கி ஒரு அறிக்கை தயாரித்து அறிக்கையுடன் குல தெய்வக் கோயில்களின் தலைவர்களைச் சந்தித்து விபரங்கள் கூறி குலதெய்வக்கோயில்களை ஒருங்கினைக்கும் பணிகளை கொங்குநாடு முழுவதும் எடுத்துச் சென்று பணியாற்றினோம். இப்பணிக்கு பெரும் உதவி செய்தவர்கள் கவய காளியம்மன் கோயில் தலைவர் வி.கே.சிவக்குமார் அவர்கள், ஈரோடு கொங்கு குழந்தைசாமி, வாவிப்பாளையம் வெ.அனந்த கிருஷ்ணன், சின்னத்தாராபுரம் அருங்கரை அம்மன் கல்லூரித் தலைவர் எம்.கே.ஆர்.காங்கேயன், கரூர், ஆடிட்டர் நல்லசாமி சேரன் கல்வி நிறுவனத்தின் தலைவர் – கருப்பணகவுண்டர், நாமக்கல் கே.எம்.வேலுச்சாமி கவுண்டர், இராசிபுரம் – அய்யா பழனிவேலு, கை.கந்தசாமி தாராபுரம் கந்த விலாஸ் – கோபாலகிருஷ்ணன் குப்பண்ணா லாட்ஜ், C.K.செல்லமுத்து டாக்டர்.ப.இராமசாமி, வழக்கறிஞர் செல்லமுத்து மற்றும் கொங்கு குல பெரியவர்கள் குல தெய்வக் கோயில்களை ஒன்றினைக்கும் பணிகளை செய்ய ஊக்கமும் ஆதரவும் அளித்து வந்தனர்.

26.03.2006 ஆம் ஆண்டு கரூர் கொங்கு மன்றத்தில் தவத்திரு சாந்தலிங்க இராசாமி அடிகளார் தலைமையில் கொங்கு வேளாளக்கவுண்டர்கள், பேரவையின் தலைவர் திருச்சி தேவராசன் சி.பி.ஐ. டைரக்டர் . கார்த்திகேயன் முன்னிலையில் குலதெய்வக் கோயில்களின் தலைவர்கள் கூட்டம் நடைப்பெற்றது. இக்கூட்டத்தில் குலதெய்வக் கோயில்களின் பாதுகாப்பு குறித்தும் இந்து சமயம் அறநிலையத் துறையிடம் இருந்து குலதெய்வக்கோயில்களை மீட்பது சம்பந்தமாகவும், தலைவர்கள் கருத்துரை வழங்கினார்கள். கூட்டத்திற்கு கொங்குநாடு முழுவதும் இருந்து குலதெய்வக் கோயில்களின் தலைவர்கள் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பித்தனர். கரூரில் தொடங்கிய குலதெய்வக் கோயில்களின் கூட்டமைப்பு கொங்கு நாட்டில் பல இடங்களில் குலதெய்வக் கோயில்களின் கூட்டமைப்பின் கூட்டங்கள்

நடைபெற்றன. இக்கூட்டங்களுக்கு பேரூர் ஆதீனத்தின்அன்றைய இளைய பட்டம் தவத்திரு மருதாசல அடிகளாரும், சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுரு அடிகளாரும், குல தெய்வக் கோயில்களின் கூட்டமைப்பு நடத்திடும் கூட்டங்களில் பங்கெடுத்து குலதெய்வக் கோயில்களின் கூட்டமைப்பை வழி நடத்தி வந்தனர். பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் அடிக்கடி குலத்தெய்வக்கோயில்கள் கூட்டமைப்பின் செயல்பாடுகள் குறித்து என்னிடம் கேட்டு ஆலோசனைகள் வழங்கி வந்தார்கள்.

குலதெய்வக் கோயில்களின் கூட்டமைப்பின் செயல்பாடுகள் கொங்கு வேளாளர்கள், சமுதாயம் குலதெய்வக் கோயில்களின் கூட்டமைப்பை நேசிக்கக் தொடங்கினார்கள். இந்த நிலையில் 15.02.2009ஆம் ஆண்டு கோவை கருமத்தம்பட்டியில் கொங்கு வேளாளக்கவுண்டர்கள் பேரவையின் மாநில மாநாடு அய்யா பெஸ்ட் இராமசாமிக் கவுண்டர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இம்மாநாட்டில் பல ஆயிரக்கணக்கான கொங்கு வேளாளார் சமுதாய மக்கள் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இத்தீர்மானங்களில் முதல் தீர்மானமாக கொங்கு வேளாளர்களின் குலதெய்வக் கோயில்களைஅறநிலையத்துறையின் மூலம் அரசுடமையாக்கும், முயற்சியை அரசு கைவிட வேண்டும். இதுவரை அரசுடமையாக்கப்பட்ட கோயில்களையும் அதன் சொத்துக்களையும் கோயில்சார்ந்த குலமக்களிடம் திருப்பி தரவேண்டும் என்ற சிறப்புமிக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானம் குலதெய்வக் கோயில்கள் கூட்டமைப்பின் கோரிக்கைக்கு கிடைத்த வெற்றியாக பேசப்பட்டது.

வரலாற்றில் குடிமக்களின் குலத்தெய்வக் கோயில்களை அரசு எடுத்து ஆட்சி செய்வதை யாரும் அரசை கேள்வி கேட்காத நிலையில் பேரூர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் நெறிப்படுத்தி தொடங்கி வைத்த குலதெய்வக் கோயில்களின் கூட்டமைப்பின் கோரிக்கையின் கருத்து விதைபோல் முளைத்து வளர்ந்து மரமாகி

நாடெங்கும் உள்ள இந்து சமயக்கோயில்களையும், குலத்தெய்வக் கோயில்களையும் அரசிடம் இருந்து மீட்டிட பல்வேறு சமுதாய அமைப்புகள் அரசிடம் கோரிக்கை வைத்து போராடி வருகின்றன. ஆகவே குலதெய்வக் கோயில்களின் பாதுகாப்பிற்கு கூட்டமைப்பு தொடங்கி செயல்படும் திட்டத்திற்கு வழிவகுத்து கொடுத்த பேரூர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் நூற்றாண்டு விழாவின் நினைவாக அடிகளாரின் வரலாற்று செய்திகளை தொகுத்து நூலாக வெளியிடுகின்றேன். அடிகளாரின் வரலாற்று நூலை எழுதிட அனுமதி வழங்கி நூலுக்கு அருள் வாழ்த்துரை வழங்கிய பேரூராதீனம் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்களுக்கும் சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுரு அடிகள் அவர்களுக்கும், வரன்பாளையம் திருநாவுக்கரசர் மடாலயம் தவத்திரு மௌன சிவாசல அடிகள் அவர்களுக்கும், தென்கரை நாடு சங்கரண்டாம்பாளையம் பட்டக்காரர் உயர்திரு வேணாவுடையார் அவர்களுக்கும், சமத்தூர் ஜமீன் உயர்திரு சங்கர் வானவராயர் அவர்களுக்கும், கோவை மருத்துவமனைத் தலைவர் உயர்திரு டாக்டர். நல்லபழனிசாமி அவர்களுக்கும், சொல்லு சித்தர் ஞானபாரதி வெ.அனந்தகிருஷ்ணா அவர்களுக்கும், புலவர் இராசப்பன் அவர்களுக்கும், அடிகளின் வரலாற்று நூலுக்கு செய்திகள் கொடுத்து உதவிய கோவை கவின் பதிப்பகம் திரு.அருண் சீனிவாசன் அவர்களுக்கும், எனக்கு எழுத்துரையில் உதவி செய்து வரும் பேரன் பழ.இராமசந்திரனுக்கும், அடிகளின் வரலாற்று நூலை வடிவமைத்து சிறப்புடன் பதிப்பித்து கொடுத்து உதவிய என் மண்ணின் மைந்தர் கொங்கு தலைவர் காடைகுலம் திண்டுக்கல் ஓவியா அச்சகத்தின் உரிமையாளர் திரு.அருள் அவர்களுக்கும், எனது எழுத்துப் பணிக்கும் சமுதாய பணிக்கும், ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து உதவி செய்து வரும் என் மகன் அருள் பிரகாஷ்க்கும் மற்றும் குடும்பத்திற்கும் என் இதயம் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு
தங்கள் அன்புள்ள
கணக்கன்.மு.வேலுச்சாமிக்கவுண்டர்
தாராபுரம்.

திருக்கயிலாய மரபு மெய் கண்டார் வழி வழி பேரூர் ஆதீனம் கயிலைக் குருமணி சீர்வளர்சீர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் வரலாறு

தமிழக வரலாற்றுச் செய்திகள்

பழந்தமிழர்களின் காலம் சுமார் கி.மு. ஆயிரத்திலிருந்து தொடங்குவதாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். பழந்தமிழ் நாட்டின் எல்லைகளாக கிழக்கில் வங்காள விரிகுடாவும், மேற்கில் அரபிக்கடலும், தெற்கில் இந்துமாக்கடலும், வடக்கே விந்திய மலையும் இருந்தன. இப்பகுதியே தென்னாடு அல்லது திராவிட நாடு என முற்காலத்தில் வழங்கப்பட்டு வந்தது. பின் ஆங்கில ஆட்சிக் காலத்தில் இதில் பெரும்பான்மையான பகுதிகளை அடக்கிய மதராசு மாநிலம் அமைக்கப்பட்டது. 1954–55ல் மொழிவாரி மாநிலங்கள் உருவாக்கப்பட்ட போது, இன்றைய தமிழகம் சென்னை மாநிலமாக்கப்பட்டு பின் 1967 ஜூலை 18ல் தமிழ்நாடு ஆனது.

இந்தியாவில் திராவிடப் பண்பாட்டின் தாயகமாய் தமிழகம் இருந்து வருகிறது. ஆரியர்கள் இந்தியாவிற்கு வருவதற்கு முன்பிருந்தே இந்தியாவில் சிந்துசமவெளியிலும், ஏனைய பல பகுதிகளிலும் திராவிடர் வாழ்ந்து வந்தனர். வடஇந்தியாவிலும் ஆரியர் குடியேறிய பின் தெற்கே நோக்கி தள்ளப்பட்ட திராவிடர்கள், விந்திய மலைக்கு தெற்கே குடியேறினர். பண்டைத் தமிழகத்தின் பகுதிகளாக இன்றைய ஆந்திரம், கர்நாடகம், கேரளா, தமிழ்நாடு ஆகியவை இருந்தன.

சங்ககாலம்:

வரலாற்றுக் காலம் என்பது சங்க காலத்திலிருந்து துவங்குகிறது. சங்கத்தின் காலம் பற்றி வெவ்வேறு கருத்துக்கள் இருப்பினும் கி.மு.3ம் நூற்றாண்டிலிருந்து கி.பி.3ம் நூற்றாண்டு வரையே சங்ககாலமாகும் என்பது அறிஞர் பலரின் கருத்து. சங்ககாலம் இலக்கிய வளர்ச்சிக்கும், சமயப் பொறைக்கும் இருப்பிடமாக அமைந்திருக்கிறது. இக்காலத்தில்

வஞ்சியைத் தலைநகரமாகக் கொண்டு சேரரும், உறையூரைத் தலைநகராகக் கொண்டு சோழரும், மதுரையைத் தலைநகராகக் கொண்டு பாண்டியரும் ஆட்சி நடத்தினார்.

சங்ககால மக்கள் சாதிப்பாகுபாடு இன்றியும், சமயப்பூசல்கள் இன்றியும், வீரத்துடன் போர்நெறி பிறழாமலும், செங்கோன்மையோடும் வாழ்ந்தனர். இவர்களில் பெரும்பான்மையோர் விவசாயத்திலும், வாணிபத்திலும் ஈடுபட்டனர். சங்ககாலத் தமிழர் தாம் வாழ்ந்த நிலங்களை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பிரித்திருந்தனர். இக்காலத் தமிழர்கள் வெளிநாட்டவர்களுடன் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தனர். கிரீஸ், ரோம் நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்பு பற்றிச் சங்க இலக்கியங்களும், பெரிப்ளூஸ், பிளினி, தாலமி போன்ற வெளிநாட்டவர் குறிப்புகளும் நாணயங்களும் தெரிவிக்கின்றன. ரோமப்பேரரசர் அகஸ்டியஸ் அரசவைக்குப் பாண்டி நாட்டுத் தூதுவர் இருவர் கி.மு.முதலாம் நூற்றாண்டில் சென்றிருந்ததை ஸ்டிராபோ என்ற வெளிநாட்டவரின் குறிப்பு தெரிவிக்கிறது.

சங்ககால மன்னர்கள் ஒருவருக்கொருவர் போரிட்டுக் கொண்டு இருந்ததால் அந்நியரின் வருகை எளிதானது. கி.பி.3ம் நூற்றாண்டில் களப்பிரர் எனும் இனத்தவர் தமிழ் மன்னர்களை வென்று, தமது ஆட்சியை நிறுவினார். கி.பி. ஆறாம் நூற்றாண்டு வரை சுமார் 3 நூற்றாண்டு காலம் ஆட்சி செய்த இவர்கள், தங்கள் காலத்தில் என்ன செய்தார்கள் என்ற தடயம் எதனையும் விட்டுச் செல்லாத காரணத்தால் அவர்கள் காலம் தமிழக வரலாற்றில் இருண்ட காலம் எனப்படுகிறது. இக்களப்பிரர்கள் சமணம் அல்லது பௌத்த சமயத்தை சேர்ந்தவர்களாக இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றனர்.

பல்லவர்கள்:

கி.பி.4ம் நூற்றாண்டு முதல் தமிழகத்தின் வடபகுதியில் பல்லவர்கள் ஆட்சி செய்தனர். இவர்கள் முற்காலப்பல்லவர் எனப்படுவர். கி.பி.7ம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து ஆட்சி செய்த மன்னர்கள் பிற்காலப் பல்லவர் எனப்படுவர். இவர்கள் காலத்தின் முதலாம் மகேந்திரவர்மன் முதன் முதலில் தமிழகத்தில் குடைவரைக் கோவில் அமைத்தார். இவரது குடைவரைக்கோவில்கள் மாமண்டூர், மண்டகப்பட்டு, சீயமங்கலம்,

நாமக்கல், பல்லாவரம், திருக்கழுக்குன்றம், திருச்சி ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. அவரது மகனான முதலாம் நாசிம்மவர்மன் கி.பி.631ல் இலங்கையை வென்றார்.

பல்லவர்கள் காலத்தில்தான் தமிழ்நாட்டில் பக்தி இயக்கம் துவங்கியது. சைவ நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் தோன்றினர். இவர்கள் சமண பௌத்தரை மனம் மாற்ற முயன்றனர். மகேந்திரவர்மன் மூலம் அப்பரும், தெற்கே கூன்பாண்டியன் மூலம் திருஞான சம்பந்தரும் சமணரை வீழ்த்தினர். பல்லவர்கள் காலம் தென்னிந்தியக் கட்டடக் கலைவளர்ச்சிக்கு முன்னோடியாக இருந்தது.

சோழர்கள்:

9ம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் சோழப் பேரரசு உதயமானது. இச்சோழப் பேரரசுகளில் சிறந்தவர் முதலாம் ராஜராஜன், அவர் காலத்தில் ஏறத்தாழ தென்னகம் முழுவதும் சோழர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. இலங்கையைவென்று வடஇலங்கையில் சோழர் ஆட்சியை ஏற்படுத்திய பெருமை முதலாம் ராஜராஜனையே சாரும், இது மும்முடிச் சோழ மண்டலம் என அழைக்கப்பட்டது. இவரால் அமைக்கப்பட்ட தஞ்சைப் பெரியகோவில் இவரது வெற்றிக்கும், கலை ஆர்வத்துக்கும் எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளது. இவருக்குப் பின் 13ம் நூற்றாண்டின் துவக்கம் வரை சோழப் பேரரசைக் கட்டிக்காத்தவர்கள் முதலாம் ராஜேந்திரனும், முதலாம் குலோத்துங்கனும், மூன்றாம் குலோத்துங்கனும் ஆவர். முதலாம் ராஜேந்திரன் வடஇந்தியாவின் மீது படையெடுத்து கங்கை வரை சென்று கங்கை கொண்டான் எனப் போற்றப்பட்டான். அதன் நினைவாக கங்கை கொண்ட சோழபுரம் எனும் புதிய நகரை நிர்மாணித்தான். முதலாம் குலோத்துங்கன் காலத்தில் 13 பேர் கொண்ட குழு ஒன்று சீனா, இந்தோனேசியா போன்ற நாடுகளுக்குச் சென்றது. சோழர் காலத்தில் உள்ளாட்சி முறை மிகச் சிறப்பாகச் செயல்பட்டது. குடவோலை முறையில் உறுப்பினர்கள் தேந்தெடுக்கப்பட்டனர்.

பாண்டியர்கள்:

13ம் நூற்றாண்டின் துவக்கம் சோழப் பேரரசின் வீழ்ச்சிக்கும், பாண்டியர் தம் எழுச்சிக்கும் வித்திட்டது. முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் பாண்டிய நாட்டைச் சோழ நாட்டின் பிடியிலிருந்து மீட்டார். முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் தென்னகம் முழுவதையும், இலங்கையையும் வென்று “எம் மண்டலம் கொண்டருளியவன்” என்ற

சிறப்புப் பெற்றார். இவ்வாறு தமிழ் மன்னார்கள் ஒருவொருக்கொருவர், ஒரு வம்சம் மற்றொரு வம்சத்திற்கு எதிராகப் போர் செய்து தங்களது செல்வாக்கை நிலைநாட்டினார். இது நீண்ட காலம் நீடிக்கவில்லை.

மாலிக்காபூர்:

தில்லி சுல்தானாக இருந்த அலாவுதீன் கில்ஜி 1310ல் தென்னிந்திய இந்து அரசுகளை ஒடுக்கவும், கொள்ளையடிக்கவும் தன் படைத்தலைவனான மாலிக்காபூரை அனுப்பினார். அப்போது தென் இந்தியாவில் தேவகிரியில் மேவார் அரசு, துவார சமுத்திரத்தில் ஹொய் சாள அரசு, வாரங்கல்லில் காகத்திய அரசு, மதுரையில் பாண்டிய அரசு ஆகிய இருந்தன. மாலிக்காபூர் முதலில் தேவகிரியையும் பின்பு வாரங்கல் மற்றும் துவார சமுத்திரத்தையும் தோற்கடித்து ஏராளமான பொருட்களை கவர்ந்து சென்றார். ஹொய்சாள மன்னன் மூன்றாம் வல்லாளன் தன்னூல் தவிர ஏனைய செல்வம் அனைத்தையும் இழந்தார். அக்காலத்தில் மதுரையை ஆண்டு வந்தவர்கள் மாறவர்மன் குலசேகர பாண்டியனும், அவரது மகன்களான வீரபாண்டியனும், சுந்தரபாண்டியனும் ஆவர். இவர்கள் பெரும் பரப்பினைக் கொண்ட பேரரசினை வெவ்வேறு தலைநகரங்களிலிருந்து ஆட்சி செய்தனர். மாறவர்மன் குலசேகரரின் மற்றொரு மனைவியின் மகன் ராஜராஜன் சுந்தரன் என்பவர் மாலிக்காபூருடன் சேர்ந்து கொண்டார்.

இந்நிலையில் மாலிக்காபூர் ஏராளமான சேதத்தை விளைவித்து கோயில்களை இடித்து, பலரைக் கொன்று ஏராளமான செல்வங்களை கவர்ந்து சென்றார். இதனால் நாட்டின் வறுமை பல்கிப் பெருகியது. இச்சூழலில் தான் கேரள மன்னன் ரவிவர்மன் குலசேகரன், பாண்டிய நாட்டின் மீது தன் மேலாதிக்கத்தினைச் சிலகாலம் நிலை நாட்டினார். ஹொய்சாள அமைச்சர்களின் உதவியோடு பாண்டியர்கள் மீண்டும் நாட்டை மீட்டனர். மீண்டும் 1314ல் அலாவுதீன் கில்ஜியின் மகனான முபாரக்ஷாவின் படைத்தலைவரான குசுரு கானின் தலைமையில் ஒரு படை மதுரையைக் கொள்ளையடித்துச் சென்றது. தில்லி சுல்தான் முகமது பின் துக்ளக் ஆட்சியில் மலபார் என அழைக்கப்பட்ட தமிழ்நாட்டை தில்லி அரசுடன் சேர்க்க முயற்சி செய்யப்பட்டது.

1327ல் மதுரையின் ஆளுநராக ஜலாலுதீன் ஹசன்ஷா என்பவர் நியமிக்கப்பட்டார். மலபார் எனப்பட்ட தமிழகம் தில்லி சுல்தானியத்தின் 23 மாநிலங்களில் ஒன்றாக்கப்பட்டது.1335ல் ஹசன்ஷா தில்லியிலிருந்து பிரிந்து சுதந்திரமாக இயங்கத் துவங்கினார். மதுரை சுல்தானியத்தை உருவாக்கினார். இவரைத் தொடர்ந்து ஏழு சுல்தான்கள் சுமார் 40 ஆண்டுகள் ஆட்சி செய்தனர். இவர்களில் கியாசுதீன் தங்கணிசா என்பவர் மிகக் கொடுமையான ஆட்சி செய்தார் எனக் கூறப்படுகிறது.

விஜயநகரம்:

இந்து சமயத்தையும் இந்துப் பண்பாட்டையும் காக்க வேண்டும் என ஹரிஹரர், புக்கர் எனும் சகோதரர்கள் இந்து அரசு ஒன்றினை விஜயநகரில் கி.பி.1336ல் உருவாக்கினார். புக்கர் மதுரை சுல்தான்களின் கொடுமையை ஒழித்துக் கட்ட ஹஸன்கங்கு என்ற சுல்தானுடன் போர் புரிந்தார். 1371ல் புக்கரின் மூத்த மகன் குமார கம்பனார் மதுரை சுல்தான்களின் ஆட்சிக்கு முடிவு கட்டியதோடு விஜய நகர ஆதிக்கத்தையும் நிலைநாட்டினார். மூடப்பட்ட கோவில்கள் திறக்கப்பட்டு வழிபாட்டு நெறிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அரங்கநாதனின் திருவுருவச்சிலை மீண்டும் திருவரங்கத்திலே வைக்கப்பட்டது. குமார கம்பனர் விஜயநகர ஆட்சிக்குப்பட்ட தமிழகப்பகுதியின் ஆளுநராக இருந்தார். கி.பி.1371 முதல் கி.பி.1525 வரை விஜயநகர அரசுகள் தமிழகம் முழுவதையும் பேரரசை ஆண்ட கிருஷ்ணதேவராயர் தம் ஆட்சிக்கு உட்பட்ட தமிழகத்தை பிரித்துத் தம் ஆளுநர்களிடம் ஒப்படைத்தார்.

நாயக்கர்கள்:

விஜயநகரை ஆளுநர்கள் நாயக்க வம்சங்களை உருவாக்கினார். 1526ல் வையப்ப நாயக்கர் தலைமையில் செஞ்சி நாயக்கர் அரசும், 1529ல் விசுவநாத நாயக்கர் தலைமையில் மதுரை நாயக்கர் அரசும் உருவாயின. செஞ்சி அரசில் தொண்டை மண்டலம் அடங்கியிருந்தது. மதுரை அரசில் ராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சி, கோயம்புத்தூர், சேலம், திருவிதாங்கூரின் ஒரு பகுதி ஆகியவை அடங்கியிருந்தன. கிருஷ்ண தேவராயர் மறைந்த பின் அவரது சகோதர் அச்சுதராயர், தனக்கு வெற்றிலை பாக்கு மடித்துக் கொடுத்த செவ்வப்ப நாயக்கருக்கு தனது

மனைவியின் சகோதரியை திருமணம் செய்து கொடுத்து, தஞ்சையை சீதனமாக வழங்கினார். 1532ல் தஞ்சை நாயக்கர் வம்சம் தோன்றியது.

தமிழகத்தில் ஐந்து மண்டலங்கள்

தமிழகமானது தொன்று தொட்டு முடியுடைய வேந்தர்களான சேர, பாண்டிய, சோழர்களால் ஆட்சிபுரியப் பெற்று வந்தது. அதனாலேயே தமிழகம் சேர மண்டலம் எனவும், பாண்டிய மண்டலம் எனவும், சோழ மண்டலம் எனவும் மூன்று பிரிவுகளையுடையதாயிற்று. இவை மண்டலம் என்று பெயராலின்றி நாடு என்னும் பெயராலும் வழங்கும். பின்பு தொண்டை மண்டலம், கொங்கு மண்டலம் என்னும் பிரிவுகள் உண்டாயின. இம்மண்டலங்களின் எல்லை அளவுகளைப் பின்வரும் தனிப்பாடல்கள் உணர்த்தும்.

சேர மண்டலம்

"வடக்கு திசைபழனி வான்கீழ்தென் காசி
குடக்குத் திசைகோழிக் கோடாம் – கடற்கரையின்
ஓரமே தெற்காகு முள்ளெண் பதின்காதம்
சேரநாட் டெல்லையெனச் செப்பு"

பாண்டிய மண்டலம்

"வெள்ளா றதுவடக்கா மேற்குப் பெருவழியாம்
தெள்ளார் புனர்கன்னி தெற்காகும் – உள்ளார
ஆண்ட கடல்கிழக்கா யைம்பத் தறுகாதம்
பாண்டிநாட் டெல்லைப் பதி"

சோழ மண்டலம்

"கடல்கிழக்குத் தெற்குக் கரைபுரள்வெள் ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம் – வடதிசையில்
ஏணாட்டு வெள்ளா றிருபத்து நாற்காதம்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல்"

தொண்டை மண்டலம்

"மேற்குப் பவளமலை வேங்கடம் நேர்வடக்காம்

ஆர்க்கு முவரி யணிகிழக்குப் – பார்க்குளுயர்
தெற்குப் பினாகி திகழிருப தின்காதம்
நற்றொண்டை நாடெனவே நாட்டு”

கொங்கு மண்டலம்

“வடக்குத் தலைமலையாம் வைகாவூர் தெற்குக்
குடக்குவெள் ளிப்பொருப்புக் குன்று – கிழக்குக்
குழித்தண் டலைசூழுங் காவிரிநன் னாடா
குழித்தண் டலையளவும் கொங்கு”

கொங்கு நாடு

“வடக்குப் பெரும் பாலைமலையும்
தெற்கு வைகாவூர் பழனிமலையும்
மேற்கு வெள்ளியங்கிரி ஆனைமலையும்
கிழக்கு கொல்லிமலை குளித்தலையும்”

எல்லை கொண்ட கொங்குநாடு குறித்து, கொங்கு நாட்டின் வரலாற்று அறிஞர் புலவர் ராசு அவர்கள் இவ்வாறு எழுதுகிறார்.

நம் செந்தமிழ் நாடு சேர, சோழ, பாண்டிய நாடுகளைப் போலவே தொண்டை நாடு, கொங்கு நாடு என்ற இரண்டு தனிப் பிரிவுகளையும் பழங்காலத்தில் தன்னகத்தே கொண்டிருந்தது.

கொங்கு நாடு தனக்கென்று எப்பொழுதும் தனியான எல்லைகள், வரலாறு, கலை, பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம் ஆகியவைகளைக் கொண்டது. இதனைப் பழங்கால இலக்கியங்களும் கல்வெட்டுகளும் உறுதிப்படுத்துகின்றன. நீலகிரி, கோவை, ஈரோடு, சேலம், தருமபுரி மாவட்டங்களின் சில பகுதிகளும், முந்தைய மதுரை மாவட்டம் பழனிப் பகுதியும், திருச்சி மாவட்டக் கரூர், குளித்தலைப் பகுதிகளுமே பழங் கொங்கு நாடாகும்.

“வடக்குப் பெரும்பாலை வைகாவூர் தெற்கு
குடக்குப் பொருப்புவெள்ளிக் குன்று–கிழக்குக்
குளித்தண் டலைமேவும் காவிரிசூழ் நாடு
குளித்தண் டலையளவும் கொங்கு”

என்பது தனிப்பாடல். கொங்கு நாட்டு எல்லைகளைக் கூறும் எல்லாப் பாடல்களுமே வெள்ளியங்கிரி மலையை மேற்கு எல்லையாகக் கூறுகின்றன. மேற்கு தொடர்ச்சி மலைக்கு மேற்கே சேர நாடு என்பதே இதன் கருத்தாகும்.

அதனால்தான் தொண்டைநாடு, கொங்குநாடு ஆகியவைகளைச் சேர்த்துத் தமிழ்நாடு ஐந்து என்ற கருத்து முன்பே இருந்தது. தண்டியலங்காரம் என்னும் நூலின் மிகப் பழமையான மேற்கோள் பாடல் ஒன்று கூறுகிறது. சைவ சமய நூல்களில் மிகத் தொன்மையானதாகக் கருதப்படுகின்ற திருமந்திரம்.

"தமிழ் மண்டலம் ஐந்து" என்று தமிழ்நாட்டின் ஐந்து பிரிவுகளைச் சுட்டிக் காட்டுகிறது. எனவே கொங்கு நாடு தனிப்பிரிவு என்பது இவற்றால் புலப்படுகிறது. வரலாற்று ஆசிரியர்கள் பலரும் இக்கருத்தை ஏற்றுக் கொள்கின்றனர்.

சங்க இலக்கியத்தில் பல இடங்களில் "கொங்கு நாடு" தனி நாடாகவே குறிக்கப்படுகின்றது. இந்நாட்டு மக்கள் "கொங்கர்" என்று சங்க இலக்கியத்தில் அழைக்கப்படுகின்றனர். சங்கப் பாடல்களில் கொங்கின் குறுநில மன்னர்கள் பலர் தனியாகக் குறிக்கப் பெறுவதுடன் கொங்கு நாட்டின் கால்நடைச் செல்வம், ஆழ்கிணறு, தண்ணீர்ப் பற்றாக்குறை, கொங்கரின் உழைப்பு. அவர்தம் போர்த்திறன் ஆகியவை பல்வேறு இடங்களில் பரக்கப் பேசப்படுகின்றன. மேலும் கொங்கு நாட்டு மணிகள், வண்ணக் கற்கள், வேலைப்பாடு மிக்க நல்ல அணிகலன்கள் புகழ்ந்து பாராட்டப் பெறுகின்றன.

சேரன் செங்குட்டுவன், தனக்குச் சமமான அரசனாகக் கொங்கு நாட்டு இளங்கோசரைத் தமிழ்நாடு மூவேந்தருக்கு ஒப்ப மதித்துப் போற்றியிருக்கின்றான். நூற்றுவர் கன்னர், இலங்கைக் கயவாகு, மாளவவேந்தர், சோழன் பெருங்கிள்ளி ஆகியோர் போலக் கொங்கு நாட்டு மன்னனையும் நட்பாகக் கொண்டிருக்கிறான். இதனைச் சிலப்பதிகாரத்தின் மூலம் அறிகின்றோம்.

பேரூரை "மேற்கு கொங்கு" என்று பாண்டியர் பழஞ்செப்பேடும் இலக்கியங்களும் கூறுவது கொங்கு நாடு தனி நாடு என்பதாலேயாகும். கொங்கு நாட்டிலிருந்து சமய அடியார்கள் சேரநாடு நோக்கிச் சென்றதை,

'கொங்கநாடு கடந்தபோய் குலவு மலைநாட்டு எல்லையுற'

'மலைநாடு கடந்தருளி .... திருமுருகன் பூண்டிவழிச் செல்கின்றார்'

எனப் பெரியபுராணம் குறிப்பிடும். சிலப்பதிகாரத்திலும் கொங்கின் மேல்பகுதி அரசர் குறிக்கப் பெறுகின்றார்.

நூற்றாண்டுகள் தோறும் கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் கொங்கு நாடு தனி நாடெனக் கூறுகின்றன. சிலர் தொண்டை நாட்டைச் சோழ நாட்டுடனும் கொங்கு நாட்டைச் சேர நாட்டுடனும் அடக்குவர். அது பொருந்தாது என்பது மேற்கண்ட சான்றுகளால் விளங்கும்.

'கொங்கு நாட்டு வரலாறு' எழுதிய கோவை கிழார் தன் நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

சோழர்கள், ஹெயிசாளர், விசய நகரத்தார், மைசூர் மன்னர்கள் ஆகிய வம்சத்தாரிடம் கொங்குநாடு சென்றது. இக்காலங்களிலெல்லாம் வெவ்வேறு இராஜியங்களுடன் கொங்கு நாடு இணைக்கப்பட்ட போதிலும் தனது தனிப்பட்ட வாழ்க்கையை இந்நாடு இழக்கவில்லை. இந்நாட்டின் அமைப்பு மாத்திரம் அன்றி இந்நாட்டுக் குடிகளின் பழக்க வழக்கங்களும் பண்டைக் காலம் தொட்டு ஒரே விதமாக இருந்து வந்தன. சமூக வழக்கங்களிலும் இவர்களுடைய வழக்கங்கள் ஏனைய நாட்டார்களிடமிருந்து சிறிது வேறுபட்டேயிருக்கும். இவ்விதக் காரணங்களினால் கொங்கு நாட்டைத் தனி நாடு என்று நிச்சயிக்கக்கூடும்.

வராக மிகிரர் தன் நூலில் கொங்கு நாடு தனி நாடு என்று குறிக்கின்றார். அசோகன் (கி.மு.278–232) கல்வெட்டிலும் தனி அரசராகக் குறிக்கப்பெறும் 'சதிய புத்திரர்' கொங்கு நாட்டு மன்னன் அதியமானே என்பது ஜம்பைக் கல்வெட்டால் உறுதிப்படுகிறது.

'கொங்கு நாடு' என்னும் வரலாற்று நூலில் புலவர் குழந்தை அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்.

'.................. தொன்றுதொட்டே கொங்குநாடு சேர சோழ பாண்டியர்களாகிய முடியுடை மூவேந்தராட்சிக்கு உட்படாது தனியாட்சி நாடாகவே இருந்து வந்தது. வேளிர் என்னும் சிறப்புப் பெயருடைய

வேளாண்குடிச் செல்வராகிய கொங்குநாட்டுத் தனி அரசர்கள் தமக்குள் பகையின்றி ஆண்டு வந்தனர். அவர்கள் முடியுடைய மூவேந்தரிடத்தும் அன்போடு நட்பும் அமைதியும் உடையவராக இருந்து வந்தனர். முடியுடை மூவேந்தர்க்கும் மைத்துனரும் மாமனாருமாகிய அவர்கள் பின்னர் எவ்வாறு இருந்திருப்பர். கேரளோற்பத்தி, கேரள மான்மியம் போன்ற நூல்களும், திருவாங்கூர்ச் சரித்திர ஆசிரியர் சங்குன்னி மேனன் அவர்களும், டாக்டர் எஸ்.கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்களும் கொங்கு தனியாட்சி நாடு என்பதைத் தக்க எடுத்துக் காட்டுக்களோடு நிறுவியுள்ளனர்.

தொல்பொருட் சிறப்பும், கல்வெட்டுப் பரப்பும், சிற்பச் செல்வமும், வரலாற்றுப் பெருமையும் உடையது. நமது கொங்குநாடு.

கொங்கு 24 நாடு குறித்த பாடல்

கொங்குநாட்டில் 24 நாடு இருந்தன. அந்நாடுகளின் பெயர்கள்,

"சொல்ல வரிதான பூந்துறைசை தென்கரைநாடு
தோன்று காங்கேய நாடு
தோலாத பொங்கலூர் நாடுதிகழ் ஆறையனி
தோய்ந்த வாரக்க நாடு
வல்லமை செறிதிருவாவினான் குடிநாடு
மணநாடு தலையநாடு
வரதட்டை பூவாணி யரைய நாடொடுவங்க
வடகரை கிழங்கு நாடு
நல்லுருக்கன்னாடு வாழவந்தியும் அண்ட
நாடு வெங்கால நாடு
நாவலர்கள் சொல் காவடிக்கா நாடு ஆனைமலை
ராசிபுர நாடு நிதமும்
இல்லறம் வளர்த்துதவி மல்கு காஞ்சிக் கோயி
லியல் செறி குறும்புநாடு
இனிய புகழ்சேர் கொங்க மண்டலந்தனிலான
இருபத்தி நான்கு நாடே".

என்று, விஜயமங்கலம் கார்மேகப்புலவர் பாடியுள்ளார்.

1. பூந்துறைநாடு, 2.தென்கரைநாடு, 3.காங்கேய நாடு, 4.பொங்கலூர் நாடு, 5.ஆறைநாடு, 6.வாரக்கநாடு, 7.தலையநாடு, 8.திருவாவினான்குடி நாடு, 9.மணநாடு, 10.தட்டையநாடு, 11.பூவாணிநாடு, 12.அரையநாடு, 13.ஒடுவங்கநாடு, 14.வடகரைநாடு, 15.கிழங்குநாடு, 16.நல்லுருக்காநாடு, 17.வாழவந்திநாடு, 18. அண்டநாடு, 19.வெங்காலநாடு, 20.காவடிக்கநாடு, 21.ஆனைமலைநாடு, 22.ராசிபுரநாடு, 23.காஞ்சிக்கோவில் நாடு, 24.குறுப்புநாடு ஆக 24 நாடுகள் உள்ளன.

கொங்குநாட்டில் காங்கயம் நாடு

கொங்கு 24 நாட்டில் நான்காவது நாடாக விளங்கி வந்த காங்கயம் நாடு, கொங்கு நாட்டின் மத்தியில் பழமைமிக்க நாடாகவும் வரலாற்று சிறப்புமிக்க திருக்கோயில்களும், கொங்குகுல தெய்வக் கோயில்களும் நிறைந்தநாடு காங்கயம் நாடு.

பல்வேறு சிறப்புகள் கொண்ட காங்கயம் நாட்டின் சிறப்புகள் குறித்து புலவர் பெருமையுடன்பாடுகிறார்.

ஓடக்கண்டது மாநதி நீர்கள்
உயரக்கண்டது வீதியெங்கும் தேர்கள்
தேடக்கண்டது தானதருமங்கள்
செழிக்கக்கண்டது தேவத்தலங்கள்
ஆடக்கண்டது அண்ணக்கொடிகள்
அதிரக்கண்டது முரசுத் துடிகள்
பாடக்கண்டது கீதங்கள் யாரும்
பகரும் காங்கேய நாடெங்கள் நாடே!
என்று பெருமைக்கொண்ட நாடு காங்கேய நாடு.

காங்கயநாடு சார்ந்த கிராமங்கள்:

1. காங்கயம், 2.வள்ளியரச்சல், 3.காடையூர், 4.பட்டாலி, 5.கீரனூர், 6.பார்ப்பதி, 7.பரஞ்சேர்வழி, 8.காரையூர், 9.மருதுரை. 10.முத்தூர், 11.கண்ணபுரம், 12.வெள்ளகோயில், 13.ஆறுத்தொழு, 14. ஆலாம்பாடி ஆகிய 14 கிராமங்கள் ஆகும்.

காங்கயம் நாட்டில் முத்தூர்:

காங்கயம் நாட்டில் 10வது கிராமம் முத்தூரில் வேளாண்மைத் தொழிலைக் குலத்தொழிலாகவும் குடும்பத்தொழிலாகவும் கொண்டு காலம் காலமாக செய்து வரும் கொங்கு வேளாளக் குடிமக்கள் காணி கொண்டு வாழ்ந்து வந்த கிராமம் முத்தூர் கிராமம் ஆகும்.

முத்தூர் கிராமம் ஆதிகாலத்தில் சுற்று வட்டாரத்தில் உள்ள ஊர்களின் தலைக் கிராமமாகவும் அரசு அலுவலகங்கள் வணிகவளாகங்கள் கிராமத்தெய்வங்கள் கொங்கு வேளாளர்களின் குலதெய்வக் காணிக் கோயில்கள் நிறைந்து வளர்ந்த பாரம்பரியமான பண்பாடுகள் கொண்ட பழமையான கிராமம் முத்தூர் கிராமம் ஆகும்.

முத்தூர் காணியாளர்கள் :

கொங்கு நாட்டின் நடைமுறை வழக்கப்படி ஊர்கள் தோறும் ஊர் சபைகள் அமைத்து ஊர்நிர்வாகத்தை சிறப்புடன் நடத்தி வந்தனர். இந்த முறையில் ஊர்நிர்வாகத்தை நடத்தி வந்தவர்களை ஊர்காணியாளர்கள் என்று கூறுவார்கள்.

முத்துரை காணிஆட்சி செய்து வந்த காணியாளர்கள்:

முத்தன் மணியன் முதற்சேரன் வெள்ளம்பர்
மெத்து பொருளாந்தையுடன் மேலான சித்திபெறும்
காவிலியர் நன்முதல் காமருடன் – ஏழ்முதன்மை
தரவுபுகழ் முத்தூர் தலம்.

முதன் முதலில் கொங்கு வேளாளர்களில் முத்தன் குலத்தாரே, முத்தூரை சீர்படுத்தி உருவாக்கியவர்கள் முத்தன் குலத்தவர்கள் என்று முத்தூர் வரலாறு கூறுகிறது.

முத்தூரில் முத்தன் குலத்தவர்கள் காணியாச்சி செய்து வரும் காலத்தில் கொங்குவேளாளர்களில் சிறப்பு வாய்ந்த குலமாக விளங்கிய மோகனூர் மணியங்குலத்தில் சம்பந்தம் செய்து முத்தன் குலத்தவர்கள் பெண்கொடுத்து மணியங்குலத்து மாப்பிள்ளைக்கு கோயில் காணிமுறை கொடுத்து நிலங்கள் கொடுத்து முத்தூரில் குடிவைத்து அருள்மிகு அத்தனூர் அம்மன் மற்றபரிவாரத்தெய்வங்களை, மற்றகுலத்தவர்களுடன் கூடி வழிபாடுகள் செய்து ஒன்றுபட்டு ஒற்றுமையோடு வாழ்ந்து வந்தனர்.

முத்தூரில் உள்ள குலதெய்வக் கோயில்கள்:

அருள்மிகு சோழிசுவரர் கோயில் அருள்மிகு அத்தனூர் அம்மன் கோயில், அருள்மிகு செல்வக்குமரன் கோயில். குப்பணசாமி கோயில், கைலாசநாதர் கோயில், மாதவராயப் பெருமாள் கோயில், சத்தியமங்கலத்தம்மன் கோயில், மதுக்கரை செல்லாண்டி அம்மன் கோயில். பட்டத்து அரசி அம்மன் கோயில். வாதாநாடு காளியம்மன் கோயில், உபயகாளியம்மன் கோயில், விநாயகர் கோயில், மாரியம்மன் கோயில், பகவதி அம்மன் கோயில் செல்லாண்டி அம்மன் கோயில், செங்காளிஅம்மன் கோயில், பாதக்கரை செல்லியம்மன் கோயில் இந்தக் கோயில்கள் யாவும் முத்தூர் காணியாளர்கள் உரிமை கொண்ட குலதெய்வக் கோயில்கள் ஆகும். இக்கோயில் காணியாளர்கள் முத்தன் குலம், மணியன் குலம், சேரன் குலம், வெள்ளம்பர் குலம், பொருளந்தை குலம், இந்தக் குலத்தவர்கள் அனைவரும் கொங்கு வேளாளர்கள் மற்ற இனத்தவர்களைச் சேர்த்து மொத்தம் 12 குலத்தவர்கள் முத்தூரில் உள்ள குலதெய்வக் கோயில்களின் காணியாளர்களாக விளங்கி வருவதாக முத்தூர் கோயில்கள் வரலாறு கூறுகிறது.

முத்தூர் கிராமத்தில் முத்தன் குலத்தவர்கள்:

கொங்கு வேளாளர்கள் குலங்களில் அனைத்து நற்பண்புகளும் கொண்ட குலமாக முத்தன் குலம் விளங்கி வருகிறது. முத்தூர் காணியாளர்களில் முதல் காணியாளர்களாக விளங்கி வேளாண்தொழிலின் வெற்றி வேந்தர்களாக பெயர் பெற்று ஆளும் அரசர்களிடம் நல்ல பெயர் வாங்கி முத்தூர் வட்டாரத்தில் சிறந்த முறையில் வேளாண்மை செய்து நிலச் சொந்தக்காரர்களாக விளங்கி முத்தூரில் காணியாச்சி செய்து காணியாளர்களாக முத்தன் குலத்தவர்கள் வாழ்ந்துள்ளனர். மிகப்பழமையான முத்தூர் சோழிஸ்வரர் கோயில் திருப்பணியில் பங்குகொண்டு மற்ற காணியாளர்கள் ஊர்ப்பொதுமக்களை ஒன்று இணைத்து சிறப்புடன் திருப்பணிகள் செய்து திருக்குட நன்னீராட்டு விழா நடத்தியதோடு அத்தனூர் அம்மன் கோயில் மற்ற கோயில்களுக்கும் நிறைவான திருப்பணிகள் முத்தன் குலத்தவர்கள் செய்து உள்ளனர்.

நவமணிகளில் ஒன்றாக முத்தோடு தொடர்புடையவர்களாக முத்தன் குலத்தினர் கருதப்படுகிறார்கள். கடற்கரை முத்துக்களை கொங்கு நாட்டில் அறிமுகப்படுத்திய பெருமக்கள் வழிவந்தவர்களாக இருக்கலாம்.

டி.எம்.காளியப்பா 'முத்தன் என்னும் தமிழ்ச்சொல் சிறந்தவன், உயர்ந்தவன், 'பளிச்' என்று மேலான நிலையில் இருப்பவன் என்று பொருள் தரும். முத்துசாமி (காரியுண்டிக் கடவுள்) வழியாக ஏற்பட்ட பெயராகவும் இருக்கலாம் என்று கூறுகிறார். இதை அப்படியே மோகனசுந்தரம் வழிமொழிந்துள்ளார்.

"முத்துக்களால் ஆன அணிகலன்களை மிகவும் விரும்பி அணியும் இயல்பினர். அதனால் இவர்கள் முத்தர் – முத்தன் எனப் பெயர்பெற்றனர்" என திருப்பூர் பழனிசாமிப் புலவர் தம் 'கொங்குச் செல்வி' என்னும் நூலில் எழுதியுள்ளார்.

நல்.நடராசன் 'முத்தன் குலம் உழவுத் தொழிலால் பெயர் பெற்றது. முத்து என்பது ஆமணக்கு, பருப்பு போன்றவைகளைக் குறிக்கும் பொதுப் பெயர். இவ்வாறு இவைகளை விளைவிக்கும் உழவர்கள் இப்பொருளோடு தொடர்புகொண்டு முத்தன் குலம் என்ற பெயர் பெற்றனர்" என்று கூறுகிறார்.

தே.ப.சின்னசாமி 'வெள்ளாளர்களில் முத்தாக முதன்மையாக வாழ்ந்தவர்கள் முத்தன் குலத்தார்' என்று கூறியுள்ளார்.

முத்தூரில் முதல் காணியாளர்கள் முத்தன் குலத்தார், காணிப்பாடல்,

'முத்தன் மணியன் முதற்சேரன் வெள்ளம்பர்
மெத்துபொரு எந்தையுடன் மேலான – சித்திபெறும்
காவலியர் நன்முதலிக் காமருடன் ஏழ்முதன்மை
தாவுபுகழ் முத்தூர் தலம்'

என்று கூறுகிறது. இக்காணிப்பாடல் 'அருள்மிகு குப்பணசுவாமி கோயில் புணருத்தாரணம் காணிப்பாடல் கண்ட காணியாளர்களால் செய்யப்பட்டது' என்ற முன்னுரையோடு முத்தூர் குப்பண்ணசுவாமி கோயிலில் கல்வெட்டாகவும் வெட்டப்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்கது.

காங்கய நாட்டுக் காணிப்பாடல்.

“அழகான முத்தூர் வளர்கின்ற முத்தனை
அய்யமிகு மணிய குலனை
அகளங்க சேரனை தனபதி வெள்ளம்பனை
அனதான பொருளந்தையை”

என்று கூறுகிறது. வேட்டுவர்களையும் (காவலியர்), முதலியார்களையும் இப்பாடல் குறிக்கவில்லை.

இன்று முதன்மைக் காணியாளர்களாக மணியன் குலத்தாரே உள்ளனர். முதலில் முத்தூரை உருவாக்கியவர்கள் முத்தன் குலத்தாரேயாவர். மோகனூர் மணியன் குலத்தார் இங்கு வந்தபோது முத்தன் குலத்தார் மணியன் குலத்தார்க்குப் பெண் கொடுத்து மாப்பிள்ளைக்கு மதற்காணியுரிமை கொடுத்தனர். இதனை முத்தூர் முன்னாள் மணியம் அமரர் எம்.வி.குப்புசாமிக் கவுண்டர் தான் எழுதிய ‘முத்தூர்த் தல மாண்பு’ என்ற நூலில் மிகத்தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் திருப்பூர் பழனிசாமிப் புலவர் முத்தன் என்னும் கூட்டத்தாரை வென்று மணியன் கூட்டத்தார் முத்தூரைத் தமதாக ஆக்கினர் என்று எழுதியுள்ளார் (1949). இதைப் பார்த்தத டி.எம்.காளியப்பா “மணிய குலத்தார் போர் புரிந்து முத்தூரைக் கைப்பற்றியதாக நினைக்கத்தகக ஆதாரங்கள் உள்ளன” என்று எழுதினார் (1978). நல்.நடராசன் “முத்தர்களின் முத்தூர்க் காணியை மணியன் குலத்தினர் கைப்பற்றிக் கொண்டதால் முத்தர்கள் கொங்கின பிற பகுதிகளுக்குக் குடிபெயர வேண்டிய நிலை ஏற்பட்டது” என்று தம் நூலில் எழுதியுள்ளார்.

இவர்கள் மூவரும் கூறியகை மாறான செய்தியாகும். கொங்கு வேளாளரில் ஒரு குலத்தார் மற்ற குலத்தாருடன் போர் செய்து வெளியேற்றி விட்டு அவ்வூரில் காணியுரிமைபெற்றதாக கொங்குச் சமுதாய வரலாற்றில் எங்கும் நடக்கவில்லை. அவ்வாறு நடைபெற்ற நிகழ்ச்சிகட்கு எந்த ஆதாரங்களும் இல்லை. உள்ளூர்ப் பெரியவர் மணியகாரர் அமரர் எம்.வி.குப்புசாமிக் கவுண்டர் அவர்கள் கூறுவதே நடைபெற்ற உண்மையான நிகழ்வாகும்.

ஒரு ஊரின் காணியாளர்கள் புதியதாக வந்த வேளாளர்களை வரவேற்று தங்கள் குலத்தினராக இருந்தால் அண்ணன் தம்பி என்றும், வேறு குலத்தினராக இருந்தால் மாமன் மைத்துனன் என்றும் உறவுடன் உரிமை கொண்டாடிகிழ்வுடன் "சேர வாரும் செகத்தீரே" என்று இணைந்து வார்ந்ததாகவே கொங்கச் சமுதாய வரலாறு உள்ளது.

இன்றும் முத்தன் குலத்தார் காணியுரிமையோடு வாழ்ந்து முத்தூர் முன்னேற்றத்திலும், கோவில் திருப்பணியிலும் பங்க கொண்டுள்ளனர். அவர்கள் முத்தூரை விட்டு வெளியேறவில்லை.

முத்துன் குலத்தாரோடு மணியன் குலத்தார் இணைந்து தென்னிலைப் போரில் ஈடுபட்டுள்ளனர். இணைந்து மாற்றாரை எதிர்த்துள்ளனர். இணைந்து சிறைப்பட்டுள்ளனர். வீர மரணத்தில் கூட இணைந்துள்ளனர்.

ஏழ்முதன்மை என்று முதலில் கூறப்பட்டது. பின்னர் வேட்டுவரில் பூவலியர், மணியவேட்டுவர், வெங்காஞ்சி வேட்டுவர், கொங்குச் செட்டியார், கொங்கு நாடார் ஆகியோரும் முத்தூர்க் காணியாளர் ஆயினர். இது முதல் காணியாளரான முத்தன் குலத்தாரின் சமூக ஏற்றுமையைக் காட்டுகிறது.

காங்கய நாடு, தென்கரை நாடு, பூந்துறை நாடு, அரையநாடு ஆகிய 4 நாடுகளில் வாழும் கொங்கு வேளாளரிடம் தென்னிலை வேட்டுவர் தலைவன் கொங்குராயன் சவளக் காணிக்கை ஆதிக்க கூலி வசூலித்தான் (தலைவரி) வசூலித்து வந்தான். பல ஊர்களில் புகுந்து வெட்டிக்குத்தி ஆடு–மாடுகளைக் கொள்ளையிட்டான். நாட்டார் விருப்பப்படி பழையகோட்டை பயிரகுல அழகன் சர்க்கரை தென்னிலை மீது போர் தொடுத்து கொங்குராயனை வென்றார்.

தென்னிலைப் போரில் முத்தூரைச் சேர்ந்த 13 பேர் இறந்து போனார்கள். முத்தூர் முத்தன் குலத்தாரில் சோழியப்ப கவுண்டர் மகன் பாண்டியப்பன் வீரமரணம் எய்தினார். விசய நகர ஆட்சிக்காலத்தில் வரி கொடுக்காத பலர் சிறைப்பட்டனர். அவர்களில் முத்தன் குல சின்னாக் கவுண்டர் மகடன பொன்னாண்டான் என்பவர் ஒருவர். வரிக்கொடுமையால் பிற காணியாளருடன் முத்தன் குலத்தாரும் வாழவந்தி நாட்டில் குடியேறினர். 12 ஆண்டுகள் முத்தூர் பாழாகக்

கிடந்தது. முத்தூர் மிகப்பெரிய வணிக நகரமாகத் திகழ்ந்தது. வணிக சமூகத்தவரின் பல கல்வெட்டுகள் முத்தூரில் உள்ளன.

முத்தன் குலத்தாருக்குக் கண்ணபுரம் காணியுண்டு என கண்ணபுரம் காணிப்பாடல் கூறுகிறது.

"அமரர்தொழும் கண்ணையில் அதனில்வளர் செங்கண்ணன்
அரசுபுரி அதியனவனை
அளப்பரிய ஒதான குலவனை நலமிகும்
ஆசைமிகும் மால்பதரியை

அன்புமிகும் கணவாள குலதீரர் தங்களை
அச்சமிகு மாவெட்டியை
அனைவர்புகழ் செட்டியை முத்தன் வண் ணக்கனை
அற்புதக் சுடுந்தூளியை"

என்பது கண்ணபுரக் காணிப்பாடலாகும். கண்ணபுரத்தில் உள்ள கரிய காளியம்மன் முத்தன் குலத்தார்க்குக் குலதெய்வம் ஆகும்.

வாரக்க நாட்டு நாரணாபுரம் செப்பேட்டில் அங்காள பரமேசுவரிக்குக் கொடுக்கும் கொடைகள் குறிக்கப்பட்டுள்ளன. கொடை அளித்தவர்களில் முத்தூர் முத்தன் குலம் குழந்தைக் கவுண்டர், மழவராய நயினாக் கவுண்டர் என்போர் குறிக்கப்பட்டுள்ளனர். 'மழவராயன்' என்பது அரசன் கொடுத்த பட்டப் பெயராக இருக்கலாம். ஒடத்துறையிலும் முத்தூர் முத்தன் குலத்தார் குடியேறி வார்ந்ததாக நாரணாபுரம் செப்பேடு கூறுகிறது. முத்தகுலச்சின்னாரு கவுண்டர். குழந்தை கவுண்டர், சின்னப்ப கவுண்டர் ஆகியோர் குறிக்கப்படுகின்றனர்.

முன்னவர்கள் எழுதிய வரலாற்று நூலில் முத்தூர், உடையகளம், கண்ணபுரம், சோமந்துறை சித்தூர், நாரணாபுரம், ஒடத்துறை, அன்னூர், இரணபுரம், சோமனூர், பல்லடம் முதலிய பல ஊர்களைக் காணியூர்கள் என்று குறிக்கப்பட்டுள்ளன.

பெரியகோட்டைத் திருப்பணி:

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டத்தில் உள்ள பெரியகோட்டை என்னும் ஊரில் சோழீசுவரர் கோயில் உள்ளது. விக்கிரம சோழனின்

20ஆம் ஆட்சியாண்டில் (1293) அண்டநாட்டுப் பொருளூர் என்னும் ஊரைச் சேர்ந்த முத்தன்குல முழையன் வேளான் தமிழதரையன் என்பவர் அக்கோயில் திருப்பணி நடக்கும்போது திருநிலைகால்களைத் தம் கொடையாகக் கொடுத்துள்ளார்.

'ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரமசோழதேவர்க்கு யாண்டு பதினேழாவதற்
கெதிராவது மூன்றாவது அண்ட நாட்டுப் புலரியூரில்
வெள்ளாளன் முத்தர்களில் முழையன் வேளான் ஆன
தமிழதரையனேன் திருநிலைகால் என் தன்மம்'

என்பது அதைக் குறிக்கும் கல்வெட்டாகும். முத்தன்குல வேளாளர் 13ஆம் நூற்றாண்டில் 'தமிழதரையன்' என்று பெயர் பெற்றிருப்பது சிறப்புமிக்கதாகும். அரசு அலுவலர் ஆன அவருக்கு அரசன் அளித்த பட்டம் பெயராகலாம். புலரியூர் என்பது பொருளூரின் பழம் பெயராகும்.

முத்தன் குலமக்கள் வாழ்ந்திடும் ஊர்கள்:

முத்தூர், முதலிபாளையம், அன்னூர், கோபி, பொள்ளாச்சி, கண்ணபுரம், புதுப்பாளையம், ஒடந்துரை, உப்பிலிபாளையம், சோமன்துரை, திருப்பூர், கோவை, ஈரோடு, நாமக்கல், கரூர், ஒட்டன்சத்திரம் மற்றும் கொங்கு நாடு முழுவதும் பரவலாக முத்தன் குலத்தவர்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

முத்தன் குலம் பெண்துறவி குமராயி அம்மாள் அடிகள்:

தென்னாடுடைய சிவனே போற்றி என்னாட்டவரும் போற்றிடும் இறைவா போற்றி எனப் போற்றி வணங்கப்படும். சிவபெருமான் கோயில்கள் தமிழகமெங்கும் நிறைந்து இருப்பது போல் கொங்கு காங்கயம் நாடு முத்தூரில் சோழிஸ்வரர் திருக்கோயில் உள்ளது.

இக்கோயிலில் தினசரி பூசை வழிபாடுகளை முத்தன் குலம், மணியன் குலம், சேரன் குலம், வெள்ளம்பர் குலம், பொருளந்தை குலம் சார்ந்த காணியாளர்கள் சிறப்புடன் செய்து வந்தனர். முத்தன் குலம் காணியாளர் மகள் குமராயி திருமணம் செய்யாமல் கோயிலின் பணிசெய்து கொண்டு இறைவன் இறைவிகளை வழிபாடுகள் செய்து துறவிபோல் வாழ்ந்து வந்தார்.

அப்போது முருகன் அவதாரமாக விளங்கிய செல்வக்குமரன் மணியன் குலத்தில் பரஞ்ஜோதி என்ற செல்லப்ப கவுண்டருக்கும், பாவை அம்மாளுக்கும் தெய்வக் குழந்தையாக தோன்றினார்.

தெய்வப்பக்தி நிறைந்த செல்லப்பகவுண்டர் குடும்பம் செல்வக்குமரனை தெய்வ சிந்தனையை ஊட்டி செல்வாக்குடன் வளர்த்து வந்தனர். செல்வக்குமரன் அதிகநேரம் சோழிஸ்வரர் கோயிலிலும் அத்தனூரம்மன் கோயிலிலும் குமராயி அம்மாளுடன் இறை வழிபாட்டில் ஈடுபட்டு ஞானக் குழந்தையாக வளர்ந்தார்.

செல்வாக்குடன் வாழ்ந்து வந்த செல்லப்பகவுண்டர் தன் மகன் செல்வக்குமரனை கல்வியும் புராண இதிகாசங்கள் என அனைத்துக் கலைகளையும் குறைவு இல்லாமல் கற்றுக் கொடுத்து வளர்த்து வாலிபனாக்கினார்.

வாலிப வயதை அடைந்த செல்வக்குமரன் அதிகநேரம் கோயில்களில் வழிபாடுகள் செய்து வந்தார். வழிபாட்டுக்கு உதவியாக குமராயி அம்மாள் உதவி செய்து வந்தார். செல்வக்குமரன் மீது அளவற்ற அன்பு குமராயிக்கும் குமராயி மீது செல்வக்குமரனுக்கும் அளவற்ற அன்பும் பாசமும் நிறைந்து இருந்தன.

ஒருநாள் வீட்டில் யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் செல்வக்குமரன் வெளியேறிச் சென்று விட்டார். செல்லப்பகவுண்டர் குடும்பமும் குமராயி அம்மாளும் உறவினர்களும் வேதனைப்பட்டனர். வெளியூர் சென்ற செல்வக்குமரன் பல்வேறு கோயிலுக்குச் சென்று தவம் செய்து வழிபாடுகள் செய்து இறைவனின் அருள்பெற்று இறுதியில் தென் செஞ்சேரிமலை முருகன் கோயிலுக்கு சென்று முருகப்பெருமானை வழிபாடு செய்து அங்கு ஒரு குகையில் அமர்ந்து, தியானம் செய்யத் தொடங்கி, துறவியாகி தென் செஞ்சேரிமலையில் முருகன் அவதாரத்தை வெளிப்படுத்தி மக்களுக்கு அருளாசி வழங்கி வந்தார்.

செல்வக்குமரன் வெளியேறிய பின்பு குமராயி அம்மாள் சின்னமுத்தூரில் மடாலயம் தொடங்கி திருமணம் செய்து கொள்ளாமல் துறவு பூண்டு திருக்கோயில்களில் பணிவிடைசெய்து இறைவழிபாடுகள் செய்து துறவிகளாக வாழ்ந்து வரும் மணியன்குலம் சார்ந்த அத்தாயி,

முத்தாயி, செல்லாயி ஆகியவர்களை சேர்த்து மடாலயத்தை சிறப்புடன் முத்தூர்கோயில்களில் குறைவின்றி பூஜை வழிபாடுகள் நடத்தியும் பசியோடுவரும் அடியார்களுக்கும் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு முத்தூர் வேளாண் குடிமக்களின் உதவியோடு அன்னதானம் செய்து வந்தனர்.

தென்ஞ்சேரி முருகன் மலையில் செல்வக்குமரன் துறவியாகி மக்களுக்கு அருளாசி வழங்கி வரும் செய்தி முத்தூருக்கு எட்டியது. செல்லப்ப கவுண்டர் குடும்பமும் குமராயி அம்மாளும், ஊர்மக்களும் பெரும் மகிழ்ச்சி கொண்டு தென்ஞ்சேரிமலை சென்று செல்வக்குமாரசாமியை அனைவரும் மன்றாடி முத்தூருக்கு அழைத்து வந்தனர்.

முத்தூர் வந்த செல்வக்குமரசாமி முத்தூர் மக்கள் சிறப்பான வரவேற்புக் கொடுத்து குமராயி அமைத்து இருந்த மடாயலத்தில் தங்கவைத்து குமராயி அம்மாளும், பெண்துறவிகளும் பணிவிடைகள் செய்து வந்தனர்.

செல்வக்குமரன் சாமிகளின் மகிமையை அறிந்த மக்கள் தினமும் கூட்டமாக வந்து சாமிகளின் அருளுரைகளையும், ஆசியையும் பெற்றுச் சென்றனர். சாமிகள் மக்களை சந்தித்த நேரம் தவிர மற்ற நேரங்களில் தனிமையில் தியானம் செய்து வருவார். செல்வக்குமரச்சாமி சின்னமுத்தூர் வந்ததில் இருந்து குமராயின் மடாலயத்திற்கு மக்கள் கூட்டம் அதிகமாக கூடி செல்வக்குமாரசாமியிடம் அருளாசி பெற்றுச் சென்றனர்.

சின்னமுத்தூரில் உள்ள குமராயின் மடாலயத்தில் தங்கி அருளாசி வழங்கி மக்களுக்கு ஆன்மீக வழிகாட்டி வந்த சாமிகள் இறைவனடி சேர்ந்து சின்னமுத்தூரில் கோயில் கொண்டு அருள்மிகு செல்வக்குமாரசாமி ஆனார். நாளடைவில் குமராயி அம்மாளும், அத்தாயி, முத்தாயி, செல்லாயி அவர்களும் ஒருவரின் பின் ஒருவராக இறைவனடி சேர்ந்தனர். இத்துறவிகள் ஜீவசாமாதி அருள்மிகு செல்வக்குமாரசாமி கோயிலுக்கு அருகில் உள்ளது. அருள்மிகு செல்வக்குமாரசாமியையும், முத்தன் குலம் குமராயி, மணியன் குலம் அத்தாயி, முத்தாயி, செல்லாயி ஆகியவர்கள் சமாது பீடத்தையும் குலமக்கள் வழிபாடுகள் செய்து வருகின்றனர்.

முத்தன் குலம் மணியன் குலத்து பெண் துறவிகள்:

செல்வக்குமார் வரலாற்றில் முத்தன் குலம் குமராயி, மணியன் குலம், அத்தாயி, செல்லாயி, முத்தாயி ஆகிய நான்கு கொங்கு வேளாண் மங்கையர் பற்றிய வரலாற்றுச் செய்தி மிக முக்கியம் வாய்ந்ததாகும். பெண்கள் சமயத் தொண்டில் ஈடுபடுவது அதிலும் குறிப்பாகக் கன்னிப் பெண்கள் திருமணம் செய்து கொள்ளாமல் சமயத் தொண்டிலும் திருமடம் அமைப்பிலும் குருநாதரை வணங்குதலிலும், அடியாரைப் பேணி உபசரித்தலிலும், அன்னதானத்திலும், அன்னதானத்திற்கு வேண்டிய பொருள்களை தேடுதலிலும், தன்னை அர்ப்பணித்து செயல்பட்ட கொங்கு வேளாளர்கள் இனத்துப் பெண் துறவிகளின் ஆன்மீக வரலாறு முத்தூர் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும் செய்தியாகும்.

பெரியபுராணத்தில் திருநாவுக்கரசர் வரலாற்றில் காணும் திலகவதியார் போலவே இப்பெண் துறவிகள் முத்தன் குலம் குமராயி, மணியன் குலம் அத்தாயி, முத்தாயி, செல்லாயி ஆகிய நால்வரும் கொங்கு வேளாளர்கள் சமுதாயத்திற்கும், முத்தன் குலத்திற்கும் மணியன் குலத்திற்கு பெருமை சேர்த்த பெண் துறவியாவார்கள்.

கொங்கு நாட்டில் ஆறைநாடு

அன்பும் அமைதியும் ஆன்மீகமும் வழிபாடுகளும் நிறைந்து, வளர்ந்து கோயில்கள் நிறைந்த கொங்கு நாட்டில் பேரூர், அன்னூர், அவிநாசி கோயில்பாளையம், மொக்கனீஸ்சுரம் பெருமாநல்லூர், சேவூர், துடியலூர், முட்டம், தொண்டாமுத்தூர் ஆகிய ஊர்களில் சிவாலயங்கள் வளர்ந்த நாடு ஆறைநாடு.

ஆறைநாடு சார்ந்த ஊர்கள் குறித்து கொங்குமண்ட சரகம்பாடும் பாடல்.

கொங்கு நாட்டில் ஆறைநாடு

சேலை நகர் அன்னியூர் வெள்ளாதி கோமங்கை
திசைபுகழ வாழ்முடுதுறை
தென்கவசை துடியலூர் நீலநகர் பேரையொடு
தெக்கலூர் கரைமாதையூர்

மேவுபுகழ் அவிநாசி கஞ்சைகா னூர்கரவை
வெண்பதியும் இருகாலூரும்
விரைசேரும் உழவையொடு வுடதிசையில் உறுகின்ற
வெள்ளையம் பாடிநகரும்

நாவலர்க்கு இனிதாக திருமுருகன் பூண்டியொடு
நவசெளை பழனைநகரும்
நம்பியூ ரோடெலத் தூருக்கிரம் புலவர்
நகரமுடன் இனிமையான

கோவில்நகர் தொண்டைமான் புத்தூரு முட்டமே
கூடலூர் சிங்கநகரும்
குடக்கோட்டூர் குள்ளந் துறைப்பதிவு வான்வந்தி
கோட்டைக் கரை ஆறைநாடே!

ஆறைநாடு சார்ந்த ஊர்பெயர்கள்:

சேவூர்	கரைவழிமாதப்பூர்	எலத்தூர்
அன்னூர்	அவிநாசி	உக்கிரம
வெள்ளாதி	கஞ்சப்பள்ளி	புலவர்நகர்

கோமங்கை	கானூர்	கருக்கம்பாளையம்
கோயின்முத்தூர்	கருவலூர்	கோயிற்பாளையம்
கோயம்முத்தூர்	வெள்ளையன்பதி	தொண்டமுத்தூர்
மூடுதுறை	இருகாலூர்	முட்டம்
கவசை	உழலை	கூடலூர்
கோயிற்பாளையம்	வெள்ளையன்பாடி	சிங்காநல்லூர்
சர்க்கார்சாமக்குளத்தருள்ளது	திருமுருகன்பூண்டி	குடக்கோட்டூர்
துடியலூர்	செவளாபுரி	மொக்கனீச்சுரம்
நீலம்பூர்	நடுவச்சேரி	திருவாசகவைப்புத்தலம்
பேரூர்	பழனை	குள்ளந்துறை
தெக்கலூர்	பெருமாநல்லூர்	வாளவந்தி
	நம்பியூர்	கோட்டைக்கரை

ஆக ஊர்கள் 32 ஆகும்.

கொங்கு ஆறை நாட்டில் சோழர்கள் ஆட்சி:

சோழப் பேரரசு கொங்குநாட்டை ஆட்சி செய்து வந்தபோது நாட்டு மக்களோடு இணைந்து ஆட்சி செய்யும் வகையில் சோழ அரசு கிராமியப் பண்பாட்டு ஆட்சி முறையைக் கொண்டு வந்து ஆட்சி செய்து வந்தனர்.

வடக்கே பெரும்பாலை மலையையும்
தெற்கே பழனி மலையையும்
மேற்கே வெள்ளியங்கிரி மலையையும்
கிழக்கே கொல்லிமலை குளித்தலையையும்

எல்லை கொண்ட பெரிய நாட்டை சிறப்பான முறையில் ஆட்சி செய்திட கொங்குநாட்டை இருபத்திநாலு நாடுகளாகப் பிரித்து ஒவ்வொரு நாடுகளுடன் பல ஊர்களைச் சேர்த்து கொங்குநாடு முழுவதும் உள்ள ஊர்களில் ஊர்குடிக்களின் ஆதரவோடு ஊர்தோறும், ஊர்சபை கிராமசபை, நகரசபை நாட்டுசபைகள் அமைத்து நாட்டுத் தலைவரின் தலைமையில் அனைத்து சபைகளும் இயங்கி வந்தன நாட்டுத் தலைவர்களின் நிர்வாக நடவடிக்கைகளை சோழ அரசு மேற்பார்வையிட்டு கொங்கு நாட்டை ஆட்சி செய்து வந்தனர் சோழர்கள்.

ஆறைநாடு:

கோவை அன்னூர் அவிநாசிப் பகுதிகளைக் கொண்டது ஆறைநாடு. இயற்கை வளம் சூழ்ந்து, நிலவளம், நீர்வளம், மண்வளம் மக்கள் கூட்டம் நிறைந்தநாடு கொங்கு ஆறைநாடு.

கி.பி.பத்தாம் நூற்றாண்டில் சோழர்கள் ஆட்சி அமைத்து கொங்கு நாட்டை ஆட்சி செய்தபோது கொங்கு நாட்டை விவசாய பூமியாக மாற்றி அமைத்திட சோழ அரசு தீவிரமாக செயல்பட்டது.

அப்போது ஆறைநாடெங்கும் உள்ள நிலங்கள், புதர்கள் நிறைந்து வனாந்திரமாக இருந்தநிலையில், அரசு ஊர் மக்களைக் கொண்டு காடுகளை அழித்து, மேடுபள்ளங்களை சமன் செய்து விளைநிலங்களாக மாற்றி தண்ணீர் செல்லும் ஆறுகளைத் தடுத்து, குளம் குட்டைகள் அமைத்து விவசாயக் குடிமக்கள் வேளாண்மை செய்திட வழிவகுத்தினர்.

அந்தக்காலத்தில் ஆறைநாட்டில் விளைநிலங்கள் அதிகமாகவும் வேளாண்மை செய்திடும் வேளாண்குடிமக்கள் குறைவாக இருந்தபடியால் கி.பி.12 ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த கரிகாற்சோழன் தன் ஆட்சிக்கு உட்பட்ட தாராபுரம் வட்டாரத்தில் உள்ள தென்கரைநாடு காங்கயம் நாட்டில் உள்ள நாட்டுத்தலைவர்களுக்கு ஆறைநாட்டில் வேளாண்மை செய்வதற்கு நல்ல அனுபவங்கொண்ட வேளாண்மை செய்யும் வேளாளர்களை அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொண்டார் கரிகாற்சோழன்.

கரிகாற்சோழன் கேட்டுக் கொண்டபடி தென்கரை நாட்டு தலைவரும் காங்கயம் நாட்டுத் தலைவரும் தங்கள் நாட்டில் இருந்து கொங்கு வேளாளர் குடும்பங்களை ஆறைநாட்டுக்கு அனுப்பி வைத்தனர். இவர்களில் முத்தூர் முத்தன் குலத்தவர்கள் மணியன்குலத்தவர்கள் ஆதிகுலத்தவர்கள், அந்துவன்குலத்தவர்கள், காடைகுலத்தவர்கள், பவளகுலத்தவர்கள், பாண்டியகுலத்தவர்கள், தோடைகுலத்தவர்கள் பொருளாந்தை குலத்தவர்கள் ஆவர்.

முதலிபாளையத்தில் முத்தூர் முத்தன் குலத்தவர்கள்

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் அரசு உயர்நிலைப்பள்ளி பொன்விழா மலரில் தமிழாசிரியர் ஐயா பாட்டரசன் மாரியப்பன் அவர்கள் மெய்யும் வடிவும் என்ற ஆய்வுக் கட்டுரையை மிகச்சிறப்பான முறையில் ஆய்வு செய்து எழுதி வெளியிட்டுள்ளார்.

இக்கட்டுரையில் முதலிபாளையம் எப்போது தோன்றியது யார் தோற்றுவித்தவர் என்று தெளிவாக எழுதியுள்ளார் ஆதிகாலத்தில் ஆறைநாடு அன்னூர் வட்டாரத்தில் வேளாண்மைத் தொழில் சிறப்பாக நடைபெற்று வந்தன. அந்தப் பகுதியில் பெரிய அளவில் விவசாயம் செய்து செல்வாக்குடன் வாழ்ந்தவர் முத்தாலிக்கவுண்டன் இவரும் இவர் மைத்துனர் தோடைகுலத்தை சார்ந்தவரும் பூளியவேளாளர்களும் மற்ற குடி மக்களும் ஒன்றுபட்டு தற்போது உள்ள முதலிபாளையம் என்ற ஊரை உண்டு பண்ணி மக்கள் குடியேறி வாழ்ந்து வந்தனர்.

முத்தாலிக்கவுண்டர் செல்வாக்கு மிக்கவராகவும் ஊரின் பெரியதனக்காரராகவும் இருந்து ஊர்மக்களுக்கு பொதுப்பணிகள் செய்து ஊர்த்தலைவராக இருந்து வந்ததால் ஊர்ப்பெரியவர்கள் கூடிதாங்கள் குடியிருக்கும் ஊருக்கு முத்தாலிக்கவுண்டன் பாளையம் என்று பெயர் வைத்தனர், காலப்போக்கில் முத்தாலிக்கவுண்டன் பாளையம் என்ற பெயர் மறைந்து முத்தாலிபாளையமாக மருவி பின்பு முதலிபாளையமாக நிலைபெற்றுள்ளதாக முன்னோர்கள் கூறுகின்றனர்.

கொங்கு வேளாளர்களில் முத்தன் குலத்தவர்கள் தங்கள் பெயரை ஆண்களுக்கு முத்துச்சாமி, முத்தப்பன், முத்துக்கவுண்டன். என்ற பெயரும், பெண்களுக்கு முத்தாயி, முத்தாத்தாள், முத்தம்மாள் என்றுபெயர் வைக்கும் பழக்கம் உள்ளது.

முதலிபாளையத்தின் தலைவராக விளங்கி வந்த முத்தாலிக் கவுண்டரும், முத்தன் குலம் சார்ந்தவராக இருக்கலாம் என்று முத்தன் குலப்பெரியவர்கள் கருதுகின்றனர். அன்னூர் வட்டாரத்தில் குடியேறிய முத்தன் குலம் சார்ந்த குடும்பங்கள் தற்போது வாழ்ந்திடும் ஊர்கள்

1. முதலிபாளையம் 2. கடத்தூர் 3. செங்காளிபாளையம்
4. வடுகபாளையம் 5. குப்பிலபாளையம் 6. ஆண்டிச்சிபாளையம்
7. எல்லப்பாளையம் 8. கரையம்பாளையம்

இந்த ஊர்கள் இல்லாமல் மற்ற பல ஊர்களில் முத்தன் குலத்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

கொங்கு வேளாளர்கள் வழிபாட்டில் முதல் தெய்வமாக குலதெய்வத்தையே வழிபாடு செய்வார்கள் அன்னூர் வட்டாரத்தில் குடி இருக்கும் முத்தன் குலத்தவர்கள், காங்கய நாடு முத்தூர் கோயிலுக்கு சென்று வழிபாடு செய்து வருவதற்கு அதிக தூரம் என்பதால் முத்தூர் கோயிலில் இருந்து அம்மனிடம் உத்தரவு கேட்டு பிடிமண் எடுத்து வந்து கருவலூர் பக்கம் உப்பிலிய பாளையத்தில் கோயில் கட்டி அருள்மிகு பெரிய நாச்சியம்மனை ஸ்தாபனம் செய்து எதிர்காணியாக கொண்டு வழிபாடு செய்து வரும் முத்தன் குலத்தவர்கள் முத்தூர் அத்தனூர் அம்மன் கோயிலுக்கும் சென்று வருகின்றனர்.

அவிநாசி புதுப்பாளையத்தில் முத்தன் குலத்து குடிமக்கள் முத்தூர் குல தெய்வக்கோயிலுக்கு எதிர்காணியாக அருள்மிகு செல்லாண்டியம்மனை குல தெய்வமாகக் காணி கொண்டு வழிபாடுகள் செய்து வருகின்றனர்.

முதலிபாளையத்தில் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களின் முன்னோர்கள்

முத்தூரில் முதல் காணியாளர்களாக விளங்கி காணியாட்சி செய்து செல்வாக்குடன் வாழ்ந்து வந்த முத்தன் குலத்து வேளாண் குடிமக்கள் சோழனின் ஆதரவில் ஆறைநாடு அன்னூர் வட்டாரம் முதலிபாளையம் குடிவந்து வேளாண்மைத் தொழிலை விவேகத்துடன் கடுமையாக பாடுபட்டு அதிகமான நிலங்கள் சேர்த்து பெரிய பண்ணையாளர்களாக விளங்கியவர்கள் முதலிபாளையம் முத்தன்குலம் கந்தசாமிக்கவுண்டரின் முன்னோர்கள் கந்தசாமிக்கவுண்டரின் மகன் இராமணகவுண்டர் இவரின் மனைவி ராயாத்தாள் இத்தம்பதியினர் முதலிபாளையத்தில் பெரும் பண்ணையாளராக செல்வாக்கும், சொல்வாக்கும் கொண்டவராகவும் தெய்வ வழிபாட்டில் ஆர்வம் கொண்டவராகவும் புராணம் தெய்வங்களின் வரலாற்று நூல்கள், திருக்குறள் அதிகம் படித்து தெளிவு கொண்டு நல்லதை நினைத்து நல்லதை செய்து நாடும், நாட்டு மக்களும் போற்றி புகழ்ந்திடும் வகையில் முதலிபாளையத்தில் சீரும் சிறப்புடன் வாழ்ந்து வந்தனார்.

இராமணகவுண்டர் இராயாத்தாள் தம்பதிகள் முதலிபாளையத்தில் கொங்கு வேளாளர்களின் பாரம்பரியப் பண்பாடுகளுடன் குடும்ப வாழ்க்கை வாழும் காலத்தில் தெய்வ பக்தியோடு தோட்டங்களில் வேலை செய்யும் ஆட்களுக்கும் ஏழை எளியவர்களுக்கும் தாராளமாக தான தருமங்கள் செய்வதோடு தோட்டத்து பட்டிமாடுகளில் இருந்து பால் கறந்து ஊரில் உள்ள கோவில்களில் நடைபெறும் பூசைக்கு இளநீர், பால், தயிர், பூசை சாமான்கள் கொடுப்பது போன்ற தர்ம காரியங்கள் செய்து வந்தனர். இவர்கள் செய்த தர்மங்களால் இவர்களுக்கு நஞ்சப்ப கவுண்டர் கிருஷ்ணகவுண்டர் கணபதிக்கவுண்டர், சிவன்மலைக்கவுண்டர், கந்தசாமிக்கவுண்டர், சென்னிமலைக் கவுண்டர் ஆகிய ஆறு ஆண்மக்கள் பிறந்து வளர்ந்தனர்.

இராமணகவுண்டரும் – இராயாத்தாளும் தனது மகன்களை இனப்பண்பாடு, குலப்பண்பாடு அன்பு ஆன்மீகம் இரக்கம், ஈகை, உழைப்பு, ஊக்கம், எளிமை, ஏற்றம் கூடிய நீதி, நேர்மை, ஒழுக்கம், கட்டுப்பாடு கொண்ட நல்ல பழக்க வழக்கங்களை கற்றுக் கொடுத்து,

திண்ணைப் பள்ளியில் படிக்க வைத்து வளர்த்து வந்தனர். மகன்கள் அனைவரும் வளர்ந்து வாலிபர்கள் ஆன பின்பு ஒவ்வொருவருக்கும் திருமணம் செய்து வைத்தார் இராமணகவுண்டர். இவர்களில் சிவன்மலைக்கவுண்டருக்கு மணியக்காரன்பாளையத்தில் கர்ப்பிணி அம்மாளைத் திருமணம் செய்யப்பட்டது. இராமணகவுண்டர் குடும்பம் பெரிய குடும்பம் ஆனபடியால் தன் மக்களுக்கும் ஆளுக்கொரு வீடு தனித்தனியாக தோட்டம் காடு பட்டி ஆடுகள், மாடுகள் உட்பட அனைத்து சொத்துக்களையும் பாகம் பிரித்துக் கொடுத்து தனிக்குடித்தனம் அமைத்து கொடுத்து இராமணகவுண்டரும் இராயாத்தாள் அம்மாளும் தன்மகன்களை அன்புடன் ஆசிர்வதித்து வழிநடத்தி வந்தனர்.

சிவன்மலை கவுண்டரின் தனிக்குடித்தனம்:

சிவன்மலைக்கவுண்டர் தனிக்குடித்தனம் பெரிய வீட்டு நிலம் பாகம் பிரித்ததில் சிவன்மலை கவுண்டருக்கு முதலிபாளையத்தில் தொட்டிக் கட்டு வீடும், சிறைத் தோட்டமும், மேய்ச்சல். காடுகளும், பட்டி ஆடுகளும் கவலை வண்டி மாடுகளும் தன் பங்குக்கு வந்தன தனிக்குடித்தனம் வந்த சிவன்மலை கவுண்டரும் கர்ப்பிணி அம்மாளும் சிறைத்தோட்டத்தில் புதிதாக வேளாண்மை செய்யத் தொடங்கினார்கள் அந்தக் காலத்தில் பாசனம் செய்திட கிணற்றில் உள்ள தண்ணீரை கவலை ஏற்று மூலம் மாடுகளைக் கொண்டு கிணற்றுவாரியில் மாட்டை முன்னும், பின்னும் ஓட்டி தண்ணீர் இறைத்து பாசனம் செய்ய வேண்டும். சிவன்மலைக் கவுண்டர் வேலை ஆட்களுடன் கவலை ஓட்டுதல் ஏர் ஓட்டுதல் வரப்புக் கட்டுதல் என அனைத்து வேலைகளும் செய்வார். அதுபோல் கப்பினி அம்மாளும் பெண்களுடன் சேர்ந்து தோட்டத்து வேலைகள் அனைத்தும் செய்வார். தெய்வபக்தி கொண்ட சிவன்மலைக் கவுண்டர் தினமும் வேலை முடிந்து குளித்து விநாயகரை வழிபாடு செய்யாமல் உணவு சாப்பிட மாட்டார் கர்ப்பிணி அம்மாளும் தெய்வ பக்தி கொண்டு குடும்பம் நடத்தி வந்தபோது, இத்தம்பதிகளுக்கு ஆறு குழந்தைகள் பிறந்து வளர்ந்தன. இவர்களில் ஐந்து ஆண்கள், ஒரு பெண் இவர்களில் மூத்தவர் வெள்ளியங்கிரி கவுண்டர், 2.வெங்கடாசலக்கவுண்டர், 3.வேலுச்சாமிக்கவுண்டர், 4.ராமசாமி அடிகளார், 5.சுந்தரக்கவுண்டர், 6.சுப்புலட்சுமி ஆகியோர் ஆவர்.

தெய்வத்தாய் கர்ப்பிணி அம்மாள் தெய்வத்தந்தை சிவன்மலை கவுண்டர் தம்பதிகளுக்கு கிடைத்த மக்கள் செல்வம் ஆறு பேரில் நான்காவது மகனாக குரோதனா ஆண்டு புரட்டாசி மாதம் மகம் நாளில் **1925**ல் தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகள் முதலிபாளையத்தில் தோன்றி வளர்ந்தார். தாயில் சிறந்த கோயிலும் இல்லை தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்பது போல் அடிகள் தாயிடமும் தந்தையிடமும் அன்பு கொண்டு அவர்கள் அரவணைப்பில் தெய்வ நெறியில் வளர்ந்த அடிகளார் தன் சகோதர சகோதரிகளுடன் கூடி சிறைத்தோட்டத்தில் தாய் தந்தையுடன் சேர்ந்து விவசாய வேலைகள் ஆடுமாடுகள் பராமரித்தல் போன்ற வேலைகளை ஆர்வத்துடன் செய்து தாய்தந்தையருக்கு உதவி செய்து வந்தனர்.

சிவன்மலைக்கவுண்டர் சிறை தோட்டத்தில் வேளாண்மைத் தொழில் செய்து தன் குடும்பத்தையும் மனைவி மக்களையும் பாதுகாத்து நலமுடன் வாழும் போது தன் தந்தையின் வழியில் தெய்வ வழிபாடுகள் செய்வதோடு சிரவையாதீனம் தவத்திரு இராமானந்த அடிகளையும் கீர நத்தம் தவத்திரு மருதாசல அடிகளாரிடம் சென்று உபதேசம் கேட்டு ஆன்மீக வாழ்வு வாழத்தொடங்கியவர். அடிக்கடி அருள்மிகு காலகாலேசுவரர் கோயிலுக்கும் பச்சாபாளையம் பரமசிவன் கோயிலுக்குச் சென்று வழிபாடுகள் செய்து வந்தார். அங்கு செல்லும் போது தன் மகன் ராமசாமி அடிகளையும் அழைத்து செல்வார். ராமசாமி அடிகள் இளம் வயதிலேயே தந்தையிடம் ஆன்மீகம் குறித்துக் கேட்டுத் தெளிவு பெற்று வந்தார். சிறைத் தோட்டத்தில் சிவன்மலைக்கவுண்டர் அமைத்து தவம் செய்த தவச்சாலைக்கு சாதுக்கள் சிவபக்தர்கள் வந்து தங்கி செல்வார்கள்.

சிவன்மலை கவுண்டர் சிவராமசாமி என்ற பெயரில் துறவியனார் :

முதலிபாளையம் சிறைத்தோட்டத்தில் சிவன்மலைக் கவுண்டர் தவச்சாலை அமைத்து தவஞ்செய்து வந்த தவச் சாலைக்கு சிரவையாதீனம் தவத்திரு இராமானந்த அடிகள் வருகை தந்து தவச்சாலையில் தங்கி இருந்தபோது தவச்சாலை ராமானந்த, மடாலயமாக அமைக்கப்பட்டது. அது சமயம் சிவன்மலைக் கவுண்டருக்கு ராமானந்த அடிகளார் ஆசியோடு தீட்சை அளித்து சிவன்மலைக்கவுண்டர் பெயரை மாற்றி சிவராமசாமி என்று பெயரிட்டு ஆசி வழங்கினார். அப்போது

கீரநத்தம் தவத்திரு மருதாசல அடிகளும், அடிகளார்களும் சாதுக்களும் ஆன்மீக அன்பர்களும் உறவினர்களும் முதத்தன்குலப் பங்காளிகளும் உடன் இருந்தனர்.

சிரவையாதீனம் தவத்திரு இராமானந்தா அடிகள் சிறைத் தோட்டத்தில் சிலகாலம் தங்கி இருந்தார். அப்போது அடிகளாரைச் சந்தித்து ஆசி பெற்றிட வெளியூர்களில் இருந்து அருளாளர்கள் அடிகளார், சாதுக்கள், ஆன்மீகப்பற்றுள்ள அன்பர்கள் வந்து அடிகளாரிடம் கலந்துரையாடி ஆசிபெற்றுச் செல்லும் அனைவருக்கம் அன்னதானம் செய்து சிலருக்கு நிதி உதவியும் செய்து ஆசி வழங்கி சிவராமசாமி அடிகள் அனுப்பி வைப்பார். சிறைத் தோட்டம் தவச்சாலையில் எப்பொழுதும் கூட்டம் நிறைந்து இருக்கும் மடாலயமாக விளங்கி வந்தது.

சிவராமசாமி அடிகள் துறவு பூண்டு வந்த பின்பு கர்ப்பிணி அம்மாள் தன் பெரிய குடும்பத்தை கட்டிக்காத்து வந்ததோடு தோட்டத்தில் விவசாய வேலைகளை ஆட்கள் வைத்து தன் மக்களின் உதவியோடு சிறப்புடன் செய்து கொண்டு சிவராமசாமி அடிகளுக்கும் பணிவிடைகள் செய்து வந்தார். ராமசாமி அடிகளார் உள்ளூர் படிப்பை முடித்து தந்தை சிவராமசாமி அடிகளுக்கு பணிவிடைகள் செய்து கொண்டு வேல் விநாயகருக்கு பூசைகள் செய்வது தன் தாய்க்கு உதவியாக தோட்டத்தில் வேலை செய்வது ஆடு மாடுகளைப் பராமரிப்பு வேலைகளை ஆர்வமுடன் செய்து வந்தார். இந்தப்பழக்கம் அடிகளார் பேரூர் மடாலயத்தின் குருமுதல்வர் ஆன பின்பும் விவசாயத்தையும் மாடுகளை வளர்த்துப் பராமரிப்பதிலும் தன் இறுதிகாலம் வரை செய்து வந்தார்.

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் கல்வி கற்றல்:

பிரிட்டீஸ் அரசு நம்நாட்டை ஆட்சி செய்து வந்தபோது, அந்தக் காலங்களில் பள்ளிகள் அதிகம் இல்லை அரசின் வேலைகளுக்கு சிப்பந்தி உருவாக்கிட நகர்ப்புறங்களில் கிருஸ்துவ மிசனரிகளால் துவங்கப்பட்ட ஆங்கிலம் கலந்த பள்ளிகள் நகர்புறத்தில் மட்டும் இயங்கி வந்தன. கிராமப்புறங்களில் குருகுலமுறைப்படி திண்ணைப் பள்ளிகள் பரவலாக இருந்தன. மாணவர்கள் ஆசிரியர்களுக்கு மாதம் ஒரு தொகைப் பணம் கொடுத்து படித்து வந்தனர். இந்தப் பள்ளிகளில் வசதி படைத்த மாணவர்கள் மட்டுமே படிக்க முடியும் என்ற நிலை அப்போது இருந்து வந்தது முதன்முதலில் பள்ளிக்கு வரும் இளம் வயது மாணவர்களை

தரையில் அமரவைத்து தரையில் ஆற்று மணல் பரப்பி மாணவனின் வலதுகை ஆட்காட்டி விரலால் மணலில் ராகத்துடன் அனா, ஆவண்ணா என்று எழுதி அறிவிலி எழுதிப்பழகிய பின்பு ஒன்னாம் வகுப்பு பாடம் சொல்லிக் கொடுக்கப்படும்.

1930 ஆம் ஆண்டு அடிகளார் உள்ளூரில் உள்ள பள்ளிக்கு கல்வி கற்க தொடங்கி திண்ணைப் பள்ளியின் நடைமுறைப்படி கல்வி கற்று வந்தார். அப்போது அடிகளுக்கு ஆசிரியராக இருந்து பாடம் சொல்லி கொடுத்தவர்கள் திருவைணவ ஐயர், திருமுத்துச்சாமிக்கவுண்டர் திருவரதராசன் என்பவர். பள்ளி முடிந்த பின்பு மாணவர்களை அழைத்துப் பிள்ளையார் கோயிலில் வைத்து அறநெறி சம்பந்தமான நூல்களில் இருந்து எடுத்து ஆன்மீகக் கருத்துகளை மாணவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் தெளிவாகக் கூறுவார். பிள்ளையார் கோயிலில் பூசை வழிபாடுகள் செய்யச் சொல்லி பிள்ளையார் மீது பாடல்கள் பாடச் சொல்வார். பிள்ளையார் புராணத்தை விளக்கமாக எடுத்துக்கூறி மாணவர்களுக்கு பக்தியை வளர்த்து வந்தார்.

அடிகளார் திண்ணைப் பள்ளிக்கூடம் சென்று ஆறு வருடங்களுக்கு மேல் கல்வி கற்று வந்த போது அடிகளாருடன் இருபதுக்கு மேல் மாணவர்கள் படித்து வந்தனர் அடிகளார் விரும்பி படித்த நூல்கள், திருக்குறள், நாலடியார் புலவர் புராணம் முதலியவற்றை படித்து அருள் வாய்ந்த வாழ்க்கை அமைத்துக் கொள்ள அடிகள் அவர்களை இணைத்து ஆழமாகச் சிந்தனைகள் வளர்வதற்குத் தந்தையார் வாய்ப்புக் கொடுத்தார் மேற்கூறிய நூல்களை நன்கு படித்து புராண நிகழ்ச்சிகள் அருளாளர்களைப் பற்றிய சிந்தனைகள் கடவுளைப் பற்றிய கருத்துக்கள் ஆகியவை உரைவழி ஆழமாகப் பதிய வைத்ததனால் தமிழ் நெறியை தவ நெறியோடு பேண வேண்டுமென்ற சிந்தனை அடிகள் மனதில் ஆழமாக பதிந்தது. தந்தை சிவன்மலைக் கவுண்டர் அடிக்கடி அவற்றைப் படிக்கச் சொன்னதின் விளைவு, பசுமரத்தாணி போல் அடிகளாரின் மனதில் பதிந்தன.

இளமைக் காலத்தில் நிகண்டுகளை தலைகீழாகப் படித்து மனப்பாடம் செய்து ஒப்பிக்கும் பழக்கம் அடிகளிடம் இருந்து வந்தது. ஆசிரியர்களிடம் நிகண்டு படிக்க கேட்டால் நிகண்டு முதலியவற்றை நாங்கள் பார்த்ததே இல்லை நீங்களே படித்துக் கொள்ள வேண்டும் என்று

கூறுவார்கள். அடிகளார் கற்ற அறநெறிக் கல்வி கற்றிட தந்தையின் தவச்சாலை பெரிதும் உதவியாக இருந்தது.

தவத்திரு சிவராமசாமி அடிகளாரின் நீண்டநாள் சிந்தனையில் இருந்த வேல்விநாயகர் கோயில் திருப்பணி செய்யப்பட்டு இந்தக் கோயிலில் வைத்து வழிபாடு செய்திட சிவராமசாமி அடிகளாருக்கு குருவாக இருந்து வழிகாட்டி வந்த சீரநத்தம் மருதாசல அடிகளார் தாம் வழிபாடு செய்து வந்த செவ்வேலாயுதத்தை கொடுத்து ஆசி வழங்கி திருக்குட நன்னீராட்டு விழா நடைபெற்றது. வேல் விநாயகர் கோயில் குடமுழுக்கு நடைபெற்ற நாள் **01–07–1947** சிரவையாதீனம் தவத்திரு கந்தசாமி அடிகளார் இயற்றிய விநாயகமாலை வேற்பதிகம் முதலான நூல்கள் வெளியிட்டு, ராமானந்த மடாலயமும் வேல்விநாயகர் கோயிலும் பிரபலம் அடைந்து கோயிலுக்கு வழிபாடு செய்யவும் அடிகளாரிடம் அருளுரை கேட்கவும் மக்கள் கூட்டம் வந்து சென்றனர்.

சமயநெறிகள் இல்லாமல் கொலை கொள்ளைகள் பெருகி வன்முறைகள் வளர்வதை தடுத்து மக்களை நல்வழிப்படுத்திட மக்களுக்கு நல்வழிகாட்டி அமைதி நிறைந்த வாழ்விற்கு வழிகாட்டும் வகையில் சிறைத்தோட்டம் ராமானந்த மடாயலத்தில் கவுமாரசபையை ஏற்படுத்தி வாரம்தோறும் செவ்வாய்க்கிழமையன்று வேல் விநாயகருக்கு பூசை செய்து ஆன்மீகச் சொற்பொழிவாளர்களை அழைத்து சொற்பொழிவுகள் தொடர்ந்து நடைபெற்றிட ஏற்பாடுகள் செய்து சிறப்புடன் நடத்தி வந்தனர். சிவராமசாமி அடிகள் இந்நிகழ்ச்சிக்கு வந்து கலந்து கொள்பவர்களில் பெரும்பாலானோர் விவசாயத் தொழில் செய்து வரும் வேளாண் குடிமக்கள் ஆவர்.

சிறைத்தோட்டத்தில் மடாலயப்பணிகளை சிறப்புடன் செய்து கொண்டு பேரூர் சாந்தலிங்கர் மடாலயத்தின் குருமுதல்வர் தவத்திரு ஆறுமுக அடிகளாரிடம் சிரவையாதீனம் தவத்திரு ராமானந்த அடிகளாரிடமும் தவத்திரு கந்தசாமி அடிகளாரிடமும் தொடர்பு கொண்டு ஆன்மீகச் சேவைகளை குறைவின்றி செய்து வந்ததோடு கிராமத்தில் நடைபெறும் பொது வேலைகளிலும் சமுதாய வேலைகளிலும் கோயில்களின் திருப்பணிகளிலும் ஈடுபாடு கொண்டு தன் இறுதிக்காலம் வரை சிறப்புடன் பணி செய்து வந்தவர் சிவராமசாமி அடிகள்.

இராமானந்த அடிகள் சிறைத் தோட்டத்தில் உள்ள சிவராமசாமி அடிகள் தவச்சாலையில் சிலகாலம் தங்கி இருந்தபோது ராமசாமி அடிகள் திண்ணைப் பள்ளியில் படித்துக் கொண்டு இருந்தார். படிப்பதோடு தவச்சாலையில் தங்கி தவச்சாலையை சுத்தம் செய்தல், வேல் விநாயகருக்கு மலரால் அலங்காரம் செய்து பூசை செய்தல் இராமானந்த அடிகளுக்கும் சிவராமசாமி அடிகளுக்கும் பணிவிடைகள் செய்தல் தாய் கப்பினி அம்மாள் தோட்டத்தில் வேலை செய்தல் சகோதரர்களுடன் கூடி தவச்சாலைக்கு வருவோரை வரவேற்று உபசரித்தல் சமய சித்தாந்த நூல்களை படித்தல் தனிமையில் தியானம் செய்தல் போன்ற பணிகளை தினசரி இளம் வயதில் சுறுசுறுப்புடன் செய்து வரும் ராமசாமி அடிகளின் செயல்பாடுகளை நேரில் கண்ட இராமானந்த அடிகள் மனம் குளிர்ந்து ராமசாமிக்கு ஆன்மீகப் பயிற்சி அளித்து வழிகாட்ட வேண்டும் என்று நினைத்து இது சம்பந்தமாக சிவராமசாமி அடிகளிடமும் கர்ப்பிணி அம்மாளிடமும் கலந்து பேசிய இராமனந்த அடிகள் தன்னுடன் ராமசாமி அடிகளையும் சிரவையாதீனத்திற்கு அழைத்துச் சென்று மடாலயத்தில் தங்கவைத்து ஆன்மீகப் பயிற்சி கொடுத்து வந்தார்.

சிரவையாதீனத்தில் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள்

சிரவையாதீனம் பல ஆன்மீக அருளாளர்களையும் அடியார்களையும் உருவாக்கிய குருகுலமாகும். இங்கு இராமசாமி அடிகளார் தங்கிப் பயிற்சி பெறும் போது வயது 15 அப்போது மடாலயத்தின் இளைய பட்டமாக இருந்து அருளாட்சி செய்து வந்தவர் தவத்திரு கந்தசாமி அடிகளார் தெய்வீகப் புராணங்களிலும் தமிழ் இலக்கியங்களிலும் சைவ சித்தாந்தங்களிலும் தலைசிறந்த கல்விமானாக விளங்கி இறைவனுக்குச் சேவை செய்து வந்தார். கந்தசாமி அடிகளிடம் பயிற்சி பெற்று வந்தவர்களில் நம் ராமசாமி அடிகளுடன் சுந்தரசாமி அடிகள் இவர்களுடன் பழனியப்பன், சின்னச்சாமி சபாபதிசாமி, அரங்கமுத்து, குமாரசாமி, சுந்தரனார். மொட்டையப்பர் இராமய்யா இவர்களுடன் கந்தசாமி அடிகளிடம் ஆன்மீக உபதேசம் பெற்று சிரவையாதீனத்தில் இறைத் தொண்டு செய்து வந்தார்கள்.

காலம் தவறாமல் வழிபாடு செய்ய வேண்டும் என்ற கடமையும் நாளும் சிவம் போற்றும் நூல்களை கற்றல் உழவாரப்பணிகளை உவப்புடன்

செய்தல் ஆகியவற்றோடு தமிழ் மாமுனிவர் அருளற்ற தன்னொளியினால் தவ ஆற்றல் உடையோரது நல்லாசியால் குருநாதர் விரும்பிய பணிகளை ராமசாமி அடிகளார் கற்று வந்தார் கவுமார சபைதனில் முருகதாசரின் அருள் நூல்களை முயன்று படித்து தமிழமுதம் பருகும் உணர்வு பெற்று தமது பழக்கங்களை வெறுத்து உருகும் பக்தி நெறிக் கந்தசாமி அடிகளின் நல்லுரைகளைக் கேட்பதால் வெள்ளிக்கிழமை நாட்கள் ராமசாமி அடிகளுக்கு மகிழ்ச்சியானவையாக இருந்துள்ளன. இறைவழிபாடுகளிலும் ஆன்மீகச்சித்தாந்தங்களையும் அடிகளார் ஆரம்பகாலத்தில் தன் தந்தையிடமும் பின்பு சிரவையாதீனம் இராமனந்த அடிகள் கந்தசாமி அடிகளிடமும் தெளிவாக கற்றார்.

நமது அடிகளார் அவர்களை 1947ஆம் ஆண்டு தமிழ்க்கல்வி பயிலும் பொருட்டுத் தென்னாற்காடு மாவட்டத்தில் புகழ்பெற்ற முருகன் தலமாகிய மயிலத்தில் உள்ள ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள் முன்னமே இராமனந்த சுவாமிகளின் பெருமையை அறிந்தவராதலின் நமது அடிகளாரிடம் மிகவும் அன்பும் மதிப்பும் உடையவராக இருந்தார். அடிகளார் அவர்களும் ஆதின கர்த்தரின் நம்பிக்கைக்குரியவராகவும் ஆசிரியர்களின் பாராட்டுக்குரியவராகவும் உடன் பயிலும் மாணாக்கர்களின் அன்புக்குரியவராகவும் விளங்கி ஐந்தாண்டுகள் பயின்று 1952ல் சென்னைப் பல்கலைக் கழகத்துப்புலவர் பட்டத்தினைப் பெற்றார்.

அடிகளார் அவர்கள் தமிழ்க்கல்லூரியில் பயின்று கொண்டிருந்த பொழுதே பேரூர் அருள்மிகு சாந்தலிங்க சுவாமிகள் திருமடத்தின் தலைவராக விளங்கிய தவத்திரு ஆறுமுக சுவாமிகள் நமது அடிகளாரைத்தம் திருமடத்தில் தமக்கு அடுத்த பட்டத்துக்குரியவராக ஆக்கித் தருமாறு தவத்திரு. இராமனந்த சுவாமிகளிடம் விண்ணப்பித்துக் கொண்டார்கள். பேரூர் திருமடத்துக்குக் கௌமார மடத்தின் தொடர்புடையவரும் தவத்திரு. இராமனந்த சுவாமிகளின் அருளாணையால் நமது அடிகளார் அவர்கள் இம்மடத்தின் இளவரசுபட்டத்தினை 1950 ஆம் ஆண்டு (விரோதிமாசி 20) ஏற்றுக் கொண்டார்கள். அப்பொழுது மயிலம் பொம்மபுரம் ஆதீனம் பதினெட்டாம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலயசுவாமிகளிடம் அடிகளார் அவர்கள் வீரசைவ தீட்சை பெற்று இலிங்கதாரணம் செய்து கொண்டார்கள். பின்னர் 1967ம்

ஆண்டு தவத்திரு ஆறுமுக சுவாமிகளிடமிருந்து முழுப்பொறுப்பினையும் பெற்றுக்கல்லாடை புனைந்து மடாதிபதியாக அருளாட்சி செலுத்தத் தொடங்கி சாந்தலிங்கர் திருமடத்தை அருளாட்சி செய்யத் தொடங்கினார் தவத்திரு சாந்த லிங்கராமசாமி அடிகள்.

தவத்திரு சிவராமசாமி அடிகளார் இறைவனடி சேர்ந்தார்:

முத்தூர் அத்தனூரம்மனை குலத்தெய்வமாக காணி கொண்ட முத்தன் குலம் கந்தசாமிக்கவுண்டரின் வழித்தோன்றல் இராமணகவுண்டர் இராயாத்தாள் அவர்களின் மகனாகத் தோன்றி கர்ப்பிணித்தாயுடன் இல்லறத்தில் இணைந்து நல்வாழ்வு வாழ்ந்து இல்லறம் சிறந்து அருளாளர்கள் வழியில் ஆன்மீகம் கற்றுணர்ந்து துறவியானார். தன் மகன் இராமசாமி அடிகளாரையும் துறவியாக்கி அடியார்களுக்கு அடியராக இருந்து அருளாட்சி ஆன்மீகப்பணி புரிந்து வந்த சிவராமசாமி அடிகளார் ஆண்டுதோறும் மகாசிவராத்திரி விழாவை சுற்று வட்டாரத்தில் உள்ள குடிமக்களை அழைத்து சிறைத்தோட்டம் தவச்சாலையில் பூசை வழிபாடுகளோடு சிறப்புடன் நடத்தி வந்தார். 10–02–1994ஆம் ஆண்டு மாசி மாதம் வியாழக்கிழமை மகாசிராத்திரியன்று சிவராமசாமி அடிகள் மகாசிவராத்திரி பூசை வழிபாடுகளை சிறப்புடன் நடத்தி பூசைக்கு வந்திருந்த பக்தர்களுக்கு ஆசி வழங்கி பிரசாதம் கொடுத்த பின்பு முக்தி அடைந்தார். அடிகளாரின் திருமேனியை சிறைத்தோட்டம் தவச்சாலைக்கு அருகில் அடக்கம் செய்யப்பட்டு சமாது கோயில் எழுப்பி வழிபாடு நடைபெற்று வருவதோடு, ஆண்டுதோறும், மாசி மாதம் சிவராத்திரியன்று குருபூஜை நடைபெற்று வருகிறது.

சிவராமசாமி அடிகள் இறைவனடி சேர்ந்த பின்பு கர்ப்பிணிதாய் வயது முதிர்வால் இறைவனடி சேர்ந்தார். இவரின் உடல் அடிகளாரின் சமாது கோயிலுக்கு முன்பு அடக்கம் செய்யப்பட்டுள்ளது. பரமசிவம் பார்வதிபோல் வாழ்ந்து இறைவனடி சேர்ந்த சிவராமசாமி அடிகளார் கப்பினி அம்மாள் மகன்கள் இறைவனடி சேர்ந்தபோது இவர்களின் சமாதுக்கு அருகில் வெள்ளியங்கிரி கவுண்டர், வெங்கடாசலக்கவுண்டர், வேலுச்சாமிக்கவுண்டர், சுந்தரக்கவுண்டர் ஆகியோர்கள் சமாதியும் பக்கம் பக்கமாக வைக்கப்பட்டுள்ளது. குடும்பம் ஒரு கோயில் என்பதுக்கு எடுத்துக்காட்டாக விளங்கி இறைவழிபாடு செய்பவர்களுக்கும் சைவ சமயத்தவர்களுக்கும் வழிகாட்டியாக இருந்து வாழ்ந்து இறைவனடி சேர்ந்தவர் தவத்திரு சிவராமசாமி அடிகளார்.

அருள்மிகு சாந்தலிங்க அடிகளார் வரலாறும் பேரூர் ஆதீனத் திருமடத்தின் வரலாறும்

பதினேழாம் நூற்றாண்டில் பேரூர்த் திருமடத்தின் குருமுதல்வராக விளங்கியவர் சாந்தலிங்கர். இவர் திருவண்ணாமலை துறையூர், துறைமங்கலம், திருமுதுகுன்றம், மயிலம், பொம்மையபாளையம், கும்பகோணம், பெரியமடம் முதலான திருமடங்களோடு நெருங்கிய தொடர்புடையவராக விளங்கியுள்ளார். மேலும் வீரசைவர் அல்லாத சிதம்பரம் மௌனசாமிகளை வீரசைவராக்கிய பெருமைக்குரியவர்.

திருக்கயிலாய பரம்பரையில் சீரும், சிறப்பும் செல்வாக்குப் பெற்ற திருவாடுதுறை ஆதீனநிறுவனர் பஞ்சாக்கரதேசிகர் அவர்களின் மாணாக்கராகவும், அவ்வாதீனத்தின் இரண்டாம் பட்டமாகவும் விளங்கிய துறையூர் சிவப்பிரகாசரைக் குருவாகப் பெற்றவர் சாந்தலிங்கர். எனவே, திருவாவடுதுறை ஆதீன மரபுவழியே சாந்தலிங்கர் மரபு தொடங்குகிறது. இத்தகு மரபுடைய சாந்தலிங்கரின் வரலாற்றை இனி அறியலாம். சங்க இலக்கிய காலத்திற்குப் பிறகு திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய அருளாளர்களின் பாடல்கள் மக்களிடையே சமய எழுச்சியை உருவாக்கின. மன்னர்களும், வள்ளல்களும் நால்வருக்குத் திருவுருவு அமைத்து வழிபாடு செய்து சமயப்பணியாற்றினர். அவர்களது கொள்கையாளர்கள் நால்வரது பெயர்களால் திருமடங்களை அமைத்தனர். தமிழகமெங்கும் பரவியிருந்த இத்திருமடங்கள் 12ஆம் நூற்றாண்டுவரை தமிழர்களின் சமயக்கோட்பாடுகளைப் பரப்பும் சமய நிறுவனங்களாக விளங்கின.

இந்நிலையில் தமிழகத்தில் அயல்வர் தாக்கம் நுழைந்தது. தமிழகத்தில் வடமொழி செல்வாக்குப் பெற்றது. பிறசமயங்களை வளர்க்கும் அமைப்புக்கள் தமிழகத்தில் தோன்றின. இச்சூழல் சிவநெறியாளர்களிடையே ஏக்கத்தை உருவாக்கியது. சைவ சித்தாந்த உண்மைகளைத் திருமுறை வழியில் விளக்குவதற்குரிய வழியினை அருளாளர்கள் மேற்கொண்டனர். அவ்வாறு தொடங்கப் பெற்ற மரபே "கயிலாயமரபு" எனத் தோற்றம் பெற்றது. கயிலைநாதரே இம்மரபுக்கு முதல்வர் ஆவார். கயிலைநாதர் சைவசித்தாந்தச் செம்பொருளைத் தனது

மாணாக்கராகிய நந்தியெம்பெருமானுக்கு அருளிச் செய்கிறார். அவ்வுண்மையினை நந்தியெம்பெருமாள் தனது மாணாக்கர் சனற்குமார முனிவர் ஆதியர்க்கு அருளிச் செய்தார். சனற்குமாரர் தமது முதல் மாணவராக விளங்கிய சத்திய ஞானதரிசினிகளுக்குச் செம்பொருளை அருளிச்செய்தார். அவர் அச்செம்பொருளின் நுட்பத்தைப் பரஞ்சோதி முனிவருக்கு அருளினார். இம்மரபு, 'திருக்கயிலை அகச்சந்தான மரபு' எனப்போற்றப் பெறுகிறது. இதனைத் தொடர்ந்து உருவாகிய புறச்சந்தான மரபில் முதலில் தொன்றியவர் 'மெய்கண்டார்'. இவர் நடுநாட்டில் உள்ள பாடல் பெற்ற தலமாகிய திருப்பெண்ணாகடம்" எனும் தலத்தில் அச்சுதக் களப்பாளருக்கு சைவளோளர் மரபில் தோன்றியவர். இவரது இளமைப் பெயர் 'திருவெண்காட்டு நம்பி' என்பதாகும்.

"அச்சுதக்களப்பாளர் தமக்கு மகப்பேறின்மையைத் தமது குலகுருவாகிய சகலாகம பண்டிதரிடம் முறையிட்டார். அவரது திருவுளக்குறிப்பால் திருமுறைச் சுவடியில் கயிறு சார்த்திப் பார்த்தார். அந்நிலையில் 'பேயடையாப் பிரிவெய்தும் பிள்ளையினோடு உள்ள நினைவு' என்று தொடங்கும் திருமுறைப்பாடல் எதிர்ப்பட்டது.

இதுகண்டு மனமகிழ்ந்த சகலாகமபண்டிதர் அச்சுதக் களப்பாளரை நோக்கி, 'நீவீர் திருவெண்காடு சென்று, அங்குள்ள முக்குளத்தில் நீராடி, இறைவனை வழிபட்டால் மகப்பேறு கிட்டும்' என்கிறார். இவ்வாறாக இறைவன் திருவருளால் தோன்றிய திருவெண்காட்டு நம்பி, சிறுதேர் உருட்டி விளையாடிய நிலையில் வான்வழி வந்த பரஞ்சோதியார் உண்மைப் பொருளை அகத்தால் இனிது நோக்கி நம்பிக்கு அருளினார். அன்று முதல் திருவெண்காட்டு நம்பி 'மெய்கண்டார்' ஆனார். இவரது தத்துவஞானத்தையுணர்ந்த சகலாகமபண்டிதர் தமக்கு மெய்ப்பொருள் உணர்த்த வேண்டியக் கொண்டார்.

மெய்கண்டாரும் அவரது விருப்பத்திற்கேற்ப மெய்ப்பொருளை உணர்த்தினார். இவரே அருநந்தி சிவாச்சாரியார் ஆவார். மெய்கண்டார் 'சிவஞானபோதம்' என்ற நூலை அருளினார். அந்நூற்பொருளை எளிமைப்படுத்தி அருனாந்தியார் 'சிவஞான சித்தியார்' என்ற நூலையருளினார். அவரின் மாணாக்கர் 'மறைஞானசம்பந்தர்' மறைஞானசம்பந்தரின் அருள் மாணாக்கர் 'கொற்றவன்குடி உமாபதி

சிவாச்சாரியார்'. இவர் மெய்ண்கண்ட சாத்திரங்களுள் எட்டு நூல்களை (சித்தாந்த அட்டகம்) அருளிய பெருமைக்குரியவர்.

இவர் வழிவந்த அருள்நமச்சிவாயரின் மாணாக்கரே திருவாவடுதுறை ஆதீனத்தை நிறுவிய 'பஞ்சாக்கர தேசிகர்'. இவ்வாதீனத்தின் இரண்டாம் பட்டமாக விளங்கிய ஆதி சிவப்பிரகாசர் தில்லையில் ஆடல்வல்லாலுக்கு வைணவ நெறியாளர்களால் ஏற்பட்ட வழிபாட்டுச் சிக்கல்களை நீக்கும் பொருட்டு தில்லைவாழ்ந்தனர் திருவாவடுதுறை குருமுதல்வரிடம் வேண்டினர். நமச்சிவாயதேசிகர் ஆணையை ஏற்றார். தில்லை சென்றார். திருமால் நெறியினரிடம் தக்காங்கு எடுத்துக்கூறினார். அவர்மறுத்தார். ஆடல்வல்லாள் வழிபாட்டிற்கு உள்ள சிக்கல் தவிர்க்கலாம் என்பதறிந்து வேலூர் சென்று தமது வருகையைத் தெரிவித்து தமது வழிபாடுகளை முடித்து, தமது வழிபடும் திருவுருவாகிய சிவலிங்கத்தை முடியில் அணிந்து அமைச்சனைக் காணச் சென்றார். அமைச்சர் இவரது தவப்பொலிவையும் தோற்றத்தையும் கண்டு பேரன்புடன் வணங்கி வழிபட்டார். தில்லையில் கூத்தப்பெருமான் நாள் வழிபாடு நடத்தத் தடைபடுத்திய செய்தியைத் தெரிவித்தார். அமைச்சன் சிவநெறியாளர் ஒருவரை நியமித்து முறையாக வழிபாடுகள் நடக்க ஆவனசெய்தார். அதுமுதல் சிவப்பிரகாசர் குருவருளாலும், திருவருளாலும் வீரசைவ நெறியில் நின்றார். இவரே, தமிழகத்தில் வீரசைவ நெறியில் நின்றார். இவரே, தமிழகத்தில் வீரசைவ ஆதீனத்தைச் சைவசித்தாந்தமரபில் தோற்றுவித்த பெருமைக்குரியவராவர். நாயக்க மன்னன் அமைச்சராகிய இலிங்கண்ணனின் பணியால் திருவண்ணாமலையிலும், இலிங்கதுரை என்றும் குறுநில மன்னரால் துறையூரிலும் வீரசைவ ஆதீனத்தை நிறுவி, மக்களிடையே சமய உண்மைகளைப் பரப்பி வந்தார்.

திருவண்ணாமலையிலும், துறையூரிலும் சிவப்பிரகாசர் ஆதீனத்தலைவராகப் பொறுப்பேற்றுச் சமயப் பணியாற்றி வந்தார். 'தொண்டைநாடு சான்றோருடைத்து' என்ற பெருமைக்கேற்ப அந்நாட்டைச் சார்ந்தவராகக் கருதப்படும் சாந்தலிங்கர், இளமையிலிருந்தே சமய ஒழுகலாறுகளை மேற்கொண்டு குருவை நாடியிருந்தார். அக்காலத்தில் சிவப்பிரகாசரது தவவலிமையும்,

அருட்பொலிவும் சீலத்தவரால் போற்றுவதைக் கேள்வியுற்றுத் திருவண்ணாமலைத் திருமடத்தைச் சென்று அணுகி, குருநாதரை வணங்கி, திருவுளக்குறிப்பறிந்து மகிழ்ந்தார். அவரைச் சிவமாகவே கண்டு வியந்தார். சிவப்பிரகாசர், சாந்தலிங்கரது நிலையுணர்ந்து 'வீரசைவ தீக்கை' அளித்துத் தமக்கு அணுக்கராக ஏற்றுக்கொண்டார். அன்று முதல் தமது குருநாதராகிய ஆதிசிவப்பிரகாசரிடம் உடனிருந்து திருவண்ணாமலை நாதரைத் தொழுது சாந்தலிங்கர் பணிசெய்தார்.

அக்காலத்தில், காஞ்சிபுரத்தில் தொண்டைமண்டல வேளாளர்கட்குக் குலகுருவாக விளங்கியவர் குமாரதேசிகர். அண்ணாமலையாரை வழிபடும் சிந்தனையில் திருவண்ணாமலைக்குப் பயணம் மேற்கொண்டார். வழியில் இடையிடையே சிவத்தலங்களில் தங்கி வழிபாடு மேற்கொண்டார். அந்நிலையில் அவரது பூசைப் பெட்டகத்தை மறதியால் முந்தைய இடத்தில் அணுக்கர்கள் விட்டு வந்ததால் நாட்பூசை செய்ய இயலாமல் வருந்தினார். அதைக் கேள்வியுற்ற வீரசைவர்கள் 'நீர் சிவலிங்கத்தைத் தனித்து வைத்ததனால் வந்த இடர் இது, ஆகவே அதனை அங்கலிங்கமாகத் தரித்துக் கொள்க' என்று கூறினார். இறைவனும் அவ்வாறே செய்க என ஆணை வழங்கினர். குமாரசாமிதேசிகர் நாடுபோற்றும் ஆதிசிவப்பிகாசரை வணங்கி, குருதேவரிடம் வீரசைதீட்கை பெற்று அவரின் அருள்மாணாக்கராளார்.

வீரசைவ ஆதீன முதல்வராக விளங்கித் தம்மை ஆட்கொண்ட சிவப்பிரகாசரின் பெயரைத் தமது மூத்த மகனுக்குச் சூட்டினார். அவரே, 'கற்பனைக் களஞ்சியம்' துறைமங்கலம் சிவப்பிரகாசர் ஆவார். இவரது உடன்பிறப்புக்களாக வேலையர், கருணைப்பிரகாசர். ஞானாம்பிகை என மூவரும் விளங்கினர். அனைவரும் குருநாதரிடம் தீச்சைபெற்று அருள்மாணாக்கரானார்கள். பின்னர் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசரது குடும்பம் திருவண்ணாமலையில் சிலகாலம் தங்கியது. அங்கு சாந்தலிங்கரும், கற்பனைக்களஞ்சியம் சிவப்பிரகாசரும் இணைபிரியா நண்பர்களாயினர். இங்கு சிவப்பிரகாசர் கலைவளம் மிக்க முப்பதுக்கு மேற்பட்ட பக்திநூல்களை அருளினார். அவை வீரசைவக் கொள்கைகளையும், தத்துவக் கொள்கைகளையும் விளக்கும் வகையில் விளங்குகின்றன. சாந்தலிங்கர் தமது குருமுதல்வருக்கு வழிபாடு கடவுளான தில்லைப் பெருமானையே தமக்கும் குலதெய்வமாகக்

கொண்டு கொற்றவன்குடித் திருமடத்தில் தமது குருநாதருடன் அணுக்கராக இருந்து தமது குருவாக விளங்குபவர் தில்லைக்கூத்தனே என்பதைப்பாடி மகிழ்ந்தார்.

துறையூர் சிவப்பிரகாசர் ஆந்திர, கன்னடநாட்டிலுள்ள திருத்தலங்களுக்கு வழிபாட்டுப் பயணம் மேற்கொண்டார். அவருடன் சாந்தலிங்கரும் பயணமானார். ஆந்திரத்தில் நந்திமலையில் சாந்தலிங்கரின் மரபைக் கூறும் திருமடம் இதை தெரிவிக்கிறது. இந்த பயணத்திற்குப் பின் சிவப்பிரகாசருடன் துறையூரில் சாந்தலிங்கரும், சிலகாலம் தங்கி வழிபாடு செய்தார். அதனால் இவரை, ‘‘துறையூர் சாந்தலிங்கர்’’ என அழைத்ததாக வரலாறு கூறுகிறது. துறையூரிலிருந்து ஆதிசிவப்பிகாசரும், சாந்தலிங்கரும் மீண்டும் திருவண்ணாமலைக்கு எழுந்தருளினார். துறையூர் சிவப்பிரகாசர் அத்துவிதவெண்பா ஆரிய பல நூல்களை இயற்றியுள்ளார். சிவப்பிரகாசருக்கு மேற்குத்தல வழிபாடு செய்யும் விருப்பம் மலர்ந்தது. இருவரும் மேற்குத்தலப் பயணம் மேற்கொண்டனர். அப்பயணத்தில் கொங்கு நாட்டிலுள்ள திருச்செங்கோட்டு இறைவனை வழிபட்டுத் தங்கினார். இருவரும் அங்கிருந்து புறப்பட்டு ‘‘மீகொங்கில் அணிகாஞ்சிவாய்ப் பேரூர்’’ இறைவனை வழிபட்டனர். இங்கு நின்றாடும் கூத்தப்பிரான் அருட்பொலிவு சாந்தலிங்கரை மிகவும் ஈர்த்தது. இத்தலப்பயண வழிபாட்டிற்குப் பிறகு இருவரும் திருவண்ணாமலையை அடைந்தனர்.

சிவப்பிரகாசர், சாந்தலிங்கரின் பழுத்த தவநிறைவினை உணர்ந்தார், சாந்ததலிங்கரிடம் நீர் முதிர்ந்த தவநிலை பெற்றுள்ளீர், மக்களுக்கு வழிகாட்டுவதுடன், மாணாக்கருக்குத் தெளிவையும், ஞானவுணர்வையையும் உருவாக்கும் வகையில் நீர் விரும்பும் இடத்திற்குச் சென்று வழிகாட்டுதலே சிவநெறிக்குச் செய்யும் பெருந்தொண்டாகும். ஆதலின் நும்சிந்தனையில் இடம்பெறும் திருத்தலத்திற்குச் செல்வீராக என்று ஆணைவழி நெறிப்படுத்தினார். குருநாதரின் ஆணைவழி புறப்பட்ட சாந்தலிங்கர், உழவுத் தொழிலால் வளம்பெற்ற கொங்குநாட்டில் உள்ளதும், தமது மனதினை ஈர்த்ததுமாகிய பிறவா நெறித்தலமாகிய பேரூரை நோக்கிப் புறப்பட்டார்.

தவத்திரு சாந்தலிங்க பெருமான் பேரூர் வருகை:

அவிநாசியப்பரை வழிபட்டு சில காலம் தங்கியிருந்தபின் 'பிறவாநெறித்தலம் ஆகிய பேரூரை' அடைந்து அங்குள்ள அரசவனத்தில் தன்னை மறந்தநிலையில் தவம் மேற்கொண்டார். அவரது அருட்பொலிவையும், தவஉணர்வையும் கண்ட சிவநெறியாளர்கள் தாமே அணுகி அணுக்கப் பணிசெய்துள்ளனர். பின் அவர் தங்குவதற்கு எனத் தனியே திருமடம் அமைத்துக் கொடுத்தனர்.

சாந்தலிங்கரது அருள்தோற்றத்தையும், தவப்பொலிவையும் காண அடியவர் கூட்டம் நாளும் பெருகியது. பணியாளர்களின்றித் தொண்டர்களே பணிசெய்யும் பாங்கு வளர்ந்தது. இத்தகு சீடர் பரம்பரையைத் தோற்றுவித்த சாந்தலிங்கருக்கு மீண்டும் குருநாதரை வழிபடவும் மயிலம் முருகன் பேரருள் பெற்ற சித்தராகிய சிவஞானபாலையர் வழிவந்த இரண்டாம் பட்டம் அருட்குருவராக, பொம்மையபாளையம் திருமடத்தில் இருந்த சிவஞானபாலயரை வணங்கவும் சிந்தனை எழுந்தது. இத்தகு சிந்தயராகத் துறையூர்த் தவப்பயணமாகச் சென்று குருநாதரை வழிபட்டுச் சிலகாலம் அத்தலத்தே தங்கியிருந்தார்.

துறையூரிலிருந்து பொம்மபுரம் செல்லும் வழியில் துறைமங்கலத்தில் தங்கியிருந்த கற்பனைக்களஞ்சியம் சிவப்பிரகாசரின் நாள் வழிபாட்டுக்கு வேண்டிய பணிகளை அவரது தங்கை ஞானாம்பிகையார் செய்து வந்தார். சாந்தலிங்கரும், சிவப்பிரகாசரும் மெய்ப்பொருள் பற்றி அருளும் உரைகளை அவ்வம்மையார் நாளும் கூர்ந்து நோக்கினார். இதைக் கண்ணுற்ற சாந்தலிங்கர் இந்நங்கை யார்? எனச்சிவப்பிரகாசரிடம் வினவினார். (எனது தங்கை) அவர் அங்கைக்கு உரியவர் ஆவார் என விடை கூறினார்.

இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் இருவரும் அடியவருடன் பலதலங்களை வழிபட்டுப் புதுவைக்கு அருகிலுள்ள பொம்மையபாளையம் புறப்பட்டனர். வழியில் சிவஞானபாலையதேசிகர் மீது அருட்பாக்களைப் பாடியருளுமாறு சாந்தலிங்கர் சிவப்பிரகாசரை வேண்டினார். அதற்குச் சிவப்பிரகாசர் கடவுளைத் தவிர மனிதரைப் பாடுவதில்லை என விடை கூறி மறுத்தார். இரவு நேரம் வந்துற்றதால் 'புத்துப்பட்டு' என்னும் ஊரில் ஐயனார் கோயில்வளாகத்தில் தங்கி, உறக்கம் மேற்கொண்டார்.

சிவப்பிரகாசர் கனவில் முருகப்பெருமாள் தோன்றி மலர்களைத் தட்டில் வைத்து இதனைத் தொடுத்து மாலையாக்கித்தருமாறு பணித்தார். இச்செய்தியை மறுநாட்காலை சாந்தலிங்கரிடம் சிவப்பிரகாசர் கூறினார். சாந்தலிங்கர் முருகனே, முருகனது பேரருள்பெற்ற சிவஞானபாலயரைப் பாட உணர்த்தியுள்ளார் என்று கூறினார். சிவப்பிரகாசர் சிவஞானபாலையசுவாமிகள் மீது நெஞ்சுவிடுதூது பாடி, சுவாமிகளை வழிபட்டுத் தங்கினார். இவர்களது வரலாற்றினையும், பயணச்சிறப்பினையும் அறிந்து இருவர்க்கும் சிவஞானபாலையசுவாமிகள் அருள்பாலித்தார். இவ்வாறு அருள்செய்த சிவஞானபாலையசுவாமிகள் 500 ஆண்டுகள் வாழ்ந்தவர் என வரலாறு கூறுகிறது. இவர் சிவப்பிரகாசரின் தங்கை ஞானம்பிகை அம்மயாரைச் சாந்தலிங்கருக்குத் திருமணம் செய்து வைக்குமாறு அருளாணை வழங்கினார்.

ஞானாம்பிகையாருடன் சாந்தலிங்கர் பேரூர்க்கு எழுந்தருளி திருமடத்திலிருந்து அடியவர்களுக்கு நல்வழி காட்டிவந்தார். ஞானம்பிகையார் முதிர்ந்த அறிவோடு இல்லற நெறியில் நின்று அருட்பணிகளில் ஈடுபட்டார்.

சாத்தலிங்கர் செம்பொருள் அறியும் நெறியாளராக விளங்கினார். முத்தியைப் பெற விரும்பிய இல்லறத்தாரும், பற்றற்ற துறவியர்களும் சாந்தலிங்கரின் அருளைப்பெற நாளும் பெருகினர். ஞானாம்பிகையார் இல்லற நெறியில் நின்று நாளும் விருந்து பேணினர். புதிய அடியவராக, வீரசைவ அடியவர் ஒருவரை நாளும் உடனிருத்தி அமுது செய்வது சாந்தலிங்கரின் கொள்கையாகும். இக்கொள்கைக்கு ஏற்ப ஒருநாள் புதிய அடியவர் ஒருவரைத் தேடினர். பேசா நோன்பும், உறக்கமின்மையும் தமது விரதமாகக் கொண்ட மௌனசாமிகள் தில்லையிலிருந்து பேரூர்க்கு எழுந்தருளினார். புதிய அடியவராகிய அவரை அழைத்து வீரசைவ நெறிக்கு ஏற்ப அவரது சடைமுடியில் சிவலிங்கம் அணிவித்து, உடனிருத்ததி அமுதிட்டு மகிழ்ந்தனர். அன்று முதல் மௌனசாமிகள் 'வீரசைவரானார்'. தில்லையில் அவரது திருமடத்தில் வீரசைவ நெறி பின்பற்றப்படுகிறது.

சாந்தலிங்கர் திருவமுது ஏற்கத் திருப்பேரூர் வீதியில் செல்லும்போது ஒரு சிறுவனை அன்பினால் நோக்கினார். உடன்

அச்சிறுவன் பற்றுக்களைவிட்டுச் சாந்தலிங்கருக்கு அடியவனான். ஆதலால், அன்று முதல் சாந்தலிங்கர் வீதியில் வரும் நிலையில் தாய்மார் தம்மக்களை மறைத்துவைத்துக் கொள்வர் என்ற செவிவழிச் செய்தியும் உண்டு.

சாந்தலிங்கர் அவிரோத நெறியில் நின்று பிறமதத்தாருடன் நட்பும் பாராட்டி வந்துள்ளார். இந்நிகழ்ச்சிக்கு அகச்சான்றாகப் பின்வரும் நிகழ்ச்சி அமைகிறது. கோவை மாநகரப் பகுதியில் வாழ்ந்துவந்து இசுலாமிய அன்பர்கள் சாந்தலிங்கரது மாணவர் ஒருவரிடம் அன்புகொண்டு அவருடன் நாள்தோறும் அருளுரைக்கேட்டுப் பழகி மகிழ்ந்தனர். அவர் திருவருட்பேறு எய்தும் நிலையில் இசுலாமிய அன்பர்கள் தாங்களே அவருக்குச் சமாதி அமைப்பதாக வேண்டினர். அவரும் நீங்கள் அமைக்கும் சமாதிக்கோயிலில், நமது சிவநெறிக்கு உரிய திருநீற்றை வைத்துப் பேணவேண்டும், என அருளினார். இதனைக் கேட்ட இசுலாமிய அன்பர்களும் அதனை ஏற்றனர். கோவை மாநகரின் பெரிய கடைவீதிப்பகுதியில் இச்சமாதி, 'கோரி' என்று பெயரில் வழங்கி வருகிறது. அக்கோயிலில் மக்கள் அணிந்து கொள்ள, தெற்கு மாடத்தில் திருநீறு வைக்கப்பட்டுள்ளது. இன்றும் அக்கோயிலில் திருநீறுவைப்பது வழக்கமாக இருந்து வருகிறது.

சாந்தலிங்கரின் மெய்ப்பொருள் உண்மைகள் விளக்கும் வகையில், அவர் அருளிய கொலைமறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார் என நான்கு நூல்களும் விளங்குகின்றன. இந்நூல்களுக்குச் சாந்தலிங்கரின் மாணாக்கராகிய திருமுதுகுன்றம் குமாரதேவரின் மாணக்கர் திருப்போரூர் 'சிதம்பர அடிகள்' சிறந்த உரையினை எழுதியுள்ளார். இவ்வுரை மெய்ப்பொருளை விளக்கும் வகையில் திட்பமும், நுட்பமும் செறிந்து விளங்குகிறது.

சாந்தலிங்கரின் மாணாக்கராகிய குமாரதேவர் கன்னட அரசர். அரசு துறந்து துறவு பூண்டு சாந்தலிங்கர் நெறியில் நின்று வீரசைவக் கொள்கைகளை விளக்கும் வகையில் மகாராசா துறவு, சுத்தசாதகம், விஞ்ஞானசாரம், அத்துவித உண்மை முதலிய நூல்களை அருளியுள்ளார். சாந்தலிங்க அடிகளார் அருள் ஞானச் செல்வராகப் பற்பல அடியாளர்களுடன் திருமடம் அமைத்து தங்கியிருந்தார்கள். பல

பணிகளிலும் அடியவர்கள் ஈடுபட்டிருந்தனர். முழுத்துறவு பூண்டு விளங்கிய இவர்கள், ஒரு மாசி மகத்தில் நிறைமதி நாளில், பேரூர் தலத்தின் பெருமை விளங்க ஞான சமாதியடைந்து கூத்தப் பெருமான் திருவருளில் கலந்தார்கள். இவர்கள் சமாதிக்கோயில்பேரூரின் கிழக்குப் பகுதியில் நொய்யலாற்றின் தென்கரையில் பலரும் வழிபடச் சிறந்து விளங்குகிறது. இதனையொட்டித் திருமடமும் கல்வி நிலையங்களும் அமைந்துள்ளன.

சாந்தலிங்க அடிகளாரவர்கள் பல மாவணர்களுடன் தங்கித் தவமியற்றி அருளுரை வழங்கியிருந்த திருமடம் அன்பர்களது கவனக்குறைவாலும், அந்நியர் ஆட்சியாலும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டதெனக் கருத வேண்டியிருக்கிறது. தமிழகத்தின் சமயச் சான்றோர்கள் பலர் முந்திய நூற்றாண்டுகளில் இவர்களது நூல்களைத் தெளிவாகக் கற்றிருந்தும் சமாதி இடம் தெரியாமல் திகைத்துள்ளனர். சென்ற நூற்றாண்டில் தவநெறி மிக்க அருளாளர்களும் சமயத் தொண்டர்களும் தமது பணிகளால் திருமடத்தை உருவாக்கியுள்ளனர். தற்போது கிடைத்துள்ள சான்றுகளின்படி தவத்திரு நாச்சிமுத்து சுவாமிகள் இந்நிலையப் பணியில் பெரிதும் ஈடுபட்டுச் சமாதி பூசையாதியான நடத்தித் தவச்சாலையைப் பேணி வந்துள்ளனர் எனத் தெரிகிறது.

பின்னர் கோயம்புத்தூர் காவல் ஆய்வாளர் திரு பொன்னுரங்க முதலியார் அவர்கள் கனவில் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தோன்றி எமது நிலையத்தைப் பேணுக எனத் தெரிவித்தபடி பொன்னுரங்க முதலியார் பேரூர் வந்த கள்ளிக்காடாகக் கிடந்த பகுதியில் இறைவன் திருக்குறிப்பால் இடம் உணர்த்தப்பட்டு நண்பர்களுதவிடயுடன் சமாதிக் கோயிலையும் தவச்சாலையையும் கண்டு விரிவு படுத்தியுள்ளார். கிணறு வெட்டியது அவரது திருப்பணி, பொருளும் வழங்கியுள்ளார். சமாதிக்கோயில் கருவறை மட்டுமாக இருந்தது.

பேரூர் மடாலயத்தில் தவத்திரு இராமலிங்க அடிகளார்:

நாச்சிமுத்து சுவாமிகளுக்குப் பிறகு (பொன்னாபுரம்) இராமலிங்க சுவாமிகள் திருமடத்தையும் சமாதிக் கோயிலின் முன் மண்டபத்தையும் அன்பர்கள் உதவியால் அமைத்தார்கள். கம்பஞ் சோறு சமைத்து

அதனோடு கலந்த நீரை வழிச் செல்வார் பசி தீர வழங்கினார்கள். திருமடத்தைக் கட்டியதுடன் திருமடத்திற்குரிய இடங்களையும் விரிவாக்கினார்கள். இவர்கள் 1892 வரையில் தலைவராக இருந்து பணியாற்றிச் சமாதி கொண்டுள்ளார்கள். அதன்பின் சச்சிதானந்த சுவாமிகள் திருமடத்தின் பணிகளை மேற்கொண்டு 1909 வரை இருந்துள்ளார்கள். இவர்கள் காலத்தில் சமாதிக் கோயிலின் மூன்றாவது மண்டபம் கட்டப் பெற்றது. இராமலிங்க சுவாமிகளது சமாதிக் கோயிலையும் கட்டியிருக்கிறார். இவருக்குப் பின் தவத்திரு மௌன சுவாமிகள் திருமடத்தில் தலைவராக இருந்தார்கள். இவர்கள் வாய் பேசாத விரதம் மேற்கொண்டிருந்து, பேரூர்ப்பட்டிப் பெருமாள் திருக்கோயில் குடமுழுக்கினைச் செய்து முடித்தார். நாள்தோறும் குறிப்பிட்ட தொகை கிடைத்தாலன்றி உணவு உட்கொள்வதில்லை என்று குறிக்கோளுடன் இருந்து அப்பணியைப் பல்லாயிர ரூபாய் செலவில் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

சமயத் தொண்டர்கள் பலரும் பொன்னுரங்க முதலியாரும் இத்திருமடத்தின் வளர்ச்சி கருதிக் கோவையை அடுத்துள்ள சிரவைக் கௌமார மடாலயத்தை நிறுவியவரும், இந்த நாட்டில் திருநீறும் சாதனமும் விளங்கிச் சமயத் திருநெறியும் தமிழும் தழைக்க விளங்கியவருமான இராமானந்த சுவாமிகளைத் தலைவராக இருக்குமாறு அழைத்து வந்தனர். அவர்கள் சாந்தலிங்கப் பெருமாள் திருக்குறிப்பு வேறாக இருக்குமென எண்ணித் தலைமையேற்க மறுத்தனர். அவரது அடியவர்களில் சிலரை இத்திரு மடத்தில் தங்கியிருந்து பணியாற்றச் செய்தனர். அவர்களில் தவத்திரு ஆறுமுக சுவாமிகள் இத்திருமடத்திலேயே நிலையாக இருக்கலாயினர். அப்பொழுது தவத்திரு இராமானந்த சுவாமிகளால் ஆட்கொள்ளப் பெற்று சமயக் குரவர்கள் பெயரைத் தாங்கியிருந்த அடியவர்கள் நால்வருள் ஒருவராகிய தவத்திரு மாணிக்க சுவாமிகள் குருநாதரிடம் விடைபெற்றுப் பல தலங்களையும் வழிபட்டுப் பின் அவர்களாணைப்படி இங்குத் தங்கினார்கள். அவர்களே திருமடத்தின் மடாதிபதியாகவும் பொறுப்பேற்றுக் கொண்டார்கள்.

பேரூர் மடாலயத்தில் தவத்திரு மாணிக்க அடிகளார்:

தவத்திரு மாணிக்க சுவாமிகள் திருமடத்திற்கு வந்த பொறுப்பேற்று திருமடத்திற்கு வந்து பொறுப்பேற்று தவத்திரு ஆறுமுக சுவாமிகளைத்

துணையாக வைத்துக் கொண்டு திருமடத்தின் வளர்ச்சியில் பெரிதும் ஈடுபட்டார்கள். கொங்கு நாட்டில் உள்ள பல ஊர்களுக்கும் சென்று அன்பர்களிடம் நன்கொடை பெற்றார்கள். திருமடத்தின் பணிகளும் அன்பர் கூட்டமும் வளர்ந்து வரலாயின. மாசி மகந்தோறும் குரு பூசை விழா மிகச் சிறப்பாகப் பல்லாயிரம் அடியார்களுக்கு அமுதளித்தலோடு, மூன்று நாட்கள் நடத்தப் பெற்றது. சாதுக்களும் சான்றோர்களும் தொடர்பு கொண்டனர்.

பேரூர் மடாலயத்தில் தவத்திரு ஆறுமுக அடிகளார்:

தவத்திரு மாணிக்க சுவாமிகள் திருமடத்தின் வருவாயும், கட்டிடமும், வளரப் பெரிதும் உழைத்தவராவார்கள். எதனையும் ஊக்கத்தோடும் விடாமுயற்சியுடனும் செய்து முடிப்பார்கள். இவர்களுக்குச் சிறிது உடல் நலக்குறைவு ஏற்பட்டவுடன் தம்முடனேயே இருந்து பணியாற்றிய பெருந்தகையும் செம்மனச் செல்வரும் மாசற்ற துறவியும் ஆகிய தவத்திரு ஆறுமுக சுவாமிகளிடம் திருமடத்தின் உரிமைகளை ஒப்படைத்து 1938 ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் திருவாதிரை நாளில் மன்றளாடும் கூத்தப் பெருமான் திருநடனக் காட்சியோடு திருவீதிக்கு எழுந்தருளும் நேரத்தில் அவர்கள் திருவடியிற் கலந்தார்கள். இவர் சமாதி சாந்தலிங்க அடிகாளர் திருக்கோயிலுக்கு வடபால் அமைக்கப்பட்டுள்ளது. தவத்திரு ஆறுமுக சுவாமிகள் திருமடத்தின் பணிகளைக் கவனித்து வந்தார்கள், இவர்கட்குத் துணையாகப் பேரூர், கோவை ஆகிய இடங்களில் அன்பர்கள் பலரும் இருந்து திருமடத்தினை வளர்த்தனர். தவத்திரு ஆறுமுக சுவாமிகள் வயது முதிர்வதனால் தமக்குப் பின் ஒருவரைத் தேர்ந்தெடுக்க எண்ணினார்கள். தக்கவர்களைப் பல நாள் ஆய்ந்தார்கள். பின் தமது தலைமைக் குருபீடமாகிய சிரவணபுரம் கௌமார மடாலயம் தவத்திரு இராமானந்த சுவாமிகளை அணுகி அவர்களது அனுமதி பெற்ற, முதலிபாளையம் இராமனந்த மடம் தவத்திரு சிவராமசாமி சுவாமிகள் இசைவுடன் அவருடைய புதல்வராகிய தவத்திரு இராமசாமி அடிகளைத் திருமடத்தின் இளைய பட்டமாகத் தேர்ந்தெடுத்தார்கள். விரோதி ஆண்டு மாசித் திங்கள் 20 ஆம் நாள் மயிலம் பொம்மபுர ஆதீனம் பதினெட்டாம் பட்டமும் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் பேரூருக்கு எழுந்தருளி

இராமசாமி அடிகளுக்கு வீரசைவ தீட்சை செய்தனர். அவ்விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

சாந்தலிங்க அடிகளார் திருக்கோயில் பல்வேறு காலங்களில் சிறிது சிறிதாகக் கட்டப்படு விரிவடைந்தது முன்னால் கூறப்பட்டது. தவத்திரு மாணிக்க சுவாமிகள் காலத்தில் 1929 ஆம் ஆண்டு ஒரு கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதன் பின்னர் 1960 ஆம் ஆண்டில் ரூ.20,000 செலவில் இக்கோயிலின் முன் மண்டபத்தை மாற்றிப் பெரிதாக அமைத்து விமானத்தையும் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

பேரூர் மடாலயத்தில் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள்

தவத்திரு ஆறுமுக சுவாமிகள் தமது உடல் தளர்வின் காரணமாகப் பொறுப்பிலிருந்து விலகி 1963 ஆம் ஆண்டு தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாருக்குக் கல்லாடை நல்கி ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்து புரட்டாசித் திங்கள் சதய நாளில் இட்டலிங்க ஐக்கியம் ஆனார்கள். நமது அடிகளார் மடாதிபதிக்குரிய முழுப் பொறுப்பும் 1967 ஆம் ஆண்டு முதல் ஏற்றுச் செயல்படலாயினர்.

சாந்தலிங்கப் பெருமாள் தில்லை அம்பலவாணப் பெருமானிடம் மிகவும் ஈடுபாடு கொண்டனர். வைராக்கிய சதகம் என்னும் நூலின் பிற்பாதியாகிய தோத்திரப் பகுதி ஐம்பது பாடல்களும் தில்லைப் பிரான் மீது பாடப்பட்டுள்ளது. இதனைக் கருத்திற்கொண்ட நமது அடிகளார் அவர்கள் அம்பலவாணப் பெருமானை இத்திருமட வளாகத்தில் எழுந்தருளச் செய்யக் கருதி 1973 ஆம் ஆண்டில் அம்பலவாணர் திருக்கோயிலும் திருமணை மண்டபமும் அமைத்து மிகச் சிறப்பாகத் திருக்குட நன்னீராட்டு விழாவும் மயிலம் 19ஆம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள் தலைமையில் நிகழ்த்தினார்கள்.

1970 ஆம் ஆண்டு நடைபெற்ற குருபூசை விழாவில் தமிழகத்திலும் அண்டை நாட்டிலும் உள்ள வீர சைவ மடாதிபதிகள் பலர் கலந்து கொண்டனர். இவ்விழா மிகச் சிறப்பாக நடைப்பெற்றது. இதில் அப்பொழுது புதுவை மாநில ஆளுநராக இருந்தவரும் வீர சைவ நெறியினை வளர்ப்பதில் மிகவும் ஈடுபாடு உடையவருமாகிய மேதகு பிடி.ஜாட்டி அவர்களும் கலந்து கொண்டார்கள். சாந்தலிங்கர் திருமடத்தின் குருபூசை விழாக்களில் அறிஞர்கள், சான்றோர்கள் அவ்வப்பொழுது பாராட்டும் சிறப்பும் செய்யப்பெறுகின்றனர்.

இங்ஙனம் இத்திருமடத்தின் கல்வி, சமய, சமுதாயப் பணிகளும் இத்திருக்கோயிலின் கட்டிட அமைப்புகளும் விழாக்களும் ஆண்டு தோறும் புதுமையும் பொலிவும் பெற்று வளர்ச்சியடைந்து வருகின்றன, இம்மடமும் கோயிலும் மேலும் மேலும் வளர்ச்சியடைந்து பொதுமக்களுக்குப் பயன் விளைவித்தல் வேண்டுமென்று இறைவனை வேண்டி வாழ்த்துவதும் இவற்றின் வளர்ச்சிக்கு ஒல்லும் வகையான உதவி புரிதலும் பொதுமக்களின் கடமையல்லவா?

பேரூராதீனமும், சிரவை ஆதீனமும்

பேரூர் ஆதீனம் வீரசைவமடம் சிரவணாபுரம் மடம் கௌமாரமடம் பேரூர் மடம் முந்நூறு ஆண்டுப் பழமையானது. சிரவணாபுரம் மடம் நூறு ஆண்டுகளை கண்டது ஆயினும் இரண்டும் கொங்கு நாட்டின் இருகண்களாக விளங்குகின்றன. இவ்விருமடங்களாலும் சைவப் பண்பாடு முக்கியமாகச் சைவ உணவுப் பண்பாடு கொங்கு நாட்டில் பரவிவருகிறது.

சிரவணாபுரத்தின் கௌமார மடத்தின் குரு முதல்வரான இராமானந்த அடிகளார் அவர்கள் சிரவணாபுரத்தில் கொங்கு வேளாளர்கள் சமுதாயத்தில் வேளாண்மைத் தொழில் செய்து வந்த வேலப்பகவுண்டர் ஆண்டாளம்மாள் தம்பதிக்கு மகனாக தமிழ் காளையுத்தி வருடம் புரட்டாசி மாதம் 29ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை தோன்றினார்.

இராமானந்தாசாமிகள் இளமையிலேயே கடவுள் பக்தியும் கருணை உள்ளம் கொண்டவராக விளங்கினார். ஐந்து வயதில் பள்ளியில் சேர்க்கப்பட்டார். பள்ளி வாழ்க்கையிலேயே குருநாதரின் சமயநெறி நன்கு வெளிப்படத் தொடங்கியது. சிரவணம்பட்டியில் எழுந்தருளியுள்ள சிவலிங்கமூர்த்தியின் வழிபாட்டில் பெரிதும் ஊக்கமுடையவராக இருந்தார். பள்ளிப் படிப்பு முடிந்ததும் தந்தையாரின் கட்டளைப்படி விவசாயத்தையும் கண்காணித்துக் கொண்டு பூசை, வழிபாடு, தியானம் என்னும் சமய நெறியில் ஈடுபட்டு இருந்தார்.

தெய்வபக்தியில் வளர்ந்த இராமானந்த சாமிகள் வாலிப வயது அடைந்தபோது தந்தையாரும் உறவினர்களின் வற்புறுத்தலால் திருமணம்

நடைபெற்றது. இல்லறத்தில் விருப்பம் இல்லாத அடிகள் முழுமையாக தெய்வ வழிபாட்டில் கவனம் கொண்டு வாழும்போது ஒரு நாள் கனவில் அவரால் வழிபாடு செய்யப்படும். சிவலிங்க மூர்த்தி காட்சியளித்து திருச்செந்தூர் சென்று முருகப் பெருமானை வழிபாடு செய்து வருமாறு கூறிமறைந்தார். கனவு கண்ட அடிகளார் வீட்டுக்குத் தெரியாமல் திருச்செந்தூர் பயணம் செய்யும் போது முருகனை துதித்தும் தியானம் செய்துகொண்டு செல்லும் வழியில் முருகன் வழிகாட்டுதல் பெற்று திருச்செந்தூர் சென்று கடலில் நீராடி முருக பெருமானை வழிபாடுகள் செய்து சிலகாலம் திருச்செந்தூரில் தங்கி சித்தர்களையும்,ஞானிகளையும் சந்தித்து அருளுரைகள் கேட்டு வரும் போது அறிமுகம் இல்லாத அடியவர் ஒருவர் அடிகளைச் சந்தித்துப் பேசி அருளாசி வழங்கி மறைந்தார். வந்து பேசி சென்றவர் செந்தில் ஆண்டவர் முருகன் என்பதை உணர்ந்த அடிகள் மனநிறைவோடு ஊர் வந்து சேர்ந்தார்.

சிரவணாபுரம் வந்த அடிகள் வழக்கம்படி சிவலிங்க மூர்த்தியை, வழிபாடுகள் செய்து வருவதோடு குடும்பத்தில் இருந்து சற்று தள்ளி துறவு வாழ்க்கை வாழ்ந்துவரும் போது சாமக்குளம் வெங்கட் என்பவர் கூறியபடி பழனியில் முருகன் கோயில் மடத்தில் தங்கி இருக்கும் தவத்திரு வண்ணச்சரபம் தண்டபாணிசாமிகளின் ஆன்மீகப் பெருமைகளை கேள்விப்பட்டு பழனிசென்று 1880 இல் தண்டபாணிசாமிகளைச் சந்தித்துப் பேசியபின் இராமானந்த அடிகள் தண்டபாணிசாமிகளை குருவாக ஏற்று கௌமார சித்தாந்தங்களை கற்றுக்கொண்டு தண்டபாணிசாமிகளால் கல்லாடை பெற்று துறவியானார்.

துறவுபூண்ட தவத்திரு இராமானந்தா அடிகள் தந்தை இறைவனடி சேர்ந்தபின் சிரவணாபுரத்தில் உள்ள நிலத்தில் தவச்சாலை அமைத்து பூசைகள் செய்து வந்தார். 1890ஆம் ஆண்டு அருள்மிகு சித்தி மகாகோர்க்குட விநாயகர் கோயிலும், அருள்மிகு தண்டபாணிக் கடவுள் கோயிலும் அமைத்து வழிபடத் தொடங்கினார். அப்போது நடந்த அற்புதங்கள் மிகப் பலவாகும். பலர் நம் குருமுதல்வர்பால் உபதேசம் பெற்று அடியார் ஆயினார்.

தமது குருவான தவத்திரு தண்டபாணி சாமிகள் சமாதியடைந்த திருவாமாத்தூரில் ஆலயம் எழுப்பியும் திருமடங்கண்டும் வழிபாடுகள்

தொடர்ந்து நடைபெற நடவடிக்கை எடுத்தும் ஆவன செய்தார். ஆலயத்திற்கு வரும் அன்பர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரிக்கவே தனியாக மடாலயத்தையும் கௌமாரசபையையும் தோற்றுவித்தருளினார். பல தோத்திர, சாத்திரப் பாடல்களை இயற்றியருளினார்.

தம் மாணவர்களில் மிகச் சிறந்து விளங்கிய தவத்திரு கந்தசாமி சுவாமிகளை 1923 ஆம் ஆண்டு ஆதீனத்தலைவராக நியமித்தருளினார். கொங்கு நாட்டில் கொலை புலையை அகற்றி ஆன்மீக நாட்டத்தில் வேட்கை கொண்ட ஒரு பெரிய அடியார்கள் திருக்கூட்டமே தவத்திரு இராமனந்தர் அவர்களால் வளரத் தொடங்கியது.

சிரவை ஆதீனம் என்ற பெயர் பெற்ற கௌமார மடாலயத்தின் குருமுதல்வர் தமிழ் துன்முகி ஆண்டு மார்கழி மாதம் எழாம் நாள் வெள்ளிக்கிழமை 21–12–1956 ஆம் ஆண்டு மாலை ஐந்து மணியளவில் ஆதீனத்தில் தியானத்தில் அமர்ந்திருந்தபடியே முருகப்பெருமான் திருவடியில் கலந்தருளினார்.

தவத்திரு இராமனந்தா அடிகளார் அவர்களிடம் ஆன்மீகப்பயிற்சி பெற்ற பல அடியார்கள் துறவு பூண்டு இறைவனுக்கு சேவைகள் செய்து வருவதுபோல் தவத்திருமாணிக்க சாமிகளை இராமனந்த அடிகள் பேரூர் சாந்தலிங்கர் திருமடத்துக்கு அனுப்பி மடத்தை நிர்வாகம் செய்து வர ஆசி வழங்கியதோடு சாந்தலிங்கர் மடத்தின் வளர்ச்சிக்கு உதவிகள் செய்து வந்தார். இராமனந்த அடிகள் காலத்திற்கு பின் தவத்திரு கந்தசாமி அடிகள் சிரவை ஆதீனதை ஆட்சி செய்யும் போது சாந்தலிங்கர் திருமடத்தின் முதல்வர்களான தவத்திரு மாணிக்கசாமிகளிடம் நெருங்கி உறவு கொண்டு சைவசமயத்தையும் தமிழ் மொழியையும் தெய்வ பணியையும் செய்து வந்தனர்.

பேரூராதீனம் சாந்தலிங்கர் திருமடத்தில் தவத்திரு மாணிக்கசாமிகளால் 1916 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. வித்தியா சன்மார்க்க சங்கத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவி செய்து வந்தது, சிரவை ஆதீனம் ஆகும். அப்போது சிரவை ஆதினத்தின் தலைவர் தவத்திரு கந்தசாமி அடிகள் 1934, 1935 ஆம் ஆண்டுகளிலும் 1940 – 1941ஆம் ஆண்டுகளில் சங்கத்தின் 25ஆம் ஆண்டு நிறைவு விழாவிற்குத்

தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். அப்போது கந்தசாமி அடிகள் எழுதிய சாந்தலிங்க சுவாமிகள் பிள்ளைத்தமிழ் நூல் வெளியிடப்பட்டது.

சிரவை ஆதீனத்தின் குருமுதல்வர் தவத்திரு இராமானந்த அடிகளின் ஆசியோடு தவத்திரு கந்தசாமி அடிகளிடம் ஆன்மீகப்பயிற்சி பெற்ற தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளும் தவத்திரு சுந்தரசாமி அடிகளும் இளமை காலத்திலேயே நட்புக்கொண்டு துறவு பூண்டு சைவத்தையும் தமிழையையும், கோயில்களில் திருப்பணிகளையும், தமிழ் வழிபாட்டு முறைகளையும், இந்துசமய பாதுகாப்பையும் பேரூராதீனமும், சிரவை ஆதீனமும் ஒன்றுபட்டு பணி செய்து நாடெங்கும் ஆன்மீகத்தை வளர்த்து வந்தவர்கள் கொங்கு நாட்டின் கோயில்களின் தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளும், தவத்திரு சுந்தரசாமி அடிகளும் ஆவார்கள்.

தவத்திரு சாந்தலிங்கராமசாமி அடிகளாரும் சிரவை ஆதீனம் தவத்திரு சுந்தரசாமி அடிகளும் இறைவனடி சேர்ந்தபின் பேரூராதீனத்தின் 25ஆம் பட்டம் தாங்கி அருளாட்சி செய்து வரும் மகா சந்நிதானம் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளும் சிரவை ஆதீனமும் 5வது பட்டம் தாங்கி அருளாட்சி செய்து வரும் மகாசந்நிதானம் தவத்திரு குமரகுருபாசாமிகளும் முந்திய ஆதீனங்கள் வழியில் பேரூராதீனமும், சிரவை ஆதீனமும் ஒன்ற இணைந்து அருட்பணியாற்றி வருகிறார்கள்.

சாந்தலிங்கர் திருமடாலயத்தின் குருமுதல்வர் தவத்திரு சாந்தலிங்க அடிகளாரின் குருவருளாலும் கௌமாரமடாலயத்தின் குருமுதல்வர் தவத்திரு இராமனந்த அடிகளாரின் குருவருளாலும் ஆதிகாலம் முதல் பேரூராதீனமும் சிரவையாதீனமும் ஒன்றிணைந்து சைவசமயத்தையும் தமிழ் மொழியையும் வளர்ந்து வளம் பெற்றிட அல்லும் பகலும் அயராது பணியாற்றி வரும் இரண்டு ஆதீனங்களும் கொங்குநாட்டிற்கு பெருமை சேர்த்து விளங்கி வருகின்றன.

பேரூர் மடாலயத்தில் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் செய்து வந்த கல்விப்பணிகள்

அன்பும் அருளும் நிறைந்த ஆதி இறைவனை அனுதினமும் தொழுது வணங்கி வழிபாடுகள் செய்து வரும் ஆன்மீக யோகிகளும் அருளாளர்களும் அடிகளார்களும் ஆதிகாலம் முதல் சமுதாய மக்களை நல்வழியில் நெறிப்படுத்தி அன்பு கொண்ட நல்வாழ்வு வாழ்ந்திட நாடெங்கும் அமைதியான இடங்களில் குருகுலங்கள் அமைத்து அங்கு இளம் வயது மாணவர்களுக்கு ஆன்மீகத்தோடு அறிவு சார்ந்த முறையில் ஒழுக்கம் கூடிய கல்வியை அருளாளர்களும் துறவிகளும் மாணவர்களுக்கு கற்றுக் கொடுத்து வந்துள்ளனர். கல்வி என்கிற மந்திரத்தால் தீர்க்க முடியாதது ஏதுமில்லை என்று கல்வியின் முக்கியத்துவத்தை நாடெங்கும் முழங்கியவர் சுவாமி விவேகானந்தர் எளிய மக்களின் ஏற்றத்திற்கு கல்வி இன்றியமையாதது என்ற எதார்த்தத்தை உணர்ந்து

இன்னரும் கன்ச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தன் தனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
மன்னர் இங்குள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்க ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

என்றவர். மகாகவி பாரதிதேசம் முன்னேற்றம் அடைய வேண்டும். என்றால் பாமரமக்களிடையே கல்வி அறிவு பரவவேண்டும் என்ற சிந்தனையில் அடிகளார் சாந்தலிங்கர் திருமடத்தில் கல்வி நிலையங்களைத் தொடங்கினார்.

பேரூரடிகளாரின் பணிகளில் குறிப்பிடத்தக்கது. கல்விப் பணியாகும். முன்பே உயர் தொடக்கப்பள்ளி ஒன்று பேரூரில் மாவட்டக்கழகம் சார்பில்

ஆறாம் வகுப்பு தொடங்கப்பட்டு நடைபெற்று வந்தது. பின் மாவட்டக்கழகம் அனுமதி மறுக்க ஊர்மக்கள், திரு மயில்சமிக்கவுண்டர் அவர்களை அணுகி திருமடத்தில் பள்ளியை தொடங்க தவத்திரு ஆறுமுக அடிகளிடம் அனுமதி வேண்டினர். அடிகளாரும் அனுமதி கொடுக்க பள்ளி தொடங்கப் பெற்றது. இப்பள்ளிக்கு மாதம்தோறும் அரசு உதவி கிடைத்து வந்தது. 9–12–1951 அன்று திருக்கோயிலுக்கு மேற்பகுதியில் உள்ள கம்பி தடுப்பு கட்டிடத்தில் ஆறாம் வகுப்பு 14 மாணவர்களுடன் தொடங்கப்பெற்றது. கி.பி.1951ஆம் ஆண்டில் 6 ஆம் வகுப்பு வரை செயல்படும் உயர்தொடக்கப்பள்ளியை அரசு உதவியுடன் தொடங்கினார். அதில் 1952, 53ஆம் ஆண்டுகளில் 7,8ம் வகுப்புகள் இணைக்கப்பட்டது. 1955ஆம் ஆண்டு பள்ளிக்கெனவோர் கட்டிடம் எழுப்பினார். 1956ஆம் ஆண்டு மாணவர்களின் குடிநீர் தேவைக்காக குடிநீர்தொட்டி ஒன்று மத்திய கவுண்டர் அவர்களால் கட்டி கொடுக்கப்பட்டது. 1960ல் 9ஆம் வகுப்புடன் கூடிய உயர்நிலைப்பள்ளி தனியாகத் தொடங்கப் பெற்றது. கோபி பொம்மநாயக்கன் பாளையத்தைச் சேர்ந்தது யார்? அவர்கள் தன் தந்தை நினைவாகக் கட்டிக்கொடுத்து வழிபாட்டுக்கூடம் தவத்திரு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளால் அறிஞர்கள் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டது. நடுநிலைப் பள்ளியாக இருந்ததை 1980ஆம் ஆண்டில் 9,10,11 வகுப்புகளைக் கொண்ட உயர்நிலைப் பள்ளி அரசு உதவியுடன் விரிவுபடுத்தினார் மேல்நிலைப்பள்ளி மேல்நிலை வகுப்புகள் பல்வேறு பாடப்பிரிவுகளைக் கொண்டு 1990ஆம் ஆண்டிலிருந்து தொடங்கின. இவற்றோடு 6 முதல் 10 வரையிலான ஆங்கில வழிக்கல்வி அளிக்கும் பள்ளியும் செயல்பட்டு வருகிறது. 1996ஆம் ஆண்டு பள்ளிக்கென நான்கு மாடிக்கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது. பேரூரடிகளாரின் பவளவிழா நினைவு கட்டிடமாக, தவத்திரு சச்சிதானந்த சுவாமிகளால் திறந்து வைக்கப்பட்டது.

2000ஆம் ஆண்டு இப்பள்ளியில் பொன்விழா ஆண்டாகக் கொண்டாடப்பட்டது. 1958 ஆம் ஆண்டு காட்டம்பட்டி முதலிபாளையத்தில் சாந்தலிங்க அடிகளார் பெயரால் ஒரு உயர்நிலைபள்ளி சத்வியா சன்மார்க்க சங்கம் சார்பில் தொடங்கப் பெற்றது. தற்போது இப்பள்ளி சாந்தலிங்க அடிகளார் உயர்நிலைப்பள்ளியாக நடைபெற்று வருகிறது.

ஞானாம்பிகை நுழைவுரிமைப்பள்ளி:

ஆதிகுரு முதல்வரான தவத்திரு.சாந்தலிங்க அடிகளாரின் துணைவியாராக அமைந்தவர் ஞானாம்பிகை அம்மை யார் ஆவார். அம்மையாரின் நினைவாக 1977 ஆம் ஆண்டு ஞானாம்பிகை நுழைவுரிமைப் (மெட்ரிக்) பள்ளியைப் பேரூரடிகளார் தொடங்கினார். தற்போது ஐநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இப்பள்ளியில் பயிலுகின்றார்.

தவத்திரு.ஆறுமுக அடிகள் தாய்த்தமிழ்ப்பள்ளி:

தமிழ் மொழியை வளர்க்கும் பாங்கில் பேரூரடிகளார் பல பணிகளைச் செய்து வருகின்றார். அவற்றுள் ஒன்றாக அமைந்தது, அடிப்படைக் கல்வி முதல் அனைத்துப் பாடங்களும் தமிழ்மொழியிலேயே நடத்தப்படும். தாய்த்மிழ்ப் பள்ளி ஆகும். தவத்திரு.ஆறுமுக அடிகள் பெயரால் 1999ஆம் ஆண்டு தொடங்கிய இப்பள்ளி பேரூரடிகளாரின் தலைமையில் நடைபெற்று வருகிறது.

தவத்திரு.சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க்கல்லூரி:

தவத்திரு.சாந்தலிங்க அடிகளார் கலையறிவியல் தமிழ்க்கல்லூரி என்ற பெயரில் தற்போது இயங்கி வரும் கல்லூரி தொடக்கத்தில் தமிழ்க்கல்லூரியாக இருந்தது. இதுவே கொங்கு நாட்டில் அமைந்த முதல் தமிழ்க்கல்லூரியாகும். கொங்கு நாட்டில் தமிழ்க்கல்லூரி ஒன்று தொடங்க வேண்டும் என்னும் எண்ணம் கோவை நகரத்துப் பெருமக்களிடம் நெடுநாட்களாக இருந்தது. ஆகவே, ர.க.சண்முகஞ் செட்டியார், சைவத்திரு.கோ.ம.இராமசந்திரஞ் செட்டியார், வெ.சி.சுப்பைய கவுண்டர் ஆகியோருடன் கலந்து எண்ணித் தமிழ்க்கல்லூரி தொடங்குவதற்குண்டான முயற்சிகளைப் பேரூரடிகளார் மேற்கொண்டார். அதற்கான விண்ணப்பம் சென்னைப் பல்கலைக் கழகத்தில் செய்யப்பட்டது.

சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் உயர்திரு. ஆற்காடு இலக்குமணசாமி அவர்கள் திருமடத்தைப் பார்வையிட்டார். பிறகு

தவத்திரு.சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரிக் கழகம் என்னும் பெயரால் 31–12–1952ல் கழகம் பதிவு செய்யப்பட்டது. பிறகு சென்னைப் பல்கலைக்கழகப் பார்வையாளராக டாக்டர்.மு.வரதராசனார் அவர்கள் பேரூராதீனம் வந்து கல்லூரி தொடங்குவதற்கேற்ற அமைப்புகளைப் பார்வையிட்டுப் பல்கலைக்கழகத்தில் அறிக்கை சமர்ப்பித்தார். ஏ.2076: நாள்.26.05.1953 என்ற அனுமதியோடு 24.06.1953 ஆம் ஆண்டு பேரூர் பட்டீசுவரர் திருக்கோயில் தமிழருச்சனையோடு தமிழ்க்கல்லூரியைப் பேரூரடிகளார் துவங்கினார். அச்சமயம் பயிலும் 18 ஆம் பட்டம் சுவாமிகள், குன்றக்குடி அடிகளார், சிவராமசாமி அடிகளார் பழைய கோட்டை பட்டக்காரர் நல்ல சேனபதி சர்க்கரை மன்றாடியார் அருட்செல்வர் சிவக்கவிமணி, சி.கே.சுப்பிரமணிய முதலியார், முதலானோர் பங்கு கொண்டனர். திரு.வே.சி.சுப்பய்ய கவுண்டர், திரு.வை.இரத்தின சபாபதி முதலியார் முதலானோர் விழாவினை முன்னின்று நடத்தினர். 1965இல் திரு.வே.சி.சுப்பைய கவுண்டர் நினைவாக அவர்களின் வழி மக்களால் முதல் தளம் கட்டிக் கொடுக்கப்பட்டது. 1986இல் சத்வித்யா சன்மார்க்க சங்க பவள விழா நினைவாக மெய்யியல் ஆய்வுக்கூடம் அன்றைய தமிழ் சட்ட அமைச்சர் திரு.பொன்னையன் தலைமையில் திரு செங்கோட்டு வேலன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

அரசினர் மற்றும் அன்பர்களது பொருளுதவியால் நல்ல கட்டிடம் ஒன்று அமைக்கப்பெற்று 30–08–1956 இல் உற்கல (ஒரிசா) நாட்டுக் காவலர் மேதகு.குமாரசாமி அவர்களால் குன்றக்குடி அடிகளார் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. பின் 1958இல் அரசு ஊர்நலத்திட்டத்தில் திருமடத்தின் பேருதவியுடன் கோவை பாஷ்யமய்யங்கா அவர்கள் வழங்கிய தொகையுடன் அரசு வழங்கிய ரூபாய் 9000 பெற்று மாணவர்கள் ஒத்துழைப்புடன் நூலகக் கட்டிடம் கட்டி முடிக்கப்பெற்று 1–11–1958ஆம் ஆண்டு அப்போதைய தமிழக முதல்வர் மேதகு.காமராசர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. 1961இல் கல்லூரிக்கு மேலும் இடம் தேவைப்படதால் திருமதி.இரா.கௌசல்லம்மாள் அவர்களின் பொருளுதவி கொண்டு மேல்மாடிக் கட்டிடம் அமைக்கப்பட்டு மத்திய அஞ்சல் துறை அமைச்சர். மேதகு.ப.சுப்புராயன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

1976ஆம் ஆண்டு சத்வித்யா சன்மார்க்க சங்க மணி விழாவினையொட்டி மாணவியர் தங்கும் விடுதி மேனாள் குடியரசுத் துணைத்தலைவர் மேதகு.பி.டி.ஜாட்டி அவர்களால் தமிழக ஆளுனர் அவர்கள் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டது. திருமதி.சௌந்தர கைலாசம் அவர்கள் விளக்கேற்றினார். திருமதி ஜாட்டி, ஆளுனரது துணைவியார், தவத்திரு.சுந்தர அடிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். தமிழ்க்கல்லூரிக்குச் சுதந்திர இந்தியாவில் முதல் நிதியமைச்சரான திரு.ர.க.சண்முகஞ் செட்டியார் தலைவராக இருந்தார். திரு.வே.சி.சுப்பையகவுண்டர் துணைத் தலைவராக இருந்தார். பேரூரடிகளார் 1988ஆம் ஆண்டிலிருந்து கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றியுள்ளார். தற்போது கல்லூரியில் செயலராகவும், கழகத்தலைவராகவும் செயல்படுகின்றார்.

தமிழ்க் கல்லூரியில் புலவர் பட்டப் படிப்பாக இருந்த தமிழ் மேற்படிப்பு பேரூரடிகளாரது முயற்சியினால் 1975ஆம் ஆண்டு இளம் இலக்கியவியல் (BACHELOR OF LITERATURE) என்று ஏனைய இளங்கலைப் பட்டப்படிப்புகளுக்கு இணையாக மாற்றப்பட்டது. 1983ஆம் ஆண்டு தமிழ் முதுகலையும் (M.A.) ஆய்வியல் நிறை (M.Phil). ஆய்வியல் முனைவர் (Ph.D) ஆகிய பட்டமேற்படிப்புகள் தொடங்கப்பட்டது. தொடர்ந்து 1989ஆம் ஆண்டு தமிழ்க்கல்லூரி, கலைக்கல்லூரியாக விரிவுபடுத்தப்பட்டு தவத்திரு.சாந்தலிங்க அடிகளார் கலையறிவியல் தமிழ்க்கல்லூரி என்ற பெயரையும் பெற்றது. 1993ஆம் ஆண்டு தற்செல்வப் பிரிவு தொடங்கப் பெற்றது. இதில் நிறுவனம் செயலாண்மையியல் (B.C.S.) கணிப்பொறி அறிவியல் (B.Sc) ஆகிய பாடப்பிரிவுகளில் பட்டப்படிப்பு நடைபெற்று வருகிறது. வணிகவியல் பட்டப்படிப்பு தமிழ்வழியிலும் நடத்தப்படுகிறது.

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் பல்கலைக்கழகப் பணிகள்:

தமிழ்நாட்டில் உயர்கல்வியில் உறைவிடமாக அமைவது சென்னைப் பல்கலைக் கழகம் பேரூரடிகளார் இப்பல்கலைக் கழகத்தில் 1972ஆம் ஆண்டு முதல் 1978 வரை ஆட்சிக்குழு உறுப்பினராகத் (MEMBER OF THE SYNDICATE) தேர்ந்தெடுக்கப்பெற்றார். அதற்கு முன் கல்விக் குழுவிலும் (ACADEMIC COUNCIL) பேரவையிலும் (SENATE) இடம் பெற்றுள்ளார். தமிழ்க்

கல்லூரிகளுக்கான பாடத்திட்டங்களை வகுக்கும் குழுவிலும் பேரூரடிகளார் பணியாற்றியுள்ளார்.

கீழ்த்திசைக் கல்லூரிகளில் பேரூரடிகளார்:

தமிழை ஆழமாகவும், முறைப்படியும் சொல்லிக் கொடுப்பனவாகத் தமிழ்க்கல்லூரிகள் பல்கலைக் கழகத்தில் இடம் பெற்றுள்ளன. இலக்கணத்தை நுட்பமாகச் சொல்லித் தருதல். இக்கல்லூரிகளின் இயல்பு இத்தகைய கல்லூரிகளை (ORIENTAL COLLEGES) அன்று கீழ்த்திசைக் கல்லூரிகள் என்றழைத்தன. இக்கல்லூரிகளுக்கான பாடத்திட்டங்களையும் தேர்வுமுறைகளையும், மற்ற நடைமுறைகளையும் சீர்படுத்திக் கொடுத்தவர் பேரூரடிகளார் ஆவார்.

இளம் இலக்கியவியல் படிப்பில் பேரூரடிகளார் பணி:

தமிழ்க்கல்வியில் 1970ஆம் ஆண்டிற்கு முன் தேர்ச்சி பெற்றவர்களுக்கு வித்துவான் சான்றிதழ் கொடுக்கப்பட்டது. அதனைப் புலவர் பட்டப்படிப்பு என்றும் புலவர் கல்லூரிகளை பி.லிட். பட்டப் படிப்புக் கல்லூரி என்றும் மாற்றியமை பேரூரடிகளாரின் பணிகளுள் குறிப்பிடத்தக்கவை ஆகும். பி.லிட் கல்லூரிகளின் செயல்பாடுகளை வரையறுக்கச் சென்னைப்பல்கலைக் கழகம், பேரூரடிகளார் தலைமையில் ஒரு குழுவை அமைத்து அதற்கு தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் குழு என்று பெயரிட்டது. அக்குழுவில் பேரூரடிகளார் ஆறு தீர்மானங்கள் முன்வைத்தார். அவை,

1. பி.லிட். படிப்பு பி.ஏ. படிப்பிற்கு நிகராகக் கருதப்பட வேண்டும்.

2. பி.ஏ. படிப்பிற்குத் தரப்படுகின்ற சலுகைகள் அனைத்தும் பி.லிட். படித்துத் தேறியவர்களுக்கும் வழங்கப்படுதல் வேண்டும்.

3. பி.லிட். படிப்பை வழங்குகின்ற கல்லூரிகளுக்கு மாநில அரசும், மத்திய அரசும், பல்கலைக்கழக மானியக் குழுவும் (U.GC) போதிய நிதியுதவி வழங்க வேண்டும்.

4. பி.லிட். கல்லூரிகள் பயிற்சிக் கட்டணம், சிறப்புக் கட்டணம் வசூலிக்கும் உரிமையைப் பெறவேண்டும்.

5. மாலை நேர பி.லிட். வகுப்புகள் தொடங்குவதற்கு இசைவு அளிக்க வேண்டும். அந்தக் கல்லூரிகள் ஒரு நாளைக்கு மூன்று மணிநேரம் பயிற்றும் நேரமாகக் கொண்டு **225** நாட்கள் வேலை செய்ய வேண்டும்.

6. கலை, அறிவியல் பாடங்கள் சொல்லித் தரும் கல்லூரிகளில் அந்தக் கல்லூரிப் பேராசிரியர்களுக்கு எவ்வளவு ஊதியம் வழங்குகிறார்களோ அதே ஊதியத்தை பி.லிட். கல்லூரிப் பேராசிரியர்களுக்கும் வழங்குதல் வேண்டும்.

முதலிபாளையத்தில் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் கல்விப்பணி

கொங்கு நாட்டில் வளமானநாடு ஆறைநாடு அன்னூர் வட்டாரம் காட்டம்பட்டி கிராமம் முதலிபாளையத்தில் முன் காலத்தில் பிரிட்டிஷார் ஆட்சியில் நம் நாட்டு மக்களும் அடிமைப்பட்டு வாழ்ந்தபோது மக்களுக்கு அடிப்படை வசதிகள் கல்வி மருத்துவம், சாலை வசதிகள் இல்லாமல் கடமையைச் செய்து பலனை எதிர்பார்க்காமல் வாழ்ந்து வந்தனர்.

வசதிபடைத்தவர்கள் மட்டும் திண்ணைப் பள்ளியில் படித்து வந்தனர். தவத்திரு. சாந்தலிங்க ராமசாமி அடிகளார் சிறு வயதில் தன் சகோதரர்களுடன் முதலிபாளையம், திண்ணைப் பள்ளியில் **1930**ஆம் ஆண்டு திருவைணவ ஐயர், திரு.முத்துச்சாமி கவுண்டரிடம் திண்ணைப் பள்ளியின் நடைமுறைப்படி தரையில் மணல் பரப்பி வலது கையின் ஆள்காட்டி விரலால் மணலில் அணா, ஆவண்ணா என்று எழுதிப்பழகிய பின்பு தமிழில் பாடம், வாய்பாடு, கணக்கு, இலக்கணம், இலக்கியம், நீதி நூல்கள், புராணங்கள் ஆகிய பாடத்தோடு ஒழுக்கம், கட்டுப்பாடு தெய்வபக்தி, மாதா,பிதா, குருதெய்வம் போன்ற பாடங்கள் திண்ணைப் பள்ளியில் பாடம் சொல்லிக் கொடுக்கப்பட்டன.

ஆரம்பக் கல்வியை முதலிபாளையத்தில் கற்று மேல்கல்வி கற்றிட மயிலம் சென்று தமிழ்கல்வியை முறைப்படி கற்று தமிழ்வித்துவான் பட்டம் பெற்று பேரூராதீனத்தில் துறவியாக பட்டம் பெற்று ஆதீனத்தின் அதிபர் பொறுப்பேற்று துறவிகள் செய்ய வேண்டிய தெய்வப்பணிகளை சிறப்புடன் செய்து கொண்டு தமிழ்ப் பணியும், கல்விப்பணியும் செய்யத் தொடங்கிய

அடிகளார் ஆரம்பப்பள்ளி தமிழ்க்கல்லூரி தொடங்கி நடத்தி வந்தபோது தான் பிறந்து வளர்ந்த காட்டம்பட்டி கிராமத்திற்கு ஒரு கல்வி நிலையத்தை தொடங்கிடத் திட்டமிட்டு செயல்பட்டார்.

இந்தகைய சூழ்நிலையில் 1950 ஆம் ஆண்டு காலத்தில் காட்டம்பட்டி முதலிபாளையம் ஆகிய இரு ஊர்களில் பள்ளிகள் செயல்பட்டன. முதலிபாளையத்ல் தவத்திரு அடிகளார் யார்? அவர்களின் வீட்டின் ஒரு பகுதியில் பள்ளி நடைபெற்று வந்தது. காட்டம்பட்டியில் ஊர்பெரியவர்கள் பலரின் முயற்சியில் கட்டடம் அமைக்கப்பெற்று தொடக்கப்பள்ளி செயல்பட்டு வந்தது. இச்சூழ்நிலையில் முதலிபாளையத்திலும் ஒரு பள்ளிக்கூடம் அமைக்கப்பட்டது. பின்னர் தொடக்கப்பள்ளி முதலிபாளையத்திற்கு கல்வித் துறையினரால் மாற்றம் செய்யப்பட்டு இன்றுவரை அங்கு பல்லாயிரம் மாணவர்கள் தொடக்கக்கல்வி பயின்று வருகின்றனர்.

கர்மவீரர், கல்விக்கண் திறந்தவர் எனப்பல்வோறு போற்றப்பட்ட காமராசர் தமிழகத்தில் முதலமைச்சராச இருந்து கிராமங்கள் தோறும் பள்ளி என்று கல்விப் பயிரை வளர்த்த காலம் அது, அத்தருணத்தில் பேரூர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடத்தில் இளவரசராக அருளாட்சி செய்து வந்த இளைய பட்டம் ராமசாமி அடிகளார் காமராசரிடம் நம் கிராமச் சூழ்நிலையை விளக்கமாக எடுத்துக்கூறி இந்தக் கிராமத்திற்கு உயர்நிலைப் பள்ளி ஒன்று வேண்டும் என விண்ணப்பம் கொடுத்தார். அடுத்த ஒரு மாதத்தில் 28–05–1958ஆம் ஆண்டு காமராசர் அவர்களால் உயர்நிலைப்பள்ளிக்குரிய கால்கோள் செய்யப்பட்டது.

தவத்திரு ராமசாமி அடிகளார் தலைமையில் பள்ளியின் கட்டிடப்பணி தொடங்கி வரதையம்பாளையம் தெய்வத்திரு பச்சாக்வுண்டர், தெலுங்கு பாளையம் திரு.அருணாச்சலக்கவுண்டர், அடிகளாரின் தந்தையார் சிவராமசாமி அடிகளார். இவர்களின் உறுதுணையோடு ஊர்ரபொதுமக்களின் உதவியுடன் முதலில் மூன்று வகுப்பறைகள் கட்டப்பட்டன. அடிகளாரின் தந்தையார் சிவத்திரு.சிவராமசாமி அடிகள் தனது சிரைத் தோட்டத்தில் செங்கல் சூளை அமைத்து கட்டுமானப்பணிகளுக்குத் தேவையான செங்கற்களை வழங்கினார்கள்.

1962ல் அரசாணை பெற்று உயர்நிலைப் பள்ளியாக மாறியது. தொடக்ககாலம் முதல் சாந்தலிங்கர் நடுநிலைப்பள்ளி என்னும் பெயராலயே செயல்பட்டு வந்தது. 1963 வரை தவத்திரு ராமசாமி அடிகளாரைத் தலைவராகக் கொண்டு பள்ளிக்குழுவால் பள்ளி நடைபெற்று வந்தது.

பின்னர் அரசு உதவி கிடைக்கப் பெறாத சூழ்நிலையில் அரசிடம் ஒப்படைக்கப்பட்டது. 3–8–1964ஆம் ஆண்டு முதல் தவத்திரு.சாந்தலிங்க அடிகளார் அரசு உயர்நிலைப்பள்ளி என்ற பெயரில் சிறப்புற நடைபெற்று வருகின்றது. இப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாகத் தரம் உயர்த்த கல்வித்துறையின் மூலம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. அரசுப்பள்ளியாக மாறிய காலத்தில் உயர்திரு. ஆர்.பி.இராமலிங்கம் என்ற பண்பாளைரை தலைமையாசிரியராகக் கொண்டு நல்லபல ஆசிரியர்களின் உதவியால் இப்பள்ளி செம்மையுற வளர்ந்து பெற்றோர், ஆசிரியர் சங்கம் அமைக்கப் பெற்று பள்ளியின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்தனர்.

மாப்பிள்ளைக்கவுண்டர் என்கிற குமாரசாமிக்கவுண்டர் நிதி சேர்த்து விளையாட்டிடம் வழங்கினார். தவத்திரு ராமசாமி அடிகளார் தனது பங்கிற்கு வந்த நிலத்தை பள்ளிக்குத் தானமாக வழங்கினார். தெய்வத்திரு. பச்சாக்கவுண்டர் நிலம் வழங்கினார். அவர்மகன் திரு.வி.பி.இராமசாமி அவர்கள் பல ஆண்டுகள் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவராக இருந்து பள்ளியின் வளர்ச்சிக்குப் பலவாறு உறுதுணை புரிந்தார். பணித்திறன் மிக்கபல நல்ல தலைமையாசிரியர்களும் அமெரிக்காவில் வாழும் திரு.வி.பி.சாமிநாதன் திரு.தனசேகரன் ஆகியோர் பல வகையிலும் உதவி செய்து வருகின்றனர்.

தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அவர்களின் அருட்பார்வையில் தொடங்கி காட்டம்பட்டி தவத்திரு சாந்தலிங்க அடிகளார் அரசு உயர்நிலைப்பள்ளியின் மீது தன் இறுதி காலம் வரை அடிகளார் ஆதரவு செய்து வந்தார்.

கொங்குநாட்டு அப்பரடிகள் சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

'திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட
திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்'

–சுந்தரமூர்த்தி நாயகனார்

மேன்மைகொள் சைவ நீதி உலகெலாம் விளங்கித் தோன்ற பல அருளாளர்கள் தோன்றித் தொண்டாற்றிய பெருஞ்சிறப்பினது நம் தமிழ்நாடு. அத்தகைய அருளாளர்களுள் குறிப்பிடத்தக்கவர் ஏழாம் நூற்றாண்டு காலத்தில் வாழ்ந்தவரான திருநாவுக்கரசு நாயனார். அவரது பிறப்பை 'உலகில் வரும் இருள்நீக்கி ஒளிவிளங்கு கதிர்போல் வந்து அவதாரஞ் செய்தார்' என்று போற்றுகிறார் சேக்கிழார். அப்படிப்பட்ட அவ்வருளாளரை நிகர்த்த புகழும் பெருமையும் உடையவராக இருபத்தோராம் நூற்றாண்டில் மெய்யன்பர்களாலும் அடியார் பெருமக்களாலும் போற்றி வணங்கப்பெற்ற சிறப்புக்குரியவர் நம் ஞானத்தைந்தை கயிலைக்குருமணி பேரூராதீனம் தெய்வத்ச் சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள்.

சைவநெறியும் தமிழ்நெறியும் தழைத்தோங்க அரும்பணிகள் பல ஆற்றிய பெருந்தகையான ஞானத்தந்தை அவர்கள் 'கொங்குநாட்டு அப்பரடிகள்' என்று பலராலும் பணியப்பெற்றதற்குரிய காரணங்கள் பலவாகும். அவற்றுள் நாம் அறிந்தவற்றைப் பகிர்தற்குரிய வாய்ப்பாக இவ்வுரையைக் கருதுகின்றோம்.

திருநாவுக்கரசு சாமிகளுக்கு அந்த பெயரும் வாகீசர் என்று என்னும் பெயரும் அவர் திருவாய்மலந்து அருளிச் செய்த பாடல்களால் கிடைக்கப்பெற்றவையாம். நலமிகு சிந்தையீர் என்னும் விளி, வாழ்த்துப்பாக்கள். அடிகள் அருளமுதமாக அனைவரும் போற்றும் கட்டுரைகள் போன்றவற்றால் அப்பெயர்களோடு பேரூராடிகளாருக்கும் பொருத்தும் தன்மை அறியப்பெறுவதாகும். மருள்நீக்கியார் என்பது அப்பரடிகளுடைய இயற்பெயர். அறியாமை என்பது மயக்கம், மருள் அவ்வறியாமையை நீக்கக்கூடிய ஆற்றலுடைமையின் அடையாளமாக விளங்குவது அத்திருப்பெயர். தம் அருள்வாழ்வில் கொங்குநாட்டில் ஒரு

தமிழ்க்கல்லூரியைத் தோற்றுவித்து தமிழறியா இழிநிலை மாற்றி அயல்மொழிமோகமாகிய மருளை நீக்கிய தன்மை மருணீக்கியார் என்னும் பெயரோடாம் பொருத்தத்தை விளக்குகிறது.

அப்பரடிகள் உழவாரப் படையாளி என்னும் சிறப்புக்குரியவர். பல்வேறு திருத்தலங்களக்கும் சென்று வழிபடும் தவசீலரான அடிகள் அங்ஙனம் செல்லுகையில் உடன் உழவாரப் படையொன்றைக் கையிலேந்திச் சென்று அங்கெல்லாம் தொண்டாற்றியவர்.

'நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்
புலவர்தன்முன் அலக்கிட்டு மெழுக்குமிட்டு
பூமாலை புனைந்தேத்தி புகழ்ந்து பாடி.'

என்கிற நிலையில் அப்பரடிகள் செய்த அரும்பணிகள் போல, நம் பேரூரரடிகளார் அவர்களும் பல்வேறு திருத்தலங்களிலும் சிதைவுகளையும் சீர்கேடுகளையும் நீக்கி நலமாக்கிடும் திருப்பணிகளைத் திருக்கூட்டத்தோடு சென்று செய்து, செய்வித்த தன்மைகள் அவரையும் உழவாரப் படையாளியாக உயர்த்தின. பல திருக்கோயில்களை மீட்டெடுத்துப் செதுக்கிய சிறப்பும் அங்கு திருநெறி தெய்வத் தீந்தமிழ்த் திருக்குட முழுக்கு நடத்திய பெருமையும் அவர்க்கு உண்டு.

அப்பரடிகளுக்குரிய பட்டங்களில் தருமசேனர் என்பதும் ஒன்று. தருமம் என்பது அறத்தையும் சேனை என்பது படையையும் குறிக்கும். அவ்வகையில் அறப்படைஞராக விளங்கி அப்பரடிகளுடன் இணைசொல்லத்தக்கதாக பேரூராடிகளார் சிறைச்சாலைகளை அறச்சாலைகளாக மாற்ற எடுத்துக்கொண்ட அருமுயற்சி அமைகிறது.

அப்பரடிகள் சமணந்தழுவியிருந்து பின் மீண்டும் சைவம் சேர்ந்த காலத்து அவருக்குப் பல இடையூறுகள் விளைவிக்கப்பட்டன. எனினும் அவற்றின் மீண்டு சைவ நன்னெறியை நிலைநாட்டும் பெரும்பணியாற்றிய சிறப்புக்குரியவர் ஆவர். அதேபோல அயல்மொழி மற்றும் அயல்நெறித் தாக்கத்திலிருந்து தமிழ்மொழி மற்றும் தமிழ்நெறியைக் காத்து அவை வலிமையுற்றோங்கும் வண்ணம் பல அருட்பணிகள் ஆற்றியவர். நம் பேரடிகளார் அவர்கள். அங்கலிங்கம் பூண்ட ஓர் வீரசைவத் துறவியாக

இருந்தும் நாட்டுப்புற மக்களையுடைய வழிபாடுகளிலும் தமிழ் விளங்கவேண்டும் என்பதல்லாத பிற நோக்கங்களின்றி அவர்களிடத்திலே அவர்கள் வழிபாடுகளுக்குரிய மரியாதையை மதிப்பை வழங்கி அங்கும் தமிழ்நெறி வளர்த்த சிறப்பு பேரூரடிகளாருக்குரியது.

'மண்ணினில் பிறந்தார் பெரும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுதுசெய்வித்தல்'

என்னும் நிலையில் திருமடத்திற்கு வருவோரெல்லாம் உணவு உண்டு செல்லக்கூடியவாறு பேரூரில் யாரும் பசியோடிருந்தது இல்லை என்கிற பெருமை விளங்கும் வகையில் அன்னம் பாலிப்பாக அப்பணியை அன்போடு செய்து அடியார் பசிதீர்த்த அறப்பணியாளராக அருளாட்சி வீற்றிருந்த பேரூரடிகளாரின் அருள்மரபு இன்றும் தொடர்ந்து வருகிற அருள்நிழலில் நாம் இருக்கின்றோம் என்ற சிந்தனை மனத்திலே மகிழ்வையும் நெகிழ்வையும் மலர்த்துவதாகிறது.

உயிர்கருணை என்கிற நிலையிலும் மனிதன் மாடு என்கிற வேற்றுமைகளின்றி 'யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி' என்னும் வகையில் உயிர்க்கிதம் செய்யும் பண்பிற் சிறந்தவராக விளங்கினர். பேரூரடிகளார் அவர்கள். பல்வேறு பாக்களையும் நூல்களையும் படைத்தும் பதிப்பித்தும் அறிவுலகிற்கு வழங்கியுள்ளார். இப்படிப் பலவகையில் அப்பரடிகளோடு ஒப்பராகத் திகழ்ந்து சாந்தலிங்கப் பெருமாள் அருள்நிழல் அமுதம் பருக நம்மை ஆற்றுப்படுத்தி உலகமுய்ய தமிழ்நெறியும் சைவநன்னெறியும் வளர அரும்பணிகள் பல ஆற்றிய அந்தக் குருவின் பெருமைகளைச் சிந்திக்க வாய்த்தமையில் மகிழ்ந்து அவருடைய திருவடிக் கருணையை மனமொழி மெய்களால் வணங்கிப் போற்றுகின்றோம். தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின்அருளுரை :

நமது ஞானத்தந்தையின் உரையில் கேட்போர் மனம் கொள்ளும் வகையில் எளிமை, ஆழம், சிறப்பு, மரபுபோற்றும் பாங்கு, முழுமுதல் கடவுளின் சிறப்புத்தன்மை ஆகியவை சிறப்பிடம் பெற்றுத் திகழும். அத்தகு உரைவளம் அருட் சிறப்போடு பொலிவு பெறும் வகையில் அமைந்தது காணப்படும். சான்றாக, சைவசித்தாந்த மாநாட்டில் ஆற்றிய தலைமையுரை விளக்கத்தின் வழி அவற்றை அறியலாம்.

உரைச்சிறப்பு :

சிவநெறின் தொன்மைச் சிறப்பை விளக்கியபின் கொங்கு குலமரபின் பெருமைகளை விளக்குகிறார்.

“தமிழகத்தின் தொன்மைநெறி சிவநெறி. முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளாய், பின்னைப் புதுமைக்குப் போர்த்தும் அப்பெற்றியதாய் விளங்குவது முழுமுதல் சிவம். சிவநெறியில் பற்றுடைய சான்றோர்கள் பலர் சேர்ந்து ஆய்ந்து, சைவ சித்தாந்தப் பெருமன்றத்தைப் பல ஆண்டுகட்கு முன்பு தொடங் வ்ழிகாட்டியுள்ளனர். இப்பெருமன்றத்தின் மாநாடு செந்தமிழ்க் கொங்கின் நடுவாக விளங்குகின்ற வெள்ளக்கோயிலில் நடைபெறுகிறது. கொங்குச் சமுதாயத்தின் பல்வேறு குடிமக்கள் நாற்றிசையும் பரவிச் சென்று வாழ்ந்தாலும் அவர்கள் குலதெய்வ வழிபாட்டுக் கோயில்களும் அவற்றிற்குரிய உரிமைக் கூறுகளும் இந்தப் பகுதியில்தான் மிகுதியாக உள்ளன. மேலும் கொங்குக் குடிமக்கள் தங்கள் குலதெய்வ வழிபாட்டில் ஒரு சிவன் கோயிலை முதன்மையாகக் கொண்டு அக்கோயில் அருச்சகராய் விளங்குகின்ற சிவாச்சாரியரைத் தம் குலகுருவாகவும் ஏற்றுக் குருவாகவும் ஏற்றுக் குருக்கள் என வழங்குவது இன்றும் மரபாக இருந்து வருகிறது. எனவே சிவநெறியை முறையாகப் பேணி வாழ்ந்த குடும்பங்கள் கொங்குக் குடும்பங்கள் என்று கருதுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. இங்கு இம்மாநாடு நடப்பது பழமையைப் புதுப்பிக்கும் முயற்சிக்கு உறுதுணை புரியும் என எண்ணுகிறோம்” என்ற இத்தகு அருளுரை வழி, ஊர்ச்சிறப்பு, சுற்று வட்டார மக்களின் குலதெய்வமுறை போற்றுதல், அவற்றைப் பேணும் கொங்குக் குடும்பங்கள் ஆகியவற்றின் சிறப்பைக் கேட்போர் உணரும் வகையில் நன்கு விளக்கம் தந்துள்ளார்.

சொற்பொருள் விளக்கம் கூறி, அவற்றை அகச் சான்றுகளின் வழி எடுத்துக் கூறி விளக்கும் பான்மைக்குச் சான்றாக “சிவம் என்பது பலபொருள் ஒரு சொல். இது சுத்தம், மங்கலம், தூய்மை எனப்பல பொருளைத் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது. சிவம் நிலைபேறுடையது போக்குவரவு அற்றது. எங்கும் நீக்கமற நிற்பது. எல்லாவற்றிலும் கலந்து கடந்தும் இருப்பது. எனினும் தன்னியல்பில் திரியாதது. சித்தத்தைத் தன்பால் வைத்தவர்கள் உள்ளத்தில் ஒளிர்வது. ஆதலின் ‘சிவனோடு

ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை' என்னும் கொள்கையுடைய திருமூலர்

"சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினைமாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவருமாவர்
சிவசிவ என்றிடச் சிவகதிதானே"

என்று அருளினார். அருளியதுடன் அன்புநெறியே சிவநெறி; அன்பே சிவமாய் அமர்ந்திருந்தானே என்று கூறி, தெளிந்த அறிவினர் சிவத்தை உணரும் செம்மை நெறியைப் பேணுவர் என்றும் கூறியுள்ளார்" என்பதன்வழி உரைச் சிறப்பின் பெருமையால் அடிகளின் பெருமையை உணரலாம்.

மேலும், "மொழிகளெல்லாவற்றிலும் சிறந்தது தமிழ்மொழி. அது தெய்வத் தன்மை வாய்ந்தது; தெய்வம் விளங்குதற் கிடமாயிருப்பது. தெய்வத்தால் வளர்க்கப்பட்டது; தெய்வத்தைக் காட்டித்தர வல்லது. இது பற்றியே "ஞாலமனந்த மேன்மைத் தெய்வத்தமிழ்" என்று சேக்கிழார் சுவாமிகள் பாராட்டியருளினார். இத்தகைய சிறப்புகளைப் பெற்ற தமிழை ஏனைய மொழிகளோடு ஒப்பவைத்து எண்ணுதலும் தவறு என்பது பல பெரியோரது கொள்கை. நமது தாய்மொழியாகிய இத்தகைய தமிழைத் தமிழர்களாகிய நாம் காப்பாற்றாது வருகின்றோம். நமது அரசாங்கமும் செயலளவில் முழுமையாக்காமல் இருக்கிறது. தமிழ்ச் சமுதாயம் சும்மா இருப்பது மட்டுமா? பல வகையிலும் தமிழை அலங்கோலம் செய்து ஒடுங்கச் செய்தற்குரிய முயற்சிகளையும் தீவிரமாகச் செய்து வருகிறது. தாய்மொழி தன்னாட்டிலேயே இவ்வாறு தலைகவிழ்ந்து தவித்துநிற்கும் நிலையும், ஒண்டவந்த மொழிகள் ஓங்கி வளரும் நிலையும், வேறெந்த நாட்டினும் வேறெந்த மொழி வரலாற்றினும் நிகழாதது. இமயமலை உச்சியிற் புலிக்கொடி பொறித்துக் குமரிவரை தன்னுடைய நாடாக வாழ்ந்த தமிழுக்கு இப்போது ஒரு நாடும் தன்னுடையதென்று இல்லாத நிலை வந்ததனைத்தமிழர் என்று சொல்லிக் கொள்ளும் நாமும் பார்த்துக் கொண்டு தானிருக்கிறோம். தமிழைப் போல சிறந்த மொழி எந்நாட்டினுமில்லை. அதனைப்போல இந்நாளில் தமிழ் நாட்டினுள்ளும் தாழ்ந்து நிற்கும் மொழியும் இல்லை என்று சொல்ல என் மனம் வருந்துகின்றது. சைவத்தைப் போற்றி வளர்ப்பது நமக்கு மிகப்பெரிய

கடமை. அதினும் பெரிய கடமை சைவத் தமிழைப் போற்றி வளர்ப்பது என்பதனை நாம் உணர்தல் வேண்டும்'' என்ற உரையின்வழி, தமிழ் மொழியின் மேன்மை, அதைப் பேணாத தமிழரின் நிலை ஆகியவற்றை விளக்கிப் பெரிதும் இரக்கத்துடன் வருத்தப்பட்டு வருவதைக் குறிப்பிட்டுள்ளார். மேலும்,

'சைவசித்தாந்தத்தில் சொல்லப்படும் உண்மையைத் தமிழ்மொழி எழுத்துக்களின் அமைப்பிலும் காணலாம். அகரமாகிய தனியுயிர் சிவமாக, ஏனைய உயிர்கள் சிவத்தின் வழிநின்று ஐந்தொழில் இயற்றும் கடவுளர்களாக. மெய்யெழுத்து அறிவில் பொருளாக ஆய்தம் மெய்யின் நுட்பமாகிய நுண்ணுடலாகக் கொள்ளலாம். இதனை,

''அகரஉயிர் போல் அறிவாகி எங்கும்
நிகரில் இறைநிற்கும் நிறைந்து''

என்னும் திருவருட்பயன் பாடலுடன் இயைபுபடுத்தலாம்' என்று கூறும் கருத்துக்கள் வழி சைவசித்தாந்தத்தின் பெருமையைத் தமிழ்மொழியோடு ஒப்பிட்டுக் காட்டியுள்ள அடிகள் அவர்களின் உரைச் சிறப்பை உணரலாம்.

கொங்கு நாட்டின் சமயச் செந்நெறிக்கு வழிகாட்டி, மேலச் சிதம்பரமாம் மிக்க புகழ்ப்பேரூரில் சீலத்தர் போற்றத் திருமடம் செய்து, தங்கி தவமியற்றியவர் ஆதிகுரு முதல்வர் அருட்சாந்தலிங்கர் ஆவார். அவர் தோறும் நிமித்தம் திருத்தொண்டு செய்யும் அடியவர் கூட்டத்தையும், திருமடத்தில் உருவாக்கி அருள்புரிந்தவர் எனத் தமது தாய்த் திருமடப் பெருமையையும் தமது ஆதி குருமுதல்வர் சாந்தலிங்கரின் பெருமையையும் அவர்தம் நூல்களின் மெய்ப்பொருள் சிறப்பையும் உணர்த்துவதை இந்த உரைவழி உணரலாம். ''அருட்சாந்தலிங்க அடிகளார் அருளிய நூல்களில் கொலை மறுத்தல் என்ற நூலில் சீவகாருண்யத்தைக் காட்டி அதனால் உள்ளத் தூய்மையாகும் என்பதைக் குறிப்பிட்டு, வைராக்கிய சதகம், வைராக்கியம் தீபம் என்ற இரு நூல்களாலும் ஈசுரபக்தியையும் பாசவைராக்கியத்தையும் விளக்குகிறது. ஈசுர பக்தியினால் இம்மை இன்பங்களில் உவர்ப்புண்டாகும், யோக முயற்சியிலும் கைகூடும். யோக முயற்சிகளும் வீடுபெற நிற்பவர்கள் மெய்ப்பொருள் கண்டின்புறுவதற்கு மிகச் சிறந்தனவாகக் கொள்ளத் தக்கனவாகும் என்று விளக்கங்களைக் கூறியுள்ளார்.

அவிரோத உந்தியாரில் சமயத்தார் எல்லோரும் ஒப்ப விரோதமின்றி ஏற்குமாறு மெய்ப்பொருள் உணர்வு பற்றியும், மெய்ப்பொருள் பற்றியும், பெய்ப்பொருளையடைகின்ற ஆன்மாக்கள் பற்றியும், ஆன்மாக்கள் தடையற்று அடையும் வீடு பற்றியும் அவ்வான்மாக்கள் வீடு அடையாமற்றடுகின்ற தளை பற்றியும், மெய்ப்பொருளுணர்வு பிறத்தற்குரிய வழிபற்றியும், அவ்வழி கைவருதற்குரிய கருவிகள் பற்றியும், மெய்ப்பொருளையுணர்ந்த மெய்ஞ்ஞானிகளின் நிலை பற்றியும், மெய்ப் பொருளையுணர்ந்த மெய்ஞ்ஞானிகளின் நிலை பற்றியும் கூறியுள்ளார். இவை சைவசித்தாந்த மரபாகும்''. 'மெய்கண்டார்' – மரபு போற்றும் முறைகளை விளக்கிச் சாந்தலிங்கரும் அதன் சிறப்பைக் கூறும் முறைகளைத் தமது உரை வழிவிளக்கிக் காட்டும் திறத்தால் அடிகள் அவர்களின் அருட்பேருரை இனிது விளங்கும். சித்தாந்த சைவ மரபு புறச்சந்தானத்துள் உமாபதி சிவாச்சாரியாருக்குப் பிறகு சைவச் சான்றோர்களாலும் துறவியர்களாலும் திருமடம் அமைத்து அபிடேக பரம்பரையில் போற்றிப் பாதுகாத்து வளர்க்கப்பட்டுப் பொது மக்களிடத்து உபதேச வாயிலாகவும், நூல்கள் வெளியிடுதல் வாயிலாகவும் பரப்பப்பட்டு வருகிறது. இதனால் மெய்கண்ட மரபு இடையறாமல் வளர்ந்து வருகிறது. இத்தகைய பணி மேலும் அழுத்தமாகவும் தீவிரமாகவும் செய்யப் பெறுதல் வேண்டும்.

இந்த வளர்ச்சியுடன் இணைந்தே நம் தமிழகத்தில் வீரசைவம் என்றொரு மரபும் தழைத்து வளர்ந்து வந்துள்ளது. அருட்சாந்தலிங்கர் திருமடம் வீரசைவத் திருமடம். எனினும் சித்தாந்த சைவத் திருமடத்தின் பரம்பரையிலிருந்து கிளைத்துக் கனியே வளர்ந்தது என்பது திருமடத்தின் முன்னை வரலாறு கூறுகிறது. பேரூர்த் திருமடத்தின் ஆதிகுரு முதல்வராகிய அருள்மிகு சாந்தலிங்க அடிகளார் உயிருண்மையைப் பற்றிப் பேசுகின்ற பொழுது மெய்கண்டார் உயிருண்மையைப் பற்றிப் பேசுகின்ற பொழுது மெய்கண்டார் அருளிய சிவஞான போதத்தின் வழிநின்றே பேசுகின்றார்.

வழிபட்டு தத்துவ ஆராய்ச்சியில் சைவ சிந்தாந்தத்தோடு பெரிதும் ஒத்துச் சென்று இறுதியில் மனோலய சாதகம் என்னும் நிட்டை நெறியை முத்தி சாதனமாக வகுத்துக்காட்டி முடிக்கின்றார். இக்கொள்கைகளெல்லாம் அருட் சாந்தலிங்கர் அருளிய அவிரோத

உந்தியார் என்னும் நூலில் உள்ள பாடல்களின் போக்கில் காணப்படுவன" என சைவசித்தாந்தின் வழியில் சாந்தலிங்கர் கூறும் சிறப்பை எடுத்து விளங்கும் அடிகளின் உரைப் பேராற்றல் புலனாகிறது.

சாந்தலிங்க அடிகளாரின் மரபில் வந்த திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகளும் 'பஞ்சாதிகார விளக்கம்' என்னும் ஒரு சிறு நூலில் ஐந்தொழில் பற்றியும் மிக அரிய விளக்கம் தந்துள்ளார்.

மயிலம் பொம்மபுர ஆதீனம் சிவஞான பாலய சுவாமிகள் மடாலயத்துச் சீடரும் பெரும்புலவருமாகிய கற்பனைக் களஞ்சியம் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளும் சைவசமய பண்டைய சிவவழிபாட்டு முறை அயல் வழக்குகளால் தமிழகத்தில் மாற்றப்பட்டதால்தான் பாடல் பெற்ற திருக்கோயில்கள் பல பக்தியால் உணர்வோர் பாடிப் பரவும் வாய்ப்புக்களை இழந்துள்ளன" என்பதன் மூலம் வழிபாட்டு நெறியின் சிறப்பும், அதனைப் பேணாததால் வந்த தீமையும் அடிகள் உரைவழி விளக்கம் பெறுகின்றன.

ஆகமநெறி:

ஆகமங்களில் சிவபெருமானின் இலிங்கத் திருமேனியின் அமைப்பு, உமாமகேசுர மூர்த்தம் முதலிய உருவத் திருமேனிகளின் அமைப்பு, நந்திதேவர் முதலிய பரிவார மூர்த்தங்களின் அமைப்பு முறை, திருக்கோயில் அமைப்பு, செபமாலை, முதலியவை பற்றிய விதிகள் கூறப்பட்டுள்ளன. ஆதியில் ஆகமங்கள் தமிழ்மொழியில் தான் இருந்தன. இதனை "மன்னுமா மாலை மகேந்திரமதனில் சொன்ன ஆகமந் தோற்றுவித்தருளியும்" என்று மணிவாசகரும் "திறங்கொண்ட அடியார்மேல் தீவினைநோய் வாராமே, அறங்கொண்டு சிவதர்மம் உரைத்தபிரான்" என்று ஞானசம்பந்தரும் அருளியுள்ள திருவாக்குகளால் அறியலாம். காலப்போக்கில் இவ்வாகமங்கள் வடமொழியில் மொழி பெயர்க்கப்பட்டு, வடமொழிக்கே உரியன என்று கருதப்படுகிறது. அவ்வாகமங்கள் கூறிய அமைப்பு முறைகளில் அமைந்த திருக்கோயில்கள் இமயம் முதல் குமரிவரையிலும் கடல்கடந்த நாடுகளிலும் உள்ளன. எனினும் ஆகம முறை அமைந்த திருக்கோயில்கள் தென்னாட்டில், நமது தமிழ் நாட்டில் தான் அதிகமாக அமைந்துள்ளன. சிவவழிபாடு ஆகம முறைப்படி நடைபெறும் வழிபாடு. அவ்வழிபாடு வடநாட்டுத் தலங்களில்

சிறப்பாக நடைபெறுகிறது. அந்நாட்டில் அனைவரும் பூவும் நீரும் கொண்டு வழிபடுதற்குத் துணையாக ஆகம நெறிகள் வழிகாட்டுவனவாக அமைந்துள்ளன'' எனவரும் உரை விளக்கத்தின் வாயிலாக நமது ஆகம மரபு வடமொழிக்குச் சென்ற நிலையைக் கூறி அருளாளர்களின் திருப்பாட்டுக்களே ஆகமநெறியை விளக்குகின்றன என்று கூறுகிறார்.

தவமிகு அடிகளின் அருந்தமிழ்ப்பற்று
''கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு
முன்தோன்றி மூத்த குடி''

என்ற பாடலால் தமிழ்க்குடியின் பழமையை அறியலாம்.

''தொன்று நிகழ்ந்ததனைத்தும் உணர்ந்திடும் சூழ்கலைவாணர்களும் இவள் என்று பிறந்தவள் என்றுணராத இயல்பினளாம் எங்கள் தாய்'' என்று தமிழின் தொன்மையைப் பாரதியும் போற்றியுள்ளார்.

இத்தகைய மிகமிகத் தொண்மையான மொழி நம்தமிழ் மொழியாகும். சிறப்புமிகு தமிழ்மொழியினைப் போற்ற வேண்டும். பேணிக் காக்க வேண்டும் என்ற கொள்கையில் உரத்தோடு செயல்பட்டுக் கொண்டிருப்பவர் பேரூரடிகளார் ஆவார். தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலையடிகள் தனித்தமிழுக்கு ஒப்பற்ற இயக்கம் கண்டு வளர்த்த பெருமையாளர் அவரது மரபைப்பின்பற்றிய நமது அடிகளாரும் 'தனித்தமிழுக்குத் தந்தை' என்று போற்றப்பெறுவர். தமிழைத் தம் கண்களாக மதித்து அதனை வளர்க்க விரும்பும் அருளாளராவார். தமிழ் இலக்கிய வரலாற்றில் தொன்மையானதும் முழுவதும் கிடைத்ததுமான இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். இந்நூலின் சிறப்புப் பாயிரத்தில், 'வடவேங்கடம், தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்' எனத் தமிழ்பேசும் மக்கள் வாழும் எல்லைகள் சுட்டப்பட்டுள்ளன. இதற்கென உள்ள உரைக் குறிப்பால் கிழக்கும், மேற்கும் எல்லை சுட்டப்படாததற்கான காரணம் அவை கடல் எல்லைகள் என்ற விளக்கம் பெறப்படுகிறது.

'தமிழ்கூறும் நல்லுலகம்' என்ற அடைமொழி உயர்வும், தலைமையும் தரத்தக்க சிறப்புக்குரியது. இதன்வழி தமிழ்பேசும் மக்கள் நல்லவர்கள். அவர்கள் வாழும் பகுதி நல்லுகம் என்ற பதிவின் வழி தமிழின் சிறப்பைத் தொடக்க காலத்திலேயே அறிந்து கொள்ளமுடிகிறது. நல்லமொழி,

உயர்தனிச் செம்மொழியாகத் தொடங்கிய காலந்தொட்டே பல வகைகளிலும் வளர்ந்துள்ளது.

சங்க இலக்கியத்துள்ள இடம்பெறும் புறநானூற்றில் அதியமான் நெடுமான் அஞ்சியின் அவைக்களைப் புலவர் ஔவையார் ஆவார். அவர் நீடு வாழவேண்டும், மொழி வாழவேண்டும், புலமை வாழவேண்டும், சான்றோர் வாழவேண்டும் என்ற உயரிய சிந்தனையில் கிடைத்தற்கரிய நெல்லிக்கனியை ஔவையாருக்கு அளித்தான்.

பத்துப்பாட்டுள் ஒன்றாக விளங்கும் குறிஞ்சிப் பாட்டு, 'ஆரியஅரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்தற்காகக் கபிலர் பாடியதை அறிகிறோம். பேரரசர்கள் அரிய செயல்கள் இனிது முடிய உறுதிமொழி எடுப்பர். அதனை 'வஞ்சினம்' என்று கூறுகிறது புறத்திணை. அந்த வகையில் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய அரசன் போர்கருதிப் புறப்படுகிறான். இதில் நான் தோல்வியுற்றவனாயின், என்னைத் தமிழ்ப் புலவர்கள் பாடாது அமையட்டும் என வஞ்சினம் கூறும் பாடலாக,

“ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாகப்
புலவர் பாடாது வரைக”

என்று அமைகியது. இவ்வாறாக எல்லாச் சூழ்நிலைகளிலும் தமிழுணர்வும், தமிழ்ப்புலவர்களும் மதிக்கப்பட்டுப் பேணப்பட்டுள்ளமை தெளிவாகிறது. புறநானூற்றுப் பாடல்களுக்குள்ள திணை – துறை முறைகளில் 'அவனை – அவர் பாடியது' என அரசர்களை கடையெழுவள்ளல்களை, குறுநில மன்னர்களை 'அவன்' என்றும், தமிழ்ப் புலவர்களை 'அவர்' என்றும் அழைக்கும் மரபைக் காண்கிறோம்.

'தென்தமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரை' என இளங்கோவடிகள், தமிழ் மொழியோடு போற்றியுள்ளார். தமிழ்க்கடவுளாம் முருகப் பெருமானிடம் அருள்பெற “ஆற்றுப்படை” பாடிய நக்கீரரின் தமிழ்ப்பற்றை அறிகிறோம்.

தொல்காப்பியருக்கு ஆசான் முனிவர் அகத்தியர். அவருக்கு ஆசான்மார் சிவபெருமானும், முருகப்பெருமானும் ஆவர். எனவே

இறைவரே தமிழ்மொழியைக் கற்றுக் கொடுத்த பெருமை எந்த மொழிக்கும் இல்லாத நம்தமிழ்மொழிக்கே உரியதாகும். இத்தகு இறையருள் கொண்ட நம் தமிழ்மொழிக்கு ஏதேனம் தடங்கல்வரின் நமது ஞானத்தந்தையவர்கள் முன்னின்று அதனை நீக்குவார். அந்த வகையில் தமிழுணவர்வில் தலைநின்ற ஆன்மீகத் தலைவராக விளங்கி வருகிறார். பெரும்பாலான தமிழ் அமைப்புக்களுக்கு நமது அருட்தந்தை அவர்களே தலைவராவார். அடிகள் அவர்களின் அறிவுரைப்படியே ஏனைய அமைப்புக்களும் செயல்பட்டு வருகின்றன. தமிழுக்குச் செம்மொழித் தகுதி வரக் காலம் தாழ்த்திய நேரத்தில் அனைத்துத் தமிழ் அமைப்புகளுடன் இணைந்து நமது அடிகள் கோவை மாநகரில் ஒருநாள் உண்ணாநோன்பு இருந்து தலைமையேற்றுச் செயல்பட்டவர். அதற்காக, அடிகளின் தலைமையில் இயங்கும் கல்லூரி மாணாக்கர், கோவைநகரக் கல்லூரி மாணாக்கர், கோவைநகரக் கல்லூரி மாணாக்கர் அனைவரும் ஒருநாள் உண்ணா நோன்பிருக்க, அதற்கும் அடிகள் பெருமானே! தலைமைதாங்கி மாணாக்கரின் மொழியுணர்வையும் மொழிப் பற்றையும் போற்றினார்கள். அங்காடிகளிலுள்ள பெயர்ப்பலகைகளைத் தமிழில் அமைக்க வேண்டும் என்ற திட்டத்தை முன்னிறுத்தித் தமிழ் உணர்வாளர்களையும், தமிழாசிரியர்களையும் அந்தப் பணிகளில் ஈடுபட வைத்து நெறிப்படுத்தினார்கள். உயர்தனிச் செம்மொழியில் பல்துறை நூல்கள் வரவேண்டும் என விரும்பினார்கள். நமது ஞானத் தந்தையவர்கள் எல்லா நாட்களிலும் தமிழ்ப் பாடல்கள் புனைந்து, தமிழ்த்திருமுறைகளைப் போற்றி எழுதிக் கொண்டே இருப்பர். எழுதாத நாளில்லை என்று எளிதில் கூறிவிடலாம்.

இன்றைய காலகட்டத்தில் தமிழின் உயர்வை, பெருமையை உரத்த குரலில் எடுத்து முழங்கிய மாபெரும் துறவி நமது அடிகளாரே ஆவர்.

கொங்கு நாட்டில் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் செய்த கோயில்கள் திருப்பணிகள்

பேரூர் அடிகள் கொங்கு நாட்டில் இடம் பெற்றுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கோயில்களைப் புதுப்பித்து அக்கோயில்களிலிருந்து பலவகையான திருமேனிகளையும் புதுப்பித்துத் திருகோயில்களுக்கே தெய்வ ஒண்தீந்தமிழால் திருக்குட நீராட்டுப் பெருவிழாவை நடத்தியுள்ளார்கள். இனி அவைப் பற்றிக் காண்போம்.

தென்கயிலாயம்:

தென்கயிலாயம் எனப் போற்றப்பெறும் அருள்மிகு மனோன்மணியம்மன் உடனமர் அருள்மிகு வெள்ளியங்கிரி ஆண்டவர் திருக்கோயிலுக்கு மாசி, பங்குனி, சித்திரை மாதங்களில் மலைமீது நடந்து சென்று "பஞ்சலிங்க தரிசனம்" கண்டவர்கள் பக்தியுணர்வுடன் வருவார்கள் அவர்கள் தங்குவதற்கு தங்கும் விடுதிகள் உள்ளன. அவை போதாதென்று ஒய்வெடுத்தல் முதலானவற்றிற்கு முன் மண்டபம், மகா மண்டபம் முதலியவற்றை அமைத்துக் கொடுத்துள்ளார்கள் அடிகள் பெருமகனார் கோயில் பிரகாரத்துடன் 63 நாயன்மார்களுக்குக் கற்சிலை அமைக்கச் செய்து தரைத்தளம் புதுப்பித்து மிகுந்த பொலிவுடன் அழகுபட அமைக்கும் வகையில் நெறிகாட்டித் திருப்பணி செய்ய வைத்தார். திருநெறிய தமிழாகமத் திருக்குடநீராட்டினை உலகத் தமிழர்கள் ஒன்று கூடிப் போற்றும் முறைமையில் நடத்தினார். தமிழ் வேள்விச் சாலையின் அற்புதம் கண்டு அனைவரும் வணங்கி மகிழ்ந்தனர். நமது சுவாமிகளின் அருளார்ந்த தலைமையில் அவ்விழா நடைபெற்றது. பேரூராதீனத்திற்கு வருகை தந்து சுவாமிகளிடம் அருளாசி பெறுவதற்கு வந்த தமிழ்நாடு உயர்க்கல்விச் செயலராக விளங்கிய (அன்றைய நாட்களில்) முனைவர் ச.முத்துக்குமரன் அவர்கள் இச்செய்தியறிந்து மகிழ்ந்து வெள்ளியங்கிரி மலைக்கோயிலைக் காண விரும்பி அடிகளின் அருளார்ந்த அனுமதி உதவியுடன் சென்று கண்டு வணங்கி மகிழ்ந்த நிகழ்ச்சி மனக்கண்முன் நிழலாடும் நிகழ்ச்சியாக அமைகிறது. அன்றைய அமைச்சர் பெருமக்கள் ஆதீனத் துறவோர்கள், கல்வி நிறைய மாணாக்கர்கள் பேராசிரியப் பெருமக்கள், கோவை நகரப் பக்தர்கள் பக்தர் பேரவை அமைப்புகள்,

நற்பணி மன்றத்தினர் எனப் பலரும் வணங்கிப் போற்றியமுறை நமது அருட்தந்தையின் திருக்கோயில் பேணும் முறைக்கு அடிநாதமாக விளங்கியது.

பண்பாடு போற்றும் அறங்கூறு அவைகளாக கோயில்கள் இருந்தமையை உணர்ந்து அனைவருமே கோயில்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற கொள்கையுடையவர் நமது அருட் தந்தையார்.

மன்னர்கள் மட்டுமின்றிப் பொதுமக்களும் அதிக அளவில் திருக்கோயில்களை அமைத்துள்ளனர். அவ்வகையில் புதிய கோயில்கள் புதுப்பிக்க அடிகள் துணை நின்று வருகிறார். திருக்கோயில்களைப் பேணும் முறைகளுக்கு அடிகளின் குறிப்புக்களே அகச்சான்றுகளாக அமைத்து அரண்சேர்க்கின்றன அவை.

திருக்கோயில்கள், திருவுருவங்கள், வழிபாட்டு முறை, ஆகிய பற்றி செய்திகள் பல்லாயிரக்கானக்கான ஆண்டுகளாகப் பரவி வளர்ந்திருக்கின்றன. பாரதநாடு இமயலைக்கும் கன்னியாகுமரிக்கும் இடையில் உள்ள நாடு இந்நாட்டில் பல்வேறு மொழிகளைப் பேசும் மக்கள் தத்தம் மொழியில் இறைவழிபாடு செய்து வருகின்றனர். அவற்றுள் தொன்மை மொழியாகத் திகழ்வது தமிழ். இது உயர்தனிச் செம்மொழி எனப் போற்றப்படுகின்றது. தமிழகத்தில் திருக்கோயில்கள் மிகுதியாக உள்ளன. திருமுறைப் பாடல்கள் இறைவன் அருள் பெற்றவர்களால் அருளப்பெற்றன எனதுரை தனதுரையாக ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கித் தெய்வத் திருவருள் வடிவாய் நின்று அருளிய பாடல்களாகும். இறைவன் வான் வழித்து, மண்புகுந்து மனிதனை ஆட்கொள்வதற்காகத் திருமுறைப்பாடல்கள் துணைப்புரிகின்றன. வண்ணம் காட்டி வடிவு காட்டி ஆட்கொண்ட பெருமையைத் திருமுறைப் பாடல்களால் உணர்கிறோம். நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச் செங்கமலர 'பொற்பாதம் தந்த நிலையே திருத்தொண்டர் புராண வரலாறுகளாகும். திருக்கோயில்கள் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பரவி வளர்த்திருக்கின்றன என்பனவாகும். அடிகளின் இந்தப் பதிவுகள் அவரது பக்தி மேன்மையினை வெளிபடுத்துவனவாக உள்ளன.

உயிர்களின் ஈடேற்றத்திற்குத் திருக்கோயில்கள் வழிபாடு இன்றியமையாதது திருக்கோயில் எழுப்புதல், புதுப்பித்தல், திருப்பணி செய்தல் முதலானவற்றை நமது அடிகள் அவைகளை செந்தமிழ்

செய்வதற்கு நெறிப்படுத்தியுள்ளார். செய்ய வேண்டிய செயல்களைத் தொகுத்து நூலாகவும். நமது திருமடத்தில் வெளியிட்டு அனைவரது பயன்பாட்டிலும் வருவதற்குத் துணை நின்று வருகின்றார். (திருவள்ளுவராண்டு 2035 முதற் பதிப்பு 2004 திருநெறிய தமிழாகமத் திருக்குட நன்னிராட்டு சாந்தலிங்கர் அருள்நெறி மன்றத்தினர்.

பேரூர் அருள்மிகு பட்டீஸ்வரர் திருக்கோயில் திருப்பணிகள்:

பேரூர் பட்டிப்பெருமாள் திருவிழா பங்குனி மாதம் பெருந்திருவிழாவாக நடைபெறும். இத்திருவிழாவில் ஆண்டுதோறும் அடிகள் தேர் வடம் பிடிக்கத் திருவீதிகளில் தேரோடி வரும் இச்சிந்தனையில் இருக்கும் அடிகள் பெருமானுக்கு மட்டும் தேர் உள்ளதே அம்பிகைக்கும் தேர் உருவாக்கித் தேரினை ஓட்ட வேண்டும் என எண்ணியுள்ளார். நல்ல எண்ணத்திற்குத் தக பேரூர் திருமட வளாகத்தில் அன்பர்கள் உதவியால் தேர் உருவாக்கும் பணி இனிது அமைந்தது. வளமான வேலைப்பாடு மிக்க உரிய தேர் பச்சைநாயகிக்கும் அமைந்தது அடிகளின் அரிய செயல்பாடுகளின் வெளிப்பாடாகும்.

அடிகள் பெருமானின் முன்னிலையில் பேரூர் திருமடத்திலிருந்து பட்டி பெருமாள் திருக்கோயிலுக்கு வந்து தேர்திருவிழா சிறப்புடன் நடைபெற்றது. மக்கள் அனைவரும் மட்டற்ற மகிழ்ச்சியுடன் விழாவில் பங்கேற்றனர்.

அவினாசித்தேர் பூண்டி திருத்தேர் மருதமலை திருத்தேர் முதலான பல கோயில்களின் திருத்தேர் விழாக்கள் தேரோட்டங்கள் இனிதாக நடைபெறத் துணை நிற்பது அடிகளின் இயல்பாகும்.

கோயில் பாளையத்தில் கோயில் திருப்பணிகள்:

கோயில்பாளையம் அருள்மிகு காலகாலேஸ்வரர் கருணா கரவல்லி கோயில் உள்ளது. இக்கோயில் கரிகாலச்சோழனது காலத்தில் திருப்பணிகள் செய்யப்பட்டது. வரலாற்று சிறப்புடையது. இக்கோயிலுக்கு நம் அடிகளார் அவர்கள் இளம்வயதில் முதலிபாளையத்தில் இருந்து தன் தந்தை தவத்திரு.சிவராமசாமி அடிகளாருடன் இங்கு வந்து வழிபாடுகள் செய்துள்ளார். அடிகள் சாந்தலிங்கர் திருமடத்தை அருளாட்சி செய்யும் காலத்தில் இக்கோயில் சார்ந்த குடிமக்களிடேயே கருத்து மோதலால்

திருப்பணி தடைப்பட்டு இருந்த நிலையில் அடிகளார் முன்வந்து கோயில் சார்ந்த குடிமக்களைச் சந்தித்துப்பேசி தடையில்லாமல் திருப்பணிகளைச் செய்து சிறப்புடன் திருக்குட நன்னீராட்டு விழாவினை நடைத்தி வைத்தார் அடிகள்

அவிநாசி திருக்கோயில் திருப்பணி:

எற்றான் மறக்கேனெழுமைக்கு மெம் பெருமானையே
உற்ற என்றுனையே யுள்குன்றேனு னூர்ந்துள்ளதால்
புற்றாடவா புக்கொளியூர விநாசியே
பற்றாக வாழ்வேன் பசுபதியே பரமேட்டியே!

என்று சுந்தரரால் பாடல் பெற்ற திருக்கோயில் அருள்மிகு அவினாசியப்பர் கருணாம்பிகா திருக்கோயில் இங்கு தான் சுந்தரர் முதலையுண்ட சிறுவனை அரியபதிகம் பாடி மீட்டார் என்ற பாரம்பரிய ஆன்மிகச் சிறப்பு கொண்ட அவினாசியப்பர் கோயிலின் திருத்தேர் சேதம் அடைந்த நிலையில் ஆன்மிகப் பெரியவர்களின் வேண்டுதலை ஏற்று பேரூர் அடிகளாரும் சிரவை ஆதீனம் தவத்திரு சுந்தரசாமி அடிகளாரும் அருட்செல்வர் மகாலிங்கம் அவர்களும் வாரியார் சாமிகளும் ஆன்மிகப் பெரியவர்களும் இணைந்து தேரை செப்பனிட்டு திருப்பணி செய்து தமிழ்முறைப்படி சிறப்பு வழிபாடுகள் செய்து அவிநாசி திருக்கோயிலில் தேர் ஓட்டிக் கொடுத்தனர்.

திருநணா பவாணித் திருக்கோயில் திருப்பணி:

“முத்தேர் நகையாளிடமாகத் தம் மார்பில் வெண்ணூல் பூண்டு
தொத்தேர் மலர்சடையில் வைத்தாரிடம் போலுஞ் சோலை சூழ்ந்த
அத்தேளியுடன் களியாலிசை முரலவாலத் தும்பி
தெத்தேயென முரலக் கேட்டார் வினைகெடுக்குந் திருநணாவே”

என்று திருஞான சம்பந்தர் பெருமான் போற்றிப் பாடிய திருக்கோயில் இக்கோயில் திருப்பதி காவிரியாறும் பவாணியாறும் இக்கோயிலில் ஒன்று கூடுகின்றன. இங்கு கண்ணுக்குத்தெரியாத அமுதநதியும் கூடுவதாக ஐதீகம். எனவே இக்கோயில் தென் பிரயாகை என்று போற்றப்படுகிறது. இக்கோயிலில் குடிகொண்டு அருளாட்சி செய்திடும் இறைவன் அருள்மிகு சங்கமேசுவரர் இறைவி வேதநாயகி அருளாட்சி செய்திடும் இறைவன் அருள்மிகு சங்கமேசுவரர் இறைவி வேதநாயகி தேவியாகும் கொங்கு

நாட்டில் பெயர் பெற்ற இத்திருக்கோயில் திருப்பணியை அருட்செல்வர் மகாலிங்கம் தனது தலைமையில் ஏற்று நடத்தினார். அடிகளார் தலைமையில் தமிழ் வழிபாட்டு முறையில் திருக்குட நன்நீராட்டு விழா சிறப்புடன் நடத்தினார்.

வெஞ்சமாங் கூடலூர் திருக்கோயில் திருப்பணி:

"தொழுவார்க் கெளியாய் துயர் தீரநின்றாய்
சுருபார் மலர்க் கொன்றை துனறுஞ் சடையாய்
ஊழுவார்க்கரிய விடையேறி யொன்னார்
புரந்தீ யெழவோடு வித்தாயழகா
முதுகாடரங்கா நடமாட வல்லாய்
விழவார் மறுகில் வெஞ்சமாக் கூடல்
விகிர்தாவடி யேனையும் வேண்டுதியே"

என்று சுந்தரர் தேவாரம் பாடிய இத்திருக்கோயில் கொங்குநாடு கரூர் மாவட்டதில் உள்ளது. இக்கோயில் கொங்கேழு கோயில்களில் ஒரு கோயிலாகும் கொங்கு நாட்டின் மிகப்ழமையான கோயில். இக்கோயிலின் இறைவன் இறைவியர் அருள்மிகு கல்யாணவிகிர் தேசுவரர் விகிர் தேசுவரி இத்திருக்கோயில் சேதமடைந்த நிலையில் அடிகளாரும் சீரவையாதீனம் தவத்திரு.சுந்தரசாமி அடிகளாரும் கோயில் பக்தர்களோடு இணைந்து இரு அடிகளார் தலைமையில் திருப்பணிகள் சிறப்புடன் செய்து திருக்குட நன்னீராட்டு விழா நடத்தி வைத்தனர்.

திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரர் திருக்கோயில் திருப்பணி:

"வெந்த வெண்ணீறணிந்து விரிநூல் திகழ்மார்பினல்ல
பந்தணவும் விரலாள் ஒருபாகம் அமர்ந்தருளிக்
கொந்தணவும் பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
அந்தணணைத் தொழுவார் அவலம் அறுப்பாரே"

என்று திருஞானசம்பந்தர் பாடிய திருக்கோயில் சேலம் மாவட்டம் திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீசுவரர் திருக்கோயில் மலைமீது உள்ளது. இத்திருக்கோயில் பல வரலாற்றுச் சிறப்பு கொண்ட திருக்கோயில் திருப்பணியில் அடிகளார் பங்கு கொண்டு திருக்குட நன்னீராட்டு விழா நடத்தி வைத்துள்ளார்.

சேவூர் கோயில் திருப்பணி:

அவினாசிக்கு அருகில் உள்ள திருத்தலம் குட்டகம் என்று போற்றப்படும் பெரும் சிவத்தலம் ஆகும். இத்தலம் பற்றி கொங்கு மண்டலம் விரிவான செய்தி கூறுகிறது. கொங்கு மண்டல சதகத்தில் உள்ளபடி திருவாசக வைப்புத்தலமாக இடம் பெறுகிறது. இத்தலக்கோயிலில் அருள்மிகு குட்டகப்பெருமாள் அருள்பாலித்து வருகிறார். இத்திருக்கோயிலில் மிகப்பெரிய வேள்வி வழிபாடுகள் செய்து திருக்குட நீராட்டுச் செய்து இப்பகுதி வாழ்மக்கள் நாளும் வழிபாடு செய்வதற்கு அடிகளார் ஏற்பாடு செய்து கொடுத்தார்.

கோட்டையீஸ்வரர் கோயில் திருப்பணி:

கோவை நகரின் மத்தியில் அமைந்துள்ள திருத்தலம் அருள்மிகு கோட்டையீஸ்வரன் கோயிலாகும். இத்திருக்கோயில் திருப்பணி செய்திட நகர மக்கள் கூடி அடிகளார் தலைமையில் கோயில் திருப்பணி செய்வதென்று முடிவு செய்து திருப்பணிகள் நடைபெற்று அடிகள் தலைமையில் திருக்குட நன்நீராட்டு விழா சிறப்புடன் நடைபெற்றது.

கோணியம்மன் திருக்கோயில் திருப்பணி:

கோவை மாநகரின் காவல் தெய்வமாக விளங்கி வரும் அருள்மிகு கோணியம்மன் திருக்கோயில் கோவை நகரின் பாரம்பரியமான கோயிலாகும். இக்கோயில் திருப்பணிகள் செய்யும் போது முதல் பணியாக இராசகோபுரப்பணி வேலைகள் அடிகளார் தலைமையில் நடைபெற்று திருக்குட நன்னீராட்டு விழா சிறப்புடன் நடைபெற்றது.

முத்தூர் சோழிஸ்வரர் திருக்கோயில் திருப்பணி:

காங்கையம் நாடு முத்தூரில் உள்ள அருள்மிகு பெரியநாச்சியார் உடனமர் சோழீஸ்வரர் திருக்கோயில் கொங்கு நாட்டுக் கோயில்களில் சிறப்பு வாய்ந்த கோயிலாகும். இக்கோயிலை ஆதிகாலத்தில் சோழர்களாலும் பின்பு அடிகளாரின் முன்னோர்களான முத்தன் குலத்தவர்களும் திருப்பணிகள் செய்துள்ளனர். கோயில் சேதம் அடையும் நிலையில் அடிகளார் தலைமையில் கோயில் சார்ந்த குல மக்கள் அடிகளார் தலைமையில் திருப்பணிக் கமிட்டி அமைத்து திருப்பணிகள் செய்து அடிகளார் தலைமையில் திருக்குட நன்னீராட்டு விழா நடைபெற்றது.

ஈச்சனாரி விநாயகர் திருக்கோயில் திருப்பணி:

கோவை பொள்ளாச்சி சாலையில் அமைந்துள்ள ஈச்சனாரி அருள்மிகு விநாயகப்பெருமாள் திருக்கோயில் உள்ளது. அத்திருக்கோயியில் திருத்தேர் அமைப்புக்குழுவில் தலைமையேற்று அத்தேரை ஓராண்டில் உருவாக்கித் திருத்தேரினை ஓட்டச் செய்வதற்கான நற்பணிகளைச் செய்து முடித்தார் அடிகளார்.

சிவன்மலை திருக்கோயில் திருப்பணி:

சிவன்மலை என்றிடச் சிதையும் தீவினை
சிவமலை யென்றிடத் திருவந் தெய்திடும்
சிவமலை யென்றிடச் சேரும் புண்ணியம்
சிவமலை யென்றிடச் சித்தியாகுமாம்.

என்று சிவன்மலை புராணம் பாடுகிறது. கொங்கு காங்கையம் நாட்டில் உள்ள சிவன் மலையின் மேல் அருள்மிகு முருகப்பெருமான் குடி கொண்டுள்ளார். இக்கோயில் திருப்பணிகள் செய்து அடிகளார் குடமுழுக்கு நடத்தி வைத்தார்.

கரூர் ஈஸ்வரன் கோயில் திருப்பணி:

"பண்ணினார் படியேற்றர் நீற்றர் மெய்ப்
பெண்ணினார் பிறைதாங்கு நெற்றியர்
கண்ணினார் கருவூருள் ஆனிலை
நண்ணினார் நமையாள நாதரே!"

என்று திருஞான சம்பந்தரால் பாடல் பெற்ற கரூர் பசுபதி ஈஸ்வரர் கோயில் இறைவனின் திருப்பெயர் அருள்மிகு கல்யாண பசுபதீஸ்வரர் இறைவிகள் இருவர் அலங்காரவல்லி, சௌந்தரநாயகி ஆகிய இருவருக்கும் தனியாகக் கோயில்கள் உண்டு. திருஞான சம்பந்தர் சோழநாயனார் எரிபத்த நாயனார் முதலியோர் தொடர்பு கொண்ட கோயிலாகும். கொங்கு வஞ்சிநகர் எனப் பெயர் நகரின் மத்தியில் அமராபதி நதி அருகில் இக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் திருப்பணிகளிலும் அடிகளாரின் பங்குண்டு.

தென்சேரிகிரி என்னும் செந்சேரிமலைக் கோயில் திருப்பணி:

"தென்சேரி மலையின் மீது சேர் அறு முகனார் வாழி
முன்சேரும் முகில்கள் மாதம் மும்மாரி பொழிதல் வாழி
தன் நேர் இத்தலத்தளாரும் தாம் இதைநடந்து வோரும்
பன்னானு சிவன் மங்கள் வளர்ப்பவர்பலரும் வாழி"

என்று தென்சேரிமலை புராணம் கூறுகிறது. இக்கோயிலைப் பற்றி அருணகிரி நாதர் பாடியுள்ளார். இக்கோயில் தென்சேரிமலை மீது உள்ளது. இக்கோயில் அருள்மிகு ஆறுமுகக்கடவுள் வள்ளி தெய்வாணையுடன் காட்சி தருகிறார். இக்கோயில் திருப்பணியில் தென்ஞ்சேரி திருநாவுக்கரசர் மடாலயத்துடன் இணைந்து அடிகளார் திருப்பணிகள் செய்துள்ளார்.

திருமுருகன் பூண்டி கோயில் திருப்பணி:

வில்லைக்காட்டி வெருட்டி வேடுவர் விரவலாமை சொல்லி
கல்லினா வெறிந்திட்டு மோதியுங் கூறை கொள்ளமிடம்
முல்லைத் தாது மணங்கமழ் முருகன் பூண்டி மாநகர்வாய்
எல்லை கரம்ப தொன்றில்லையாகினி ரெத்துக்கிருந்தீ ரெம்பிரானிரே

என்று திருமுருகன் பூண்டியில் குடி கொண்டுள்ள முருகப்பெருமானைப் போற்றி சுந்தரனார் பாடுகிறார். திருப்பூரை ஒட்டியுள்ள திருமுருகன் பூண்டியில் உள்ளத் திருக்கோயிலின் இறைவன் அருள்மிகு முருகநாதப் பெருமான் இறைவி முயங்கு பூண்முலை மங்கை. இத்திருக்கோயிலுக்கு வந்து முருகனை வழிபடுபவர்களக்கு நோய் நொடிகள் குணம் அடைந்து வரும் இக்கோயில் பழைமை வாய்ந்த இறைசக்தி கொண்ட கோயிலாக விளங்கி வருகிறது. இக்கோயிலின் திருப்பணிக்கு அடிகளார் உதவிகள் செய்து சிறப்பு வழிபாடுகளில் கலந்து கொண்டு பக்தர்களுக்கு ஆசி வழங்கியுள்ளார்.

கோயில் திருப்பணிகள் செய்வதோடு அடிகள் அவர்கள் நாட்டில் உள்ள மற்ற கோயில்களுக்கும் சிறந்த முறையில் திருப்பணி செய்திடும் வகையில் ஒரு திட்டத்தை நெறிப்படுத்தி வழிகாட்டி வந்தார்.

1. திருக்கோயில்களின் புனிதத்தன்மை பேணுதல்

2. திருக்கோயில்களைப் பொலிவாக்குதல்

3. அறநிலையத்துறை மேம்பாடும் மேற்கொள்ள வேண்டிய பணிகளும்

4. தாய்மொழிக்கல்யை இளம் சிறார்களுக்கு வழங்குவதில் துறவியர் பங்கு

5. சிற்றூர்களிலும், நகரங்களிலும் வழிபாட்டு முறையை விரிவாக்கம் செய்தல்.

6. அவரவர்க்கு புரிந்த மொழியில் வ்ழிபாடு செய்ய ஊக்குவித்தல்.

7. அயல் சமயத்தைத் தடுக்க ஊர்தொறும் வழிபாட்டு மன்றங்களை உருவாக்குதல்.

8. பாடல் பெற்ற திருக்கோவில்களில் வாரம் ஒரு முறையாவது சென்று அத்தலுத்துக்குரிய திருமுறைகளை ஓதுதலும், ஓதுவித்தலும்.

9. திருக்கோயிலுக்குரிய தலவரலாறுகளை எளிய நடையில் அச்சிட்டு வழங்குதல்.

10. திருக்கோயில்களின் தொன்மையைப் பாதுகாத்திடலும் கல்வெட்டுக்களைப் பேணுதலும் ஆகியனவாகும். இவற்றை நாளும் செயல்படுத்தி வருவோர் அடிகள் ஆவார்.

தமிழகத் துறவியர் பேரவையில் பேரூராதீனம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள்

இந்தியாவில் மதநல்லிணக்கத்துடன் அனைத்து மதங்களை சார்ந்த மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். அனைத்தும் மக்களுக்கும் அவரவர் சமயங்களையும், மதங்களையும் பின்பற்றுவதற்கு அரசமைப்பு சட்டம் உரிமை வழங்கி இருக்கிறது. அதைப்பேணிகாக்கும் கடமை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசக்கு உள்ளது என்று நாட்டை ஆட்சி செய்து வரும் அரசு கூறி வருகின்றன. சமயசார்பற்ற அரசு அனைத்து சமயம் சார்ந்த பொதுவான ஜனநாயக அரசின் ஆட்சியாளர்கள் கூறுகின்றனர்.

நம் நாட்டில் பல சமயங்கள் உள்ளன. இவைகளில் முஸ்லீம் சமயத்தின் பள்ளிவாசல் நிர்வாகத்திலும் அரசின் தலையீடு இல்லாமல் அந்த இருசமயத்தின் குருமார்களே பள்ளிவாசல், சர்ச் நிர்வாகத்தை செய்து வருகிறார்கள். அங்கே அரசும் அறநிலையத் துறையும் தலையீடு செய்வதில்லை. திருப்பெருந்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகள் அவர்கள் தலைமையில் துறவியர்கள் மாநாடு சூலூர் குமரன் திருக்கோயிலில் 10–09–2002, மற்றும் 11–09–2002 ஆகிய இருநாட்கள் நடைபெற்றன. இம்மாநாட்டில் தமிழகத் துறவியர்கள் பேரவையின் அருட்பணிகளை விரிவாக்கும் நோக்கத்துடன் மாநிலத்துறவியர் மாநாடும், சான்றோர் கருத்தரங்கமும் மிகச்சிறப்புடன் நடைபெற்றன. இம்மாநாட்டிற்கு துறவியர்கள் பலரும் இந்துசமயச் சான்றோரும் தொண்டர்களும் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டில் இந்துசமயக் கோயில்களை பாதுகாக்கும் வகையில் கருத்துக்கள் பரிமாறி அரசு அறநிலைத்துறையிமிடருந்து திருக்கோயில்களை வாரியத்திடம் ஒப்படைத்தல் பற்றியும், திருமடங்கள், திருக்கோயில் நிலங்களைப் பற்றிச் சிந்திக்கவும், அயல் மதத்தாக்கங்களைத் தடுத்து நிறுத்தும் பணிகளைப் பற்றியும் அறநெறி பண்பாட்டுச் சிதைவுகளால் நாட்டில் ஏற்பட்டுள்ள கொடுஞ்செயல்களை நீக்குவத்திற்குச் சமயநெறி நின்று கலந்து கொண்டு ஆலோசனைகளையும் தீர்மானங்களையும் நிறைவேற்றினர்.

இந்த நாட்டின் பெரியசமயமாகவும், ஆதிசமயமாகவும் விளங்கிவரும். இந்து சமயத்தின் கோயில்களை மட்டும் இந்து சமய அறநிலையத்துறை எடுத்து ஆட்சி செய்து வருவதை திருத்தி இந்து சமயக்கோயில்களுக்கு தனிவாரியம் வேண்டும் என்று தமிழகத் துறவியார்கள் பேரவை அரசை வலியுறுத்தி வருகிறது.

இந்த கோரிக்கையை வலியுறுத்தி பேரூராதீனம் தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகள் கௌமார மடாலயம் தவத்திரு சுந்தரசாமிகள் தலைமையில் துறவிகளும் இந்து சமயம் சார்ந்த தொண்டர்களும் பெருந்திரளான கூட்டம் தெற்கே கன்னியாகுமரியில் இருந்து வடக்கே தலைநகர் சென்னை பாதயாத்திரையாக நடந்தனர். **1–5–1988** முதல் **31–5–1988** வரை ஒரு மாதம் பாதயாத்திரை சென்று அரசிடம் கோரிக்கை மனு கொடுக்கப்பட்டது.

அறவழிகாட்டும் தமிழகத் துறவியர்கள் மாநாட்டில் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

உலகப்பெருவேள்வி மண்டபத்தில் **24–03–2012** சனிக்கிழமை காலை, சிதம்பரம் மௌன மடம் தவத்திரு மௌன சுந்தரமூர்த்தி சுவாமிகள் கொடியேற்றி நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார்கள்.

காலை **10.45**க்கு முதல் அமர்வு தொடங்கியது. கோவை காமாட்சிபுரி ஆதீனம் தவத்திரு.சிவலிங்கேசுவர சுவாமிகள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். பேரூர், பேரூராதீனம் இளையபட்டம் தவத்திரு. மருதாசல அடிகளார் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமையேற்று தலைமையுரையாற்றினார்.

பழனிசாது சுவாமிகள் மடம், தவத்திரு சாது சண்முக அடிகளார் அவர்கள் தொடக்கவுரை ஆற்றினார்.

தருமையாதீனம் கட்டளை விசாரணை தவத்திரு. முத்துக்குமாரசாமித் தரம்பிரான் அவர்கள், மதுராந்தகம் திருக்குறள் பீடம் சுவாமிகள், சிதம்பரம் மௌனமடம், தவத்திரு சுந்தரசுவாமிகள் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

பிற்பகல் **2.00** மணிக்கு இரண்டாம் அமர்வு சிரவையாதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது.

வெள்ளிமலை, சுவாமி சைதன்யானந்தா வாராகி பீடம், தவத்திரு மணிகண்ட சுவாமிகள், புதுக்கோட்டை திலகவதியார் திருமடம் சுவாமிகள், திரு.அர்சுன்சம்பத் அவர்கள் சங்கரன்கோவில். இராமானந்த சுவாமிமகள், அம்பாசமுத்திரம் ராமகிருஷ்ணன் சுவாமிகள், மலுமிச்சம்பட்டி நாகசக்தி பீடம் பாபுஜி சுவாமிகள், தென்சேரிமலை ஆதீனம் தவத்திரு.முத்துசிவராமசாமி சுவாமிகள் மற்றும் பலர் சமய வளர்ச்சிக்குரிய பணிகளைப் பற்றிய கருத்துக்களை வழங்கினர்.

நிறைவில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு அனுப்புவதெனத் தீர்மானிக்கப்பட்டது. வாழ்த்துடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

தினமணி நாளிதழில் துறவியர் மநாட்டு செய்தி:

தினமணி நாளிதழில் 25–03–2012 ஞாயிறு துறவியர் மாநாட்டு செய்தி மற்றும் படமும், 27ஆம் தேதி நாளிதழில் மாநாட்டு தீர்மானம் தலையங்கமாகவும் வெளிவந்தது.

24–03–2012 சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு தவத்திரு.சுந்தர சுவாமிகள் காவணத்தில் பத்ம ஸ்ரீ டாக்டர் சீர்காழி கோ.சிவசிதம்பரம் அவர்களின் தெய்வீக மணம் கமழும் மாபெரும் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. கோவை சக்தி அவர்கள் வெள்ளிவிழா பற்றி இயற்றிய பாடலை, சீர்காழி சிவசிதம்பரம் அவர்கள் மேடையில் பாடினார். அப்பாடல் கேட்டோர் அனைவரையும் மனம் உருக வைத்த நிகழ்ச்சியாக அமைந்தது.

சிரவையாதீனம் தவத்திரு குருமகா சாந்திதானங்கள் இசைக்குழுவினருக்கு பொன்னாடை போர்த்தி சிறப்புச் செய்தார்கள். சீரவை ஆதீனப் புலவர். கு.சிவலிங்கம் அவர்கள் நன்றி நவில மூன்றாம் நாள் நிகழ்ச்சி இனிதே நிறைவு பெற்றது.

துறவியர் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

1. இந்து சமயத் திருக்கோயில்களை வாரியத்தின் கீழ் கொண்டுவர வேண்டும் என்ற கருத்து பல்வேறு காலக்கட்டங்களில் சமய அருளாளர்களால் வலியுறுத்தப்பெற்று வந்துள்ளது. தெய்வத்திருப் பெருந்திரு தமிழ்மாமுனிவர் சீர்வளர்சீர் குன்றக்குடி அடிகளார் சென்னைப் பல்கலைக்கழகத்தில் சமயமும் சமுதாயமும் என்று

உரையாற்றிய போது இந்து சமய திருக்கோயில்களுக்கு வாரியம் அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். சிரவையாகதீனம் தெய்வத்திருப் பெருந்திரு தமிழ்மாமுனிவர் சீர்வளர்சீர் சுந்தரம் அடிகளார், பேரூராதீனம் சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் ஆகியோர் திருக்கோயில் வாரியம் அமைய 1000 கி.மீ. நடைப்பயணம் மேற்கொண்டு வலியுறுத்தினர். ஆதலின் தற்போதுள்ள ஆட்சியாளர்கள் இந்துசமய திருக்கோயில் வாரியம் அமைப்பதில் அக்கரை காட்டி ஆவன செய்ய தீர்மாணிக்கப்படுகிறது இந்த சமய மடாலங்கள், இந்து சமயக் கோயில்கள் பெரும்பாலனவற்றில் அறநிலையத்துறையின் தலையீடு அதிகமாக உள்ளது. அதனால் மடாலயங்கள், திருக்கோயில்களின் வளர்ச்சிக்குப் பெரும் பாதிப்பாக உள்ளது. ஆகவே இந்து மடாலயங்கள், திருக்கோயில்களை வாரியத்தின் கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டும் என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

2. தெய்வீகப்பேரவை சமய நிலையில் மக்களை வளப்படுத்திய அமைப்பு, சிறப்பான முறையில் செயல்பட்டு வந்த தெய்வீகப்பேரவைச் செயல்படாமல் உள்ளது. மீண்டும் தெய்வீகப்பேரவை செயல்பட ஆவன செய்யவேண்டுமென்று தமிழக முதல்வரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது. சென்னையில் தெய்வீகப் பேரவை இயக்கத்திற்காக தருமையாதீனம் கயிலைக்குருமணி அவர்களது முயற்சியால் கட்டடம் வாங்கப்பெற்றது துறைவியயருக்காக அளிக்கப்பட்டது. அங்கு அண்மைக்காலம்வரை துறவியர் பயன்பாட்டுக்குரியதாக இருந்தது. ஆனால் தற்போது இந்து சமய அறநிலையத்துறை வசம் சென்றுவிட்டது. மீண்டும் அதனை மீட்டு ஆதீனத்தலைவர் திருமடத் தலைவவர்களிடம் சேர்க்கப்பட வேண்டும். தெய்வீகப்பேரவையின் நிர்வாக அமைப்பில் துறவியர் 20பேர் இடம்பெறவேண்டும் ஆர்சிய வித்யாபீடம் முதலன புதிய சமய அமைப்புகளையும் இணைத்தும் செயல்படுத்த வேண்டும்.

3. முக்கியத்தலங்களாகிய திருக்கயிலை, முத்திநாதம், அமர்நாத், பத்ரிநாத், கேதார்நாத் ஆகிய தலங்களுக்குச் சென்றுவர பக்தர்களுக்குத் தமிழக அரசு விரைவில் நிதியுதவி வழங்கவேண்டுமென இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

4. மற்ற சமயக்கல்வி நிறுவனங்களுக்குக் கொடுத்துவரும் சலுகைகளைப்போலவே இந்து சமயம் சார்ந்த கல்வி நிறுவனங்களுக்கும்

அரசு சலுகைகள் வழங்கவேண்டும் என்று இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

5. சிறுபான்மைச் சமய மாணவர்களுக்கு மட்டும் வழங்கும் சலுகைகளை இந்து சமய மாணவர்களுக்கும் வழங்கவேண்டும் என்று மைய அரசைக்கேட்டுக்கொள்கிறது.

6. ஆசைகாட்டி ஊடகங்கள் வழியாகச் செய்யப்படும் மதமாற்றத்தை காவல்துறையின் மூலமாகக் கண்டு தடைசெய்ய வேண்டுமென்றும் மதமாற்றத் தடைச்சட்டத்தினை மீண்டும் கொண்டுவர வேண்டும் எனவும் மைய மாநில அரசுகளை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

7. நம்முடைய சமயத்தைப் பற்றியும் அருளாளர்களைப் பற்றியும் ஊடகங்கள் வழியாகவும் இதழ்கள் வாயிலாகவும் கேலி செய்து வருவது கண்டனத்திற்குரியது. தமிழக அரசு உடனடியாகத் தலையிட்டு ஞானசம்பந்தரை இழித்து எழுதப்பட்ட தாண்டவபுரம் என்னும் நூலை உடனடியாகத் தடைசெய்ய வேண்டும். பெரும்பான்மை மக்களைப் புண்படுத்தி இந்நூலை எழுதிய எழுத்தாளரையும் பதிப்பாளரையும் கைது செய்ய வேண்டும் எனத் தீர்மானிக்கப்படுகிறது.

8. கோயில் மண்டபங்களிலும் வளாகங்களிலும் வழிபாட்டுக்கு இடையூறாகவுள்ள வணிக நிறுவனங்களை அப்புறப்படுத்த வேண்டும். கோயிலைச் சார்ந்த கடைகள் முதலியவற்றை இந்துசமயத்தினருக்கே வாடகைக்கு விட அறநிலையத்துறையை இம்மாநாடு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

9. நம்முடைய சமய அமைப்புகளும் அருளாளர்களும் ஒருங்கிணைந்து ஒற்றுமையுடன் செயல்படவேண்டும் என்று இம்மநாடு கேட்டுக்கொள்கிறது.

10. அந்தந்தப் பகுதிகளில் உள்ள சமய நிறுவனங்கள் மாணவர்களுக்கான அருட்பாடல் போட்டிகள் முதலியவற்றை நடத்தி இளைஞர்களிடத்தில் சமய உணர்வினை வளர்க்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறது.

11. இந்துக்களுக்கென ஒரு ஓட்டு வங்கியை அனைவரும் கூட்டாக இணைந்து உருவாக்கவேண்டுமென்று இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

12. திருக்கோயில்களுக்கு மக்கள் பெருமளவில் காணிக்கைகள் அளித்து வருகிறார்கள். அதன்மூலம் கோயில்கள் வருமானம் பெற்று வருகின்றன. இந்த வருமானம் முழுவதும் பக்தர்களுடைய நலத்திற்காகவே செலவிட முயற்சிகள் மேற்கொள்ளவேண்டும் என்று இம்மாநாடு அரசைக் கேட்டுக்கொள்கிறது.

13. அளவிற்கு அதிகமாக பல்வேறு கட்டணங்களைத் திருக்கோயில்கள் வசூலித்து வருகின்றன. கட்டணமில்லாமல் வழிபாடுகள் நடைபெற அரசு ஆவன செய்யவேண்டுமென இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது. நிதி தேவைப்படும் கோயில்களில் அளவான கட்டணங்களை வசூலிக்க அரசு வலியுறுத்த வேண்டும்.

14. இளைஞர்களுக்குச் சமயப்பயிற்சி, துறவியர் பயிற்சி போன்றவற்றை வழங்க முயற்சி மேற்கொள்வதென இம்மாநாடு தீர்மானிக்கிறது.

15. பல்வேறு நோக்கங்களோடு செயல்பட்டுக் கொண்டிருக்கும் சமய அமைப்புகளை அவரவர் நோக்கங்களுக்கு ஊறு இல்லாமல் ஒருங்கிணைத்து புதிய அமைப்பு ஒன்றினை உருவாக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்படுகிறது.

16. திருத்தேர்கள் பல 60 ஆண்டுகளுக்கு மேலாக பராமரிக்கப்படாமல் அழிந்துபோயின. மீண்டும் எல்லா திருக்கோயில்களிலும் திருத்தேர் திருவிழா நடக்குமானால் அடித்தள மக்களுக்கும் பிறருக்கும் பக்தியும் ஈடுபாடும் பெருகும். அதனால் விரைந்து திருத்தேர் பணிகள் நடைபெறவேண்டும் என இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

17. திருக்கோயில் நன்கொடைத்திட்டத்தில் திருப்பணி செய்ய முன்வருபவர்களுக்கு அறநிலையத்துறை பல தடைகளின்றி அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. கோவை கௌமார மடாலயத்தில் அண்மையில் நடைபெற்ற துறவியர் மாநாட்டில் பேசிய பேரூர் ஆதீன இளையபட்டம் மருதாசல அடிகளார், இந்து, கோவில்களை வாரியத்ன் கட்டுப்பாட்டில் கொண்டு வரவேண்டும் என்கிற கருத்தை முன்வைத்துள்ளார். அவர் சொல்ல விரும்பியது, வக்ஃபு வாரியம் போல தனியான ஒரு வாரியம் இந்து கோயில்களுக்கும் தேவை என்பதுதான்.

மாநட்டில் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் உரை:

இந்தத் துறவியர் மாநாட்டில் பேசியவர்கள், இந்து சமய நிறுவனங்கள் மீதும், இந்துக் கோயில்கள் மீதும் அரசின் தலையீடு உள்ளது என்பதை வெளிப்படையாகவே பேசியுள்ளனர். இந்த தலையீடு தவிர்க்கப்பட வேண்டுமானால், அதற்கு ஒரே வழி இந்துக் கோயில்களுக்குத் தனி வாரியம் அமைக்கப்படுவதுதான் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

1925ஆம் ஆண்டில் இந்து சமய அறநிலையத் துறை வாரியம்தான் அமைக்கப்பட்டது. ஒரு தலைவர் மற்றும் அரசு நியமிக்கும் இரண்டு ஆணையர்கள் கொண்ட தனி அமைப்பாக அது இருந்தது. இதன் பணிகளை ஒழுங்குபடுத்த அமைக்கப்பட்ட தனி அலுவலர் ஆர்.வி.கிருஷ்ணய்யர், இந்த வாரியத்தை அரசே ஏற்று நடத்தலாம் என்று 1940ல் பரிந்துரைத்தார். ஓய்வுபெற்ற நீதிபதி வெங்கட்ரமண ராவ் தலைமையிலான குழுவும் இதை ஆமோதித்தது. ஆகவே 1951ல் இந்துக் கோயில்கள் அரசின் கட்டுப்பாட்டுக்குள் வந்தபோது இந்து சமய அறநிலையத்துறை அமைக்கப்பட்டது.

கடந்த அரை நூற்றாண்டு காலமாக திராவிடக் கட்சிகள் மாறி மாறி ஆட்சி செய்த போதும் கூட எழாத முனுமுணுப்புகள் இப்போது ஏற்படக் காரணம், அரசின் எல்லாத் துறைகளையும்போல இந்து சமயம் மற்றும் அறநிலையைத் துறையிலும் ஊழல் பெருகிவிட்டது என்பதால் தான்.

தனிவாரியம் அமைத்தால் மட்டும் ஊழல் நடக்காதா? என்று கேட்கலாம். ஆனால், இந்த அளவுக்கு நடக்காது என்பது மட்டும் நிச்சயம். அதிகாரத்துக்காகவும் வாரிசு உரிமைக்காகவும் சில மடங்களில் கொலைகள் கூட நடந்திருக்கின்றன என்பது உண்மையே என்றாலும், அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் கூட்டு சேர்ந்து செய்யும் ஊழல் போல நிச்சயமாக எவராலும் செய்ய முடியாது என்பதில் சந்தேகமே வேண்டாம்.

தெய்வ நம்பிக்கை உள்ளவனுக்கு மனித பலவீனத்தால் தவறுகள் செய்தாலும், தெய்வம் நின்று கொல்லும் என்ற நம்பிக்கையும் இருக்கும். ஆனால் இறை நம்பிக்கையே இல்லாத ஓர் அரசு நியமிக்கும் அதிகாரி தெய்வ நம்பிக்கை உள்ளவராகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. வாழ்நாள் முழுவதும் அப்பகுதிலேயே வாழ்ந்ததாக வேண்டிய

கட்டாயமும் இல்லை. இங்குதான் கோயிலுக்கு அரசுக்குமான முதல் முரண்பாடு தொடங்கிவிடுகிறது.

அறங்காவலர் குழுவும்கூட அரசியல் சார்புடன்தான் அமைக்கப்படுகிறது. கோயில் நிலங்களிலும், கட்டடங்களிலும் உரிமை நிலை நாட்டப்பட்டாலும், வாடகையை அதிகரிக்க நீதிமன்ற உத்தரவு பெற்றாலும்கூட, அமைச்சர்களையும் அதிகாரிகளையும் மனம் குளிரக் கும்பிட்டால் போதும் என்ற நடைமுறைகள், நீதிமன்றத்தின் எந்தவொரு சாதகமான தீர்ப்பையும் நிறைவேற்ற முடியாமல் கிணற்றில்போட்ட கல்லாய் மாற்றிவிடுகின்றன. உண்டியல் பணம், நன்கொடை, சிறப்பு தரிசன வசூல் எல்லாவற்றிலும் கருப்பு, வெவள்ளை உண்டு. இவை நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டே செல்கிறது.

தமிழ்நாட்டில் திருவரங்கம், சமயபுரம், பழனி கோயில்களில்தான் அதிக வருவாய் கிடைக்கிறது. தற்போது கிரிவல பிரபல்யத்தால் திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலுக்கும் அதிக வருவாய் கிடைக்கிறது. ஆனால் இந்த வருவாய் இந்த சமய அறநிலைத் துறைக்குச் செல்கிறது. எந்தக் கோயிலுக்கு என்னசெய்ய வேண்டும் என்பதை அரசு தீர்மானித்து நிதி ஒதுக்குகிறது.

தமிழ்நாட்டில் ஆண்டு வருவாய் ரூ.2 இலட்சம் வரை உள்ள கோயில்கள் 3331. ரூ.2 லட்சம் முதல் 10 லட்சம் வரை வருவாய் உள்ள கோயில்கள் 498. ரூ.10 லட்சத்துக்கும் அதிகமான வருவாய் உள்ள கோயில்கள் 182. அத்தனை கோயில்களையும் பராமரிப்பதாக அரசு சொல்கிறது. ஆனால், உண்மை அதுவல்ல ஒரு கோயிலைப் புனரமைக்க வேண்டுமானால் அதற்கு அதிகாரிகள் மற்றம் அமைச்சரின் ஒப்புதலுடன் அரசு அனுமதி கிடைத்தால்தான் நிதி கிடைக்கும். இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கும். பல கோயில்களில் திருப்பணிகள் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் நன்கொடையில்தான் நடைபெறுகின்றன என்பதுதான் நிதர்சன உண்மை.

அப்படியே, நன்கொடை கொடுப்போர் தாங்களாக ஒரு பணியை எடுத்துச் செய்வதாக இருந்தாலும், அதற்கும்கூட அரசின் ஒப்புதல் பெற்று, அரசின் மேற்பார்வையில்தான் செய்வதாக வேண்டும்.

கோயில்களுக்குத் தனி வாரியம் அமைக்கப்பட்டால், அதிகாரிகள் விருப்பம்போல செயல்பட முடியாது வாரியத்துக்குக் கட்டுப்பட்டு செயல்படும் கண்காணிப்பாளர்களாகவே அவர்கள் இருப்பார்கள். கோயில் வருவாய் வழக்கம்போல அரசினால் தணிக்கைச் செய்யப்படும். தனி வாரியம் அமைத்தாலும் ஊழலுக்கு இடம் இருக்கவே செய்யும். ஆனால், குறைவாக இருக்கும் என்பது மட்டும் நிச்சயம்.

வாரியம் அமைந்தாலும், வாரியத்தலைவரைத் தேர்வு செய்யும் பொறுப்பு தமிழ்நாட்டில் உள்ள 56 மடங்களின் தலைவர்கள் மற்றும் பரம்பரை அறங்காவலர்கள் மற்றும் அரசுத் தரப்பு அதிகாரிகள் அனைவரும் சேர்ந்து தங்களுக்குள் ஒருவரைத் தேர்வு செய்வதாக இருக்க வேண்டும். ஒவ்வோர் ஆட்சியின்போதும், அமைச்சர் பதவி கொடுக்க முடியாத நிலையில் வாரியத் தலைவர் பதவி கொடுக்கும் நடைமுறை இதிலும் தொடருமேயானால், தனி வாரியம் அமைந்தாலும் பயன் இருக்கப் போவதில்லை.

உலக சைவ பேரவையில் தவத்திரு பேரூர் சாந்தலிங்க இராமசாமி அடிகள்

உலக மக்கள் இறைவன் இறைவிகளை போற்றி வணங்கி வளமுடன் வாழ்ந்திட வழிகாட்டி வரும் சைவ சமயத்தின் ஆதி குருமார்களும் அருளர்களும் அடியார்களும் ஆதீனங்களின் அருளாட்சியாளர்களும் ஒன்று இணைந்து உலகசைவ பேரவை சிங்கப்பூரில் முதல் முதல் தோற்றம் கொண்டது. சிங்கப்பூர் தமிழர்களின் சமயத் தேவைகட்கும், தமிழ்மொழி வளர்ச்சிக்கும் தமிழர் நலனில் அக்கறை கொண்டு தொடங்கப் பெற்ற அமைப்பு சிங்கப்பூர் இந்து சபை அமைப்பின் வழி உலக சைவப் பேரவை உருவாகியது. இதனை உருவாக்கிய பெருமை சிவநந்தியடிகளைச்சாரும்.

முதல் மாநாடு சிங்கப்பூர் இந்து சபை மூலம் உலக சைவப் பேரவைக்கு அடித்தளம் அமைக்கப்பட்டது. முதற்பணியாக தமிழ் அர்ச்சனை போற்றிப் பாடல்கள் பஞ்சபுராணம் முதலான நூல்கள் தொகுத்து சைவ அன்பர்களுக்கு கொடுக்கப்பட்டன. தொடர்ந்து பேராசிரியர் திண்ணப்பன் இல்லத்தில் பேரவை தொடர்பான கலந்தாய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு பேரவையின் செயல் திட்டங்களை வழிவகுத்தது. இது பேரவையின் முதல் மாநாடு என்ற வகையில் அமைந்தது.

இரண்டாவது உலகப் பேரவையின் மாநாடு சென்னையில் 29–2–1992ஆம் அண்டு உலக சைவப் பேரவை என்னும் பெயரில் சென்னையில் பதிவாகியது. முனைவர் வை.இரத்தினசபாபதி முதலான அறிஞர்கள் பேரவையின் அமைப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பு செய்தனர். இதனை தொடர்ந்து இலங்கை கனடா இந்தியா தென்னப்பிரிக்கா, மலேசியா, மோரிசியாசிஸ் நாடுகளில் உலக சைவப் பேரவை மாநாடு சிறப்பாக நடைபெற்றது.

மூன்றாம் உலக சைவப் பேரவை மாநாடு 1994ஆம் ஆண்டு சூன் மாதம் 25,26 ஆம் நாட்களில் பாரிஸ் நகரில் நடைபெற்றது. பாரிஸ் கிளையின் தலைவர் சுகுமாரன் தலைமையில் தொடங்கியது. இலங்கை லண்டன் வாழ் தமிழர்கள் தமிழகத் தமிழ் அறிஞர்கள் பெருமளவில் கலந்து கொண்டு இம்மாநாட்டில் நம் அடிகளார் எடுத்துக் கூறிய கருத்துக்களை தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டன.

நிறைவேற்றிய தீர்மானங்கள்:

1. தமிழ் அர்ச்சனை என்ற திட்டத்தை அனைத்துச் சைவ அமைப்புகளும் பின் பற்ற வேண்டும்.

2. அன்னிய மொழிச் சூழலில் திசைமாரித் தவிக்கும் தமிழர்களுக்குச் சமய வழிபாடு பொருத்தமாகவும் பயனுடையதாகவும் அமைய தமிழலேயே உலகளாவிய சிவத்தொண்டர் அணி அமைக்கப்பட வேண்டும்.

3. சைவ சமயம் பற்றிய கல்வியின் வளர்ச்சிக்கான உலக சைவப் பல்கலைக் கழகம் அமைய வழிவகைகள் செய்ய வேண்டும்.

நான்காவது உலக சைவப் பேரவையின் நான்காம் மாநாடு இலங்கை கொழும்பில் உள்ள இராமகிருஷ்ணமடத்தில் நடைபெற்றது. இம்மாநாட்டில் பல்லாயிரக்கான ஆன்மீக அன்பர்கள் கூடி இரண்டு நாள் மாநாட்டின் இறுதியில் பேரூரடிகள் கலந்து கொண்டு அருளுரை வழங்கினார். அதில் வாழ்வியல் சடங்குகள் திருக்குட நீராட்டு விழாக்கள் தமிழில் தமிழ்நாட்டில் நடைபெற்றுக்கொண்டு இருப்பதை விளக்கி கூறினார்.

5வது உலகசைவ மாநாடு டர்பன் தென்னப்பாரிக்காவில் 1996ஆம் ஆண்டு நடைபெற்றது. ஆறாம் உலக சைவப் பேரவை மாநாடு 1997ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19, 20,21 ஆகிய மூன்று நாட்கள் தமிழகத்தில் உள்ள தஞ்சைப் பல்கலைக் கழகத்தில் சிறப்புடன் நடைபெற்றது. உலக நாடுகளில் இருந்து பல அறிஞர் பெருமக்களும், ஆதீனங்களும் அடியார்களும் ஆன்மீகப் பெரியவர்களும் கலந்து கொண்டு கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். மாநாட்டு சிறப்பு மலர் வெளியிட்டு சிறப்பு செய்ததோடு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆறாவது உலக சைவ மாநாட்டின் புரவலர்களாக காசிமடம் திருபனந்தாள் ஆதீனம் கயிலை மாமுனிவர் சீர்வளர்சீர், காசிவாசி முத்துக்குமாரசாமி தம்பிரான் அவர்களும் பேரூராதீனம் கயிலை மாமுனிவர் சீர்வளர்ச்சீர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களும் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்களும் கலந்து பெருமை சேர்த்தனர். இம்மாநாட்டு நிகழ்வுகளில் ஒவ்வொன்றிலும் பேரூர் அடிகள் தாமே முன்னின்று மாநாட்டை வழி நடத்திய முறை சிறப்பாக இருந்தது. அடிகளின் உரையில் தமிழின் சிறப்பு இடம் பெற்று இருந்தது.

ஏழாவது உலக சைவ மாநாடு கனடாவில் 1999ஆம் ஆண்டு சூலை மாதம் 30,31 ஆகஸ்ட் 1 ஆகிய மூன்று நாட்கள் நடைபெற்றது. இம்மாநாட்டில் பேரூர் அடிகள் கலந்து கொண்டு தமிழும் சைவமும் வளர்ந்திடச் செய்ய வேண்டிய பணிகளை விளக்கி உரையாற்றினார்.

எட்டாவது உலக சைவ மாநாடு மேரீசியஸ் நாட்டில் நடைபெற்றது. இம்மாநாட்டில் சைவ – திட்டம் நுட்பப்பார்வை செயற்பாடு என்பது மாநாட்டில் விவாதிக்க வேண்டிய தலைப்பாக இருந்தது. இம்மாநாட்டில் சைவ சித்தாந்தத்தலைமை அடிகளார்களும் ஆன்மீகப் பெரியவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இம்மாநாட்டில் தவத்திரு சிவநந்தி அடிகள் மேற்பார்வையில் நடைபெற்றது. மாநாட்டின் தலைவராக பேராசிரியர் புட்பரதம் அருணாசலம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஆகமநெறித் தமிழ்வழிபாடு என்ற தலைப்பில் பேரூர் அடிகள் உரையாற்றினார்.

ஒன்றபதாம் உலக சைவ மாநாடு மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் 2003ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26,27,28, ஆகிய

மூன்று நாட்கள் மிகச்சிறப்பாக நடைபெற்றது. மாநாட்டின் தலைப்பு எதிர்காலத் தலைமுறைக்கு சைவம் என்ற தலைப்பில் சொற்பொழிவு நடைபெற்றன. இம்மாநாட்டில் பேரூர் அடிகளும் சிரவையாதீனம் தவத்திரு.குமரகுருபர அடிகளும் கலந்து கொண்டனர் பேரூர் அடிகள் அவர்கள் பல நிகழ்வுகளுக்கு தலைமை தாங்கி சைவ கோத்திர சாத்திரங்களுக்கு விளக்கங்கள் தந்து வழிநடத்தி சிறப்பித்தார். மேலும் பேரூர் அடிகளும் சிரவை அடிகளும் மலேசியத்திருக்கோயில்களுக்குச் சென்று வழிபாடுகள் செய்து அங்கே உள்ள தமிழ் மக்களுக்கு ஆசி வழங்கி வந்தனர்.

பத்தாவது உலகச் சைவ மாநாடு ஆஸ்திரேலியாவில் பெரிய தொழில்நகரமான சிட்னியில் 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27,28,29 ஆகிய மூன்று நாட்கள் மிகச்சிறப்பாக மாநாடு நடைபெற்றது.

27.1.2006 இல் சிட்னியில் உள்ள முருகன் கோயிலில் உள்ள தமிழ் கல்வி மற்றும் கலாச்சார அரங்கத்தில் விழா தொடங்கியது. அமெரிக்காவின் உறவாய் ஆதீனத்தைச் சேர்ந்த நல்லை ஆதீனம் சுவாமிகள் கோவை பேரூராதீனம் சுவாமிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இம்மநாட்டில் கலந்து கொண்ட அடிகளார் மேன்மைகொள் சைவநீதி விளங்குக. உலகமெல்லாம் என்ற ஞானசம்பந்தரின் அருள் வாக்கிற்கேற்ப ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற மாநாடு குறித்து அடிகள் மகிழ்ச்சி கொண்டார்.

பதினோராவது உலக சைவ மாநாடு சுவிட்சர்லாந்து நாட்டில் 2007ஆம் ஆண்டு மே மாதம் 25,26,27 ஆகிய மூன்று நாட்கள் நடைபெற்றது. இம்மநாட்டில் தமிழ்நாடு, மொரியா, மலேசியா, ஆஸ்திரேலியா, கனடா, பிரான்சு, ஜெர்மனி, நெதர்லாந்து, இலங்கை, சிங்கப்பூர் முதலான நாடுகளிலிருந்து ஆன்மீக அடியார்கள் அறிஞர் பெருமக்கள் கலந்து கொண்டு மாநாட்டுக்கு சிறப்புச் சேர்த்தார்.

பனிரண்டாவது உலக சைவ மாநாடு தமிழ்நாடு சிதம்பரத்தில் 2010 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5,6,7 ஆகிய மூன்று நாட்கள் சிறப்புடன் நடைபெற்றது. இம்மாநாட்டுக்கு புலவராக இருந்து நெறிகாட்டியவர் சீர்வளர்சீர் பேரூர் அடிகளார் ஆவார். இவரது அருளாணை வழிகாந்தன்

ஆதீனம் தவத்திரு, மருதாசல அடிகள் சிரவையாதீனம் குமரகுருபர அடிகள் பழனியாதீனம் தவத்திரு சாது சண்முகம் அடிகள் ஆகியோர் மாநாட்டுப் பணிகளைச் செம்மையாகச் சீர் பெறச் செய்தார்கள்.

சிதம்பரத்தில் நடைபெற்ற மாநாட்டு நிகழ்வுகள் திருநாரையூர் பொல்லாப் பிள்ளையார் வழிபாட்டுச் சிறப்புடன் தேரடி வீதி, அருட்பேரணிப்பொலிவும், மாநாட்டின் முதல் நிகழ்வாக அமைந்தது. ஆதீனம் அருளாளர்கள் முன்னிலை வகிக்கத் தமிழ்நாட்டு அன்பர்களும் கூடி திருமஞ்சணம் பேரொளி வழிபாடு நடைபெற்றன. தொடர்ந்து அருட்குழுவினர் திருநாரையூரிலிருந்து தில்லைக் கோயிலுக்குப் புறப்பட்டனர். திருமூலட்டநாதருக்கும் திருமஞ்சனமும், வழிபாட்டு முறைமையும் இசைபாடும் திறனும் அனைவருக்கும் மகிழ்ச்சியும் மன நிறைவையும் தந்தன. பேரூர் அடிகளின் வழிகாட்டுதல் படி மாநாடு சிறப்புடன் நடைபெற்றது.

உலக சைவப் பேரவை தொடங்கிய நான்முதல் பேரவையின் வளர்ச்சிக்கும், சைவ சமயத்தின் வளர்ச்சிக்கும் தமிழ் வழிபாட்டின் வளர்ச்சிக்கும் இந்து சமயத்தின் வளர்ச்சிக்கும் அடிகளாரின் அருட்பணிகள் அனைத்தும் தெய்வீகத் திருப்பணிகளாகும்.

12-வது உலக சைவப் பேரவை மாநாட்டுக்கு தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் வாழ்த்துச் செய்தி

நமது தமிழ் மொழி, செந்தமிழ், வண்தமிழ், முத்தமிழ் என அருளாளர்களால் போற்றப் பெற்றது. உயர்தனிச் செம்மொழி என்று ஆய்ந்துரைத்த பெருமையுடையது. சங்க இலக்கியங்களும் காப்பிய இலக்கியங்களும் மொழி வளத்தை எடுத்துக் கூறுகின்றன. இலக்கணங்கள் கவிதைக் கட்டுக் கோப்புக்குரிய எழுத்து, சொல், பொருள், யாப்பு ஆகியவற்றிற்குரிய வரையறைகளை வகுத்துள்ளன. மேலும் வாழ்வியலுக்குரிய அகம், புறம் ஆகிய நெறிமுறைகளைச் செப்பமாகக் கூறித் தெளிவுபடுத்துகின்றன. அங்கங்கே மன மாசற்ற வாழ்வதற்குரிய வழிபாட்டுச் செய்திகளையும் கூறுவதைக் காணலாம்.

உயிர்க்கு உறுதிபயக்கும் சமய உணர்வுகளைச் சங்க இலக்கியங்கள் தனியாகக் கூறாததால் சமயம் தனியாக எடுத்தாளப் படவில்லை. வாழ்வியலோடு இணைந்ததாகக் கருதப்பட்டது. சங்க காலத்திற்குப் பிறகு அயலாதிக்கம் நுழைந்து தடுமாறச் செய்தது.

அயற்சமயக் கருத்துக்கள் செழுந்தமிழில் உருவாயின. இலக்கியங்களாகவும் இடம் பெற்றன. அயலவர் போக்கு மொழியையும் பண்பாட்டையும் தடுமாறச் செய்தது. ஆட்சியாளர் துணை பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழும் நெறியைப் புறக்கணிக்கச் செய்தனர். தமிழர்கள் செம்மொழி வளம்பெறக் கருதினர். அயல்நெறிகளால் இடர்ப்பட்டுத் தயங்கிய நிலையில் அக்கால வாழ்க்கை நெறி தளர்ந்தது. சில நூற்றாண்டுகள் அயலவர் ஆதிக்கம் இருந்தது. தெளிவற்ற இக்காலத்தை இருண்டகாலம் என்பர்.

உலகெங்கும் வழிபாட்டு நெறிகள் காலந்தோறும் சூழலுக்கேற்ப மாற்றம் பெறுகின்றன. பல்சமயத்தினரும் ஏற்று வளர்ச்சியடைகின்றனர். இமயம் முதல் குமரி வரை வாழ்ந்து விரிந்த தமிழ்நாட்டிலும் நடைமுறையில் இருப்பதைக் காணலாம்.

தமிழ் மன்னர்கள் தமது ஆட்சியில் தென்குமரி, வடபெருமலை என ஆட்சியை வளப்படுத்தினர். ஆதலின் பதிற்றுப்பத்தில் இமயத்தின்

பகுதியில் உள்ள கானகத்தில் முனிவர் தவநெறியில் வாழ்ந்த செய்தியைச் சொல்லும்போது, அங்கு வாழும் மான்கள் தவச்சாலையில் அச்சமின்றி வாழ்ந்தன என்பதை

கவிதை சிலம்பில் துஞ்சங் கவரி
பரந்திலங்கு அருவியொடு நரந்தங் கனவும்
ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்
தென்னங் குமரியொடு ஆயிடை
மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே

(பதிற்றுப் பத்து 2ம் பத்து / 1)

என்ற பதிற்றுப்பத்துப் பாடலால் உணரலாம். "நாடித் தம்புல்லை உண்பதாகக் கனவு கண்டு உறங்குகின்றன" என்பதை

நரந்தை நறும்புல் மேய்ந்த கவரி
குவளைப் பைஞ்சனை பருக அயல
தகரத் தண்ணிழல் பிணையொடு வதியும்
வடதிசை அதுவே வான்தோய் இமயம்

(புறம் 132)

என்னும் புறநானூற்று வரிகளும் இக்கருத்திற்கு அரண் செய்கின்றன. நறுமணம் மிக்க நரந்தைப் புல்லை மேய்ந்த கவரிமான் குவளை மலர்கள் மலர்ந்திருக்கும் பசிய சுனையில் நீரைப் பருகிப் பக்கத்தில் உள்ள தகர மரத்தின் குளிர்ந்த நிழலில் பெண்மானோடு வாழும் வடக்குத் திசையில் உள்ள வானை முட்டும் இமயமலை என்று பாராட்டப்படுகிறது.

சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
அந்தி அந்தணர் அருங் கடன் இறுக்கும்
முத்தீ விளக்கில் துஞ்சும்
பொற் கோட்டு இமயம்

என்னும் வரிகள் மேலும் அழகுபடுத்துகின்றன. இத்தகைய சங்க இலக்கியப் பாடல்களால் உயர்தனிச் செம்மொழிப் பரப்பும் அனைத்து உயிர்க்கும் அருள் தாங்கிய அந்தணர் வேள்விச் சிறப்பும் அறியலாம். சிறிய தலையையும், பெரிய கண்களையும் கொண்ட பெண்மான் அந்தணர்கள் கதிரவன் மறையும் நேரத்தில் அருமையான வேள்விக் கடமைகளைச்

செய்ய மூட்டிய மூவகைப்பட்ட தன்மைகளைக் கொண்ட நெருப்பின் வெளிச்சத்தில் தூங்கும் பொன்மயமான உச்சியைக் கொண்டது இமயமலை.

இவ்வகைப் பாடல்கள் தமிழரின் வழிபாட்டுச் செந்நெறி இமயத்திற்கும், குமரிக்கும் இடையில் இடையறவின்றிப் பரவி இருந்ததைக் காட்டுகின்றன.

பழமையான தமிழ்வழிபாட்டு நெறிக்குரிய நூல்கள் இருந்திருக்க வேண்டும். மக்கள் சூழலுக்கு ஏற்பப் பயன்படுத்தப்பட்டிருக்கும். அடித்தளத்தில் இருந்த மக்கள் வாழ்வியலுக்கு ஏற்ப வழிபட்டனர். மலைவாழ் மக்களாகிய குறவர்கள் காடு திருத்தி விளைநிலத்தில் தினை விதைத்தனர். அவை முளைத்து வளர மழை பெய்யவில்லை. மழை மனித ஆற்றலுக்கு அப்பால் உள்ளது, கடவுளை நாடமுனைந்தது. பல பகுதியில் இருந்தவர்கள் ஒருங்கு கூடினர். உயரிய பல்நிற மலர்களைத் தூவி வழிபட்டனர். அவர்கள் நெஞ்சம் நெழிந்த பக்திக்கு இரங்கி இறைவன் அருளால் மழை பெய்தது வேண்டும். அளவுக்கும் மிகுதியாகப் பெய்யத் தொடங்கியது. மனித ஆற்றலால் தடுக்க முடியாத மழையைப் போதும் என்பதற்கு மலரிட்டுப் போற்றினர் என்பதை,

"மலையான் கொள்கஎன உயர்பலி தூஉய்
மாரிஆன்று மழைமேக்கு உயர்கஎனக்
கடவுள் பேணிய குறவர் மாக்கள்"

எனும் அகநானூற்றுப் பாடலால் அறிகிறோம். மேலும், பத்துப்பாட்டின் முதல்பாடலான திருமுருகாற்றுப்படையில் வளர்ந்த வழிபாட்டுச் சிந்தனைகளைக் காணலாம். தத்தம் நிலைக்கேற்ப வழிபட்ட நிலையை "ஆறெழுத்தடக்கிய அருமறைக்கேள்வி நாவியல் மருங்கில் நவிலப்பாடினார். விரையுறு நறுமலர் ஏந்திப் போற்றினர். பெரிது உவந்து போற்ற முருகன் விளங்கினான். அப்பகுதி மக்கள் கோயில் வழிபாட்டு முறை அது. இமயச் சாரலில் பதிற்றுப்பத்தில் கூறுவதைப்போல வாழ்ந்த முனிவர்கள் ஆவினன்குடியில் முருகனுக்குப் படைப்புக் கடவுள் மீது ஏற்பட்ட வெறுப்பை நீக்க வந்த கடவுளருக்கு முன் சென்ற நிலையை,

"என்பெழுந்தியங்கும் யாக்கையர் நண்பகல்
பலவுடன் கழிந்த உண்டியர் இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதும்
கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம்பாகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினம் கடிந்த காட்சியர் இடும்பை
யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துணியில் காட்சி முனிவர் முன்பக"
என்ற அருளாளர் காட்சியைக் காட்டுகிறது.

மேலும் அகநானூற்றில் வழிபட்ட மலைவாழ் மக்களது கூட்டு வழிபாட்டு முறையை முருக வழிபாட்டில் குன்றுதோறாடல் பகுதியில் முறைப்படுத்திய செய்தியைக் காணலாம். மேலும் கொடியேற்றுதல், விழாவெடுத்தல், வழிபடும் இடங்கள் ஆகியவற்றை,

"வாரணக் கொடியொடு வயின்பட நிறீய
ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விழா"
என்றும்,

"சதுக்கமும் சந்தியும் புதுப்பூங்கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையிலும்
மான்தலைக் கொடியோடு மன்னி அமைவுறப்"
போற்றிய செய்தியை அழகுறக் கூறுகிறது.

வழிபாட்டு மரபை "நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடிக் குடந்தம்பட்டுக் கொழுமலர் சிதறி" என்று விளக்குகிறது. இவையெல்லாம் அன்றைய தமிழாகம நெறி எனலாம். அன்றியும் வழிபாட்டு இடம் அமைந்த முறைமை, பல்வகை இசைக்கருவிகள் இயங்கிய முறைமை ஆகிய கூறப்படுகின்றன. "சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்து, பல்லியம் கறங்க உருவப்பல் பூத்தூவி அருசித்தலை,

அறுவர் பயந்த ஆறமர் செல்வ
ஆல்கெழுகடவுட் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே
வெற்றி செல்போர்க் கொற்றவை சிறுவ

இழைபணி சிறப்பிற் பழையோன் குழவி
வானோர் வணங்குவில் தானைத் தலைவ
மாலை மார்ப நூலறி புலவ
செருவில் ஒருவ பொருவிறல் மள்ள
அந்தனர் வெறுக்கை அறிந்தோர் சொன்மலை
மங்கையர் கணவ மைந்தர் ஏறே
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ
குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே
அரும்பெறல் மரபிற் பெரும்பெயர் முருக
நசையுநர்க்கு அளிக்கும் பொலம்பூண் சேஎய்
மண்டமர் கடந்தநின் வென்றாடு அகலத்துப்
பரிசிலர்த் தாங்கம் உருகெழு நெடுவேள்
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்
சூர்மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிக பொருந குரிசில் எனப்பல
யான் அறி அறவையின் ஏத்தி ஆனாது.

எனச் சிறப்பித்துக் கூறுகிறது. இவையெல்லாம் அன்றைய தமிழாகம நெறி வழிபாடாகக் கருதலாம்.

வழிவழியாக வந்த நமது வழிபாட்டு முறைக்கு மாறாக அயற்சமயத்தாக்கங்கள் இடம்பெற்றன. உரிய இலக்கியங்கள் தோன்றவில்லை. தமிழ்ப்பண்பாடும், வழிபாட்டு மரபுகளும் தளர்ந்தன. இக்காலத்தைத் தான் இருண்ட காலம் என்றனர். இருண்ட காலம் மடிந்து தமிழ்நெறி தழைக்கப் பக்தி இலக்கியங்கள் தோன்றின.

திருநாவுக்கரசராகிய அப்பரடிகள் பல இடர்பாடுகளைக் கடந்து "தமிழோடிசைப்பாடல் மறந்தறிபேன்" எனப் பண்ணிசைப் பாடல்களை அருளி ஊரூராகச் சென்றார். அடியவர் திருக்கூட்ட எழுச்சியுடன் கூடினர். "உழவாரத் தனிப் படையை உடையாராகத் திருக்கோயில்களிலும் திருவீதிகளிலும் என்கடன் பணிசெய்து கிடப்பதே' என முழங்கிப் "பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி" எனப் போற்றித் திருத்தல

வழிபாட்டை மேற்கொண்டார். தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் அடிப்போற்றினார். மெய்நெறி பரவச் செய்தார்.

திருஞானசம்பந்தர் ஞானத்தின் திருவுருவாகத் தோன்றி "முத்தமிழ் விரகன்" "தமிழ்ஞானசம்பந்தன்" எனத் தமிழுணர்வை வெளிப்படுத்தும் வகையில் பதிகம் தோறும் பாடி மறுமலர்ச்சியை உருவாக்கினார் முழுமுதலாகிய சிவத்தைப் "பண்ணும் பதம் ஏழும் பலவோசைத் தமிழுமாக விளங்குகிறார்" எனப்பபாடினார்.

நாடெங்கும் சென்று "அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறைவெல்ல" என்ற செந்தமிழ் நாடு செழிக்க அருளிய அமுதப் பாடல்களைக் காண்கிறோம். திருமால் நெறியினராகிய ஆழ்வார்களும் "நாரணர்க்கு ஞானத்தமிழ்" சூட்டினர். "பழமறைகள் முறையிடப் பசுந்தமிழ் பின் சென்ற பச்சைப்பசுங் கொண்டலாகப்" போற்றினர். சங்கத்தமிழுக்குப் பிறகு உயர்தனிச் செம்மொழிக்கு வளம் சேர்த்தது பக்தி இலக்கியங்கள்.

சங்க இலக்கியங்களில் இடம்பெற்ற முரசுயாழ் பறை ஆகிய இன்னிசைக் கருகிகள் இசையை வெறுத்த அயல்சமயக் கொள்கைகளால் இடைக்காலத்தில் செயல்படாமல் போயின. இசையை இயக்கும் கலைஞர்கள் பேணுவாரின்றித் தளர்ந்தனர். நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும் ஊர்தோறும் சென்று தமிழிசையுடன் குழல், யாழ், தளம், வீணை கொக்கறை, சச்சரி ஆகிய இசைக்கருவிகளை இணைத்துப் பாணி, சீர் தூக்கு ஆகியவற்றை வளப்படுத்தினர். மன்னர்களால் பேணப்பட்ட இசைத்தமிழ் திருக்கோயில்களில் இடம்பெறச் செய்தனர். தமிழ் மன்னர்களும் மக்களும் இணைந்து போற்றினர்.

கூத்தப் பெருமாள் ஆடல்கலைக்கு உரியவர். அக்கலையைச் சிற்பங்களாகப் பல திருக்கோயில்களில் இடம்பெறச் செய்தனர். தஞ்சை, தாராசுரம், நெல்லையாகிய திருக்கோயில்கள் இன்றும் விளக்கம் தருகின்றன. எனவே பக்தி இலக்கியங்களே உயர்தனிச் செம்மொழியைப் பாதுகாத்தன. திருக்கோயில் திருத்தேர்களிலும் ஊர்திகளிலும் கலைநயம் மிக்கவர்களால் அழகிய சிற்பங்களாகப் பாதுகாக்கப்பெற்றன.

சமயக் குரவராகிய சுந்தரர் இறைவன் பாடல்களுக்கு இரங்கும் தன்மையாளன் என்பதை "நல்லிசை வல்ல ஞானசம்பந்தன்

நாவினுக்கரையன் சொல்லியவே சொல்லி ஏத்துவதை இறைவன் ஏற்பதுடன் தமிழ் கேட்கும் இச்சையால் காசு நித்தம் நல்கினார்'' என்று அருளினார்.

மாணிக்கவாசகர், ''தண்ணார் தமிழளிக்கும் தன்பாண்டி நாடன்'' ''பண் சுமந்த பாடல் பரிசு படைத்தவன்'' எனப் பாடினார். அப்பாடல்களை அம்பலவாணர் தமது திருக்கரத்தால் எழுதித் தில்லைப் பொன்மன்றில் வைத்தார் எனும் செய்திகளால் உயர்மொழியால் சிந்தனை வளத்தைத் தந்து, தனிமொழியாக ஆய்வார்க்கு மனமாக நீக்கிச் செம்மொழியைப் பேணிச் செம்பொருள் காண வழிவகுத்தது. ஆதலின் உயர்தனிச்செம்மொழி நெறி எனலாம்.

பின்னர் வந்த இலக்கியங்கள் 'அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறைவெல்ல' எழுந்தன. அதுவே அருச்சனை பாட்டேயாகும் ''ஆலால் மண்மேல் நம்மை சொற்றமிழால் பாடுக'' என்று முழுமுதலாகிய இறைவனே விரும்பிக்கேட்டார் எனச் செந்தமிழ்ச் சான்றோர்கள் அருளியுள்ளனர்.

இமயம் முதல் குமரிவரை பரவிய ஆகம நெறியை விளக்க,

''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே''

என்று பாடி, வாழ்வியலுக்கும் அருளியலுக்கும் வேண்டப்படும் ஆகமங்களைத் தொகுத்தருளினார். 'அது மூலன் உரைத்த மூவாயிரம் தமிழாக விளங்குகிறது. ''யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை என்று'' வழிகாட்டி அன்பு நெறியே சிவம் என்று வலியுறுத்தினார். உடம்பினை இழுக்காகக் கருதிய அயற்கொள்கையர் பிறந்த மேனியாகத் திரிவது தமது சமயக் கொள்கை என்ற உடம்பைப் பேணாதவராய் வீதிகளில் வந்தனர். அன்பு, நாண், ஒப்புரவுடைய மகளிர் அவர்களைக் கண்டு நாணிக் கதவடைத்தனர்.

திருமூலர், ''உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே'' என வழிகாட்டினார். மாசுறு மேனியாக உலகியலை வெறுக்கும் செய்திகளைப் பரப்பிய அயற்கொள்கையை மாற்றி,

''உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்

உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"

எனவும் மூவாயிரந்தமிழ் அருளிய திருமூலர் வழிகாட்டினார்.

கூத்தரும் பாணரும் விறலியருமாக வளர்த்த இசை நாடகத் தமிழ்கள் அருகின. அவற்றைத் தெய்வப் பாவாக மாற்றிக் காரைக்கால் அம்மையார் கூத்தப்பெருமான் சிறப்பைப் பாடி இசையையும் அருளியலோடு இணைத்துப் பண்ணார் இன்தமிழாய்த் தழைக்கச் செய்தார்.

தவச்சான்றோர்கள் தழைக்கச் செய்த தமிழ்மொழியைப் பல ஆண்டுகளாக முயற்சித்து அறிஞர்கள் உலகறியச் செய்ய வேண்டும் எனத் தெரிவித்தனர், தமிழும் சைவமும் பொலிவு பெற பணியாற்றும் அமைப்புகளில் உலக சைவப் பேரவை முதன்மை பெறுகிறது. சிவநந்தி அடிகளால் உருவாக்கப்பெற்றது. உலகெங்கிலும் பதினோறு மாநாடுகள் நடைபெற்றுள்ளன. பன்னிரண்டாவது மாநாடு தில்லை மூதூரில் நடைபெறுகிறது. உயர்தனிச் செம்மொழி தமிழும் சைவமும் சிறப்புற சிந்தித்துச் செயலாற்றுவோம். தமிழக அரசு இடைவிடா முயற்சியால் மத்திய அரசை ஏற்கச் செய்து அதற்கான பொருளுதவியைப் பெற்று ஐம்பெருங்கு குழுவும், எண்பேராயமும் அமைத்தது வரலாற்றுச் சிறப்புக்குரியது. மேலும் உலகறியச் செய்யும் செம்மொழி மாநாட்டைத் தமிழக அரசு நடத்துவது தமிழ் நெறியின் பொற்காலம் எனப் பாராட்டுவோம். உயர்தனிச் செம்மொழி வளம் பெற அனைவரும் இணைந்து செயலாற்றுவோம்.

கரூர் தெய்வத்தமிழ் வழிபாட்டு மாநில மாநாட்டில் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள்

நாள் : **28.12.2002** சனிக்கிழமை

காலை : மணி **6.00 – 7.00** மூத்த பிள்ளையார் வேள்வி

காலை : மணி **7.00 – 8.00** நூறாயிரம் பரவுதல்

28.12.2002

இறைவணக்கம் : சிவத்திரு.**தியாகராசன்,** ஓதுவார், கொடுமுடி.

வரவேற்புரை : சிவத்திரு.**க.குமரன்,** வழக்கறிஞர், வள்ளலார் கோட்டம், கருவூர்.

தலைமையுரை : பேரூர் ஆதீனம் கயிலை மாமுனிவர் திருப்பெருந்திரு **சாந்தலிங்க இராமசாமி அடிகளார்**

தொடக்கவுரை : மதுரை ஆதீனம் 292 ஆவது குருமகாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத **ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரய சுவாமிகள்,** மதுரை.

கொள்கை விளக்கவுரை : திருப்பெருந்திரு குன்றக்குடி. **பொன்னம்பல அடிகளார்,** திருவண்ணமலை ஆதீனம் குன்றக்குடி.

மாநாட்டு மலர் வெளியீடு

வெளியிடுபவர் : சிவத்திரு.**பி.கந்தசாமி ஐயா,** ஈரோடு.

பெறுபவர்கள் : டாக்டர் திருமதி. **எஸ்.லோகாம்பாள்** எம்.பி.பி.எஸ்., டி.ஜி.ஒ.,
திரு.**இரா.க.வீரபுத்திரன்,** வீரா மகால், காட்டேப், கருவூர்.
டாக்டர். திரு.**மு.சத்தியமூர்த்தி** பள்ளப்பட்டி

அருளுரை

திருப்பெருந்திரு **சிவநந்தி** மெய்கண்டார் ஆதீனம் இலண்டன்

திருப்பெருந்திரு **குருமகாசன்னிதானம்** சிவாக்கிர யோகிகள் ஆதீனம், சூரியனார் கோவில்

திருப்பெருந்திரு **குமரகுருபர அடிகளார்** சிரவையாதீனம் கௌமார மடம், கோவை.

திருப்பெருந்திரு **சாதுசண்முக அடிகளார்** சாதுசாமி மடம், பழனி.

திருப்பெருந்திரு **முத்துசிவராமசாமி அடிகளார்** தென்சேரிமலை.

திருப்பெருந்திரு **சித்தர சுவாமிகள்** சிவக்குடில்.

திருப்பெருந்திரு **சிவலிங்கேசுவர சாமிகள்** காமாட்சி பீடம், கோவை.

திருப்பெருந்திரு பொன். **மணிவாசக சாமிகள்** பிள்ளையார் பீடம், கோவை.

சட்ட அமர்வு

28.12.2002 மாலை **3.00** மணி

இறைவணக்கம் : சிவத்திரு. **திருமலைசாமி** ஒதுவார், கோவை.

வரவேற்புரை : சித்திரு மேலை **பழனியப்பன்** செயலர், திருக்குறள் பேரவை, கருவூர்.

தலைமையுரை : நீதியரசர். **டி.என்.சிங்காரவேலு,** உயர்நீதிமன்ற ஒய்வுபெற்ற நீதிபதி, சென்னை.

தொடக்கவுரை : தவத்திரு. **ஊரன் அடிகள்,** வடலூர்.

வாழ்த்துரை : பேராசிரியர் முனைவர். **ச.முத்துக்குமரன்,** சென்னை.
மேனாள் துணை வேந்தர், பாரதிதாசன் பல்கலைக்கழகம் பேராசிரியர் டாக்டர் யோகி **சா.அ.அ.இராமையா,** அமெரிக்கா.

தமிழண்ணல் நூல் வெளியீடு

"தமிழுக்கு ஆகமங்கள் தடையாகுமா?"

வெளியீடுபவர் : சிவத்திரு. **ப.முக்கப்பிள்ளை** திருச்சி.

பெறுபவர்கள் : திரு. **கே.சி.பழனிச்சாமி** கே.சி.பி.பேக்கேஜிங் லிட்., கரூர்.
திரு. **ஏ.எஸ்.ஜனார்த்தனன்**
ஏ.வி.எஸ். ஏ.வி.ஆர். பாரத் பெட்ரோலியம், கருவூர்.
திரு. **வீ.வீரப்பன்** பிரேம் மகால், பிரேம் டெக்ஸ், கருவூர்.
திரு.**கே.நடராசன்** எம்.பி.பி.எஸ்., ஆர்.எஸ். மருத்துவமனை, கொடுமுடி.

கருத்துரை

சிவத்திரு **பழ.கருப்பையா** சென்னை.

சிவத்திரு **எஸ்.செந்தில்நாதன்** வழக்கறிஞர், சென்னை உயர்நீதி மன்றம்.

சிவத்திரு **தாமரைச்செல்வி** வழக்கறிஞர், கோவை.

தீர்மானங்கள் நிறைவேற்றுதல்

நன்றியுரை : திரு. **என்.கே.சேகர்** எம்.ஏ., பி.எஸ்., வழக்கறிஞர். மக்கள் சக்தி இயக்கம், கருவூர்.

மாலை 6.00 – 7.30 மணி திருமுறை இன்னிசை

பெரும்பான நங்கை சிவத்திரு. **சொர்ணா சோமசுந்தரம்** குழுவினர், திருநெறிய தமிழ் மன்றம், கோவை.

இரவு 7.30 – 9.00 மணி திருமுறை நாட்டிய நிகழ்ச்சி

குருதேவர் மெட்ரிக் பள்ளி, அருட்பெருஞ்சோதி தமிழ்மறைப்பள்ளி மாணவ மாணவியர் வள்ளலார் கோட்டம், கருவூர்.

இரவு 9.00 மணி முதல் கலந்துரையாடல்

தலைமை : கயிலைப்புனிதர் மருதாசல அடிகளார் பேரூர் ஆதீனம், கோவை.

29.12.2002 ஞாயிற்றுக்கிழமை
காலை 5.00–6.00 மணி சிவபூஜை
6.00 – 8.00 மணி நூறாயிரம் பரவுதல்

தமிழ்ச் சான்றோர் அமர்வு

இறைவணக்கம் : சிவத்திரு சாமிநாத ஓதுவார், பேரூர்

வரவேற்புரை : சிவத்திரு முனைவர் இரா.சென்னியப்பனார் தலைவர், மணிவாசகர் அருட்பணி மன்றம், கோவை.

தலைமையுரை : சிவத்திரு பி.கே.குமாரசாமி ஐயா, வெள்ளகோயில்

தொடக்கவுரை : சிவத்திரு மு.கிருஷ்ணன் ஐ.ஏ.எஸ். (ஓய்வு)

அருளுரை : திருவாவடுதுறை ஆதீனம் முத்துக்குமாரசாமி தம்பிரான் சுவாமிகள், சென்னை.

சிறப்புரை

தமிழர் வழிகாட்டி : புலவர். இரா.இளங்குமரனார், திருச்சி

திருமுறைகள் மந்திரங்களே : முனைவர் கு.சுந்தரமூர்த்தி, திருவாவடுதுறை

தமிழக வரலாற்றில் தமிழ் வழிபாடு : முனைவர். தமிழண்ணல், மதுரை

ஆகமங்களின் நிலை – ஓர் ஆய்வு : சிவத்திரு மு.பெ.சத்தியவேல் முருகனார், சென்னை

தெய்வத்தமிழ் வழிபாட்டு நெறி : முனைவர் புரிசை நடராசன், திருப்பத்தூர்

கீழை நாடுகளில் தமிழ் வழிபாடு : சிவத்திரு.ந.இராமகிருஷ்ணன் தலைவர் இலக்கிய ஆய்வாளர்கள் குழு, சிங்கப்பூர்.

திருக்கோயில்களில் தமிழ் : சைவத்திரு பழனி கிருஷ்ணன், தூத்துக்குடி

திவ்வியப் பிரபந்தங்கள் மந்திரங்களே : வைணவத்திரு முனைவர் ஜெ.பார்தசாரதி, சென்னை வைணவம், ஆசிரியர்

சங்க இலக்கியங்களில் தமிழ் வழிபாடு : முனைவர்.ம.மனோன்மணி, கோவை.

தெய்வத்தமிழ் வழிபாட்டில் மகளிர் பங்கு : முனைவர் திருமதி. ப,சுலோச்சனா, கடையம்.

நன்றியுரை : பேராசிரியர் தா.மணி புதுக்கோட்டை

ஊர்வலம்

மாலை 3.00 –6.00 மணி 29.12.2002

துவங்கும் இடம்	:	80அடிசாலை
சேரும் இடம்	:	ஆனிலையப்பர் கோவில், சன்னாதித்தெரு
துவக்கி வைப்பவர்	:	சுவாமி ஆத்மானந்த் தாளாளர் மற்றும் செயலர், ஸ்ரீ ராமகிருஷ்ணா ஆசீரமம், பசுபதி பாளையம்.

பொதுக்கூட்டம்

மாலை 6.00 மணி முதல் 29.12.2002

ஆனிலைப்பர் கோயில் சன்னாதித்தெரு

இறைவணக்கம்	:	சிவத்திரு. குழந்தைசாமி கருவூர்
வரவேற்புரை	:	கயிலைப்புனிதர் மருதாசல அடிகளார் பேரூர் ஆதீனம், கோவை.
தலைமையுரை	:	மதுரை ஆதீனம் 292 வது குரு மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத் ஸ்ரீ ஞானசம்பந்த் தேசிக பராமச்சார்ய சுவாமிகள், மதுரை.
தொடக்கவுரை	:	பேரூர் ஆதீனம் கயிலை மாமுனிவர் திருப்பெருந்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

திருமுக்கூடலூர் மணிமுத்தீசுவரர் கோவிலில் தமிழ்க் குடமுழுக்குச் செய்யப்போராடி வென்றசிவத்திரு கு.இராசேசு, சிவத்திரு இரா.முத்து. சிவனடியார்கள், சான்றோர பெருமக்கள் மற்றும் திருமுக்கூடலூர்ப் பொதுமக்களுக்குப் பாராட்டு.

சிறப்புரை:

இலக்கியச் செல்வர் குமரி ஆனந்தன் சென்னை

சிவத்திரு சிவ. ஆ.பக்தவத்சலம் தலைவர், பன்னிரு தமிழ் வேத மன்றம் குடியேற்றமும்

தவத்திரு கோவை சிவப்பிரகாச சுவாமிகள் வடலூர்.

சிவத்திரு த.விசுவநாதன் ஈரோடு.

சிவத்திரு கதிர் தமிழ்வாணன் தஞ்சாவூர்

சிவத்திரு புலவர் வேலாயுதம் பனம்பாக்கம், வேலூர்.

தீர்மானங்கள் அறிவித்தல்

நிறைவுரை : திருப்பெருந்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி

நன்றியுரை : சிவத்திரு. ப.குமரலிங்கம், பேரூர், திருமுக்கூடலூர் குடமுழுக்குச் செய்த தமிழ்ச்சிவாச்சிவாசசாரியர்.

வரவேற்புரைக்குழு :

சிவத்திரு. கருவூர் எரிபத்தன திரு.இரா.க.வீரபுத்திரன் வீரா மஹால், காட்டேப், கரூவூர்.

திரு.வீ.வீரப்பன், பிரேம் மஹால், பிரேம் டெக்ஸ், கருவூர்

திரு.குடவில் இராஜூ பி.ஆர்.ஆர்.மண்டபம். கருவூர்

திரு.வேலை பழனியப்பன் நகரத்தார் சங்கம், கருவூர்.

திரு.எம்.கே.செகன்னாதன் ஜி.ஆர்.மண்டபம். கருவூர்.

திரு.ஆறுமுகம் திருநீலகண்டர் மண்டபம், கருவூர்.

திரு.க.செங்குட்டுவன் வள்ளுவர் உணவகம், கருவூர்.

திருமதி.மீனாட்சி கருணாகரன் கருவூர் ஸ்ரீ பசுபதீசுவரா ஐயப்ப சேவா சங்கம், கருவூர்.

சிவனடியார் பெருமக்கள் கருவூர்.

வரைவோலை மற்றும் காசோலை எடுக்க

"தெய்வத்தமிழ் வழிபாட்டு மாநில மாநாடு கருவூர்"

நன்கொடை அனுப்பவம் தொடர்பு கொள்ளவும்

முகவரி : சிவத்திரு. க.குமரன் பி.எஸ்ஸி.பி.எல், வழக்கறிஞர்

253–பி, சவகர் கடைவிதி, கருவூர் – 639 001.

தொலைபேசி (04324) 260250, 260802.

அலைபேசி 098430 – 33289 E.mail : satthivel@mynet.in

அன்பர்களுக்கு உணவிற்கும் தங்கும் இடத்திற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தெய்வத் தமிழ் வழிபாட்டு மாநில மாநாடு - கரூர்
2002 டிசம்பர் - 28, 29
நிறைவேற்றிய தீர்மானங்கள்

தீர்மானம் :1

"அர்ச்சனை பாட்டே யாரும்
ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுக!"
என்பது இறைவன் இட்ட கட்டளை
"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்,
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே!"

என்பது திருமூலர் வாக்கு நாளும் பொற்காசு கொடுத்து இறைவன் விரும்பிக் கெட்டது இன்தமிழ். இறைவன் விரும்பிப் போற்றும் இனிய திருமுறைகள், திவ்வியப் பிரபந்தங்கள், அருளாளர்களின் திருப்பாடல்கள் ஆகியவற்றை ஓதியே திருக்கோயில் வழிபாட்டு முறைகள், சடங்குகள், திருக்குட நன்னீராட்டு திருவிளக்கு வழிபாடு முதலியவற்றை நிகழ்த்த வேண்டும். அறநிலையத் துறை இதற்கு உதவி செய்ய, தமிழ்நாடு அரசு ஆவன செய்யுமாறு இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம் :2

தெய்வத் தமிழ் வழிபாட்டிற்கு உரியவர்களை உருவாக்குவதற்கு எனத் "தெய்வத் தமிழ் வழிபாட்டு பயிற்சி மையம்" ஒன்று குன்றக்குடி ஆதீனத்தில் ஏற்படுத்த உள்ளதை மாநாடு பாராட்டுகிறது. தகுதியுள்ள அனைவருக்கும் அர்ச்சகராலாம் என்னும் உச்சநீதிமன்றத் தீர்ப்பிற்கு ஏற்பத் தகுதி உள்ளவர்களைத் தமிழ் வழிப் பயிற்சி கொடுத்து அர்ச்சகர் ஆக்க இம்மையம் செயல்பட வேண்டுமென இம்மாநாடு கேட்டுக் கொகிறது.

தீர்மானம் :3

மாவட்டந்தோறும் "தெய்வத் தமிழ் வழிபாட்டு மாநாடு" நடத்தப்பட வேண்டும். அவ்வாறு மாநாடு நடத்தும்போது வேண்டிய உதவிகளை அந்தந்தப் பகுதியில் உள்ள அமைப்புகளும், அந்தந்தப்பகுதியில் உள்ள ஆதீனங்களும் தமிழ்ச் சான்றோர்களும் சமய அமைப்புகளும், அன்பர்களும் செய்ய வேண்டுமென இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம் : 4

மனித உரிமை மறுக்கப்பட்ட மக்கள் வாழும் பகுதிக்குச் சென்று அங்குள்ள மக்களுடன் கலந்து பழகித் தீண்டாமை எண்ணத்தை அகற்றுவதுடன் தமிழ்நெறி வழிபாட்டை எடுத்துக் கூறி நிகழ்த்த தமிழ்ச் சமய அமைப்புகள் முன்வர வேண்டும் என இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம் : 5

திருக்கோயில்கள் வழிபாட்டினைச் சிறப்பாக ஆதி சைவர்களாகிய சிவாச்சாரியார்கள் நடத்தி வருகின்றார்கள். ஆதி சைவர்களாகிய சிவாச்சாரியார்கள் தூய தமிழர்கள். திருமுறைத் தமிழ் வழிபாட்டிற்குப் பெரும்பான்மையான தமிழ் மக்களிடம் ஆர்வமும் விருப்பமும் உள்ளது. எனவே பராத்த வழிபாட்டினை நிறைவேற்றித் தரவேண்டிய ஆதிசைவ சிவாச்சாரிய பெருமக்கள், மக்கள் விரும்பும் திருமுறைத்தமிழ் வழியில் அர்ச்சனை, வேள்வி, குடமுழுக்கு முதலியவற்றை நிகழ்த்த வேண்டும் என இம்மாநாடு விரும்பி வேண்டி கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம் : 6

கிராமக் கோவில் பூசாரிகளுக்கு தமிழ் வழிபாட்டு முறைகளில் பயிற்சி கொடுக்க வேண்டும். வருவாய் அதிகமுள்ள கோவில்கள் வழியாக இந்து அறநிலையைத் துறை இந்நெறி பாவ உறுதுணை செய்ய வேண்டும். இதற்கான திட்டங்கள் "தெய்வத் தமிழ் வழிபாட்டுப் பயிற்சி மையம்" வகுத்துக் கொடுக்க வேண்டுமென இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம் : 7

தெய்வத் தமிழ் வழிபாட்டு மையத்துடன் தமிழகத்தில் உள்ள அனைத்துச் சமய அமைப்புகளும் ஒருங்கிணைந்து தெய்வத் தமிழ் வழிபாட்டைப் பரவச் செய்ய வேண்டுமென்று இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம் : 8

சமய ஆதீனங்கள், சமய நிறுவனங்கள் தங்களுடைய தற்போதைய நிலையில் இருந்து மேலும் எளிதாக வந்து மக்களோடு பழகித் "தமிழ் சமய நெறியை" மக்களிடம் பரப்ப முன் வரவேண்டுமென்று இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம் : 9

தமிழ் ஆர்வலர்களும் தமிழ்ப் பற்று உள்ள பணி ஒய்வு பெற்ற அன்பர்களும், ஒருங்கிணைந்து, தெய்வத் தமிழ் வழிபாட்டு நெறியைப் பரப்ப முன் வர வேண்டுமென்று இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம் : 10

தற்போது தமிழ்நாடு அரசு இந்து அறநிலையத்துறை வழியாக நிலங்கள், மனைகள், நகைகள் முதலியவற்றைக் கணக்கெடுக்கத் தொடங்கி உள்ளது. 1947ம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு கணக்கெடுத்துக் திருக்கோவில்கள் இழந்த சொத்துக்களை மீடுடுத் தரவேண்டுமென தமிழக அரசை இம்மாநாடு வேண்டுகிறது.

தீர்மானம் : 11

தற்போது மாவட்டந்தோறும் "தமிழ் இசைப்பள்ளி" செயல்பட்டு வருகிறது. அதன் வழியில் பயின்று வருபவர்களைப் பள்ளிகளில் இசை ஆசிரியர்களாகவும் கோவில்களில் ஓதுவார்களாகவும் நியமித்துத் தமிழ் இசை வளர்ச்சிக்கு ஆவன செய்யுமாறு தமிழக அரசை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம் : 12

கேதாரம், காசி, கோகர்ணம், திருப்பருப்பதம் முதலிய கோவில்களில் அன்பர்களே கருவறைக்குள் சென்று வழிபடுவதைப் போல் தமிழகத்தின் அனைத்துக் கோவில்களிலும் வழிபாடு செய்யவும், மகளிரும் கருவறைக்குள் சென்று வழிபடவும் உரியவாறு ச்ட்டம் இயற்றி ஆவன செய்யும்படி இம்மாநாடு தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம் : 13

"தெய்வத் தமிழ் வழிபாட்டு மையம்" என்ற பெயரில் இம்மாநாட்டின் தொடர்ச்சியாக நிலையான அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும். அனைத்து மாவட்டங்களில் இருந்தும் உறுப்பினர்கள் அதில் இடம் பெற வேண்டும். ஆண்டுக்கு ஒருமுறை இத்தகைய மாநாடு ஒன்றைத் தமிழகத்தில் வெவ்வேறு இடங்களில் நடத்த வேண்டுமென இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம் : 14

ஆண், பெண் இருபாலரும் சமய தீட்சை பெற்று வழிபாட்டில் ஈடுபடச் செய்ய வேண்டுமென்றும், திருக்கோவில்களில் கூட்டு வழிபாடு, இல்லங்கள் தோறும் அருட்பாடல்கள் ஓதுதல் முதலியவற்றை மேற்கொள்ள அன்பர்களை ஊக்குவிக்க வேண்டும் என்றும், குழந்தைகளுக்கும் இளைய தலைமுயினருக்கும் இவ்வகையில் தக்க பயிற்சி அளிக்க முன் வரவேண்டுமென்றும் தமிழ்நாட்டின் சமய அமைப்புகளை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம் : 15

தெய்வத் தமிழ் வழிபாட்டு மாநாட்டிற்கு எழுந்தருளி சிறப்புத் தந்த குரு மகா சன்னிதானங்கள், உறுபொருள் கொடுத்தோர், உணவுப் பொருள் கொடுத்தோர், கரூரில், திருமணம் மண்டபங்களை கொடுத்து உதவிய பெரியோர்கள், விளம்பரம் தந்தோர், செய்தித்தாள், தொலைக்காட்சி வழி துணை நின்றவர்கள். காவல் துறையினர், சிவனடியார்கள், துணை செய்த திருக்கோவில் அமைப்புகள், சமயத் தமிழ் அமைப்புகள், பேரூர் மாணிக்கவாசகர் அருட்பணி மன்ற தலைவர் முனைவர். இரா.சென்னியப்பனார், செயலர் திரு. ப,குமரலிங்கம், கரூர் சிவனடியார்கள் முதலியோர்களுக்கும் இவர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து அயராது உழைத்து மாநாடு வெற்றி பெறச் செய்த ககரூர் வள்ளலார் கோட்டத்தினருக்கும் பல வகையாலும் பணியாற்றிய அனைவருக்கும் இம்மாநாடு பாராட்டையும், நன்றியையும் தெரிவிக்கிறது.

தெய்வத் தமிழ் வழிபாட்டை நிலைநாட்டிய கரூர்த்தமிழர்கள்

இழந்த உரிமையை மீட்கக் கரூரில் நடந்தது என்ன?

1. கரூரில் அர்ச்சகர் சங்கத் தலைவர் கணேச சிவாச்சாரி அர்ச்சகர் சங்கக் கூட்டத்தில் தமிழ், அர்ச்சனை குடமுழுக்குச் செய்தால் நாட்டுக்குக்கேடு என்று தமிழை இழிவுபடுத்திப் பேசுகிறார்.

2. செய்தித்தாள் வழி இதை அறிந்த தமிழ் அமைப்பினார், தமிழ்ச் சிவனடியார்கள் கூட்டாகக் கடும் கண்டன அறிக்கை வெளியிட்டுத் தமிழுக்கு எதிரானவர்களுக்குக் கடும், எச்சரிக்கை விடுத்தனர்.

3. கி.பி.1008 ஆம் ஆண்டு கட்டப்பட்ட திருமுக்கூடலூர் திருக்கோவிலில் சிதைந்த நிலையில் இருந்த மணிமுத்தீசுவரர் சன்னதியை தங்கள் உழவாரப்பணி பணிமூலம் சீர்செய்து தமிழ்த்திருமுறைப்படி குடமுழுக்குச் செய்யத் திட்டமிட்டிருந்ததைத் தடுக்கவே சமசுகிருதப் பற்றுள்ள சங்கர மடம், அர்ச்சகர் சங்கம் இணைந்து தடை செய்வதைத் தமிழ் அமைப்பினரும், தமிழ் சிவனடியார்களும் உணர்ந்தனர்.

4. தமிழ்த்திருமுறை குடமுழுக்கு நடத்த ஆகம விதி இடம் தரவில்லை, முறையாக அனுமதி பெறவில்லை என அறநிலையத்துறை

அதிகாரிகள் தமிழ்ச் சிவனடியார்களிடமும், திருக்கூடலூர் பொதுமக்களிடம் தெரிக்கின்றனர்.

5. கரூர் பசுபதீசுவரர் கோயிலில் தமிழ்ச் சிவனடியார்கள், ஊர்ப்பொது மக்களைக் கோயில் அதிகாரிகள் சந்தித்துத் தமிழ்க்குடமுழுக்கை அனுமதிக்கமுடியாது என்று கூறிக் சங்கர மடத்திலிருந்து கடிதம் வந்துள்ளதைக் காட்டிச் சங்கராச்சாரியார் தமிழ்த்திருமுறைக் குடமுழுக்கு நடத்துவதைத் தடுக்கச் சொல்லியுள்ளார். எனவே அனுமதிக்க முடியாது என்று கூறினார்.

6. தமிழ் அமைப்புகள், தமிழ்ச் சிவனடியார்கள் கூடிய தமிழ்த்திருமுறை வழிபாட்டுரிமை பாதுகாப்புப் பேரமைப்பை உருவாக்கித் தமிழ்த்திருமுறை வழிபாட்டுரிமை பாதுகாப்பு மாநாடு நடத்துவதென முடிவு செய்தனர்.

7. மாநாட்டில் சென்னையிலிருந்து தமிழறிஞர்கள் முனைவர், முனி. தெய்வநாயகம், பெருங்கவிக்கோ, வா.மு.சேதுராமன் உள்ளிட்ட தமிழறிஞர்களைப் பங்கேற்க அழைப்பது என முடிவுசெய்து அவர்கள் வருகை உறுதி செய்யப்பட்டு சங்கரமடம், அர்ச்சசர் சங்கம், அரசு கோயில் அதிகாரிகளின் தமிழ் விரோதப்போக்கு விளக்கப்பட்டது.

8. தமிழ்நாட்டில் தமிழகக் கோயில்களில் தமிழ்த்திருமுறைக்கு வழிபாட்டு உரிமை கேட்டு மாநாடு நடத்தப்பட்டது. மாநாட்டில் எத்தகைய எதிர்ப்பு வந்தாலும் அதை எதிர்கொண்டு திருமுக்கூடலூரில் தமிழ்க் குடமுழுக்கை நடத்துவதென முடிவு செய்து மாநாட்டில் பங்கேற்ற நூற்றுக் கணக்கானவர்கள் திருமுக்கூடலூர் பயணித்தனர்.

மாலை 4 மணி ‘‘திருமுக்கூடலூர் அகத்தீசுவரர் திருக்கோயில் உள்ள குடமுழுக்கு நடக்கவிருந்த மணிமுத்தீசுவரர் சன்னதியில் தமிழ் அறிஞர்கள், தமிழ்ச் சிவனடியார்கள் தமிழ் அமைப்பினர் திருமுக்கூடலூர் பொதுமக்களுக்கும் – கோயில் ஆய்வாளருக்கும் பேச்சுவார்த்தை நடந்தது. குடமுழுக்கு அனுமதி பெறவில்லை சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்பட்டால் காவல்துறை நடவடிக்கை எடுக்கும் என்பதாகத் திருச்சி ஆணையர் ஜெகதீசன், கடிதத்தைக் காட்டி குடமுழுக்குச் செய்வதை தடுக்க முயன்றார். தமிழில் செய்வதால்தான் குடமுழுக்கைத் தடுக்கிறார்கள்

அமைதிபெறவில்லை என்பது ஒரு காரணம்தான். அதற்குமுன் இதே கோயிலில் வேறு சில சன்னதிகள் வடமொழி மந்திரம் சொல்லி செய்யப்பட்டபோது அதற்கு எந்த அனுமதியும் வாங்கப்படவில்லை. வாங்கவேண்டும் என்றும் யாரும் சொல்லவில்லை. எனவே தமிழ்வழிக் குடமுழுக்கு நடத்தப்படுவதைத் தடுக்கவே சங்கராச்சாரியார் தூண்டுதலில் அவர் மிரட்டலுக்கு பயந்தே தமிழ்க் குடமுழுக்கைத் தடுக்க முயல்கிறார்கள் என்பது தெரியவந்தது.

மாலை 5மணி கோயில் செயல் அலுவலர், காவல்துறை உயர்அதிகாரி, வட்டாட்சியர், அறநிலையத்துறை ஆணையர் ஆகியோருடன் நடந்த பேச்சுவார்த்தையில் நிலைமையை உணர்ந்த அதிகாரிகள் மேலிடத்தில் கேட்டுப் பதில் சொல்வதாகக் கூறிச்சென்றார்.

மாலை 6 மணி கரூரில் தமிழ்க்குடமுழுக்கை நடத்த அனுமதிக்கக்கோரி முத்து, ராஜேசு என்ற இருவர் போராட்டம் நடத்தினர்.

இரவு 7.30 மணி திருமுடக்கூடலூரில் தமிழறிஞர்கள் முனி, தெய்வநாயகம், வா.மு.சேதுராமன் ஆகியோர் முன்னிலையில் தமிழ்க்குடமுழுக்குப் பணி துவங்கியது. கோவை குமரலிங்கம் அவர்கள் குடமுழுக்குப் பணியைத் தொடங்கினார்.

தமிழ்ப்பகைவர்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்தனர். சிவனடியார்கள் திருமுறையை ஓங்கி முழங்கினர். தமிழ் அமைப்பினர், “எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு, எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார். இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே” என்ற பாவேந்தர் பாடலை எழுச்சி பொங்கப்பாடினார்.

இரவு 8.30 மணி கரூரில் மாவட்ட ஆட்சியர் காவல்துறை அரசு அதிகாரிகள் ஆகியோரிடம் தமிழ் குடமுழுக்கை வலியுறுத்தி தமிழறிஞர் முனி. தெய்வநாயகம், வழக்கறிஞர் குமரன், வா.மு.சேதுராமன், ஆகியோர் கோரிக்கை வைத்தனர்.

இரவு 9.00 மணி தமிழ்க்குடமுழுக்குப்பணி நடைபெறுவதாகத் தமிழறிஞர்கள் அறிவிப்புக் கொடுத்த பின் தொலைத் தொடர்பு கோபுரத்தின் மீதிருந்த தமிழ்ச் சிவனடியார்கள் கீழே வந்தனர்.

காலை 6.30மணி தமிழக வரலாற்றில் இழந்த தமிழ்க் குடமுழுக்கு உரிமையை மீட்டு புதிய வரலாற்றைக் கரூரில் நிகழ்த்தும் வகையிலும் வடமொழி வெறியர்களின் கொட்டத்தை அடக்கும் வகையிலும் தடை போட்டவர்கள் தரங்கெட்ட செயலைத் தூள்தூளாக்கித் தமிழ்த்திருமுறைகள் ஓதி கோவை குமரலிங்கம் தமழ்க் குடமுழுக்கு விழாவை நூற்றுக்கணக்கான மக்கள் புடை சூழ நடத்திக் காட்டினார். குடமுழுக்கு நடைபெற்ற மறுநாள் முதல் கடும் கோடை வெப்பத்தில் இருந்த கரூரில் தொடர்ந்து மூன்று நாட்கள் விட்டுவிட்டு நல்ல மழை பொழிந்து தமிழ்க்குடமுழுக்குக்குச் சிறப்பு சேர்த்தது.

தெய்வத் தமிழ் மாநாட்டிற்கு திருப்பெருந்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் வழங்கிய வாழ்த்துரை

செந்தமிழ் நெறி, பண்ணார் இன்தமிழாய்ப் பரமாய பரஞ்சுடர் வண்ணங்காட்டி, வடிவு காட்டி மலர்க்கழல் காட்சி ஆட்கொள்ளும் அருள்நிலையங்கள் திருக்கோயில்கள் பாரத நாட்டில் இமய முதல் பரவிய சிவநெறிக் கோயில்கள் கடல் நடந்த நாடுகளிலும் பொலிவுறுகின்றன. தமிழ்ச்சமய இலக்கியமாகிய திருமுருகாற்றுப்படை கற்றோர்க்கத் தாம் வரம்பாகிய தலைமை முனிவர்களும், காட்டகத்தும் நாட்டகத்தும் வாழும் மக்களும் போற்றி வழிபட்ட மரபு தமிழ் மரபு.

குறப்பெண், முருகியம் நிறுத்து முருகாற்றுப் படுத்த உருகெழு வியனகர் பற்றிய சிறப்பையும் வழிபாட்டில் போற்றிய தமிழ் அருச்சனை முறைமையையும் திருமுகாற்றுப்படை விளக்குகிறது.

தமிழ் அருச்சனை 1953ஆம் ஆண்டு மேலைச் சிதம்பரம் ஆகிய பேரூரில் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரி தொடங்கியபோது முதன்முதலில் செய்யப்பெற்றது. என்று முள தென்தமிழின் பண் சுமந்த பாடலுக்கிரங்கி வான்பழித்து மண்புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளல் சிவபெருமான். செந்தமிழ்த் திறத்தால் நிகழ்ந்த அருட்செயல்களைப் போல வேறுமொழிகளில் காண்பதரிது. அருட்செயல்களால் மாதவம் செய்த தென்திசையாகிய தமிழகத்தில்,

கற்கோயில்களும் கலைக்கோயில்களும் உருவாயின. இத்தகைய கோயில்கள் உலகின் வேறு பகுதிகளில் இல்லை எனலாம்.

திருக்கோயில்களில் அயல் ஆதிக்கத்தால் தமிழ் புறக்கணிக்கப்பட்டது. அயல்மொழியாகிய வடமொழிகால் கொண்டது. ஆதலின் சேக்கிழார் "அலகில் செழுந்தமிழ் வழக்கே அயல்வழக்கின் துறைவெல்ல" திருஞானசம்பந்தர் தோன்றி வரலாற்றை விரித்துரைத்தார். சமய இலக்கிய அருட்செம்மல்களாகிய திருமுறையாசிரியர்கள், சிவப்பிரகாசர், குமரகுருபரர், வடலூர் வள்ளலார், முருகதாச அடிகள் ஆகியோர் தமிழ் வழிபாட்டுச் சிறப்பை வலியுறுத்தினர். மறைமலையடிகள், திரு.வி.க. ஆகிய சான்றோர்கள் எழுத்திலும் சொல்லிலும் இயக்கம் செய்தனர். தமிழ் உணர்வுடையோர் சிந்தனை மலர்ந்தது.

ஐம்பத்தாண்டுகளாகத் தமிழ் வழிபாட்டு முறையை தமிழ் மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார், தவத்திரு சுந்தரம் அடிகளார் ஆகியோருடன் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தினோம். திருநெறிய தமிழ்வழிபாட்டில் நமது பேராசிரியர்களும் தொண்டர்களும் ஒருங்கிணைந்து செயலாற்றினர். ஆயிரக்கணக்கான திருக்கோயில்களில் தமிழ்த் திருக்குட நீராட்டுக்கள் நிகழ்ந்தன. மக்கள் அன்பு நிறைந்த தமிழ் வழிபாட்டால் அறநெறியாளர்களாகத் திகழ்கின்றனர். வன்முறைகளும் நலிவுகளும் நீங்கின.

இலண்டண், பாரிசு, அமெரிக்கா, மொரிசியசு, தென்னாப்பிரிக்கா நாடுகளில் கருவறையில் திருமுறை இடம் பெறவும், வாழ்வியல் நெறிகளில் தமிழ் இடம்பெறவும் சென்று வழிகாட்டியுள்ளோம். அவை நடைமுறைப் படுத்தப்படுகின்றன. தமிழகத்தின் பல பகுதிகளில் திருநெறிய தமிழ்த் திருக்குட நீராட்டுகள் பல நடத்தப்பெறுகின்றன. இதனை எதிர்ப்பவர்கள் தமிழர்கள் என்று சொல்லிக்கொண்டு வடமொழியே வழிபாட்டுக்குரியது என்று கூறுவது முறையாகுமா? வடமொழியில் செய்பவர்களை நாம் தடுப்பதில்லை. குறைத்துப் பேசுவதும் இல்லை. தமிழில் நடைபெறுவதைக் குறை கூறித் தமிழ் நாட்டில் தமிழர்கள் திருக்கோயிலில் தமிழ்முறை வழிபாடு நடைபெறலாகாது என்பது அயலாதிக்க வன்முறைச் செயல் என்று கருத வேண்டியிருக்கிறது. இது குறித்து அருளாளர்களும் அறிஞர்களும் ஆய்ந்து மக்களுக்கு எடுத்துச் சொல்லும் உலகத் தெய்வத்

தமிழ் மாநாடு கரூரில் நமது அன்புக்குரிய தமிழ் ஆர்வலர்களால் நடத்தப் பெறுவது வரலாற்றுச் சிறப்புடையவது. தமிழுணர்வுடையோர் அனைவரும் இதில் பங்கு கொள்ள வேண்டும். மாநாட்டினைச் சிறப்பாக நடத்தும் அன்பர்களனைவருக்கும் நன் பாட்டுப் புலவனாய் சங்கம் ஏறிய அம்பலவாணர் திருவடிகளை நினைந்து வாழத்துகின்றோம்.

கொங்கு வேளாளர்களின் குலதெய்வக் கோயில்களை ஒருங்கிணைக்கும் பணியில் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

பாரம்பரியப் பண்பாடுகளில் தலைசிறந்த நாடு தமிழ்நாடு பாரம்பரியப் பண்பாடுகளில் முதல்பண்பாடாக விளங்கி வருவது தெய்வ வழிபாடுகளில் மூத்த வழிபாடுகள் குல தெய்வ வழிபாடாகும். தமிழ் குடிமக்கள் ஒவ்வொரு இனமக்களும் குலம் குலதெய்வக் காணி கோயில்கள் இருப்பதுபோல் கொங்கு நாட்டில் வாழ்ந்திடும் கொங்கு வேளாளர்கள் சமுதாய மக்களின் குலப்பிரிவுகளும் குலதெய்வக் கோயில்களும் கொங்கு நாடெங்கும் பரவலாக காணி கொண்டுள்ளன.

கொங்கு வேளாளர்கள் சமுதாயம் சார்ந்த குடிமக்களுக்கு குலமும் குலதெய்வக்கோயில்களும் தங்கள் முன்னோர்கள் வாழ்ந்து விட்டுச் சென்ற பாரம்பரியமான தெய்வீகச் சொத்தாக நினைத்து கொங்கு வேளாளர்கள் இனம் சார்ந்த குலமக்கள் பங்காளிகள் உறவுகளுடன் கூட்டமாகச் சென்று அவரவர் குலதெய்வக்கோயில்களில் வழிபாடுகள் செய்வதோடு தங்கள் வீடுகளில் நடைபெறும் நல்ல காரியங்கள் அனைத்திற்கும் குலதெய்வ வழிபாடுகள் செய்த பின்புதான் நல்லகாரியங்கள் செய்வார்கள். கொங்கு வேளாளர்களின் குலதெய்வக் கோயில்கள் அனைத்தும் மாங்கல்யவரி என்று குடும்பவரி கொடுத்து குலத்தலைவர்களால் திருப்பணிகள் செய்து குலமக்களால் வழிபாடுகள் செய்யப்படும். அனைத்து கொங்கு வேளாளர்களின் குலதெய்வக் கோயில்களும் கொங்கு குலமக்களின் பாரம்பரியமான சொந்தக் கோயில்களாகும். இந்த நடைமுறைகள் நம்நாடு விடுதலைக்கு முன்புவரை நடைமுறையில் இருந்து வந்துள்ளது.

1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆம் நாள் அந்நிய நாடான பிரிட்டீஸ் ஆட்சியாளர்களிடம் 200 ஆண்டுகளுக்கு மேல் அடிமைப்பட்டு இருந்த நம்நாடு விடுதலைப் பெற்று இந்தியநாடு சுதந்திர நாடாக பிரகடனம் செய்யப்பட்டு இந்திய நாட்டுக்கான அரசமைப்பு சட்டம் நம்நாட்டுத் தலைவர்களால் உருவாக்கப்பட்டு இந்தியாவின் பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்களும் தமிழ்நாட்டின் முதலமைச்சராக ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரும் பதவி ஏற்று ஆட்சி செய்யத் தொடங்கினார்கள்.

இந்திய அரசமைப்பு சட்டத்தின் முகப்புரை:

இந்திய மக்களாகிய நாம் இந்தியாவை உயர் தனி ஆட்சியுடைய சமதர்ம சமய சார்பற்ற மக்களாட்சி குடியரசாக அமைக்கவும் அதன் குடிமக்கள் அனைவருக்கும் சமுகநீதி, அரசியல் நீதி இவையும் கருத்து சுதந்திரம் கருத்து வெளியீட்டு சுதந்திரம், கோட்பாட்டு சுதந்திரம் இவையும் சமமதிப்பு, சமவாய்ப்பு இவையும் கிடைக்கச் செய்யவும் தனிமனிதனின் மாண்பு நலம் நாட்டின் ஒற்றுமை நலம் ஒருமைப்பாட்டு நலம் இவை விளங்கு தலை உறுதியாக்கவல்ல சகோதரத்துவத்தை அவர்கள் அனைவரிடையே வளர்க்கவும் நெஞ்சார உறுதிபூண்டு நம் அரசமைப்பு பேரவையில் இந்த 1949 நவம்பர் 19ஆம் நாளில் இந்த அரசமைப்பை சாசனமிதன் மூலம் ஏற்று சட்டமாக்கி நமக்கு நாமே வழங்கிக் கொள்கிறோம்.

மதச்சார்பற்ற அரசு நமது அரசு என்று முகப்புரை தெளிவாகச் சொல்கிறது. இந்தியாவில் இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், சமணர்கள், பௌத்தர்கள், சீக்கியர்கள் என எல்லாம் இருக்கிறார்கள். எல்லா மதமும் இங்கே இருக்கும். இனி புதியமதம் தோன்றினாலும் இங்கே இருக்கலாம். ஆனால் அரசு எந்த சமயத்தையும் சாராத அரசாக இருக்கும் எந்த மதத்தையும் எதிர்க்காத அரசாக இருக்கும். எந்த சமயத்திற்கும் தனி ஆதரவு தருவதும் இல்லை, சமயம் காரணமாக எவருக்கும் எந்த குறையும் உண்டாக்குவதில்லை. அவரவர் அவரவர் சமயத்தை அனுஸ்டிக்க முழு உரிமையும் உண்டு. அவரவர் சமயத்தில் நம்பிக்கை கொள்ளவும் சமய முறையில் வழிபாடுகள் செய்யவும். முழு சுதந்திரம் உண்டு. எந்த மதத்திலும் அரசு தலையிடாது. பாகிஸ்தானில் உள்ள அரசு இஸ்லாமிய அரசு என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசு எந்த மதத்தின்

பெயராலும் உள்ள அரசு அன்று எந்த சமயத்திற்கும் எதிரான அரசு அன்று பதவி சமயத்தில் தலையிடாத அரசு இந்திய அரசு, மதத்தை மதிக்கும் அரசு நமது அரசு ஆனாலும் மதம் எதையும் சாராத அரசு எல்லா மதத்தையும் மதிக்கும் அரசு, எல்லா மதத்திற்கும் சுதந்திரம் கொடுத்துள்ள அரசு ஆனால் அது எந்த மதத்தையும் சேர்ந்த அரசு அன்று சமயம் சம்பந்தமாக இப்படிப்பட்ட கொள்கை உடைய அரசு ஆதலால் சமயச் சார்பில்லாத அரசு என்று இந்திய நாட்டின் அரசமைப்பின் முகப்புரையில் திட்டமாகவும் தெளிவாகவும் கூறப்பட்டு இருக்கிறது.

அந்நியர்களிடம் நம்நாடு விடுதலை அடைந்து பின்பு நாட்டு மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். ஆனால் இந்து சமயம் சார்ந்த மக்கள் வேதனைப்பட்டனர். காரணம் சுதந்திர நாட்டில் இந்து சமயக்கோயில்களுக்கு விடுதலை இல்லாமல் அரசின் கட்டுப்பாட்டில் இருந்ததினால் சுதந்திரம் கிடைத்தால் இந்துசமயக் கோயில்களுக்கு விடுதலை கிடைக்கும் என்று நம்பி இருந்த இந்து சமய மக்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

இந்து சமயக் கோயில்கள் எப்போது அரசின் நிர்வாகத்திற்குச் சென்றது

கடந்த நூற்றாண்டுகளில் வெளிநாடுகளில் இருந்து வியாபாரம் செய்ய வந்த பிரிட்டீஸ் கம்பெனி, பிரெஞ்ச் கம்பெனி, போர்த்துக்கிச்சியர், டச்சுக்காரர்கள் நம் நாட்டில் வியாபாரம் செய்து கொள்ளை லாபம் சம்பாதித்ததோடு, தங்களின் சமயமான கிருஸ்த்துவ சமயத்தை போட்டிபோட்டு நம் நாட்டு மக்களிடம் பரப்பி வந்தனர்.

பிரிட்டீஸ் சார் தனித்து இந்திய நாட்டை ஆட்சி செய்யும் போது இந்து சமயக் கோயில்களையும் அதன் சொத்துக்களையும் அரசின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து ஆட்சி செய்ய திட்டமிட்டு 1801 ஆம் ஆண்டு பிரிட்டீஸ் ஆட்சியாளர்கள் செயல்படத் தொடங்கி முதலில் திருப்பதி ஏழுமலையான் கோயிலை கை வைத்தனர். திருப்பதிக் கோயில் அப்போது தமிழ்நாடு அரசின் நிர்வாகத்தில் இருந்தது.

அரசின் இந்த நடவடிக்கையை இந்து சமயம் சார்ந்த மக்கள் கடுமையாக எதிர்த்து போராட்டம் நடத்தினர். அப்போது செங்கல்பட்டு

கலெக்டர் தலைமையில் விசாரணைக் கமிசன் அமைத்து விசாரணை நடைபெற்று அரசுக்கு 31.3.1804ல் விசாரணை அறிக்கை கொடுக்கப்பட்டது இந்த அறிக்கைக்குப் பெயர் சவாப்–இ– சவாப் அன்றைய காலத்தில் இந்த அறிக்கை அரசு ஆவணங்களில் முந்திய ஆவணமாக கருதப்பட்டது.

இந்திய நாட்டில் இந்து சமயக் கோயில்களை அரசு எடுத்துக் கொள்ளும் முறையைத் தொடாங்கி தொடர்ந்து முயற்சி செய்து வந்தனர். இந்து சமயமக்களின் எதிர்ப்பால் பிரிட்டீசாரின் விசுவாசிகளான நீதிக்கட்சியினர் பிரிட்டீசாரின் இரட்டை ஆட்சிமுறையில் பிரிட்டீசாரின் ஆதரவோடு தமிழ்நாட்டில் நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சி வெற்றிபெற்றது 1922ஆம் ஆண்டு ஆட்சி அமைந்தது.

இந்து சமயக்கோயில்களை கைப்பற்ற நீண்ட நாள் காத்திருந்த பிரிட்டீசார் நீதிக்கட்சியினரைப் பயன்படுத்தி தங்களின் நீண்டநாள் கனவை நிறைவேற்றிக் கொண்டனர். தமிழ்நாட்டில் ஆட்சி அமைத்த நீதிக்கட்சியினர் தமிழ்நாடு மேலவையில் 1922ல் அறிமுகப்படுத்தி 17.3.1924ல் இந்து சமய அறக்கட்டளைச் சட்டத்தை கொண்டு தமிழ்நாட்டில் உள்ள இந்து சமயக் கோயில்களை எடுத்து ஆட்சி நிர்வாகம் செய்யத் தொடங்கினார்கள்.

நாடு விடுதலைக்குப் பின்பு நாட்டில் சிறப்பான முறையில் ஆட்சி செய்வதற்கு வழிகாட்டியாக இருந்து செயல்பாட்டில் நாட்டின் முது பெரும் மூத்த தலைவர்கள் கூடிய சமய சார்பற்ற அரசமைப்பு சட்டம் இயற்றி ஆட்சி செய்து வரும் சுதந்திர அரசு பிரிட்டீஸ் ஆட்சியில் நாத்திகர்களான நீதிக்கட்சி கொண்டு வந்த இந்து சமய விரோத சட்டத்தை ரத்து செய்யாமல் சுதந்திர நாட்டை ஆட்சி செய்யும் காங்கிரஸ் ஆட்சி நீதிக்கட்சி கொண்டு வந்த இந்து சமய அறக்கட்டளைச் சட்டத்தை அப்படியே 1951ஆம் ஆண்டு புதுப்பித்து ஆட்சி செய்து வந்தனர்.

முஸ்லீம் சமயம் சார்ந்த மக்கள் தங்கள் வழிபாடு செய்து வரும் பள்ளிவாசல்களையும், அதன் சொத்தை தங்களே நிர்வாகம் செய்யும் வகையில் அரசிடம் போராடி அனுமதிபெற்று வக்ஃபோர்டு அமைத்து முஸ்லீம் பள்ளிவாசல்களை முஸ்லீம் மக்களே ஆட்சி செய்து வருகின்றனர்.

கிருஸ்துவ சமயம் சார்ந்த பிரிட்டீஷார் நம் நாட்டை ஆட்சி செய்தபோது கிருஸ்துவ சமயத்தின் தேவாலயங்களுக்கும் அதன் சொத்துக்களுக்கும் எதிர்காலங்களில் எந்த ஆபத்தும் வராமல் இருக்கும் வகையில் சட்டம் இயற்றி வைத்துள்ளதால் கிருஸ்த்துவ தேவாலயங்களை கிருஸ்துவ பாதிரியார்களே நிர்வாகம் செய்து வருகின்றனர்.

நீதிக்கட்சியினர் கொண்டு வந்த இந்து சமய அறநிலையத்துறை சட்டத்தில் இந்து சமயத்தின் பெரிய கோயில்களையும் அதன் சொத்துக்களை மட்டும் அறநிலையத்துறை எடுத்து ஆட்சி செய்து வந்தது. குடிமக்களின் குலதெய்வக்கோயில்களையும் கிராமப்புறங்களில் உள்ள ஊர்க்கோயில்களையும் எடுக்கவில்லை. 1951க்கு பின்பு 1959ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து இந்து சமயக்கோயில்களையும் அரசு எடுத்துக்கொள்ளும் சட்டம் கொண்டு வந்து கோயில்களை எடுத்துள்ளது. தமிழ்நாட்டில் சமய சார்பற்ற மக்கள் ஜனநாயக ஆட்சியில் இந்து சமய அறநிலையத்துறை எடுத்து ஆட்சி செய்து வரும் இந்துக் கோயில்கள் 38,000 அறக்கட்டளைகள் 189, மடாலயங்கள் 56 அதனைச்சார்ந்த கோயில்கள் 47 ஜெயின் கோயில்கள் 17 இவைகளில் ஆண்டுக்கு 2லட்சம் முதல் 10லட்சம் வருமானம் உள்ள கோயில்கள் 498. 10லட்சத்துக்கும் அதிகமான வருமானம் உள்ள கோயில்கள் 182. இந்தக் கோயில்களும் பாத்தியப்பட்ட பாரம்பரிய சொத்தாகும்.

இந்து சமய அறநிலையத்துறையின் நடவடிக்கையால் இந்து சமயத்தின் திருக்கோயில்களில் இந்து சமயம் சார்ந்த மக்களின் அடிப்படையான உரிமைகளை அரசிடம் இழந்து உள்ள அவலநிலையில் கொங்குவேளாளர்கள் சமுதாயத்தின் சொந்தக்கோயில்களான குலதெய்வக் கோயில்களையும், அறநிலையத்துறை ஆக்கிரமித்து குலதெய்வக்கோயில்களில் தலையிட்டு கொங்குவேளாளர்களின் பாரம்பரியப்பாட்டை சீர்குலைத்து வரும் அவலநிலையை நீக்கிடவும். குலதெய்வக்கோயில்களை அறநிலைத்துறையிடம் இருந்து மீட்டிடவும் கொங்குப் பண்பாடு கலாச்சாரங்களை மீட்டெடுத்து பாதுகாத்திடவும் கொங்கு குலத்தலைவர்களும் குலக்கோயில் காணியாளர்களும்

திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழிவழி
பேரூராதீனம் குருமகா சந்நிதானங்கள்
கயிலைக்குருமணி சீர்வளர்சீர் சாந்தலிங்க

ராமசாமி அடிகளாரைச் சந்தித்து முறையிட்டதின் பேரில் அடிகாளார் குலதெய்வக் கோயில்களின் காணியாளர்களையும், நிர்வாகிகளையும் பேரூராதீனத்திற்கு அழைத்து அனைவரிடமும் கருத்துகள் கேட்டு குலதெய்வக்கோயில்கள் கூட்டமைப்பு தொடங்கிட ஆலோசனைகள் வழங்கி இதன் அமைப்பாளர்களாக கோவை சரவணம்பட்டி பழ–தர்ம–ஆறுமுகம் அவர்களையும், தாராபுரம் கணக்கன் மு.வேலுச்சாமிக்கவுண்டரையும் நியமனம் செய்தார். அடிகளாரின் வழிகாட்டுதலின்படி தவத்திருமருதாசலம் அடிகள் அவர்களும் சிரவை ஆதீனம் தவத்திருகுமரகுரு அடிகளும் குலதெய்வக் கூட்டமைப்பு வழிநடத்தி வந்தனர்.

கொங்குக் குலதெய்வக்கோயில்கள் முன்னேற்ற சங்கம் துவங்கிய முதல் கூட்டம்

நிகழ்ச்சி நிரல்

இடம் : கொங்குத் திருமண மண்டபம், கரூர்.

நாள் : பாத்திப ஆண்டு பங்குனி 12

(26–3–2006) ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணி

இறைவணக்கம்

வழிகாட்டும் : திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழிவழி

வாழ்த்துரை : பேரூராதீனம் சீர்வளர்சீர் சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அவர்கள்

வரவேற்புரை : டாக்டர் கொங்கு கொளந்தசாமி செயலாளர், தீரன் சின்னமலை அறக்கட்டளை, வெள்ளகோவில்.

தொடக்கவுரை : திருமிகு.எம்.கே.ஆர்.காங்கேயன் தாளாளர், அருங்கரையம்மன் கல்லூரி, கரூர்.

அறிமுக உரை : திருமிகு.கணக்கன்.மு.வேலுச்சாமி கவுண்டர்

சங்கத்தின் அமைப்பாளர் அனைவருக்கும்

துண்டணிவித்தல் : திருமிகு.சி.கே சுந்தரம் தலைவர், ஸ்ரீ காடைகுல செல்வநாயகியம்மன் அறக்கட்டளை

முன்னிலை	:	திருமிகு.கே.சாமியப்பகவுண்டர் அறங்காவலர், கரியகாளியம்மன் திருக்கோயில், பரஞ்சேர்வழி. திருமிகு.எஸ்.சாமிநாதன், அறங்காவலர் குழுத்தலைவர் அருள்மிகு பெரியநாயகியம்மன் திருக்கோயில், சாமியார்பாளையம். திருமிகு.என்.அம்மாசையப்பகவுண்டர், பொருளாளர் அருள்மிகு காடையீசுவரர் பங்காட்சியம்மன் திருக்கோயில், காடையூர்.
தலைமையுரை	:	திருமிகு.டி.ஆர்.கார்த்திகேயன், தேசியத்தலைவர், நாம் இயக்கம்.

திருக்கோயில்கள் சார்பில் கலந்துகொண்டு கருத்துரை வழங்குவோர்

திருமிகு.வி.கே.சிவக்குமார், தலைவர், அருள்மிகு கவயகாளியம்மன் திருக்கோயில், கோயில்பாளையம்.

திருமிகு.கே.கே.விசுவநாதன், பொருளாளர், அருள்மிகு செல்லாண்டியம்மன் திருக்கோயில் (முத்துசாமி கோயில்) புதுப்பை.

திருமிகு.வி.இராமசாமிக்கவுண்டர், செயலாளர், அருள்மிகு தங்கம்மன் திருக்கோயில், கொடுமணல்.

டாக்டர். கே.பி.இராமசாமி, அருள்மிகு வஞ்சியம்மன் திருக்கோயில், மூலனூர்.

திருமிகு.வெ.அனந்தகிருஷ்ணன், அருள்மிகு பள்ளி கொண்ட பெருமாள் திருக்கோயில், குள்ளம்பாளையம்.

கொங்கு அமைப்புகளின் சார்பில் கலந்து கொண்டு கருத்துரை வழங்குவோர்

திருமிகு.பெஸ்ட் இராமசாமி, கௌரவத் தலைவர், கொங்கு வேளாளக் கவுண்டர் பேரவை, திருப்பூர்.

திருமிகு.ஜி.சுவாமிநாதன், செயலாளர், கோவை மாவட்ட கொங்கு நற்பணி மன்ற அறக்கட்டளை.

திருமிகு. ஆர்.தேவராசன், தலைவர், கொங்கு வேளாளக் கவுண்டர் பேரவை சேலம்.

திருமிகு. பி.இராமசாமி, தலைவர்,திருக்குறள் பேரவை, கரூர்

திருமிகு. அ.பொ.கந்தசாமி, பிரச்சாரக்குழு, கொங்கு வேளாளக் கவுண்டர் பேரவை.

திருமிகு.ஆசிரியர் தி.செ.பழனிவேலு, கொங்கு நாட்டு வேளாளர் அறக்கட்டளை.

திருமிகு. தங்கமுத்து. அருள்மிகு.ஆருத்ர காபலீசுவரர் திருக்கோயில், மடவளாகம்.

நன்றியுரை : திருமிகு.பழ தரும ஆறுமுகம்

கரூரில் நடந்த கொங்குக் குலத்தெய்வக் கோயில் முன்னேற்ற சங்கத்தின் கலந்தாய்வுக் கூட்டம்

கரூரில் நடைபெற்ற கூட்டத்திற்கு சேலம், நாமக்கல், கரூர், திண்டுக்கல், கோவை, ஈரோடு, பெங்களூர், சென்னை ஆகிய மாவட்டங்களிலிருந்து பெருவாரியான பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். கூட்டத்திற்கு பேரூராதீனம் கயிலைக் குருமணி சீர்வளர்சீர் சாந்தலிங்க ராமசாமி அடிகளார் தலைமை வகித்து வாழ்த்துரை வழங்கினார். குலத்தலைவர்களும், கோயில் தலைவர்களும், சமுதாய பெரியோர்களும் கருந்துரை வழங்கினார்கள். நாம் இயக்கத்தின் தேசிய தலைவர் உயர்திரு.டி.ஆர். கார்த்திகேயன் அவர்கள் சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் கலந்தாய்வு முடிவுபடி பதினோரு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு சுவாமிகளின் அருளாசியுடன் கூட்டம் இனிதே முடிவு பெற்றது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

1. கொங்கு நாட்டில் உள்ள அனைத்து கொங்கு குலக்கோயில்களிலும் அறக்கட்டளை, நலச்சங்கம், மன்றம் போன்ற அமைப்புகள் அமைத்து பதிவு செய்ய வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

2. அனைத்து கொங்கு குலக்கோயில்களையும் ஒருங்கினைத்து கொங்கு குல தெய்வக் கோயில்களின் கூட்டமைப்பு ஏற்படுத்த வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

3. கொங்கு குலக்கோயில்கள் அனைத்திலும் பூசாரிகளுக்கு வழிபாடுகளில் முறையான பயிற்சி மையங்கள் ஏற்படுத்தி திருமடங்களின் மூலமாக முறையான பயிற்சி கொடுக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

4. பூசை முறைகளுக்கு பூசை முறைநூல் அச்சிட்டு வழங்க வேண்டுமென்றம் அதற்காக ஒரு குழு அமைத்து ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

5. கொங்கு குலக்கோயில்களின் நிர்வாகத்திலும் அறங்காவலர்கள் நியமனத்திலும் இந்து சமய அறநினையத்துறை தலையிடாமல் இருக்க ஒரு குழு அமைத்து பாதுகாத்தல் மற்றும் அது சம்பந்தமன நடவடிக்கை எடுக்கவும் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

6. கொங்கு குலக் கோயில்களில் வரலாற்றுச் சிறப்புக்களை நம்முடைய குலத்தில் உள்ள சிறந்த ஆசிரியர்களைக் கொண்டு ஆராய்ந்து நூல்களாக வெளியிட வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

7. ஆங்காங்கு அமைப்புக்களையும், குல தெய்வக் கோயில்களைப் பற்றியும், முதன்மைக் காணியாளர்களாக விளங்கும் கோயில்களைப் பற்றியும் வரலாற்றுச் செய்திகளையெல்லாம் தொகுத்து கொங்கு குலக்கோயில்கள் கலைக் களஞ்சியம் என்ற விரிவான அய்வு நூல் வெளியிட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

8. கொங்கு குலக்கோயில்கள் அனைத்திலும் திருக்கல்யாண மரபின்படி பூச்சாட்டுதல் திருவிழாவினை ஒழுங்குபடுத்த வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

9. ஒவ்வொரு கொங்கு குலக் குடும்பத்தையும் அவர்களின் குல தெய்வக் கோயில்களோடு இணைத்து புள்ளிவிபரம் எடுத்து அந்தந்த கோயில்களில் பதிவு செய்து பட்டியல் தயாரித்து பாதுகாக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

10. கொங்கு சமுதாயத்தின் பண்பாடுகளையும் பழக்கவழக்கங்களையும் மறுமலர்ச்சியடைய செய்ய அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

11. கொங்கு குலக்கோயில்கள், அனைத்திலும் இனிமேல் தமிழ்முறை வழிபாடுதான் செய்ய வேண்டும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

ஆலயம் காப்பதில் ஆர்வம் கொண்டவர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் கூறிய பத்திரிக்கை செய்தி:

ஆலயம் காப்பதில் அக்கறை வேண்டும்.

தமிழகத்தில் இதுவரை ஆண்ட கட்சிகளில் கடவுள் நம்பிக்கை உள்ள கட்சியும் உண்டு. கடவுள் மறுப்பு கொள்கை கொண்டவர்களும் உண்டு. தங்களது கொள்கை எப்படியிருந்தாலும் கோயில்களை பாதுகாத்து, திருப்பணிகளை செய்ய தனி அமைச்சகம் அமைத்து செயல்படுகிறது. தமிழக அரசு ஆலயங்களை காத்து ஆன்மீகம் வளர, அடுத்து அமையும் அரசு செய்ய வேண்டியதை பட்டியடுகிறார் பேரூராதீனம் சாந்தலிங்க ராமசாமி அடிகளார். தமிழகத்தில், 50 ஆண்டுகளாக ஆன்மீகத்துக்கும், வழிபாட்டு நெறிமுறைகளுக்கும் எதிரான ஆட்சியே நடந்து வருகிறது. கோவில் வழிபாட்டில் தமிழ்மொழிக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பது முதல் கோரிக்கை 1952ல், கோவைகிழார். சுப்ரமணியபிள்ளை, குன்றக்குடி அடிகள் ஆகியோர் இணைந்து, பேரூர் கோவிலில், தமிழ்மொழி அர்ச்சனையை துவக்கி வைத்தார். இதை அனைத்து கோவில்களிலும் செயல்படுத்த வேண்டும் என்பதற்காக, அப்போதிலிருந்து இப்போது வரை போராடி வருகிறோம்.

தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும் என்பதை அரசோ, அறநிலையத் துறையோ வற்புறுத்துவதில்லை, ஊக்குவிக்கவுமில்லை. ஆனால், ஆப்ரிக்காவிலும், மொரிஷியசிலும் ஆங்கிலத்தில் தமிழை எழுதி, தமிழ் உச்சரிப்பில் அர்ச்சனை செய்கின்றனர்.

ஆன்மீகத்தில் ஈடுபாடில்லாத ஆட்சியாளர்கள், 'தமிழ் எங்கள் உயிர்மூச்சு' என்கின்றனர். ஆனால், இவர்கள் தமிழுக்காக எதையும் முழுமையாக செயல்படுத்துவதில்லை. ஆன்மீகத்திலும் நம்பிக்கை

இருக்கும் ஆட்சியாளர்கள், ஆன்மீகத்தில் காட்டும் அக்கறையை, தமிழ்மொழி மீது செலுத்துவதில்லை.

தற்போது, இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கோவில்களில் நடைமுறையிலுள்ள அன்னதான திட்டத்தில், சில குறைபாடுகள் உள்ளன. அதை மேம்படுத்த வேண்டும். ஒரு கால பூஜை திட்டத்தை முழுமையாக செயல்படுத்துவதோடு, அறநிலையத்துறை அதிகாரிகள் கண்காணிக்க வேண்டும்.

தமிழகத்தில், 300 கோவில்களில் தேர்கள் பழுதாகி கிடக்கின்றன. தேர் மராமத்து வேலை செய்ய போதுமான ஆட்களும் இல்லை. நான்கு தலைமுறையாக தேர் பணி மேற்கொள்ள ஆட்கள் இல்லை. இருக்கும் பணியாளர்களை கொண்டு, தேர் தயாரிப்பு பணிக்கென்று பாடசாலை துவங்க வேண்டும்.

தமிழகத்தில் கோடிக்கணக்கான ரூபாய் திருப்பணிக்காக ஒதுக்கப்பட்டதாக அறிவிப்புகள் வெளியானாலும், அந்த பணிகள் நடைபெற்ற விதம் திருப்பதியை கொடுக்கவில்லை. தற்போது, கோவில் மேம்பாட்டுக்கு, மத்திய அரசு நிதி கொடுக்க முன்வந்துள்ளது. அதை மாநில அரசு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

தமிழகத்திலுள்ள ஏராளமான கோவில்கள், குத்தகைச் சட்டத்தால் வருவாய் கிடைக்காமல், அன்றாட பூஜைக்கே திண்டாடும் நிலை உள்ளது. மயிலாடுதுறையில் மட்டும் குத்தகைச் சட்டத்தால், 26 ஆயிரம் வழக்குகள் விசாரிக்காமல் தேக்கமடைந்துள்ளன. அடுத்துப் பொறுப்பேற்கும் அரசு, குத்தகைச் சட்டத்தை நெறிமுறைப்படுத்தி நடைமுறைப்படுத்த வேண்டும்.

கோவில் நிலங்களிலுள்ள, கல்வி மற்றும் பொது நிறுவனத்துக்கு, நற்போதைய மார்க்கெட் மதிப்புத் தொகையிலிருந்து, 40 முதல், 50 சதவீத்தை உயர்த்தி, வாடகை நிர்ணயம் செய்ய வேண்டும். இந்த வருவாய் கோவிலின் வளர்ச்சி பணிக்கு போய் சேர வேண்டும்.

வருவாய் இல்லாத கோவில்களில், அன்றாட நெய்வேத்தியத்துக்கே தட்டுப்பாடு உள்ளது. இதைப் போக்க, கோவில் நிலங்களின் பேரில் வங்கிகள் கடன் வழங்க அரசு அறிவுறுத்த வேண்டும். தமிழக கோவில்களில் குளப்பராமரிப்பு நல்ல நிலையில் இல்லை. தேர்

திருவிழாக்கள், சமுதாயத்தில், ஜாதி, மத ஒற்றுமையை வலுப்படுத்தக்கூடியதாகும். தமிழகத்தில், 300 கோவில்களில் தேர்கள் பழுதாகி கிடக்கின்றன. தேர் மராமத்து வேலை செய்யப் போதுமான ஆட்களும் இல்லை. நான்கு தலைமுறையாக தேர்ப் பணி மேற்கொள்ள ஆட்கள் இல்லை.

இருக்கும் பணியாளர்களை கொண்டு, தேர் தயாரிப்பு பணிக்கென்று பாடசாலை துவங்க வேண்டும். இல்லாவிட்டால் அரிய கலை அழிந்து போகும் அபாயம் உள்ளது. தமிழகத்தில் ஒரு பக்கம் கோவில்களில் தங்கத்தேர் உருவாக்கப்படுகிறது. மறுபக்கம், திருவிழாக்களில் உலா வரும் தேர்கள் பழுதாகி நின்கின்றன. அவற்றை சரிசெய்ய தொழிலதிபர்கள் இணைந்து ஆன்மிகப் பணிகளில் இறங்க வேண்டும். பெருங்கோவில்களாக இருந்தாலும், அதன் பழமை பாதுகாக்க வேண்டும்.


வருவாய் ஈட்டும் பெருங்கோயில்கள், வருவாய் இல்லாமல் தத்தளிக்கும் சிறிய கோவில்களை தத்தெடுத்து, அந்த வருவாயில், இக்கோவிலுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

வழிபாட்டுத்தலங்களை பெரும்பாலும் வனப்பகுதியையொட்டியே அமைந்துள்ளது. அப்பகுதிகளில் வனச்சட்டங்களை தளர்வு செய்து, பக்தர்களுக்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும். ஆந்திரா, கேரளா, கர்நாடகா மாநிலங்களில் உள்ள மலைக்கோவில்களில், வனச்சட்டங்கள் கோவில் நிர்வாகத்துக்கு சாதகமாக உள்ளது.

ஆனால், தமிழகத்தில் மட்டும், வனச்சட்டங்கள் எதிராக உள்ளன; இதை தளர்வுபடுத்த வேண்டும. இதனால். பக்தர்களுக்கும். கோவில் நிர்வாகத்துக்கும் ஏற்படும் பிரச்சனைகளை தவிர்க்கலாம். அனைவரும் அர்ச்சகராகலாம் என்பதை முழுமையாக செயல்படுத்த வேண்டும். அதற்கு முழுமையான, முறையான பயிற்சி அளிக்க வேண்டும். சீட் இல்லை... அமைச்சர் பதவி உண்டு

அடுத்தடுத்து வந்த தகவல்களால் தெம்பாகியிருக்கும், தி.மு.க.தலைமை அமைச்சர் பட்டியலை தயார் செய்யும் பணியில் இறங்கி

விட்டது. பழைய முகங்கள் பலருக்கு கல்தர கொடுக்கப்பட்டு, புதிய முகங்கள் இடம்பெறும் வகையில், அமைச்சரவை பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. தேர்தலில் போட்டியிட்டவர்கள் மட்டுமின்றி போட்யிடாத சிலருக்கும் அமைச்சர் பதவி கிடைக்கப் போகிறது. திமுக அரசு அமைந்ததும், மேலவை உடனடியாக உருவாக்கப்பட்டு, அதில் உறுப்பினர் பதவியை கொடுப்பதன் மூலம் அவர்கள் அமைச்சராக்கப்பட உள்ளனர். அமைச்சர் பட்டியலில் இடம் பிடித்துள்ளவர்களில் முக்கியமானவர்கள் தேர்தலில் தோற்றாலும், மேலவை வாயிலாக அமைச்சராக்கப்படுவர் என்கிறது அறிவாலய வட்டாரம்.



சாதி பேதம் பாராத சற்குரு தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

அருள் நிறைந்து ஆன்மீகம் வளர்ந்த தமிழ்நாட்டில் 16ஆம் நூற்றாண்டிருக்குப் பின்பு அந்நியநாட்டு வேற்று சமயங்களின் நுழைவால் நம்நாட்டில் உள்ள சமயங்களில் சலசலப்புகள் சலங்கை கட்டி ஆடத்தொடங்கின. இந்நிலையில் சமயம் சார்ந்த குடிமக்கள் குழப்பத்தில் தடுமாறி நின்றனர்.

சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே சாத்திரச் சண்டையிலே கோத்திரக் குப்பையிலே மக்கள் சிக்கி சீரழியும் நிலையில் ஆதிகாலம் முதல் நாட்டில் அநியாயமும் அக்கிரமும் தலைதூக்கி ஆடும்போது ஆண்டவனின் அருள் பெற்ற அருளாளர் தோன்றுவார்கள். இப்படி தோன்றிய அருளாளர்களில் நடுவர் தவத்திரு சாந்தலிங்க அடிகளாவார்.

சாதிசமயச் சண்டைகளை தீர்த்து ஒன்றேகுலம் ஒருவனே தேவன் எனும் உன்னதக் கோட்பாட்டை உலகினில் விதைத்து ஆன்மீகப்பாலமாய்ச் சுத்த ஆன்மீக சுகநெறி வளர்க்கத் தோன்றியவர் சாந்தலிங்க அடிகளார்.

சாதிசமயங்கள் எனும் வெறுப்பின் வழிச்சென்று மாய்ந்து போகாதீர்கள் மக்களே, அவை பெரும் பாலைவனத்துக்குள் போய் மாட்டிக் கொண்டீர்கள் என்றால் மீளவே முடியாது என்று அடிகள் கூறுகிறார்.

வர்ணாசிரமம் சாதி, குல பேதங்கள் விகற்பங்கள் எல்லாம் மெய்யுணர்வு தோன்றுங்கால் இருந்த இடம் தெரியாமல் அழிந்துவிடும். பரம் பொருள் ஒன்றே ஒன்று தான் என்றும் அழியாது நிற்கும் அற்புதக்கோட்பாடு என்று அடிகள் கூறுகிறார்.

சகல சமயங்களின் நன்மைகளையும் தெளிய உணர்ந்து அவற்றின் முடிவு கண்ட ஞானிகளை எச்சமய எல்லைக்குள்ளும் அடைத்து வைக்க இயலாது. அவ்வாறு அவர்கள் மாறுவதால் யாருக்கும் எக்குற்றமும் வந்துவிடாது என்று சமரச சன்மார்க்கத்தின் முதல் விதைக்கும் புனித மலர்கரங்களால் நீர் ஊற்றி நிற்கிறார் சாந்தலிங்க அடிகளார். ஒன்றுக்கொன்று விரோதம் நீங்காத ஆறுவகைச் சமயங்களையும் விரோதம் அற்றுப் பார்க்கும் நிலையே ஞானம் அந்த மெய்ஞ்ஞானம்

அடைந்தவரே மெய்ஞ்ஞானிகள் மற்றையோர் எல்லோரும் பொய்ஞ்ஞானிகள் என்று சொல்லாமற் சொல்லுகின்றார். சாந்தலிங்க பெருமாள் அறிவுத் தேடல் ஞானத்தின் முடிவு எனப்படும். சித்தாந்தம் இதுவேயாகும் என்று அறுதியிடுகிறார் அடிகள்.

உலகம் ஒரு குடும்பம் என்று கூடி விரும்புகின்ற இந்தக் காலத்தில் தமிழ் நாட்டார் கண்டு உவந்த போது நெறியை உலகத்திற்கு விளக்கும் கடமை தமிழனது தலையாய கடமையாகும்.

இந்த தொண்டில் சாந்தலிங்கர் வழி வந்து அவர் பெயரால் விளங்கும் சாந்தலிங்கர் மடத்திற்கும் பெரும்பங்கு உண்டு. அவிரோத உந்தியாரை நம் நாட்டில் பல மொழிகளில் மொழியெர்த்தும் விளக்கியும் வரும் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் சாந்தலிங்கரின் சித்தாந்தத்தை பின்பற்றி சாந்தலிங்க அடிகள் வழியில் சாந்தலிங்க இராமசாமி அடிகள் செயல்பட்டு வருகிறார்.

அடிகளாரின் சிந்தனையும் செயல்பாடும்

அடிகளார் அவர்கள் தனது இனம் வயதில் பெற்றோர்களுடன் முதலிபாளையம் சிறைத்தோட்டத்தில் வேளாண்மை செய்து வந்த காலத்தில் ஊரில் தொழில் செய்யும் தொழிலாளர்கள் தோட்டத்து வேலைக்கு தினசரி வருவார்கள் அடிகளார் அவர்களும், அவர்களுடன் சேர்ந்து தோட்டத்து வேலைகள் செய்வதோடு அவர்களுடன் சாதிபோதமில்லாமல் மனிதநேயத்தோடு பழகி வந்த அடிகள் துறவுபூண்டு பேரூர் மடாலயத்தில் அருளாச்சி செய்யும் போதும் சாதிபேதம் பாராமல் அனைத்து சமுதாய மக்களையும் அரவணைத்து திருவேள்விகள் வழிபாடுகள் செய்வதற்கு அடிகள் வழிகாட்டி வந்தார்.

உயர்ந்தவன் தாழ்ந்தவன் ஏழை பணக்காரன் என்ற நிலை நீங்கி அனைவரும் சமநிலை போற்றும் பாங்கு வளர வேண்டும். இந்நிலையில் மனித சமுதாயம் மகத்தான இடத்தை வந்தடையும் என்பனவான அறச்சிந்தனைகள் அடிகளுடையதாக அமைகின்றன. திருக்கோயில் வழிபாட்டில் மட்டுமின்றி திருக்கோயில் பூசை வேள்வி முதலான நடை முறைகளிலும் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என வேறுபாடு காட்டாது. அனைவரையும் அனுமதித்து ஈடுபடச் செய்வதும் அறவுணர்வினர் அடிகள் என்பதற்குச் சான்றாக அமைகிறது.

சாதி வேற்றுமை நீக்குதல் சாதியொழிப்பு என்ற அறச்சிந்தனையுடைய, அடிகள் அதற்காகப் பல்வேறு வகையான செயல்படுகளையும், அறிவுரைகளாக நெறிப்படுத்தி வருகிறார். தாழ்த்தப்பட்டோர், முன்னேறிய சமுகத்தினர் என இருதரப்பினரையும் அழைத்துச் சமய நிகழ்ச்சிகள் நடத்துதல், அவர்கள் வாழும் பகுதிகளுக்கு நேரில் சென்று அவர்களது இல்லங்களில் திருவிளக்கு ஏற்றுச் செய்தல் திருவிளக்கு வழிபாடுகளில் பெருமளவில் கலந்து கொள்ளச் செய்தல், அறநெறிக் கருத்துக்களைப் பேச்சுக்களின் வழிவிளக்குதல் சிறுசிறு நூல்களை அச்சடித்துக் கொடுத்துப் படிக்கச் செய்தல் ஆகியவற்றை நடத்திக்காட்டி நமது அடிகள் அவர்கள் ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளார். சாதி மோதல்களைக் களைய அடிகள் காட்டும் நன்னெறிகளால் மக்கள் பயன்பெற்று வருகின்றனர்.

அனைத்து சமுதாய மக்களையும் பேரூர் திருக்கோயிலுக்கள் கருவறை சென்று நீரும், பூவும் இட்டு வழிபடும் முறையை அடிகள் ஏற்படுத்தி தந்துள்ளார். இதனால் சமுக நல்லினக்கம் வளர்ந்துள்ளது. மனிதன் கூடிய வாழும் இயல்புடையவன், அவ்வாறு வாழும் இடத்தில் இணக்கம் வேண்டும். அவ்விணக்கம் நல்லிணக்கமாக அமைய வேண்டும் இத்தகு சிந்தனைகள் போரடிகளாரின் அறச்சிந்தனைகளாக மலர்ந்து தெய்வ வழிபாடுகளில் சாதிப்பாகுபாடுபாராமல் மக்கள் ஒன்றுபட்டு வழிபாடுகள் செய்ய வேண்டும் என்று ஆன்மீக அன்பர்களிடம் விளக்கி சமுதாய நல்லிணக்கமுடன் வழிபாடு செய்திட அடிகள் வலியுறுத்தி வந்தார்.

விஜயபாரதம் இதழுக்கு அடிகள் அளித்த நேர்காணல் செய்தி

தமிழ் வழிபாடுகள் குறித்தும் சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு சாதியப்பாகுபாடுகள் குறித்து தேசிய வார இதழான விஜயபாரதத்தின் இதழுக்கு 14.4.2000 ஆம் ஆண்டு பேரூர் அடிகள் அளித்த நேர்காணல் செய்தி.

தேசிய வார இதழான விஜயபாரதத்தின் கோவைச் சிறப்பிதழிலும் **14.4.2000.** அடுத்த இதழிலும் **(21.04.2000)** தவத்திரு அடிகளாரது நீண்ட நேர்காணல் வெளியானது. பல்வேறு சமூக பிரச்சனைகள் தொடர்பான அன்பர்களின் ஐயங்களைத் தீர்ப்பதாக உள்ள அந்த நேர்காணல் இங்கு வெளியாகிறது.

கேள்வி : சாந்தலிங்கர் திருமடம் பற்றித் தாங்கள் சிறிது கூற வேண்டும்.

திருக்கயிலாயப் பரம்பரை, மெய்க்கண்ட சந்தானம் கொடி வழியில் வந்த சாந்தலிங்க சுவாமிகளால் நிறுவப்பட்டது, சாந்தலிங்கர் திருமடம். இதன் நெறி வீரசைவம். திருமிகு தமிழால் வழிபாடுகள் நடத்துவது இதன் சமயநெறி. நலிவுற்றோர், தாழ்த்தப்பட்டோர், மிகப்பின்தங்கிய மக்களுக்கான உதவிப்பணிகளைச் செய்வதே இதன் சமுதாய நெறியாகும்.

கேள்வி : சிறைச்சாலையிலுள்ள கைதிகளிடையே சென்று தாங்கள் ஆன்மிகப் பிரசாரம் செய்தது குறித்தது?

அவர்களைக் கைதிகள் என்று சொல்வது தவறு. நாமும் கூட கைதிகள்தான். உண்மையில் சிறைக்குள் இருக்கவேண்டிய பலர், வெளியே நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். எனவே சிறைவாசிகளை “அகப்படுத்தப்பட்டவர்கள்” என்று தான் சொல்ல வேண்டும். அவர்களது வாழ்க்கை, செம்மையுறப் பணியாற்றுவதும் அவசியமாகிறது. அதற்காகவே சிறைவாசிகளிடையே வாழ்வியல் போதனைகளைப் பல வருடங்களாகச் செய்து வந்தோம். கோவைச் சிறையில், இது பல வருடங்கள் நடந்தது. சிறைக்குச் சென்று நாள் முழுவதும் அவர்களுடன்

இருப்போம். அவர்களைக் கொண்டே உள்ளே இசைப் பாடல்களைப் பாடச் செய்வதுண்டு, இன்று நாம் அவ்வப்போது சென்று வருகிறோம். மற்றவர்கள் தொடர்ந்து சென்று பார்த்து வருகிறார்கள்.

சிறைவாசிகளிடையே சமய விழிப்புணர்வுப் பணியை கிறிஸ்துவ, இஸ்லாமிய மதப் பொறுப்பாளர்கள் செய்து வருகிறார்கள். ஆனால், தமிழ் மக்களோ இத்தகைய ஏற்பாடு இல்லாமல் இருக்கிறார்கள். அதற்காகவே நாம், இந்த முயற்சியை மேற்கொண்டோம். இதனால், நல்ல மாற்றங்களும் ஏற்பட்டிருக்கின்றன, உதாரணமாக, பாலதண்டாயுதம் என்ற, கடவுள் நம்பிக்கையற்ற, கம்னிஸ்டுத் தலைவரை எனது சிறைச்சாலைச் சந்திப்பு மாற்றியிருப்பதைச் சொல்லலாம். சைவ சித்தாந்தப் பாடம் கேட்க விரும்பிய அவருக்கு, சிறையில் ஓர் ஆண்டு பாடம் நடத்தினேன். அதன்பிறகு அவர், ‘இதுவரை நான் இத்தனை செய்திகளைத் தெரிந்து கொள்ளாமல் போனேனே’’ என்று வருந்தினார். ‘போலீஸ்காரன் இல்லாத நாடு எப்படியோ, அதேபோலத்தான் சமயம் இல்லாத வாழ்வியல்,’ என்று மனப்பூர்வமாக மேடையிலேயே அவர் பேசினார். நெறிப்படுத்துவதன் வாயிலாக கடுமையான உள்ளங்களையும் மாற்ற முடியும் என்பதற்கு, இது சான்றாகும்.

கேள்வி : தமிழில் சமயவழிபாடு நடத்துவதில் சாந்தலிங்கர் திருமடம் ஆற்றும் பணிகள் குறித்து?

மேலைச் சிதம்பரம் என்றழைக்கப்படும் பேரூரில் 1953ல் தமிழில் அர்ச்சனையைத் துவக்கினோம். இதுவே தமிழில் வழிபாட்டுக்கான முதல் பெரிய முயற்சி என்று சொல்லலாம். திருமணச் சடங்குகள், புதுமனை புகுதல், நீத்தார்கடன் போன்ற வாழ்வியல் சடங்குகள் அனைத்தையும் தமிழிலேயே செய்வதற்கான பயிற்சிகளை அளித்து வருகிறோம்.

கோடைக்காலப் பயிற்சிகள் வாயிலாக, ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் இத்தகு தமிழ் வழிபாட்டை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள். கடந்த 45 ஆண்டுகளில் ஏறக்குறைய 3000 கோயில்களில், சிற்றூர்கள் தோறும் திருக்குட நன்னீராட்டு விழாவை தமிழில் நடத்தியிருக்கிறோம்.

தமிழில் வழிபாடு என்றவுடன் ஏதோ எங்களது புதிய முயற்சி என்று கருதக்கூடாது. தேவாரம், திருவாசகம், திருமந்திரம் போன்ற

அருளாளர்களின் அருட்செல்வங்களைப் பயன்படுத்தியே வழிபாடு நடத்துகிறோம்.

பிட்டுக்கு மண் சுமந்த எளியவனாக ஈசனை நம் கண்முன் நிறுத்தியது. தமிழ், முதலைவாய்ப்பட்ட பிள்ளைக்கும், சுண்ணாம்புக் காளவாயில் இடப்பட்ட பக்தருக்கும் அருளியதும் தமிழ்தான். அப்படிப்பட்ட அருட்பாடல்களைப் பாடியே வழிபாடுகளை நடத்துகிறோம்.

கேள்வி : 'வடமொழியும் தென்தமிழும் ஆனாய் போற்றி' என்று சமயக்குரவர்களில் ஒருவரான அப்பர் கூறியிருக்கிறாரே?

நாம் வடமொழியை என்றும் வெறுக்கவில்லை. வடமொழியிலுள்ள வேதங்களும், ஆகமங்களும் தவறு என்று நாம் சொல்லவில்லை. அதற்காக தமிழில் வேதம் இருக்கக்கூடாது என்று கருதலாமா? கடவுள்தன்மை உடையவர்களால் அருளப்படுவதே வேதங்களாகும். கடவுள்தன்மை உடையவர்களுக்கு எல்லா மொழியும் தெரியும். 'எழுதுமறை மொழிந்த பிரான்' என்று ஞானசம்பந்தரின் வாழ்க்கை பற்றி சேக்கிழார் குறிப்பிடுவார். ஆகவே வேதவழி என்பது எந்த ஒரு மொழிக்கும் சொந்தமானதல்ல. அனைத்து மொழிகளுக்கும் தொடர்புடையது என அறியலாம்.

மொழி என்பது வெறும் கருவிதான், சமயமே, மூலமானது. மருத்துவ சாத்திரத்தை ரஷ்யமொழியிலும், சீன மொழியிலும், ஏன், இந்திமொழியிலும் கூட மொழிபெயர்த்துப் பயன்படுத்தி வருகிறார்களே! அதுபோலத்தான். நாம் அனைத்து மொழிகளையும் மதிக்கிறோம். அதே சமயம், உணர்ந்த மொழியில் வழிபாடு இருப்பின் சிறப்பு என்று வலியுறுத்துகிறோம்.

"நிறைமொழி மாந்தர் ஆணையில் கிளந்த மறைமொழிதானே மந்திரம் எனப" என்று தொல்காப்பியம் கூறும், நிறைமொழி மாந்தர்கள் வடமொழியில் மட்டும்தான் இருப்பார்கள் என்று சொல்லமுடியாது. அனைத்து மொழிகளிலும் இருக்கலாம். இதனையே திருவள்ளுவர். நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும் என்று சொன்னார்.

தேவாரத்தையும், திருவாசகத்தையும், அருட்பாடல்களையும் அபிராம பட்டரையும் பார்க்கிறபோது அவர்களது மறைமொழியின் அருமை நமக்குப் புரிகிறது. தமிழ்ப்பாடலின் மூலம் முருகனைத் தோன்ற செய்த (கம்பத்து இளையனார்) அருணகிரி நாதரை மறக்க முடியுமா?

கேள்வி : ஆலயங்களில் தமிழில் வழிபாடு சிறந்ததா? சமஸ்க்ருதத்தில் வழிபாடு சிறந்ததா என்ற சர்ச்சை இன்றும் நீறுபூத்த நெருப்பாக இருந்து கொண்டிருக்கிறது. இதற்குத் தாங்கள் கூறும் சுமூகமான தீர்வு என்ன?

தமிழில் வழிபாட்டைச் செய்வதில் அக்கறை காட்ட வேண்டும். வேத வழிபாட்டிலும், ஆகம வழிபாட்டிலும் நமக்குக் கசப்புணர்வு கிடையாது. ஆனால், மக்களுக்குத் தேவையானவற்றைச் செய்வது, இன்றைய சமய உலகிற்கு அவசியமான ஒன்று. கோயில் செல்கின்ற மக்கள், பொழுதுபோக்கிற்காகவோ, வேடிக்கை பார்ப்பதற்காகவோ, நினைக்காமல் தங்களுடைய மனம் ஒன்றி, கடவுளை வழிபட வாய்ப்பு என்ன? இதற்குத் தமிழில் வழிபாடு செய்வதுதான் உறுதுணையான காரணமாக இருக்கும். இதை மறுப்பதற்கான காரணம் புரியவில்லை.

வீட்டிலிருக்கும் வரை தமிழில் பேசுபவன், கடவுளிடம் மட்டும் ஏன் வேற்றுமொழியில் பாடவேண்டும்? அதுவும் நம்மால் கடவுள் அருள் பெற்றவர்களாகக் கருதப்படும் ஆன்றோர்கள் அருளிச் செய்த பாடல்களைச் சொல்லுவதில் தயக்கம் ஏன்?

கேள்வி : ஒருவேளை, இந்த விவாதம் அரசியல்படுத்தப்பட்டதால் சர்ச்சையாக மாறியிருக்கலாமோ?

இல்லை, பெரும்பாலும் ஆதிக்க உணர்வின் வெளிப்பாடாகவே இதனைக் கருத வேண்டியுள்ளது. அரசின் தலையீடும், சிக்கலை ஏற்படுத்தியுள்ளது உண்மையே. அதிலும் கடவுள் நம்பிக்கையற்ற ஒருவர் இதைச் சொல்லும்போது, இவர் எதற்கு ஆன்மிகச் செயல்பாடுகளில் தலையிடுகிறார் என்ற கோபம் எழுவது இயற்கையே.

கேள்வி : அடிப்படைக்கல்வி தாய்மொழியில் இருக்க வேண்டும் என்பதிலும்கூட சர்ச்சை தொடர்கிறதே?

தமிழ்வழிக் கல்விக்கு இடையூறு ஏற்படுத்துவது நல்லதல்ல, உலகின் எந்த மூலையிலும் தாய்மொழிக் கல்வியின்றி வேறு மொழிகளில் கல்வி கற்பிப்பதாக ஆதாரம் காட்ட அந்த எதிர்ப்பாளர்களால் முடியுமா? நானும் பல நாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறேன். அங்கெல்லாம் தாய்மொழிக் கல்வியே இருக்கிறது.

நான் கயிலாயமலைக்குச் சென்றிருந்தபோது நடந்த நிகழ்ச்சி இது. அங்கு எங்களுக்கு உதவுவதற்காக ஆங்கில மொழிப் பெயர்ப்பாளரை அழைத்துச் சென்றிருந்தோம். ஆனால் அங்கிருந்தவர்கள் ஆங்கிலத்தில் சொல்வதை ஏற்கவில்லை. வேறு ஏதாவது பாரத மொழியில் மொழிப்பெயர்ப்பாளரை ஏற்பாடு செய்யும்மாறு அங்கிருந்தவர்கள் கூறினார்கள். (கயிலாயத்தில் சீன மொழியிலேயே சடங்குகள் நடத்துகிறார்கள்) அதன்படியே நடந்தது. எனவே, ஆங்கில மோகத்தில் தாய்மொழியான தமிழைவிட்டு நீங்கிவிடக்கூடாது.

கேள்வி : பேரூரில் தமிழ்க்கல்லூரியைத் தாங்கள் தொடங்கியிருக்கிறீர்கள். இது எந்தச் சூழ்நிலையில் துவக்கப்பட்டது?

தமிழ்க்கல்லூரி என்பது எனது புதிய சிந்தனையல்ல. தமிழகத்தில் வடமொழி ஆதிக்கம் வலிமையாக இருந்த அந்தக் காலகட்டத்தில், 1936–37களில், தமிழ்க்கல்லூரிகள் தமிழகத்தின் சில இடங்களில் துவக்கப்பட்டன. திருவையாறு கல்லூரி வடமொழிக் கல்லூரியாக இருந்தபோது, தமிழுக்காக ஒரு இயக்கம் அங்கு உருவானது. அதையடுத்து தமிழுக்காக அரசிடம் கோரிக்கை விடப்பட்டது. கா.நமச்சிவாய முதலியார் காலத்தில் தமிழில் பாடத்திட்டமும் வகுக்கப்பட்டது. அது 1937ல் நடைமுறைக்கு வந்தது. உ.வே.சா. போன்ற பெரியோர்களும், தமிழ்ப் புலவர்களும் அதற்கான நூல்களைத் தொகுப்பதில் முனைந்தனர். மயிலம், கரந்தை போன்ற இடங்களிலும் தமிழ்க்கல்லூரிகள் துவங்கின. 1940க்குப் பிறகு, திருமடங்கள் இந்தக் கல்விப் பணியில் நுழைந்தன. தருமபுரம், திருப்பனந்தாள் ஆகிய மடங்களைத் தொடர்ந்து, 1952–53களில் பேரூரில் நாம் தமிழ்க் கல்லூரியைத் தொடங்கினோம். ஆர்.கே.சண்முகம் செட்டியார், கோவைக்கிழார், வெ.சி.சுப்பையா கவுண்டர் போன்ற சான்றோர்களில் துணையோடு இது நிறுவப்பட்டது.

கேள்வி : தமிழகத்தில் பல திருமடங்களும், ஆன்றோர்களும் இருந்தும்கூட, மக்களிடையே சாதி உணர்வு மங்கவில்லையே, இதற்கு என்ன காரணம்?

இது இடைக்காலத்தில் ஏற்பட்ட சிக்கல், பழங்காலத்தில் சாதி வேறுபாடுகள் இருந்ததில்லை என்பதற்கு பெரிய புராணம் சான்று பகர்கிறது. பெரிய புராணத்தில், அப்பூதியடிகள் வீட்டிற்கு அப்பரடிகள் சென்றபோது, அவரது திருப்பாதங்களை நீரால் கழுவி, தனக்கு மட்டுமல்லாது தனது குலத்தினர் அனைவர் மீதும் அதனைத் தீர்த்தமாகத் தெளித்ததைக் காண்கிறோம். அந்தக் காலத்திலும் சாதி இருந்திருந்தாலும், சாதி உணர்வுகள் இல்லாமல் இருந்துள்ளது. திருஞானசம்பந்தருடன் சென்ற பாணர் ன்ற தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருருக்கு, வேள்விச் சாலையில் இடமளித்ததையும் காண்கிறோம். அந்தணரும் வழிபடலாம், வேடனாகிய கண்ணப்பரும் வழிபடலாம் என்ற வகையில் சமூக ஒருங்கிணைப்பை சமயம் ஆற்றியிருக்கிறது.

சாதி உணர்வுகளைக் குறைப்பதில், முற்கால சமய அருளாளர்கள் முனைந்துள்ளனர். திருத்தொண்டர் புராணத்தில் அனைத்து சமுதாயத்தைச் சார்ந்தவர்களும் நாயன்மார்களாக இருப்பதைக் காணலாம். ஆழ்வார்களிலும் அப்படியே. இதைவிட ஒருபடி மேலாக, முருகனின் ஒரு புறத்தில் வள்ளியையும் (குறமகள்) மறுபுறத்தில் தேவயானையையும் (தேவ மகள்) இடம்பெறச் செய்தது நமது சமயம். ஆனால், வள்ளியைக் கோயிலுக்குள் அனுமதிப்பவர்கள். வள்ளியின் குலத்தினை கோயிலுக்குள் அனுமதிக்க மறுப்பது என்ன நியாயம்? இது மாற்றப்பட வேண்டும்.

கேள்வி : இன்றும் பல கிராமங்களில், கோவை மாவட்டத்தின் பல பகுதிகளில்கூட, இரட்டைக் குவளை முறை அனுசரிக்கப்படுகிறதே, இதனை மாற்ற சமயப் பெரியோர்களான தங்களைப் போன்றோர் எந்தவகையில் செயலாற்றுகிறீர்கள்?

வழிபாட்டு முறைகளிலும்கூட நாம் இதனையே வலியுறுத்துகிறோம். புரியாத ஒன்றைச் சொல்வதைவிட, புரிந்த ஒன்றைச் சொன்னால், அதை மனித மனம் நாடவே செய்யும். ஆகவே புரிந்ததைச் சொல்லும் இடத்துக்கு மதம் மாறுவதும் நடக்கிறது. தன்னோடு வந்தால், சமமான மதிப்புத்

தருவதாக பிற மதத்தவர் சொல்லும்போது அதேபோன்ற ஈர்ப்பு ஏற்படுவது இயல்புதானே? அப்படி மதம் மாறுபவன், தான் இந்த நாட்டிற்கும், பண்பாட்டிற்கம் எதிரியாகப் போகிறோமே என்று சிந்திப்பதில்லை. பின்பு, தூண்டில் மீன்போலத் துன்பப்படுகிறான். நமக்கோ, இருபுறமும் தொல்லைகள். ஒருபுறம், ஜாதிவாத, பழமைவாதத் தொல்லைகள்; மறுபுறம், மதமாற்றச் சிக்கல்கள்.

கேள்வி : புதிது புதிதாக ஆலயங்கள் கட்டப்பட்டுவரும் அதே நேரத்தில், பழம்பெரும் கோயில்கள் கூட, கவனிப்பாரின்றிப் போகின்றனவே?

இது சரியான முறையல்ல. பழைய கோயில்களைச் சீர்திருத்தம் செய்வதே முதல்பணி, அதுவே, முன்னோர்களை மதிக்கும் நமது உணர்வுகளின் பிரதிபலிப்பாக இருக்க முடியும். நமது மக்கள் அவ்வப்போது சமயத்துறையிலும் கீழிறங்கி விடுகிறார்கள்.

சாக்கடை மீது கூட கோயில்களைக் கட்டுகிறார்கள். இதை எப்படி ஏற்கமுடியும்? இதனைக் கட்டுப்படுத்த நமக்கு யாரும் இல்லை. மலேசியாவில் இப்படி இல்லை. பல்சமயக் கூட்டமைப்பு ஒன்று அங்குள்ளது. அவர்களது மதிப்பீடு மற்றும் அனுமதிக்குப் பிறகே அங்கு எந்த ஒரு சமய ஆலயமும் எழுப்பப்பட முடியும். அதுபோன்ற நெறிப்படுத்தும் அமைப்பு நம்நாட்டிற்கும் தேவை.

கேள்வி : இந்து ஆலயங்களை அரசின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்க வேண்டும் என்ற நீண்ட காலமாகத் தாங்கள் குரல் கொடுத்து வருகிறீர்கள். அந்த இயக்கம், தற்போது எந்த நிலையில் உள்ளது?

இது நீண்ட நாட்களாக எழுப்பப்பட்டுவரும் கோரிக்கை. மக்களிடமுள்ள வாக்குச்சீட்டுதான் இதற்குப் பதிலளிக்க முடியும். மக்கள் தமது வாக்குச்சீட்டின் மகிமையை உணராதவரை, எந்த ஆட்சி வந்தாலும் இந்தச் சூழ்நிலை மாறாது. அதுவரை, பா.ஜ.கவே நாளைக்கு ஆட்சிப் பொறுப்பேற்றாலும்கூட, ஆலயங்களை விட்டுத்தருவது கடினமானதாகவே இருக்கும். மக்கள் விழிப்புணர்வு, வாக்குச்சீட்டில் பிரதிபலிக்கும்போது இதில் தானாக மாற்றம் வரும்.

கேள்வி : மதவெறியர்களின் செயல்பாடுகளாலும், வெடிகுண்டுச் சம்பவங்களாலும், சமீபகாலமாக கோவை மாவட்டத்தின் இயல்பான அமைதி குலைந்துள்ளது. இதற்குத் தீர்வு என்ன?

இந்த மதக் கலவரங்களுக்கு இரண்டு வகையான காரணங்கள் உள்ளன. இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புகள் வேகமாகப் பரவுவதற்கு, நமது மக்களே காரணமாகிவிட்டார்கள். இரண்டாவது, அரசும் அவர்களுக்குத் துணைபுரிந்துவிட்டது. இதன் காரணமாக, தங்களைக் கேள்வி கேட்கயாரும் இல்லை என்று அந்த பயங்கரவாத அமைப்புகள் செயல்பட்டுவிட்டன. இதைச் சரிப்படுத்துவது சிரமமாகிவிட்டது. நானும்கூட, இஸ்லாமிய அமைப்பினரிடையேயும் ஜமாத்துகளிலும் சென்று, இதற்காகப் பேசியிருக்கிறேன். மௌல்விகளே என்னை அழைத்தும் இருக்கிறார்கள்.

நான் அவர்களிடம், 'நீங்கள் சிக்கல் பெரிதான பிறகு வந்திருக்கிறீர்கள். சரி, இருக்கட்டும். உங்கள் கட்டுப்பாட்டில் உள்ளவர்கள்தானே உங்கள் இளைஞர்கள்? ஜமாத்துக்குக் கட்டுப்படாமல் ஒரு இஸ்லாமியக் குடும்பம் இருக்கமுடியாது. அப்படியிருக்க, உங்கள் ஜமாத்துக்குக் கட்டுப்பட்டவன்தானே இந்த குண்டுவெடிப்புகளில் ஈடுபட்டிருக்கிறான்? அப்போது நீங்கள் என்ன செய்தீர்கள்? என்று கேட்டேன். அதற்கு அவர்கள், அந்த இளைஞர்கள் தங்களுக்குக் கட்டுப்படுவதில்லை என்று சொன்னார்கள். அப்படியானால், ஜமாத்துக்குக் கட்டுப்படாத கூட்டம் அது என்பதை உங்கள் சமுதாயத்திற்கு ஏன் வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை? அவர்கள் இஸ்லாமிய மார்க்கத்துக்கு மாறானவர்கள்; அவர்களது வன்முறைச் செயல்களுக்கு இஸ்லாமிய மார்க்கம் பொறுப்பல்ல என்று ஏன் தெளிவுபடுத்தவில்லை? அரசாங்கத்திடம் இது பற்றி ஏன் பேசவில்லை? நீங்கள் இவற்றைச் செய்யாதபோது, அவர்களது வன்முறைகளுக்கு உங்களைத்தானே குற்றம் சாட்ட வேண்டியிருக்கிறது? என்று பொது மேடையிலேயே அவர்களிடம் இதனைக் கேட்டேன்.

இதற்குத் தீர்வு, அரசின் கடுமையான நடவடிக்கையும், நமது இசைவான நல்லிணக்கமும்தான், 'வன்முறை நமக்குத் தேவையற்றது. உங்கள் கவனத்தைக் கல்வியில் செலுத்துங்கள், சுய முன்னேற்றத்தில்

செலுத்துங்கள் நாமும் அவர்களிடம் வலியுறுத்த வேண்டும். இருதரப்பிலும் கனிவான அணுகுமுறை தேவை. அடிக்கடி கூடிப்பேசுவது ஐயங்களைப் போக்கும். அதேசமயம், இஸ்லாமியர்களிடையே சில மாற்றங்களை நமது சமுதாயம் எதிர்பார்க்கிறது. உதாரணமாக, விஸ்வநாதர் காசியிலுள்ள கோயிலை மீட்க முடியவில்லையே என்ற வருத்தம் நமக்கு உள்ளது. ஆட்சி நிலவும் ஜனநாயக காலகட்டத்தில், பெரும்பான்மையினரின் உணர்வுகளை மதித்து விட்டுக் கொடுப்து தானே நியாயம்? இதைத் தடுப்பது யார்? அரசியல்வாதிகள் தானே? இந்துக்கள் எல்லோரும் ஒன்றுபட்டாலே எல்லோரும் ஒழுங்காக இருப்பார்கள். இந்திரகாந்தி ஒரு முறை சொன்ன கருத்து எனக்கு மிகவும் நன்றாக நினைவில் இருக்கிறது. சிறுபான்மை மக்களுக்கு அதிகார வர்க்கமும் அரசும் மட்டுமே பாதுகாப்புத் தந்துவிட முடியாது. பெரும்பான்மை சமூகத்தோடு இணைந்து வாழும்போது தான் முழுமையான பாதுகாப்புக்கு உத்தரவாதமாக இருக்கும் என்று அவர் சொன்னார்.

கேள்வி: பொதுவாகவே அனைத்து சமுதாயத்தினரிடையேயும் ஆன்மீக உணர்வு குறைந்து வருவதாகச் சிலர் கூறுகிறார்களே?

அப்படிச் சொல்லமுடியாது. திராவிடர் கழகம், சமயத்துக்கு எதிராகப் புறப்பட்டது. அது இன்று அழிந்துவிட்டது. கம்யூனிஸம் வந்தது. அதுவும் காணாமல் போய்விட்டது. சமய உணர்வுக்கு எதிரானவை, இந்தநாட்டில் நிலைபெற முடியாது, குங்குமப் பொட்டையும் தீ மதித்தலையும் விமர்சித்துவிட்டு, தமிழக முதல்வர் பட்ட பாட்டை யாரும் மறந்துவிடமுடியாது. சமய உணர்வு, இந்த நாட்டின் மண்ணோடு கலந்தது.

கேள்வி : தாங்கள் நீண்ட நாட்களாக ஆர்.எஸ்.எஸ். மற்றும் இதர இந்து இயக்கங்களுடன் தொடர்பில் இருந்து வருகிறீர்கள். ஆர்.எஸ்.எஸ். பற்றித் தங்களது கருத்து?

ஆர்.எல்.எஸ், ஒரு கட்டுக்கோப்பான இயக்கம், அவர்கள் பெரும்பாலும் தங்கள் நடைமுறைகளை நெறிப்படுத்தி வாழ்ந்து வருகிறார்கள். அவர்களது உணர்வுகளைப்பற்றி நான் அதிகம் சொல்ல முடியாது. சில இடங்களில் அவர்கள் தீவிரமாகச் செயல்படலாம். அதற்குக் காரணம், தன்னைப் பற்றிய சிந்தனையன்றி தேசம் மீதான கவலையே அதிகம் இருப்பதாக இருக்கலாம். போர்முனையில் தனது நிலையை

உறுதிப்படுத்த முயலும் தேசபக்த வீரனைப்போலவே அவர்கள் செயல்படுகிறார்கள். கட்டுப்பாடான, நெறிமுறைகள் மிக்க இயக்கம், ஆர்.எஸ்.எஸ்.

கேள்வி : 'விஜய பாரதம்' வாசகர்களுக்கு தங்களது புத்தாண்டு ஆசியுரை?

இமயம் முதல் குமரி வரை உள்ள இந்தத் திருநாட்டில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக கடவுள்நெறியில் தங்களை இணைத்துக்கொண்ட, கடவுள்நெறிப்பட்ட அருளாளர்கள், மொழியினங்களுக்கு அப்பாற்பட்டு வாழ்ந்து காட்டியுள்ளார்கள். அவர்களுடைய அருள்மொழிகள் மனிதகுலத்திற்கு எக்காலத்திற்கும் ஏற்புடையதாக விளங்குகின்றன. நம்முடைய திருமந்திரம், 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்; நன்றே நினைமின்கள்' என்று சொல்கிறது. இது உலகிற்கே பொதுவான, 'சேர வாரும் ஜெகத்தீரே' என்ற வாசகம் உலகையே அழைக்கிறது.

நமது முன்னோர் மரபு, ஒருவக ஒருமைப்பாட்டுக்கு வழிகாட்டுகிறது. அதே சமயத்தில், இந்நாட்டின் பண்பாடு, அறநெறி, வழிபாடு ஆகியவற்றை முறையாகக் கடைப்பிடித்து, வாழ்ந்து காட்டிய பெருமை உடையது, ஒருலக ஒருமைப்பாட்டை வலியுறுத்தியதால், தனது சமயத்தையோ, பண்பாட்டையோ, அறநெறியையோநமது முனிவர்கள் விட்டுக் கொடுத்து விடவில்லை. எனவே நம் காலத்தில், பல்குழுவும், பாழ் செய்யும் உட்பகையும் வளராத வண்ணம் நமது பணிகள் தொடரவேண்டும். நம் முன்னோர்கள் காட்டிய வழியில், இளைய சமுதாயம் நெடிய பாரம்பரியத்தை எண்ணிப்பார்த்து, 'நாம் இதற்கு சொந்தக்காரர்கள்' என்ற உணர்வோடு தங்கள் முன்னேற்றத்தில் ஈடுபட வேண்டும்.

நம்முடைய முன்னோர்கள் நமது திருக்கோயில்களை கலைச்செல்வம் நிறைந்த புனிதத் தலங்களாகப் போற்றி வளர்த்தார்கள். உலகமே வியக்கும் அத்தகு அற்புதப் படைப்புகளை, பொலிவுடன் பேண வேண்டியது இளைய சமுதாயத்தின் கடமை ஆகும். அரசின் பிடியிலிருந்து ஆலயங்களை விடுவிக்கும் உறுதி மேலிடும் அதே வேளையில், அந்த மாற்றம் வரும்வரை காத்திராது, நம்மால் இயன்றவகையில் வழிபாட்டுக் குழுக்கள் அமைத்துச் செயல்பட வேண்டும்.

குறிப்பாக, வழிபாட்டுணர்வு மிகுந்த மகளிரைக் கொண்டு கூட்டு வழிபாடுகளையும், திருவிளக்கு வழிபாடுகளையும் நடத்துவது மிகுந்த பயன் நல்கும். திருக்கோயில் வளாகம் தூய்மையோடு இருப்பதற்காக, அறநிலையத் துறையை முழுவதுமாக நம்பியிராமல், தொண்டு நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள், வங்கிகளின் உதவியுடன் அவற்றைப் பராமரிக்கலாம். இது சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வரிச்சுமைக் குறைப்புக்கு உதவியாகவும் இருக்கும். ஆலயங்களிலுள்ள கல்வெட்டுக்கள், சிற்பங்கள், ஓவியங்களைப் பாதுகாப்பதும் பக்தர்களின் கடமையாகும்.

கோவைச் சிறைச்சாலையில் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் அருட்பணிகள்

அருள்மிகு அடிகளார் அவர்களின் அறிவியல் சிந்தனையின் வெளிப்பாடாக அமைவது சிறைச்சாலையில் நிகழ்த்திய அறிவுரைகள் ஆகும். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் கோவையிலுள்ள மத்திய சிறைச்சாலைக்குச் சென்று அறிவியல் கருத்துக்களை உள்ளடக்கிய நீண்ட சொற்பொழிவுகளை ஆற்றியுள்ளார். அதில் முத்தாய்ப்புச் செய்தியாக அமைவது திரு.பாலதண்டாயுதம் என்பவரோடு தொடர்புடைய செய்தியாகும்.

திரு.பாலதண்டாயுதம் அவர்கள் பொதுவுடைமைக் கட்சியின் மிகப்பெரிய தலைவராக விளங்கியவர். இவர் பேரூரடிகளாரின் சிறைச்சாலைச் சொற்பொழிவுகளைக் கேட்டு, மனம் பக்குவப்பட, சைவ சித்தாந்தத்தை முழுமையாக அறிந்து கொள்ள வேண்டும் என்ற விருப்பத்தினால் பேரூரடிகளாரிடம் தொடர்பு கொண்டு சைவசிந்தாத்தைக் கற்றுணர்ந்தார். அடிகள் அவர்கள் 1955ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டுகள் கோவை மத்திய சிறையில் ஞாயிறுதோறும் அறச்சொற்பொழிவுகள் நடத்தினார். சிறைக்கைதிகளில் சில சிற்பிகளும், ஓவியர்களம் இருந்தனர். இவர்களைக் கொண்டு ஒரு விநாயகர் சிலை உருவாக்கப்பட்டது. ஓவியர்களைக் கொண்டு சிறைக்கூட்டத்தில் பல்வேறு தெய்வங்களின் உருவங்கள் வரையப்பட்டன. இந்நிகழ்ச்சி வழி தவறு புரிந்தோர் தங்கள் தவறுணர்ந்து தம் வாழ்க்கையைச் செம்மையாக்கி

வாழவேண்டும் என்ற அடிகளின் சிந்தனை மிக தெளிவாகிறது. இத்தகு அடிகள் அவர்களின் அரிய சிந்தனைச் செயலை அறிஞர் பலரும் போற்றியுள்ளனர்.


அடிகளிடம் நாளும் பாடம் கேட்டுத் தமிழ்க் கல்லூரியில் படித்ததன் விளைவு பேராசிரியராக, கல்வி முதல்வராக, பாவலராகப் பைந்தமிழ்த் தொண்டாற்றும் முனைவர். மு.சங்காரவேலன் அவர்கள் அடிகளைப் பாட்டுடைத் தலைவராக்கிப் பிள்ளைத்தமிழ் போற்றிப் பாடல் இசைத்துள்ளார். தாலப்பருவம், பத்தாம்பாடலில் இந்நிகழ்ச்சியையும் அடிகளின் இன்னபிற சாதனை நிகழ்ச்சிகளையும் புகழ்ந்து உவந்து போற்றியுள்ளார். அந்தப்பாடல்,

பற்பல நூற்கள் பதித்திரு கொங்கினன்
பால்தமிழ்த் தேனாவாய்!
பாதைவகுத்திடப் பாலதண்டாயுதன்
பணிந்திடும் கோனாவாய்!
சிற்சிலர் புகழும் ஜீவா தோழனாய்ச்
செழித்திரு நட்பானாய்!
தேவர் திருமகன் சேர்ந்திடு சேர்க்கையில்
தினகரனென நின்றாய்!
கற்றவர் வாழ்கலை இலக்கியப் பேரவை
கனிதமிழ்க் கூட்டானாய்!
காலந்தோறும் வாழும் ஆன்மீகக் கடலிலே
கண்டதோர் தேட்டானாய்!
அற்புதம் புரியுநற் சிற்பர தேசிக
அன்பே! தாலேலோ!
ஆத்திகர் நாத்திகர் அழபணி தவமுனி
அருளே! தாலேலோ!

என்ற அற்புத பாடலாகும். இப்பாடலில் குறிப்பிடப்பெறும் அரும்பணிகள் அத்தனையும் அடிகளின் அறச்சிந்தனையின் உருவாக்கங்களேயாகும்.

ஆய்வு நூல்கள், சமயநூல்கள் ஆகியவற்றைப் பதிப்பித்த சிறப்புக்கள் அறப்பதிவுப் பணிகளேயாகும். தோழர் பாலதண்டாயுதம் பணிந்திடும் கோனே! என்றும் தோழர் ஜீவா அவர்களின் ஆக்கப்பூர்வ

பணிகளுக்குத் துணை நின்றவரே! பொதுவுடைமையாரின் கலை இலக்கியப் பேரவையில் காட்டாறு என முழங்கிய சிங்கக்குரலையே! பலவகைத் தொண்டுகளால் துறவியர் செய்யாத அற்புதத்தொண்டுகளைச் செய்த சிற்பரரே! தேசிகரே! ஆத்திகரும் நாத்திகரும் இணைந்து உமது திருவடி பணியும் தவத்தால் உயர்ந்த தவமலையே! அருள் வடிவே! எனப்போற்றத்தகு செயல்களைச் செய்த சைவ அருள்வீரரே நமது அடிகளாவார்.



வேளாண்மைத் தொழிலைப் போற்றி வளர்த்திட்ட தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள்

வேளாளர்கள் தோற்றம்:

எல்லாம் வல்ல இறைவன் இறைவிகளின் அருளாச்சி குறித்து தெய்வீகப்புராணங்கள் பல உண்டு. அவைகளை ஆவணப் படுத்திய அருளாளர்கள் ஆன்றோர் சான்றோர்கள் புலவர் பெருமக்கள் நிறைந்த நம்நாட்டில் உலகில் உயர்ந்த தொழிலாக விளங்கிவரும் வேளாண்மைத் தொழிலை குலதொழிலாகவும், குடும்பதொழிலாகவும் காலம் காலமாகச் செய்யும் தொழிலின் பெயரையே தன் இனத்தின் பெயராகக் கொண்டு வாழ்ந்து வரும் வேளாண்குடி மக்களுக்கும் தெய்வ புராணங்களைப் போல் வேளாளர் புராணம் உண்டு. இந்நூல் ஏட்டு சுவடிகளாக இருந்து வந்ததை புதுப்பிக்க வேண்டிய வேளாளர் சமுதாயம் வேண்டிக்கொண்ட தன்பேரில் கொங்கு தென்கரைநாடு வீராச்சிமங்கலம் கந்தசாமிக் கவிராயர் அவர்கள் வேளாளர் புராணம் என்ற நூலை 29 படலங்களாகவும் 1373 விருத்தங்களுடன் இயற்றி கண்மவியம் பட்டியில் 1907ஆம் ஆண்டு சங்கரண்டாம்பாளையம் பட்டக்காரர் அவர்களின் தலைமையில் வெளியிடப்பட்டது.

அதன் பின்பு கோவை விளாங்குறிச்சி மருதாசலக்கவுண்டர் அவர்களால் வெளிவந்தது. மறைந்து போகும் நிலையில், பாரம்பரிய வரலாற்றுச் செய்திகளையும் ஆவணங்களையும் பாதுகாத்திட உதவிகள் செய்து வரும் கொடை வள்ளல் பொள்ளாச்சி அருட் செல்வர் மகாலிங்கம் ஐயா அவர்களின் முழு உதவியோடு கந்தசாமி கவிராயர் இயற்றிய வேளாளபுராணத்திற்கு ஐயா கோட்டத்துறைப் புலவர் பழனிச்சாமிக் கவுண்டர் அவர்களின் விளக்க உரையுடன் 636 பக்கம் கொண்ட பெரிய நூலை பதிப்பித்து 1999ம் ஆண்டு அருட்செல்வர் வெளியிட்டு வேளாளர்கள் சமுதாயத்தின் பாரம்பரியத்தை பாதுகாத்தார்.

வேளாளபுராணத்தில் வேளாளர் தோற்றம் குறித்து வரும் செய்தி:

தேவர்கள் சபை கூடி முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்து எண்ணாயிரம் ரிசிகளும், கிண்ணார்கள், கம்புருடர்கள் அட்டத்திக்கு

பாலர்கள் சப்த கன்னியர் அனைவரும் ஒன்றுகூடி பிரம்மா அவர்கள் தலைமையில் சர்வவல்லமையும், கொண்ட சிவனைத் துதித்து வணங்கி பூலோகம் நலன்கள் பெற்றிட வேண்டுதல் செய்து நின்றனர். வேண்டுபவர்களுக்கு வேண்டியவைகளை கொடுத்து காத்திடும் இறைவனுக்கு இறைவா தங்களின் திருக்கருக் கருணையால் கீழ் ஏழு உலகமும் மேல் ஏழு உலகமும் படைத்தே அங்கு ஒரு அறிவு முதல் ஐந்து அறிவு கொண்ட ஆடு,மாடு மற்ற சீவராசிகளையும் அனைத்தும் ஆதாரங்களையும் படைத்தோம்.

இம்மாபெரும் படைப்பின் மகத்துவத்தை அறியாமலும் தெரியாமலும் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று மண்ணோடு மண்ணாக கண்மூடித்தனமாக இருள் சூழ்ந்த பூலோகத்தில் அநீதிகளும் அநியாயங்களும் பெருகி மனித இனங்கள் பேரழிவை நோக்கி செல்கிறது. தேவாதி தேவரீர் இன்னலை போக்கி பூலோகத்திற்கு நல்வழி செய்து அருளாசி வழங்கி அருள வேண்டும் என்று தேவர்கள் சிவனிடம் வேண்டுதல் செய்தனர்.

தேவர்களின் வேண்டுதலை ஏற்றுக்கொண்ட சிவபெருமான் பூலோகத்தை புண்ணிய பூமியாக மாற்றி செல்வம் செழித்திடவும் வேளாண்மை தொழில் செழித்து வளர்ந்திடவும் ஏற்பாடு செய்யுமாறு சிவபெருமான் திருமாலைக் கேட்டுக் கொண்டார். சிவபெருமானின் கட்டளையை ஏற்ற திருமால் போதாய முனிவரிடம் பூலோகம் சென்று தேவர்களின் வேண்டுதலை நிறைவு செய்யுமாறு கூறினார். போதாய முனிவர் பூலோகம் வந்து கங்கா தேவியிடம் விபரம் கூறினார். கங்காதேவி, பூமி செழித்து வளர்ந்திட மரபாளனைத் தோற்றுவித்தார். மரபாளன் இப்பூவுலகில் வேளாண்மைத் தொழிலை வளர்த்தார். மரபாளன் வழித்தோன்றல்கள் தான் வேளாளர்கள் என்று வேளாளர்கள் என்று வேளாளர் புராணம் கூறுகிறது.

எல்லாம் வல்ல இறைவன் சிவபெருமான் அருளால் கங்கா தேவியின் படைப்பில் பூமியின் தோன்றிய மரபாளன் வழியில் வந்த வேளாளர்கள் மக்களின் பசிப்பிணி போக்கிட நிலங்களை உழுது வேளாண்மை தொழிலை நாடெங்கும் செய்து வந்த வேளாளர்களில் தொண்டை நாட்டில் வாழ்ந்தவர்கள். சோழிய வேளாளர்கள் பாண்டிய நாட்டில் வாழ்ந்தவர்கள்

கொங்கு வேளாளர்கள் மற்றும் கார்காத்த வேளாளர்கள் தேவேந்திரகுல தேவேந்திர குல வேளாளர்கள் வன்னிய வேளாளர்கள் துளுவ வேளாளர்கள் தேவேந்திர குல வேளாளர்கள் எனப் பல பிரிவுகளாக பிரிந்து வேளாண்மைத் தொழில் செய்து வந்தனர்.

வேளாளர் புராணம், வேளாண் மரபியல், வேளாண் மரபு வேளீர் வரலாறு, வேளாளர் நாகரீகம் வேளாளர் மரபிலக்கணம் போன்ற பல நூல்கள் வேளாளர்களின் வரலாறுகளை மக்களுக்கு எடுத்துரைத்துள்ளன.

உலக மக்களின் பசிப்பினி போக்கிடும் உயர்வான வேளாண்மை தொழில் செய்து வந்த வேளாளர்கள் சமுதாயம் சார்ந்த சன்றோர் பெருமக்கள் நாட்டை ஆட்சி செய்து வந்த அரசர்களுக்கும் மன்னர்களுக்கும் ஆலோசகர்களாக இருந்த அரசவையில் பட்டம் சூட்டும் உரிமை கொண்டு பாரினில் சிறப்புடன் வேளாளர்கள் வாழ்ந்துள்ளனர் என்று வேளாளர்களின் வரலாறு கூறுகிறது.

தெய்வப்புலவர்களான திருநாவுக்கரசர் சேக்கிழார் மெய்கண்ட குமரகுருபரர் கம்பர் போன்ற என்னற்ற சிவனடியார்களும், புலவர்களும் சமுதாய மக்களை நல்வழிக்காத்திட தெய்வ சிந்தனையோடு வாழ்ந்திடும் வகையில் தெய்வப் புராணங்கள் பாடிய இவர்களும் வேளாளர்கள் ஆவார்.

இலக்கணங்கள் இலக்கியங்கள் புராணங்கள் பிரபந்தங்கள் அனைத்துக்கு மேலான சித்தாந்தங்கள் கலைஞானங்கள் எவ்வளவு என்று அளவு சொல்ல முடியாமல் இயற்றியருளிய வேளாளர்கள் ஏராளமானவர்கள் வேளாளர்கள் சமுதாயத்தில் தோன்றி வாழ்ந்துள்ளனர்.

தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி

என்று சிவபெருமானை போற்றி வணங்கி வந்த வேளாண்குடி மக்கள் வேளாண்மைத் தொழிலை இறைவனுக்கு செய்யப்படும் வேள்வி போல் தினமும் சிவனை வழிபாடுகள் செய்து சிவ நெறியில் வாழ்ந்து வளம் பெற்று அடியார்க்கு அடியார்களாக அருள் பெற்று வாழ்ந்த வேளாளர்கள் குடியில் தோன்றிய அடியார்கள்.

இளையான்குடி மாற நாயனார்
விரல்மிண்ட நாயனார்
மானக்கஞ்சாற நாயனார்
அரிவாள் நாயனார்
திருநாவுக்கரசர்
கலிக்காம நாயனார்
மூர்க்க நாயனார்
காக்கிய நாயனார்
சக்தி நாயனார்
வாயிவார் நாயனார்
முனை அருவார் நாயனார்
செருந்துணை நாயனார்
கோட்பு விநாயனார்
சேக்கிழார்
மெய்கண்ட தேவர்
சிவஞான முனிவர்
குமர குருபரர்
ஏக வீரன்
சங்கிலி நாச்சியார் பெண்
வாசுகி அம்மையார் பெண்

சிவபெருமானைப் பாடித்தொழுது வாழ்ந்து வந்த இந்த அடியார் பெருமக்கள் அனைவரும் வேளாண்குடிமக்கள் ஆவார். இவர்களில் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளும் ஒருவராவார்.

வேளாளர்களைப் போற்றி அருளாளர்கள் பாடிய பாடல்கள் :
திருஞான சம்பந்தர் பாடிய பாடல்:

வேளாளர்கண் செந்துவர்வாய் வண்பாட்டு மறைவாக்கால்
வேளாளர் தலைப்புகழ்ந்த வேதியர் கோன் காழி முனிக்கு
ஆளாக நின்ற திருஅடியாரின் அடி எழுந்த
தூள் ஆகம் பட்டிடுமேல் துன்பமெல்லாம் பட்டிடுமால்.

“வேளாளர்கண் செந்துவர்வாய்” என்று தொடங்கும் தேவாரத் திருக்கடைக்காப்பு வேதவாக்கினால் வேளாளர்களைப் புகழ்ந்து பாடிய

அந்தனர் கோன் சீர்காழி ஞான சம்பந்தருக்கு, ஆளாக நின்ற அடியார்களின் திருவடித்தூசி நம் உடம்பில் படுமேயானால் நம் துன்பமெல்லாம் அழிந்திடும்.

திருநாவுக்கரசு சுவாமிகள் பாடிய பாடல்:

அறம் தழைத்திட உடற்கெல்லாம் களைகணாய் அமைந்தார்
சிறந்தவான் தமர் எனச் சொலும் சீரினும் சிறந்தேன்
உறைந்த தென்மறை உயிர்கெலாம் களைகணாய் உதவ
பிறந்த மூவரில் முன்னேயோன் அடிமுடி பெறுக.

தருமம் தழைத்திட உடல் வளர்ச்சிக்குக் காரணமாக உணவினை உடற்கெல்லாம் ஆதரவாக உலகுக்கு அளிக்கும் வேளாளர்கள் தம்முடைய சுற்றத்தார் எனச் சொல்லும் சீரிற்சிறந்தவரும், தென்மறை வேதமான தேவாரத்தினை உயிர்க்கெல்லாம் புகலிடமாக உதவ அவதரித்தவரும் மூவர்களில் முதல்வருமான நாவரசர் திருவடி என்முடி பெறுவதாகுக.

சுந்தரர் பாடிய பாடல்:

நம்தரம் கொடையென நவிலக் குண்டையூர்
வந்து அரன் அடியார்க்கே வழங்கும் ஓர் கிழான்
மந்தரம் நிகர்தரு வரியைக் கொள் குறள்
சுந்தரன் அடிமலர் தொழுது வாழ்த்துவாம்.

நமது பக்குவம் கொடை கொடுத்தல் என உலகு சொல்ல, குண்டையூரில் தோன்றிச் சிவனடியார்களுக்கே வழங்கும் குண்டையூர் கிழார் என்னும் வேளாளரின் மந்தரமலை போன்ற நெற்குவியலை எடுத்துக்கொண்டு வரப்பூத கனங்களை வரவழைத்த சுந்தர மூர்த்தி சுவாமிகளின் திருவடியைத் தொழுது வாழ்த்துவாம்.

வேளாளர் புராணத்தில் வரும் பாடல்கள்:

அருள் பரவும் வேளாளர் பயிர் வளர்த்தால் நீதி
அந்தணர்கள் வேள்வி வளரும்
அன்பினோடு இவர்கள் படை வாளெடுத்தால் வெற்றி
அரசர் படைவாள் எடுக்கும்
கருது தானியராசி இவர்குவித்தால் வணிகர்
கனக ராசியெல்லாம் குவிப்பர்

காதலுடன் ஏர்த்தொழில் நடத்தினால் மற்றுள்ளோர்
கைத்தொழில் எலாம் நடக்கும்
உரிய வள்ளத்தில் இவர் அளந்தபின் நாரணன்
உயிர்க்கெலாம் படி அளப்பான்
ஒதரிய வேளாளர் பெருமையால் அன்றி மற்றி
உலகில் ஒரு பெருமை உண்டோ?
பரவை வரும் விடம் உண்ட மெய்க் கண்டனாம் எமது
பட்டீசர் மகிழ்வல்லியே
பரமகுரு நாதன் உத்தம பண்டிதன் பரவும்
பச்சை மரகத வல்லியே”

மானமே குலம் கல்வி வண்மையே
தானமே ஊக்குணர் தாண்மை ஆதிய
ஆனநாரியர் மயலாம் சிறார் இவர்
வானன் நீள் பௌத்திரர் உழவர் மைந்தர்கள்.

இவர்கள் மானம், குலம், கல்வி, உண்மை தானம் மனத்தின்மை, முயற்சி முதலானவை கொண்ட தெய்வ மங்கையர்களின் புதல்வர்கள். இந்திரனின் பௌத்திரர்கள். உழவர்கள் வலிமைஉடையவர்கள், “நீதிநெறி, மானம் குலம், கல்வி, உண்மை, அறிவுடமை தானம் தருமம் தழைக்கும் கை” என்பது திருக்கை வழக்கம்.

முக்கிய சைவ முத்தமிழ் செல் முந்நிலம்
மிக்கிடு முன்சுடர் பெயரின் வேதியின்
புக்கிட முதல் போதம் பெற்றவன்
இக்குலத் தான் எனில் இயம்ப வேண்டுமோ

முக்கியமாகச் சைவமும் முத்தமிழும் நடத்திடும் மும்மண்டலத்தில் ஒன்றான சோழ மண்டலத்தில் உயர்வுமிக்க பரஞ்ஜோதி முனிவர் வானத்தில் இருந்து கீழே இறங்கி வந்து உபதேசம் செய்ய முதலில், சிவஞான போதம் அருளப் பெற்றவரான மெய்கண்டார் அவதரித்து இந்த வேளாளகுலம் என்றால் இதன் மேன்மையைச் சொல்லவும் வேணமடுமோ?

கம்பர் பாடிய பாடல்

மேழி பிடிக்கும் கை வேல்வேந்தர் நோக்கும் கை
அழிதரித்தே அருளும் கை சூழ்வினையை

நீக்கும் கை என்றும் நிலைக்கும் கை – நீடுழி
காக்கும் கை காராளர் கை.

கார்நடக்கும் படி நடக்கும் காராளர் தம்முடைய
ஏர்நடக்கும் எனின் புகழ்சால் இயல்இசை நாடகம்
சீர்நடக்கும் திரம் நடக்கும் திருவளத்தால் செயல்
பார் நடக்கும் பசி நடக்கமாட்டாதே.

சேக்கிழார் புராணம் பாடிய உமாபதி சிவநாயனார் பாடிய பாடல்:

காராளர் அணிவயலில் உழுது தங்கள்
கையார நட்டமுடி திருந்தில் இந்தப்
பாராளும் திரலரசர் கவிந்த வெற்றிப்
பசும் பொன்மனிமுடி திருத்தும் கலப்பை பூண்ட
ஏரால் எண்டிசை வளர்க்கும் புகழ்வோளாளர்
ஏரமக்கும் சிறுகோலால் தரணியாளச்
சீராகும் முடியரசர் இருந்து செங்கோல்
செலுத்துபவர் வேளாளர் புகழ் செப்பலாமோ!
என்று பாடுகிறார்.

வேளாண்மைப் பயிணியால் அடிகளார் எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் அருள்நிறைந்த அருளாளர்கள் அடிகளார்த் தோன்றிய கொங்கு நாட்டின் அப்பரடிகள் எனப்பெயர் பெற்று விளங்கி வந்த அருட்பெருந்தகை அடிகள் அவர்கள் தோன்றி வளர்ந்த முதலியபாளையம் கிராமத்தில் உள்ள சிறைத் தோட்டத்தில் அடிகள் இளம் வயதில் தாய் கப்பிணி அம்மாள் தந்தை தவத்திரு சிவராமசாமி அடிகள் சகோதரர்கள் வெள்ளியங்கிரிக் கவுண்டர் வேலுச்சாமிக் கவுண்டர், வெங்கடாசலச் சுந்தரப்ப கவுண்டர் சகோதரி சுப்புலட்சுமி அம்மாள் ஆகியோருடன் கூடிய தங்களின் குலத்தொழில் வேளான்மைத் தொழிலை சீரும் சிறப்புடன் செய்து வந்த அனுபவத்தைக் கொண்டு அடிகள் அவர்கள் துறவு பூண்டு பேரூர்சாந்தலிங்கம் மடாலயாத்தின் குருமுதல்வர் ஆன பின்பும் வேளான்மைத் தொழில் மீது அக்கறையும் ஆர்வமும் கொண்டு இறைப்பணிவோடு வேளாண்மைத் தொழிலும் செய்து வந்ததோடு வேளாண்குடி மக்களுக்கு வழிகாட்டி ஊக்கப்படுத்தி சமுதாயப்பணி செய்து வந்த அடிகளின் பணி சிறப்பான பணிகளாக இருந்துள்ளது.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்

தொழுதுண்டு பின்செல் பவர் என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். உழவர்களின் பெருமையை 'உழுவார் உலகத்தார்க்கு அச்சாணி' என்று போற்றியதனால் உழுதுண் மக்களின் சிறப்பை உணரலாம்.

இளங்கோவடிகள், மூவேந்தரின் நாட்டுச் சிறப்புக்களைக் குறிப்பிடுமிடத்து உழுதொழிலின் சிறப்பைப் பாராட்டியுள்ளார். இதனை, மதுரைமாநகர நுழைவாயிலுக்குக் கதைத் தலைவர்களாகிய கோவலனும், கண்ணகியும் கவுந்தியடிகளின் துணையோடு வந்துவிட்டனர். அவர்கள் கண்முன் உழவர்கள் வயலில் நெற்கதிர்களை நெருக்காக அறுத்துக் களத்தில் கொட்டுகின்ற பேரொலிமுழக்கம் கேட்டு மகிழ்கின்றனர். அதைப் போன்றே கரும்பு வயல்களிலிருந்து கொண்டு வந்து கொட்டும் கரும்புகளை உழவர்கள் ஆலையிலிட்டுக் காய்ச்சும் புகை, மதுரையின் மாடமாளிகைகளை மூடுகிறது என்ற விளக்கத்தாலும் இதற்கான 'மஞ்சுசூழ் மலையின் மாணத் தோன்றும் என்ற பாடலடியும் விளக்குகிறது. இவற்றின் வழி உழுதொழிலின் மேன்மை புலனாகிறது.

இத்தகைய உழவுத் தொழிலை உழுதுண் குடும்பத்தில் உதித்த அடிகள் பெருந்தகை பேரார்வத்தோடு மேற்கொண்டு வருகின்றனர். வேளாண்தொழிலில் சிறந்திருந்த குடும்பத்தில் அவதாரம் செய்ததனால் இளமையில் இருந்தே அத்தொழிலில் ஆர்வம் இருந்திருக்க வேண்டும். அடிகள் பெருந்தகை பள்ளிக் கல்வி முதல் கல்லூரிக்கல்வி முடியும் வரை வேளாண்மைச் சிறப்பினை முழுவதும் கண்குளிரக் கண்டு மகிழ்ந்திருப்பர். சிரவையாதீனச் சூழலும் வேளாண்மை சிறந்திருந்த இடம். குருநாதர்களுக்குத் திருத்தொண்டு செய்யும் பணிகளில் ஈடுபட்டிருக்கும் நிலையிலேயே உழவுத்தொழில் சிறப்பாக இருக்க வேண்டும் என ஆழமாகச் சிந்திந்திருத்தல் வேண்டும். அதன் காரணமாகவும் அடிகள் பெருந்தகை வேளாண்மை சிறக்கக் கடுமையாகப் பாடுபட்டுள்ளார். அடிகளார் அவர்கள் இராமானந்தசுவாமிகளின் அருளாணையேற்றுப் பேரூர் வந்ததலிருந்தே திருமடத்திற்கு உரிமையான நிலங்களில் தனது உ்ழவுப் பணிகளைச் சிறப்பாகச் செய்துள்ளனர்.

வயல்வளம், தோட்ட வளம் முதலியவை சிறந்திருந்த காலகட்டங்களில் நமது அருட்தந்தையவர்கள் ஏர்பூட்டிக் கலப்பையோடு

வயலில் இறங்கி வேலைசெய்துள்ளனர். அதன்பின் விதை நெல் வித்தியது முதல் அடிக்கடி மாட்டு வண்டியில் வயலுக்குச் சென்று களைநீக்கி, நெல் அறுத்து, களம் இறக்கி நெல் அரவை செய்யும் வரை உடனிருந்து பணிசெய்துள்ளனர். கரும்பு விளைச்சலுக்கு முன்பே, செய்ய வேண்டிய பணிகளான, நிலத்தைப் பண்படுத்தல், கரும்பு முளைப்பயிர் உருவாக்குதல், வயல்களில் பயிர்களை நடுதல், நீர்பாய்ச்சுதல், களை நீக்குதல், கரும்புத் தோகை உரித்தல், கரும்பு வெட்டுதல் அவற்றைப் பக்குவப்படுத்துதல், வெல்லம், சர்க்கரை முதலியவை ஆயத்தமாவதற்கேற்ப ஆலை ஆட்டுதல், நெற்பணிகள், கரும்பு வளர்ப்புப் பணிகள், கரும்பாலைப் பணிகள் விளைச்சலை விற்பனைக்கு ஆயத்தப்படுத்தும் பணிகள் அனைத்தையும் அடிகளே செய்து, மேற்பார்வையிட்டுக் கல்விப் பணியினூடே உழவுத் தொழிலின் சிறப்பைப் போற்றும் வேளாண்பணிகள் அனைத்தையும் செய்து வந்துள்ளனர்.

வயல்கள், தோட்டங்கள், காடுகள் ஆகியவற்றில் பருவ காலங்களுக்கேற்ப விளைச்சலைப் பெருக்கினர். ‘பருவத்தே பயிர்செய்’ என்பதற்கு ஏற்ப வாழ்ந்தவர் அடிகள் பெருந்தகையாவார்.

‘சாந்தலிங்கர் கோசாலை அறக்கட்டளை’யைத் தொடங்கி அதன்வழி 40 பசுக்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மத்திய அரசின் பிராணிகள் நலவாரியம்’ கோசாலையை அங்கீகரித்து உள்ளது. பசுக்களின் சிறப்பை உணர்ந்து அடிகளார் அவற்றைப் பேணிப் பாதுகாப்பதில் பேரார்வமுடன் நெறிப்படுத்தி வந்தார்.

உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக இருக்கும் காளை மாடுகளைப் பேணுதல், திருக்கோயில்களில் அபிஷேகப் பொருளாக இருக்கும் பால், தயிர், நெய் முதலியவற்றைத் தரும் பசுமாடுகளைப் பேணுதல், அவற்றைக் கண்போல் காத்தல், அவற்றின் உணவுக்கு வேண்டிய பயிர்களைப் பயிரிடும் பணிகளைச் செய்தல், திருமட வளாகத்தில் உள்ள தென்னை மரங்கள் நிறைந்த தோப்பினைப் பாதுகாத்தல், மரங்களுக்கு நீர் பாய்ச்சுதல், களை நீக்கல், கீரைத்தோட்டம் அமைத்தல், அதனைப் பேணும் முறைமைகளைப் பள்ளி மாணவர்களுக்குக் கற்றுக் கொடுத்தல், திருக்கோயில் மூர்த்தங்களுக்கு தேவையான வழிபாட்டுக்குரிய மலர்களைத் தரும் மரம், செடி, கொடிகளை நடுதல்,

அர்ச்சனைக்கும் பூசைக்கும் உரிய மலர்களைப் பறித்தல், மாலைகட்டுதல், தொடர்கள் கட்டுதல் முதலான பணிகளைத் தாமே செய்தல், தம்மைச் சுற்றியுள்ளோருக்கும் இந்தப் பணிகள் தெரியவேண்டும் என்ற நற்சிந்தனையில் மாணவர்களையும், தொண்டர்களையும் அப்பணிகளில் ஈடுபடுத்தல் முதலியன அடிகளின் அரும்பணிகளாகும்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தன செய்வோம்
வீணில் உண்டு களித்திருப்போரை
நிந்தனை செய்வோம்

என்ற பாரதியின் கவிதை வரிகளுக்கு இலக்கணமாக விளங்கி வருபவர் நமது அடிகள் பெருந்தகையே யாவார்.

மரம் நடுதலில் பலவகைகள் – பலநிலைகள்–பலமுறைகள் உள்ளன. சில மரங்களுக்கு ஆழக்குழி எடுக்க வேண்டும். அதற்கேற்ற அளவு முறைகள் இருக்கும். சில மரங்கள் எளிதாக மேலோட்டமாக நடுதல் என அந்தந்த மரங்களின் நிலைப் பாட்டுக்கேற்ப அடிகளின் செயல்பாடுகள் இருக்கும். தோட்டத்தினுள், தோப்பினுள், வயல்வெளிகளில், வயல் ஓரங்களில் எந்தெந்த மரங்கள் நடவேண்டும் என்ற முறைகள் உண்டோ அதன்படி நட்டுச் செயல்படுத்தி வெற்றி கண்டவர் நமது அடிகள் ஆவார்.

திருக்கோயில்களுக்கேற்ற வகையில் மரங்கள் நடுதல், திருக்கோயிலுக்குரிய தலமரங்களை நட்டுப் பேணுதல் – அதைப் பாதுகாக்கும் முயற்சிகளில் ஈடுபடுதல், கம்பிவேலி நட்டுச் சேதம் ஏற்படாதிருத்தல் முதலியன அடிகள் மேற்கொண்ட அரும்பணிகளாகும். பூச்செடிகள் நடும் பாங்கும் அடிகளின் பணிகளில் விஞ்சி விளங்குகின்றன. நறுமணப் பூக்கள் தரும் செடிகள், சில செடிகளின் இலைகள் பூசைக்குப் பயன்தரும் வகையில் அவற்றை நடுதல். சில செடிகள் மருந்துக்கப் பயன்படும். அவை நடுதல், சில செடிகள் உணவுக்குப் பயன்படும். அவற்றின் தகுதிகள் அறிந்து நடுதல். அவை நடுவதற்கு முன் நிலத்தைப் பக்குவப்படுத்துதல், எருப்பெய்து, நட்டபின், நீரை முறையாகப் பாய்ச்சி, களைநீக்கி அவை பயன்பாட்டிற்கு வரும்போது அடிகளின் உழவுத் தொழிலின் உழைப்புப் பணிகளின் சிறப்பை அனைவரும் உணரும் வகையில் அவை அமைந்திருக்கும்.

கொடிகள், கீரைச் செடி வகைகள், முருங்கை, அகத்தி முதலான கீரை மரங்கள் முதலியவற்றையும் நட்டு அதன் பயன்பாட்டையும் பெருக்குவர்.

மஞ்சள் சாகுபடி, மக்காச்சோளம், சோளம், நெல், நிலக்கடலை, கரும்பு முதலியன சிறப்பை அறியலாம். இத்தகு பயிர்த்தொழிலின் சிறப்பால் அமோக விளைச்சல் பெற்றது குறிப்பிடத்தக்கது. விளைவித்தால் அடிகளின் பயிர்த்தொழில் பணிகளால் அமோக விளைச்சலும் பெற்றுள்ளன. இதன்வழி, சொல்லோருழவராக, அருளோர் உழவராக இருக்கும் அடிகள் பெருந்தகை 'ஏர் உழவராக' உழவுத் தொழிலில் ஈடுபட்டு உழைப்பின் சிறப்பால் ஆக்கத்தைப் பெருக்க முடிந்தது, முடியும்! என்பதைக் காட்டும் வகையில் அடிகளின் வேளாண்தொழிற்பணிகள் இடம் பெறுகின்றன.

மேற்காண் விளைச்சல் பணிகள் அன்றிப் பயறு வகைகள் பச்சைப் பயறு, கொண்டைக்கடலை, உளுந்து, கொள்ளு முதலானவற்றைப் பயிர்செய்து விளைச்சலைப் பெருக்குவதிலும் அடிகளின் கைவண்ணம் 'திருவருள் பொலிவுபோன்று' ஒளிரும்.

'தொட்ட இடம் துலங்கும்' என்ற பழமொழிக்கு உயிர்கொடுத்த பெருமகனார். ஆம்! அடிகள் பெருந்தகையின் வேளாண் பணிகளில் பாதம்பட்ட இடங்கள் பொன் முத்துக்களாகியன எனலாம்.

அடிகள் அவர்களின் தலைமையில் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக ஆண்டுதோறும் உழவர்களுடன் சேர்ந்து மழைவேண்டிப் பூண்டியிலும் வெள்ளியங்கிரி மலை உச்சியிலும் வேள்விகள் மிகச் சிறப்பாக நடத்தப் பெற்ற வருகிறது. உழவுத்தொழிலின் சிறப்பு ஓங்கி உயர மழையின் தேவையை உணர்ந்து இவ்வேள்வி ஏற்பாடு செய்யப்பெற்று உழவர் பெருமக்கள் முன்னிலையில் வழிபாடுகள் நடைபெற்று 'அன்னம்பாலிப்பு' நிகழ்ச்சியுடனும், வேளாண்குடி மக்கள் அனைவரும் இப்பெருவிழாவில் குடும்பத்தினருடன் கலந்து சிறப்பிக்கச் செய்வதும் அடிகள் அவர்களின் வேளாண்தொழில் ஆர்வத்தை விளக்குவனவாக அமைகிறது.

உழவுத் தொழிலின் சிறப்பைப் பேணும், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்துடன் அடிகள் பெருந்தகை பெரிதும் தொடர்பு

கொண்டுள்ளார். வேளாண் பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் அடிகளின் அழைப்பையேற்றுக் கல்லூரிகளில் உரையாற்றி வாழ்த்துப்பெற்றுச் செல்வர். நூல் வெளியீடுகளிலும் கலந்து கொள்வர்.

அடிகளின் உழவுத்தொழிற்சிறப்புக்குச் சங்க இலக்கிய அகப்பாடல் ஒன்று நினைவுக்கு வருகிறது. மலைநாடன் ஒருவன் தலைவன். அவன் நாட்டைப்பாடுவோம் என்று தோழி தலைவிக்குக் கூறும் துறையில் அமைந்த பாடல் அதில்,

"கார்காலம், இடியோடு கூடி மழை பெய்யும் நடுஇரவு, ஆண்யானை ஒன்று பெண்யானையோடு சேர்ந்துவந்து தினைக்கதிர்கள் முற்றியிருக்கும் கொல்லையில் மேயத்தலைப்பட்டது. அக்கொல்லையில் பரண்மீது இருந்து காவல் செய்யும் கானவன் கவண் கல்வைத்து அக்கல்லை யானை மீது வீசினான். அக்கல் விரைந்து சென்று வேங்கை மரத்தின் பூக்களை முதலில் உதிரச் செய்தது. பின்பு ஆசினிப்பலாவின் மென்மையான பழங்களை உதிர்த்தது. தேனடை ஒன்றைத் துளைத்தது அதன்பின் மாமரத்தின் கொத்துக்களை உலுக்கியது. அதனையடுத்து வாழை மடலைக் கிழித்தது, இறுதியாகப் பலாப்பழத்துள் சென்று தங்கியது. இத்தகைய மலைநாடு என்பது பாடல் தரும் செய்தியாகும். இருப்பினும் மலைவளம், மரவளம் என்ற வேளாண்மை வளத்தை அறிவிக்கும் பாடலாகிறது. இதுபோன்ற வளம் உடைய வேளாண் தொழில் பணி நமது அடிகளின் அரும்பணியாக அமைகிறது.

அடிகளின் இளவயது வேளாண்பணியை,

"தவம் செய்த முதலிய பாளையத்தில் அன்று
வலம் வந்த சிறுவயதில் ஏரைப் பூட்டி
உவப்புடனே உழுதுண்டு மக்க ளநெஞ்சை
உழுதின்று பண்படுத்தும் பயிற்சியாக
அவலங்கள் இன்று பறித் தெடுப்பதற்கு
அன்றைக்கு ஒத்திசையாய்க் களை பறித்தார்
கவலை களைநீக்கிடவே கணற்றிலன்று
கமலையிலே நீர் இறைத்தார் நமது சாமி"

என்ற பாடலால் அறியலாம். 'இளமையில் கல்வி சிலையில் எழுத்துப்போல' என்று சொல்வர் சான்றோர். அதற்கேற்ப அடிகளின்

இளவயதுப் பணி இன்று வரை தொடர்வதற்கு உழவுத் தொழிலில் இருந்த பேரார்வமும் கடின உழைப்புமே காரணமாகும். அருட்தந்தை அவர்கள் தலைமையில் இயங்கும் கல்வி நிறுவனத்தில் உழவர்களின் உழைப்பைப் போற்றும் வகையிலும், தமிழர் திருநாளாம் தைத்திங்கள் முன்னிட்டுப் 'பொங்கல்விழாவும்' ஆண்டுதோறும் பெருவிழாவாக நடைபெறும். ஆயிரம் மாணவர்களுக்குமேல் கலந்து சர்க்கரைப் பொங்கலிட்டு உண்டு மகிழ்வர். நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகளான கும்மி, கரகாட்டம், தெம்மாங்கு முதலான ஆடல் பாடல்களில் மாணாக்கரை ஈடுபடுத்துவர். நாளிதழ்கள், வானொலி, தொலைக்காட்சிகளில் நாட்டு மக்களுக்குப் பொங்கல் விழா வாழ்த்தினைக் கவிதைவழி வெளிப்படுத்தும் அடிகளின் நற்பண்பும் இனிது இடம்பெறுகிறது.

அடிகள் பெருந்தகை தமது கல்விநிலையத்தில் 'பொங்கல்விழா' கொண்டாடிய செய்தி பெருஞ்செய்தியாக வெளிவந்தபின் எல்லாக் கல்வி நிலையங்களும், 'பொங்கல்விழாவை' வெகுசிறப்பாகக் கொண்டாடி வருகின்றன. நமது மரபு போற்றும் விழா, உழவரைச் சிறப்பிக்கும் விழா ஆதலால் ஊர்போற்றும் திருவிழாவாகக் கொண்டாடுவதற்கு அடிகளே வழிகாட்டி, நெறிப்படுத்திய முன்னோடி எனலாம்.

பொங்கல் நாளில் வேளாண்மை நெறியில் ஈடுபட்டுக் கடின உழைப்பால் உற்பத்தியைப் பெருக்கிய வேளாண் மக்கள் ஐவருக்கு ஆண்டுதோறும் விருதுகள் வழங்கிப் பெருமைப்படுத்துவார். கடந்த பத்தாண்டுகளில் இதுவரை 50 வேளாண் பெருமக்கள் விருதுகளைப் பெற்றுள்ளனர். 'உழவுச்செம்மல்', 'உழுதொழில் வித்தகர்', 'வேளாண் வித்தகர்' முதலான, விருதுகளை அடிகள் தமது திருக்கரங்களால் வழங்க ஊக்கம் பெற்று மகிழ்ந்தனர். இவர்களை அடிகள் அவர்களே உழைப்பின் பெருமையால் உயர்ந்தவராக இன்னின்னார் என வரிசைப்படுத்தி விருது பெறும் தகுதியை அறிவிப்பார். பேரூர்த் தமிழ்க்கல்லூரியின் மணிவிழாவினை – யொட்டியும், அனைத்திந்திய அறிவியல் தமிழ்க்கழகத்தின் வெள்ளிவிழாவினையொட்டியும், மத்திய வேளாண் பொறியியல் நிறுவனத்துடன் இணைந்து நடத்தும் இருபத்தோராம் அறிவியல் தமிழ்த் தேசியக் கருத்தரங்கம் திருவள்ளுவராண்டு 2044, தைத்திங்கள் 27,28 (2013, பிப்ரவரித் திங்கள் 9,10,சனி, ஞாயிறு) பேரூராதீனத்தில் நடைபெற்றது. 'தமிழால் இயலும்' என்ற

இக்கருத்தரங்கத்தின்வழி, 'உலக அளவில் வேளாண் பல்கலைக் கழகங்களிலும், ஆராய்ச்சிக் கூடங்களிலும் பரிந்துரைக்கும் கருத்துக்கள் அனைத்தும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் தமிழ்த்திருநாட்டில் செயல்படுத்தியிருக்கிறார்கள். இதனை அறிகின்றபோது தமிழர்தம் நுண்ணறிவும், பண்பட்ட வாழ்வியலும், அறிவியல் கண்ணோட்டமும் இன்றைய உழவர்களுக்கு நல்லதோர் உந்துவிசையாக விளங்குகின்ற வகையில் இக்கருத்தரங்கள் அமைந்தது இதன்வழி அடிகள் அவர்களின் வேளாண் தொழில் விருப்பத்தை உணர்ந்து கொள்ள முடிகிறது.

இந்த ஆண்டு 11–1–2015, திருவள்ளுவராண்டு 2045இல் 'வேளாண்மையில் இனியொரு விதிசெய்வோம்' என்ற பொருண்மையில் வேளாண்மை ஆய்வரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கைப் பேரூராதீன வளாகத்திலேயே நடத்த அருளாணை வழங்கிய அடிகள் பெருந்தகை, இம்மாநாட்டைத் தொடங்கி வைத்து அருளாசி வழங்கிச் சிறப்பித்தார்கள். உழவர் பெருமக்களுக்கு இந்நிகழ்ச்சியில் விருதுகள் வழங்கப்பெற்றன. ஏன்வேண்டும் இயற்கை வேளாண்மை? என்ற பொருண்மையிலும் 'அருந்தானியங்கள்' என்ற பொருண்மையிலும் 'தாளாண்மைப் பண்ணையம்' என்ற பொருண்மையிலும், 'நீர்மேலாண்மை', 'இயற்கை வேளாண்மை' என்ற பொருண்மைகளிலும், கருத்துரை வழங்கி இம்மாநாட்டையும், ஆய்வரங்கத்தையும் அறிஞர் சிறப்புச் செய்தனர். கருத்தரங்க நிறைவுரையாக பேரூராதீன இளையபட்டம், தவத்திரு மருதாசல அடிகள் விழா நிறைவுரை ஆற்றினார்.

'காவினை இட்டும், குளம் பல தொட்டும்' கடப்பாடு வழுவாமல் அறம் செய்த அப்பரடிகளைப் போன்றே நமது அடிகள் அவர்களும் இயற்கை வேளாண்மை, நீர் வேளாண்மை, தானிய உற்பத்தியில் வளர்ச்சி முதலியவற்றில் இளந்தலைமுறையினர் வளரவேண்டும். அவர்களுக்கு இத்தகு மரபுகளை எடுத்து விளக்கி நெறிப்படுத்த வேண்டும் எனவும், இளைஞர்களைப் புத்துணர்வோடு உழைக்கச் செய்வது நமது கடமையாகும் எனவும் அதற்கான முயற்சிகளை நாம் ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டும் எனவும் அருளாசி வழங்கினர். நமது ஞானத்தந்தையவர்கள் வேளாண் தொழிலில் பெரும் புரட்சியையும் செய்துள்ளனர். இயற்கைவழி உரங்களை நிலங்களில் இட்டுப் பயிர்கள்வளரப் பேரார்வம் கொண்டு செயல்பட்டு வருகிறார்கள்.

பயன்படும் பழமரங்களை நட்டுப் பேணிப் பாதுகாத்தல், செடி, கொடி வகைகளில் பயன்தருவனவற்றை நடுதல், பசுமாடுகள், காளைமாடுகள், கன்றுக்குட்டிகளுக்கேற்ப அவற்றின் பசிநீக்கும் பயிர்களை நடுதல், திருமடம் வந்து தம்மிடம் ஆசிபெற்றுச் செல்வோர்க்குப் பழவகைகளைத் தருதல், காய்கறிகளின் வளங்களைப் பயன்பாட்டுக்குரிய வகையில் பேணுதல், வழிபாட்டுக்குரிய வில்வமரங்கள், கொன்றை மரங்கள், நெல்லிமரங்களை நடுதல் முதலியன அடிகளின் வேளாண் பணிகளாகும்.

தாம் தங்கித் தவமியற்றுதற்கேற்ற 'தென்கயிலாய' தவச்சாலையில் அதிகமான நெல்லிக்கனி மரங்களை நட்டு 'தென்கயிலாய திருநெல்லிகா' என்று பெயரிட்டுப் போற்றி வருகின்றனர்.

உழுதொழிலின் சிறப்பைப் போற்றும் பொங்கல் விழாவை மக்கள் மகிழ்ந்து கொண்டாட வேண்டும். அறநெறி போற்றி வாழ வேண்டும். கல்வி வளம் பெருகி அனைத்து மக்களும் உயர வேண்டும். அத்தகு திட்டங்களை அரசாங்கம் கொண்டு வந்து நமது மாநில மொழியாம் தமிழை முன் இருத்தும் கல்வியாக, பெருமையுறச் செய்ய வேண்டும் என்பது முதலான உயர் கருத்துக்களைத் தமது 'பொங்கல் விழா' வாழ்த்துப்பாவாக, அடிகள் பெருந்தகை ஆண்டுதோறும் புதிய தொலைநோக்குச் சிந்தனையோடு வழங்கி வருகின்றனர். சான்றாக வாழ்த்துப்பாக்கள் – பின்வருமாறு

சங்கத்தமிழில் பால்பொங்கல் சமைத்துப் படைத்தார் காப்பியத்தில் பொங்கும்பொங்கல் பலவாகப் பெருங்கதை காட்டும் புனிதமாய் இங்கு மக்கள் பொங்கலிட்டு இல்லங்களிலே மகிழ்வாக மங்கலமாம் பால்பொங்கல் வைத்துவாழ வாழ்த்துகின்றோம்.

அயலாட்சிகளால் எல்லோரும் கலைகள் கற்காது அடங்கித் தயங்கினாலும் வாழ்வியலைச் சமயப்பொலிவில் உளங்கொண்டு செயற்கரும் இலக்கியம் பலசெய்து காலந்தோறும் திகழ்பொங்கல் உயர்வை மக்கள் உளங்கொள்ள உரைத்தார் பொலிகப் பொங்கல்விழா!

ஒருநூற்றாண்டில் கல்விநிலை உயர்ந்து அனைத்து மக்களுக்கும் தரும் திட்டத்தைத் தந்தார்கள் தமிழ் முன்னிருந்தும் கல்வியினைப் பெருமையுறக்கொள் நல்லாட்சிபேணி உயர்கதைப் பொங்கல்! கருதிப் போற்றி அறநெறியைக் காக்கும் பொங்கல் பொலிவுறுக

பல்குழுவாகிப் பாழ்செய்யும் உட்பகையாலே நாடெங்கும்
கொல்லும்சூழல் கனவுகள் கூடிநாடு மாசுபடும்
பொல்லாங்கு ஒழிய இளையோர்க்கும் புகழ்சேர் கல்வித் திட்டத்தால்
எல்லோரும் இன்புற்றிடப் பொங்கல்நாளை வரவேற்போம்!

என்பன அடிகளின் அருளமுதப் பாடல்களாக விளங்குகின்றன.

உழவர் திருநாள்:

உழவர்களுக்கென்றே நானிலத்தில் ஒருநிலம் ஒதுக்கப்பட்டு இருந்தது. நானிலத்தில் வாழ்வோரும் உழவுத்தொழிலைச் செய்துள்ளனர். எனினும் மருதநிலம் வயலும், வயல்சார்ந்த இடம் ஆதலின் உழவர்களின் பணிகள் அந்நிலத்தில் மிக்கிருந்ததைச் சங்க இலக்கியங்கள் விளக்குகின்றன. உழுத்தொழிலால் எங்கும் கரும்பு அதிகம் விளைந்து நிற்கிறது. கரும்புப்பூ மேலே நிறைய அழகிய காட்சியாக உள்ளது. ஆட்சியைச் சிறப்பாகச் செய்யும் அரசன் எப்படியிருக்க வேண்டும் என்பதற்குக் கரும்புப் பூவை அழகுபடுத்திக் காட்டுகிறார்.

"வெயிலை மறைக்க உனக்குக் குடை உள்ளது. மக்களைக் காப்பாற்றவும் உனது குடை இருக்க வேண்டும். உழவர்களின் உழுதொழிலால் உனக்கு வெற்றி கிடைத்துள்ளது. ஆதலின் அவர்களது வருத்தத்தைப் போக்க வேண்டும். நட்ட பயிரைப் பாதுகாப்பது என்பது மிகச் சிறப்புக்குரியது. உழவர்கள் சிறந்த நிலையில் வாழ வேண்டும். நமது முன்னோர்கள் கரும்பை வெட்டி எடுத்துச் சர்க்கரையாக மாற்றுவதை நமக்கு காட்டி உள்ளனர்" எனவும் விழாவின் நுட்பத்தைச் சிறப்பிக்கும் வகையில் உழவர்களைச் சிறப்பித்துப் பேசியுள்ளார்.

இயற்கை உரங்களைப் பயன்படுத்தினால் விளைச்சல் கூடும் என்பது பற்றியும் வேளாண்மை சிறப்படைந்தால் நமதுநாடு வளம்பெற்ற நாடாகச் சிறப்படையும் என்றும் உரையாற்றியதன் வழி அடிகள் அவர்களின் வேளாண்மை குறித்த உள்ளக் கிடக்கையை அறியலாம்.

ஆண்டுதோறும் 'நமது நெறிகாட்டுதலில் வெள்ளியங்கிரி மலையில் செய்யும் மழை வேள்வியால், உழவர்களின் வாழ்வும் வளம் பெற்றுள்ளது. உள்ளமும் செம்மைப்பட்டுள்ளது' என்று வேள்விப் பயனை விளக்கியுள்ளதன் வழியும் அருளுரையின் ஆழத்தை உணரலாம்.

உழுதொழிலில் சிறந்தவர்களுக்கு 'அறநெறி உழவர்', 'உழவர் மணி' முதலான விருதுகளை வழங்கிச் சிறப்பித்து வருகிறார். உழவுத்தொழிலில் ஈடுபட்டு வேளாண் உற்பத்தியைப் பெருகச் செய்து சிறப்பாகச் சேவை செய்வோருக்குப் 'பொங்கல் விழாவில்' நல்விருதுகள் அடிகளின் பொற்கரத்தால் வழங்கப்படும்.

விருதுகளும், விருதுக்குரியவரையும் பின்வருமாறு காணலாம்.

திரு.பொ.வெற்றிவேலன் அவர்கட்கு 'கவிவளர் உழவர்' விருது.

திரு.கு.இரா.சதாசிவம் அவர்கட்கு 'வளம்தரும் உழவர்' விருது.

திரு.சீ.இரா.கிருட்ணசாமிக் கவுண்டர் அவர்கட்கு 'உழவர் இனச்சுடர்' விருது.

திரு. நா.மா.மருதமலைக் கவுண்டர் அவர்கட்கு 'உழவர் செம்மல்' விருது.

திரு. ஆறுச்சாமி – கொங்கு ஏர் உழவர்
திரு. கோபால் – வளஞ்செய் உழவர்
திருமதி. விசயலட்சுமி பெரியசாமி – பண்ணைச் சுடர்
திரு. முத்து முருகன் – காஞ்சி ஆறு காப்போர்.
திரு. துரைசாமிநாயுடு – வேளாண்வித்தகர்
திரு. பெருமாள்சாமிக் கவுண்டர் – வேளாண் செம்மல்
திரு. சா.சண்முகம் – உழவுச் செம்மல்
பயிர் விளைவிக்கும் தொழிலில் உழைப்பும்


வேளாண் தொழிலில் அடிகளுக்கு ஆர்வம் மிகவும் அதிகம். திருமடத்திற்குத் தொண்டர்கள் அடிகளிடம் ஆசிபெற வருகின்ற நிலையிலும் அடிகள் பெருந்தகை தமது திருமடத் தோப்பினுள், செடி, கொடிகளினூடே பணி செய்து கொண்டு இருப்பார். தோட்ட வேலைகளைச் செய்வதில் ஈடுபாடு கொண்டு எந்நேரமும் அதைச் செய்வார். இறைவனுக்குச் சாத்தி வழிபடுதற்குரிய பூக்களைத் தரும் நல்மரங்கள் குறிப்பாக கொன்றை, செண்பகம், பூக்களைத் தரும் செடி, கொடிகள், உணவுக்கும் அமுதுக்குமான காய்கறிகள் தரும் மரம், செடி, கொடிகள், கனிக்கேற்ற மா, பலா, வாழை முதலியன அடிகள் அவர்களால் வித்திட்டு, வளர்க்கப் பெற்று அதன் பயனை அனைவரும்

அனுபவிப்பகேற்ப அமைக்கபெற்றிருக்கும். இந்த நெறி அடிகளின் அளவு கடந்த வேளாண் தொழிலில் ஏற்பட்ட விளைவு எனலாம்.

தாம் பயணம் மேற்கொள்ளும் இடத்திலுள்ள செடி, கொடிகள் முதலியவற்றை கொண்டுவந்து இங்கு பயிரிடப்பெற்று நல்லமுறையில் வளர்க்கச் செய்வர். இச்செயல்கள் அனைத்தும் வள்ளுவப் பெருந்தகை கூறும். 'உழவன் உலகத்தார்க்கு அச்சாணி' என்ற கருத்தை நினைவூட்டுவனவாகவே அமைந்துள்ளன.

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற அப்பரடிகளின் திருவாக்கு இலக்கணமானால் அதற்கு இலக்கியமாகத் திகழ்பவர் நமது ஞானத்தந்தையாவர்.

நமது அடிகள் பெருந்தகையின் வேளாண் தொழிலின் பேரார்வத்தை வணங்கிப் போற்றி நாமும் அத்தகு நற்பணிகளைச் செய்வோமாக!



மருத்துவச் சேவையில் தவத்திரு அடிகளார்

தமிழகத்தின் மருந்துமுறைகள் காலத்தால் மூத்தவை, மரங்கள், செடிகள் ஆகிய மூலிகைகளைக் கொண்டு மருந்துகளைச் செய்தனர் என்பதை,

"இறையுறு விழுமம் தாங்கி அமர் அகத்து
இரும்பு சுவைக் கொண்ட விழுப்புண்நோய் தீர்ந்து
மருந்துகொள் மரத்தின் வாள்வடு மயங்கி
வடுவின்றி வடிந்த யாக்கையன்"

என்று புறநானூறு குறிப்பிடுகின்றது.

திருவள்ளுவர் நோயும் மருந்தும் பற்றிய பல செய்திகளை 'மருந்து' என்ற அதிகாரத்திலும் பிற இடங்களிலும் குறிப்பிடுகிறார். 'மருந்தோ மற்று ஊனோம்பும் வாழ்க்கை, பெருந்தகைமை பீடழிய வந்த இடத்து' என்று 'மானம்' என்ற அதிகாரத்தில் கூறுகிறார்.

சித்தர்களும், மருத்துவமும்:

தவநெறியிலும் மூச்சுப் பயிற்சியிலும் முற்பட்டவர்கள் சித்தர்கள் 'யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் பெருநோக்குடையவர்கள். அவர்களால் எழுதப்பட்டவைதான் பச்சிலைகள், கட்டைகள், காய்கள் முதலியவற்றால் உண்டாக்கப்பெற்ற சித்த மருத்துவம், அவ்வகையில் தமிழ்மரபில், சாந்தலிங்க அடிகளார் மருந்தின் தன்மையைக் கூறுகிறார்.

சாந்தலிங்கரின் மருத்துவக் கொள்கை:

சித்த மருத்துவத்தில் மருந்துகள் சிறிய அளவில் இருந்தாலும் பேராற்றல் வாய்ந்தவை. உடலில் அம்மருந்து தங்கி, ஒரு நோய்க்குக் கொடுக்கும் மருந்து பல நோய்களையும் நீக்கும் வகையில் உடம்பில் நின்று நோய்களால் வரும் துன்பங்களை நீக்கும் ஆற்றலுடையன. ஆனால் தற்காலத்து அமைந்த பிற மருந்துகளோ ஒரு நோயை நீக்கப் பயன்படுத்தும் போது பிற நோய்களுக்கு வித்திடும் தன்மையன. ஆனால் சித்தர்களால் ஆராய்ந்து உருவாக்கப்பட்ட மருந்துகள் உடல் நலத்திற்கும், மனநலத்திற்கும் துணை புரிவனவாக அமைந்துள்ளன. இதனைச்

சாந்தலிங்க அடிகளார் உளங்கொண்டு உவமையாக எடுத்தாள்கிறார். நமது உடம்பில் சுற்றுச்சூழலாலும் அவரவர் மேற்கொள்ளும் செயல்களாலும் நோய்கள் உண்டாகின்றன. அத்தகைய நோய்களைப் போக்க மருந்துகள் தேவை. அம்மருந்து ஆற்றலால் அருமருந்தாக பெருமருந்தாக இருக்க வேண்டும். அவ்வாறிருப்பதே நமது சித்தர் மருந்து என்பதை,

‘அருந்திய காலத் தற்பமாய் பிற்பேர்
ஔடதம் உடலினின்று உடலை
வருந்தல் செய் பிணியெல் லாம்அகற்றுதலின்
வஞ்சனே ன்நெஞ்சின் மாற்றரிதாய்
இருந்தாப் பற்றும் பிற்றைநாள் களின் விட்டு
ஏகவன் றேகடைக் கணித்தல்
புரிந்த நங்குரவன் அருளிந்தமை எப்பொழுதும்
உள்நினைந்து வாழ்த் திடுவோம்”

என்னும் இப்பாடலில் சாத்தலிங்கர் விளக்குகிறார்.

மெய்ப்பொருள் உணர்த்தும் குரு, தகுதி படைத்த மாணவனுக்கு தெளிவுதரும் அருமையுடைய பொருளை ஒரு சொல்லால் அருளுகின்றார். அச்சொல் வினைப்பகையாகிய பிறவிப் பிணியை நீக்குகிறது. துன்பத்திற்குக் காரணமாகிய காம, வெகுளி மயக்கங்களையும் அகற்றுகின்றது.

மேலும், சாந்தலிங்க அடிகளார் மருத்துவ முறையை ஆழமாகவும், தெளிவாகவும் உணர்ந்துள்ளார் என்பதனை அவரது பாடல்கள் வழியாக அறியலாம். இன்று பாதுகாப்புப் சூழலில், தீவிர சிகிச்சைப் பிரிவில் (intensive care unit) வைத்துப் பேணுவது போல அன்றும் இருந்தது என்பதை,

‘மாய்க்கு நோய்க்கு அன்றே மருந்து ஈகுவாரின் மால்
தேய்க்குமோர் பக்குவற் குஉந்தீபற
தேசிகனாய்ச் சிவம்உந்தீபற”

என்று அவிரோத உந்தியார் நூலில் உவமை காட்டி, முழுமுதல், ஆகிய இறைவன் குருவாகவந்து “மனநலம் படைத்துச் செம்பொருள் காணும் தகுதியுடையார்க்கு அப்பொழுதே அருள் புரிவார்” என்று கூறியுள்ளார்.

சித்தமருத்துவ வளர்ச்சியில் அடிகளார் அவர்களின் பங்கு

சித்த மருத்துவ வளர்ச்சியில் அடிகளார் அவர்கள் சைவ நெறிமுறைகளையும், தமிழ் மொழியின் உயர்வையும் போற்றி வளர்த்து வந்த அடிகளார் அவர்கள், தமிழால் வளர்ந்த கலைகளைப் பேணி வளர்ப்பதில் அக்கறை கொண்டு சாந்தலிங்க சாமிகளின் வழியில் தமிழின் பாரம்பரிய சித்த மருத்துவத்தின் வளர்ச்சிக்குப் பலவகைகளிலும் உதவியும், ஊக்கமும் கொடுத்து வந்தார்.

நம்நாடு யோகிகளும் சித்தர்களும் வாழ்ந்த சிறப்பு மிக்கநாடு சித்தர்களும், யோகிகளும், ஞானிகளும் தங்கள் யோகத்தின் மூலம் கண்டறிந்த செய்திகளை நூல் வடிவில் அதாவது பாடல்கள் வடிவில் கூறியுள்ளார்கள். அதில் பல மருத்துவச் செய்திகளும் உடல் நலம் பேணும் முறைகளும் மருத்துவச் செய்திகளும் உடல் நலம் பேணும் முறைகளும் மருந்துகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளனர். அத்தகைய மூலிகைகளையும் அதுதீர்க்கும் நோய்களையும் பற்றி அறிவதே சித்த மருத்துவமாகும். அந்த வகையில் மக்களிடையே சித்த மருத்துவத்தின் பயனையும், மூலிகைகளைப் பற்றிய அறிவையும் வளர்க்கும் பொருட்டு பேரூராதீனமும், தாராபுரம் சித்த மருத்துவச் சங்கமும் இணைந்து நான்காயிரத்துக்கு மேற்பட்ட மூலிகைகள் அடங்கிய மூலிகைக் கண்காச்சியும் சித்த மருந்து தத்துவ ஆய்வு மாநாடும் 31.08.2002 – 01.09.2002 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றன.

தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் தமிழகச் சுகாதாரத்துறை அமைச்சர் செம்மலை மாண்புமிகு சே.ம.வேலுச்சாமி அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மேலும் சித்த மருத்துவர்கள் சித்த மருத்துவ ஆய்வாளர்கள், நாட்டு மருத்துவர்கள் ஆகியோர் பங்கு கொண்டு சித்த மருத்துவம் பற்றியும் சித்தர்களின் உலகியல் கோட்பாடு பற்றியும், சித்தர்களின் மருத்துவக் கோட்பாடு பற்றியும் சித்தர்களின் பணி மந்திரக் கோட்பாடு பற்றியும், சித்த மருத்துவத்தில் யோகம் மாற்று மருத்துவமுறைகள், நாடி மருத்துவம், மூலிகைகளின் எதிர்காலம் இயற்கை வேளாண்மையில் மூலிகைகளின் சிறப்பு மற்றும் சித்த மருத்துவமும்

மானுடமும், சித்தர்களின் அறிவுக் கோட்பாடு சித்தர்களின் மூப்புக் கோட்பாடு சித்தர்களின் சாகாக்கலைக் கோட்பாடு, மூலிகை மருத்துவம் சித்த மருத்துவமும் ஏனைய மருத்துவமும், இயற்கை மருத்துவமும் சித்தர்களின் பாடல் ஏக மூலிகைப் பயன்பாடு சித்தர்களின் ஆன்மீகக் கோட்பாடு சித்தர்கண்ட காயபற்பம் மனவளம் போன்ற பல்வேறு தலைப்புகளில் பல அறிஞர்கள் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். இச்சொற்பொழிவுகள் சித்த மருத்துவத்தைப் பற்றி விரிவாக அறியும் வகையில் மிகப்பயனுள்ள மாநாட்டை நடத்தி மக்களுக்கு சித்த மருத்துவத்தை எடுத்துக்கூறி விழிப்புணர்வு ஏற்படுத்தி வந்தவர் தவத்திரு சாந்தலிங்கராமசாமி அடிகளாவர்.

போற்றி ஓம் நமச்சிவாய

அருந்திய காலத்து அற்பமாப் பின்பேர் ஔடதம் உடலில்நின்று உடலை
வருந்தல்செய் பிணிஎல் லாம்அகற் றுதலின் வஞ்சனேன் நெஞ்சில்மாற்று
அரிதாய்
இருந்தஎப் பற்றும் பிற்றைநாள் களில்விட்டு ஏகஅன் றேகடைக் கணித்தல்
புரிந்தநம் குரவன் அருள்இருந்தமை எப்பொழுதும் உள்நினைந்துவாழ்த் திடுவாம்
– சாந்தலிங்கர்

பேரூராதீனம் சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அறக்கட்டளை

சாந்தலிங்கர் மருத்துவமனை முதலிபாளையம்:

அருள்திரு சாந்தலிங்கப் பெருமாள் இன்னருள் பெருகுக. மேலைச் சிதம்பரம் எனும் மிக்கபுகழ் கொண்ட பேரூரில் அருள்திரு சாந்தலிங்கர் வழியில் அருளாட்சி புரிந்து வந்த திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழிவழி பேரூராதீனம் கயிலைக்குருமணி முதுமுனைவர் தெய்வத் திருப்பெருந்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களின் அருட்பணிச் செம்மையைப் போற்றும் வண்ணம் அன்பர்களும், ஆன்றோர்களும் மருத்துச் சேவையை ஆதீனத்தின்வழி தொடங்க வேண்டுகோள் விடுத்தனர்.

அதனடிப்படையில் பேரூராதீனம் சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அறக்கட்டளை தொடங்கப் பெற்று அடிகள் பெருந்தகை தோன்றிய ஊரான முதலிபாளையத்தில் “சாந்தலிங்கர் மருத்துவமனை” எனும் பெயரில் அமைக்கப்பட்டு முதலிபாளையம் மற்றும் சுற்றுவட்டார கிராம மக்களுக்கு சாந்தலிங்கர் மருத்துவமனை சிறப்புடன் சேவை செய்து வருகின்றது.

சாந்தலிங்கர் மருத்துவமனையின் அறங்காவலர் குழு:

திருப்பெருந்திரு. சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்கள் குருமகா சந்திதானங்கள், பேரூராதீனம்

திருமிகு. ம. மாணிக்கம் அவர்கள், தலைவர் சக்தி குழுமம்

திருமிகு. எஸ்.வி.பாலசுப்பிரமணியம் அவர்கள், தலைவர், பண்ணாரி அம்மன் குழுமம்

திருமிகு. கி.இராமசாமி அவர்கள், தலைவர், ரூட்ஸ் குழுமம்

மருத்துவர் நல்லா.ஜி.பழச்சாமி அவர்கள், தலைவர் கோவை மருத்துவ மையம், மருத்துவமனை

திருமிகு. ஒ.ஆறுமுகசாமி அவர்கள், தலைவர், செந்தில் குழுமம்

திருமதி. ச.மலர்விழி அவர்கள், தலைவர், கிருஷ்ணா கல்வி நிறுவனங்கள்.

திருமதி. காந்திமதி இரகுபதி அவர்கள், மரபுவழி அறங்காவலர்.

அருட்கவிஞர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளின் பெருமான்

தாய் தமிழ் மொழியையும் சைவ சமயத்தையும் இருகண்களாகக் கொண்டு எப்போதும் பேணி நெறிகாட்டி வரும் அடிகள் அவர்கள், தொல்காப்பியச் செய்யுள் நெறி நெறி போற்றும் அடிகள், வெண்பா, ஆசிரியப்பா முதலான பாவகைகளையும் கட்டளைக் கலித்துறை விருத்தம் எனும் பாவின வகையினும் தமது கவிதைகளைப் பெரும்பாலும் படைத்துள்ளார்.

கவிதையின் பாடு பொருளாகத் தமிழிழ் நெறிசமய அருளாளர்கள் துறவோர் சான்றோர்கள், மணிவிழா, பொன்விழா, முத்துவிழா கொண்டாடும் வாழ்வியல் சார்ந்த பெருமக்கள் திருமணம் காணும் மணமக்கள் இனிது வாழ வாழ்த்துப் பாக்கள் பொங்கல் வாழ்த்துப்பாக்கள் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் சிறப்பைப் போற்றும் வாழ்த்துப்பா, திருக்கோயில்களில் நடைபெறும் திருக்குட நன்னீராட்டு விழாவிற்கு வாழ்த்துப்பாக்கள், நீத்தாருக்கு திரங்கற்பா புதுமனை புகுவிழாவிற்கு வாழ்த்துப்பா, வாழ்த்துரை அணிந்துரை முதலானவைகளுக்கு அடிகள் கொடுத்த கவிதைகள் பாடல்கள் ஏராளமாக இருந்துள்ளது.

திருமண வாழ்த்து

கொங்கு நாட்டில் உயர்முத்தன் குலத்தில்
தேவ சேனாபதி வளத்தால்
தங்கும் கலைசேர் அனுசுயா தன்னை
மணந்த அன்புளத்தில்
பொங்கும் உறவு சான்றோர்கள்
பொலிவாய் வாழ்ந்த அறநெறியில்
எங்கும் எதிலும் புகழ் பரப்பி
இனிது வாழ வாழ்த்துகின்றோம்
வளரும் உழவர் குடியதனால்
மனித உறவுதனைப் பேணி
உளத்தில் தெய்வச் சிந்தனையுடனே
உயர்ந்தோர் கூறும் நெறிநின்று

அளவில் கலைகள் உணர்ந்து அன்பில்
அனைந்து அற வாழ்வில்
இளரும் நெஞ்சினராகி பல்பேறுற்று
இனிது வாழ வாழ்த்துகின்றோம்.

என வரும் வாழ்த்துப்பாவில் பத்துப்பண்புகளுக்கு மேல் கூறி அதனைப் போற்றி மணமக்கள் வாழவேண்டும் என அடிகள் வாழ்த்துகிறார்.

1.குலச்சிறப்பு, 2.அறநெறியில் வாழவேண்டும் என நெறிப்படுத்துதல், 3. வளரும் உழவரின்குடி எனக்குடிச் சிறப்பினை புகழ்தல், 4.மனித உறவு பேணுதல் என உறவினரைப் போற்றி பாதுகாக்க வேண்டுதல், 5.உள்ளத்தில் எப்பொழுதும் தெய்வ சிந்தனையையிருந்த வேண்டுதல், 6.சான்றோர் கூறும் நெறி நிற்க வழிகாட்டுதல், 7. அளவில் கலைகளை உணர்ந்து கொள்ளுதல் 8. அறவாழ்வை வாழ்ந்து காட்டி மற்றவர்க்கும் அவ்வற வாழ்வைப் பின்பற்ற வைத்தல் 9. நெஞ்சம் கசிய வேண்டும் இல்லறம் சிறக்க இப்பண்பு இன்றியமையாதது என்ற சிந்தனையில் நமது அடிகள் அவர்கள் இளரும் நெஞ்த்தினராகி என்று பாடுகிறார். 10.பல் பேறுற்று இனிது வாழ வாழ்த்துதல் இல்லறக்கடமைகளைச் சரியாக ஆற்றினால் பலவகை நற்பேருகள் இனிது கிட்டும் என்ற அறச்சிந்தனையில் மணமக்களை வாழ்த்தி வாழ்த்துப்பா இயற்றி வாழ்த்தினார் அடிகள்.

முத்தூர் குலதெய்வக்கோயிலுக்கு அடிகளின் அணிந்துரை

தமிழகத்தில் கொங்குநாடு மலைசூழ்ந்த இனிய பகுதியாகும். கொங்குநாடு இருபத்து நான்கு உட்பிரிவுகளை உடையது. அதில் காங்கேய நாடும் ஒன்றாகும்.

கொங்குவேளாளர்கள் பழம்பெரும் குடியினர். வீரமும் பண்பும் உடையவர்கள், வந்தவர்களை வரவேற்று விருந்தளிக்கும் இயல்பினர். கொங்குவேளாளர் குடும்பங்களில் குலப்பிரிவுகள் கூட்டங்கள் என வழங்கப்படுகின்றன. அவை சங்க காலத்தொட்டு வரும் பெயர்களை அடிப்படையாகக் கொண்டவை. தங்கள் குல முதல்வர்கள் பெயரால் அமைந்த கூட்டங்கள் பல. இக்கூட்டத்தார்க்கு வழிபடு குலதெய்வமாய்

விளங்கும் கோயில்கள் நாடெங்கும் உள்ளன. சிறப்பாக காங்கேய நாட்டுப்பகுதியில் பல குலத்தவர்கட்கு ஒருங்கு இணைந்த கோயில்கள் உள்ளன. அவை காணிகள் என வழங்கப்பெறும். பெரும்பாலும் குலதெய்வ கோயிலாக சிவன்கோயில் காவல் தெய்வமாகிய அம்மன் கோவிலும் அமைந்துள்ளன. நன்றி மறவா கடப்பாட்டில் வீரர்களையும் வழிபடுதலுண்டு. சிவன் கோயிலைச் சார்ந்த சிவாச்சாரியார் குலகுருவாக விளங்குவார். இது கொங்கட்குரிய தனிச்சிறப்பெனலாம், ஆனால் காலப்போக்கில் சிறந்த சில நெறியாளர்களாக விளங்கியவர்கள் காவல் தெய்வமாகிய சக்தியை வழிபடும் நிலையும் ஏற்பட்டு உயிர்கொலைப் பூசைக்குரியவர்களாக மாறியுள்ளனர். இந்நிலை மாற்றப்படவேண்டும்.

கொங்கு வேளாளர்களில் முத்தூரை காணியாகக் கொண்டவர்கள் ஒரு குத்தவர்கள். இதில் கொங்கு வேளாளர் கூட்டத்தினர் ஐந்து பகுதியினர் ஆவர். முத்தூர்க் காணியாளர்கள் முத்தன் மணியன், சேரன் வெள்ளம்பர் பொருளந்தை, காவலியர் முதலிகள் ஆவார்கள்.

முத்தூர்க் காணியைச் சேர்ந்த கோயிலுடன் தொடர்புடைய மடங்கள் இருந்தன. அவற்றை அமைத்தவர் பெண்தர்கள். திருமணம் ஏற்காமல் திலகவதியார் போன்று தவநெறியை மேற்கொண்டு வாழ்ந்தனர். என்ற செய்தி சமயநெறியில் மகளிர் ஆற்றிய நற்பணியைத் தெரிவிப்பனவாகும்.

முத்தூர்காணிக் கோயில்கள் பொலிவும் புதுமையும் பெற வேண்டும். கொங்குவேளாளர்கள் தம்குல தெய்வ வழிபாட்டில் சிறப்பாக சிவன்கோயில்களை பேணிப்போற்றுவது தலையாயக் கடமையாகும். முத்தூர்க்காணியைச் சேர்ந்தவர்களது வரலாறும் கோயிற் செய்திகளும் அமைந்த நூல் ஒன்று வெளிவர இருப்பது அறிந்தோம். இந்நூலை வெளியிடும் அன்பர்கள் எல்லா நலன்களும் பெற்றுஇனிது வாழ சோழீசருடன் அழகர் பெரியநாச்சியம்மையும் சாந்தலிங்கப் பெருமாள் தாள் மற்றும் பலரையும் நினைத்து வாழ்த்துகிறோம்.

முத்தூர் அருள்மிகு செல்வக்குமாரசாமி திருக்கோயில் திருக்குட
நன்னீராட்டு விழாவிற்கு வாழ்த்து

திருக்குட நீராட்டு வாழ்த்துப்பா

கொங்கு நாட்டின் குடிமக்கள்
குலத்தின் தெய்வ மாய்ப்போற்றிப்
பங்கு பெறும்நற் பணிசிறந்த
கோயில் பலவாம் அவற்றுள்ளே
தங்கட் குரிய தாம்செல்வக்
குமார சாமி அத்தனூர்
தங்கும் அம்மைதனைச் சின்னமுத்தூர்க்
கோயில் தனில்போற்றி.
நிலத்தை உழுது பயிரிட்டு
நிலவும் அறங்கள் பலசெய்தோர்
குலத்தார் பலரும் ஒருமித்து
கோயி லதனைப் புதுப்பித்து
நலத்தின் மிக்கு வழிபாட்டால்
கயந்த குடநீ ராட்டுவிழா
கலந்த வன்பால் பலர்கூடி
கனிவாய் செய்தார் மிகவாழி!

முதலிபாளையம் பள்ளி விழாவிற்கு வாழ்த்து

கொங்கில் ஆறைநாட்டின் கண் கூடிவாழும் உழவர்குழாம்
தங்கும் முதலிபாளையத்தில் தவஞ்சேர் சாந்தலிங்கர்அருள்
பொங்கும் உயர்நிலைப்பள்ளி பொலியசிவராமசாமிஐயா
பங்குமிகு பச்சாக்கவுண்டர் பணியால் உயர்ந்தநிலை வாழி

கல்வி வளர்ச்சிக்குரியநிலை காமராசர் சிந்தனையால்
பல்கிப்பெருகிச் சிற்றூர்கள் பள்ளியமைய இளையோர்பலரும்
நல்லவாறு பயின்றுயர்ந்து வாழ்வதற்காம் பணிசெய்து
செல்வவளங்கள் இல்லாத சிற்றூர்நலம் சேர்ந்திட வாழி

உழவர்குடிசேர் முதலிபாளையத்தை உற்ற காட்டம்பட்டியினில்
மழலையராக மணலெழுத்தில் வளர்ந்தோம் இங்குகலையுணர
பழகும்பண்பு வளர்வதற்காகப் பள்ளிதொடங்கி இன்றுபொன்
விழாவைக்கண்டு பலர்பயின்று மேலும் வளர வாழ்த்துகின்றோம்.

நாட்டில்பண்பும் கலையுணர்வும் நற்றமிழ்நெறியும் வளர்ந்திடவே

காட்டும்சாந்தலிங்கர் அருள்கல்வி சிற்றூர் இளையோர்கள்
வாட்டம்தவிர்த்து குடும்பங்கள் மகிழ்ந்து தெய்வவழி
பாட்டில் இளையோர் குழாம்சூழ்ந்து பாடிப்பரவ வாழ்த்துகின்றோம்.

முளையாம் பூண்டி அருள்மிகு செல்லாண்டி அம்மன் திருக்கோயிலுக்கு வாழ்த்து

திருக்கயிலாய பரம்பரை மெய்கண்டார்வழி பேரூராதீனம், கயிலை மாமுனிவர்

திருப்பெருந்திரு. சாந்தலிங்கராமசாமி அடிகளார் அவர்கள் அருளிய வாழ்த்துப்பா

சாந்தலிங்கர் தாள்மலர் வாழ்க

1. கொங்கில் முளையாம் பூண்டியினில் காடை குலத்தார் குலதெய்வம்
பொங்கும் அருள்சேர் செல்லியம்மன் பொருந்து இலிங்கேசுவரர் முதலாத்
தங்கும் தெய்வத் திருத்தலங்கள் தம்மை முழுதும் புதுப்பித்து
தங்கள் குலத்துப் புகழ் வளர்க்கும் தக்கோர் பணியை வாழ்த்துகின்றோம்.

2. கல்விக் கடலாய் அருள் உள்ளங்கனிந்து சமயநெறியில் அருட்
செல்வம் வளர்த்துக் கௌமார நெறியை உலகில் திகழ்வித்து
நல்வந்தனையும் வழிபாடும் நல்கும் இராமானந்த குரு
பல்லோர் போற்றத் தோன்று குலம் பண்பு வளர வாழ்த்துகின்றோம்.

3. அன்பால் பண்பால் அறநெறியால் அருள்சேர் சமயநெறி வளரப்
பொன்னும் பொருளும் வழங்கியருட் பொலிவார் கோயில் புதுப்பித்து
அன்னை செல்வியம்மனுடன் அருள்சேர் லிங்கேசுவரர் கோயில்
மன்னும் தெய்வத் தளிகளுடன் வளரும் பணியை வாழ்த்துகின்றோம்.

4. நாட்டு நலமும் தொழில் வளமும் நாடும் காடை குலத்தன்பர்
ஈட்டும் பொருளால் திருக்கோயில் இலங்கும் பணிகள் முன்னோர்கள்
காட்டும் வழியில் தமிழாலே கசிந்து வழிபட்டன்னையருள்
வேட்டுக்குட நீராட்டு விழா விரும்பிச் செய்வார் பணி வாழி

கோயில்பாளையம் கவய காளியம்மன் கோயிலுக்கு அடிகளாரின் வாழ்த்து

ஆற்றல் மிகு காலன்தான் அறியாமல் செய்குற்றத்தை

மாற்றுதற்குப் பேரையினில் வழிபட்டுக் கவுசையினில்
ஏற்றமிகு கோயிற் பானையத் தியலும் திருக்கோயில்
போற்றிய சான்றோர் கால காலனெப் போற்றிடுவார்

குலக் கோயிலாயிதனைக் கும்பிடுவோர் கொள்ளலையாம்
நலக் கரிய காளியென நற்றழிழால் வழிபாட்டார்
நிலவு குடும்பங்களெலாம் நிறைவாகும் வளமுடனே
பலநலமும் பெற்றுள்ளார் பணிபுரிந்து வாழ்கின்றார்

அன்னையினை வழிபட்ட அபிராமபட்டர் தமிழ்
தன்னை மறந்திடலாமோ தனம் முதலாம் அனைத்துமருள்
பொன்னோடு புகழ்பெருகும் புனிதமான நலம் பெறலாம்
முன்னோர் தம் மரபு போற்றும் முதல்வி திருவருள் பெருவீர்

சிரவைக் கவுமார மடம் சேர் முருகானந்தர் வழி
உரன்மிகுந்த சிவகுமார் உளமுவந்து திருப்பணியைச்
சிரமேற்று பலருதவி சேரச் செய் பணி வாழி
வரம் வேண்டி அம்மையினை வழிபடுவோர் குலம் வழி

கொங்கினத்தார் குலக்கோயில் சிவன்கோயில் கும்பிட்டு
பொங்கும் அன்பால் பேற்றிடுக புகழ் கால காலற்குப்
பொங்கலிட விளக்கேற்றப் பூசைக்காம் பொருளதவி
தங்கள் குலம் தழைக்க அவன்தாள் பணிய வாழ்த்துகின்றோம்.

தாராபுரம் அகத்தீஸ்வரர் திருக்கோயில் குடமுழுக்கு விழாவிற்கு தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் வாழ்த்து

தெய்வத் தமிழ்சேர் அறநெறிகள் திகழும் தாராபுரந்தன்னில்
சைவ முதல்வர் அகத்தியர்தம் தவஞ்சேர் கோயில் திருப்பணிகள்
செய்யும் அன்பர் சிவநெறிசேர் மன்றம் அமைத்து திருவருளால்
மெய்மையுறவே செய்தமைத்தார் விளங்கி வாழ்க பல்லாண்டு.

ஆடல்வல்லான் திருவருளால் அகத்தீசர்தம் திருவருளை
நாடும் அன்பர் தனித்தனியே நயந்து பணிகள் செய்தமைத்தார்

கூடும் அன்பால் கும்பிட்டுக் குறைகள் நீங்கித் தமிழ்நாடு
பீடுற்றிடவே வழிகாட்டும் பெருமைக்குரிய ரானார்கள்.

வாட்டம்தவிர மனநலத்தால் வாழ்வு மலர அருளும்வழி
பாட்டால் உயரும் திருக்கோயில் மாண்பால் பணிகள் செய்கின்ற
நாட்டமுடைய நல்லன்பர் தாராபுரத்தில் அகத்தீசர்
கேட்டதெல்லாம் தந்தவர்கள் கிளைகள் தழைக்க அருள் செய்வர்.

புனித தம்மையும் திருக்கோயில் புகழ்சேர் முன்னோர் திருப்பணியில்
இனியதாய கலைசெல்வம் இசைசெய்தார் இன்றெங்கும்
மனித உணர்வு கீழாகி மாசு படிந்தநிலை மாற்றி
கனிவுசேரும் வழிபாட்டால் கலந்து வாழும் நெறி காண்போர்.

பண்பும் அன்பும் நிறைஅன்பர் பண்ணோர் தமிழால் வழிபட்டு
மண்ணில் இனிது வாழ்வதற்கும் மறுமைநலங்கள் பெறுவதற்கும்
எண்ணும் எண்ணம் நிறைவேற இனிதே அருள்வார் அகத்தீசர்
அண்ணல் அவரை வழிபட்டு அன்பர் வாழ்க பல்லாண்டு.

– சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

தென்கரை நாடு சங்கரண்டாம் பாளையம் பட்டக்காரர் அவர்களை வாழ்த்தும் அடிகளார்

கொங்கு நாட்டில் தமிழ்வளர்த்துக் குலவு சமய நெறிபேணிப்
பொங்கி எழும்பே ராற்றவினால் புகழ்சேர் குடிகள் தலைமைமிகு
பங்கேற் றிடுவே ணுவுடையார் பட்டக் காரர் மரபினுக்காம்
துங்கமிகுகோ யிற்பணியில் தோய்ந்தோர் வாழ்க பல்லாண்டே

ஆய்ந்த தமிழ்ப்பா வலர்தமக்கும் அறவோர் தமக்கும் வேண்டுவன
தோய்ந்த அன்பால் மிகவழங்கித் தொன்மை காக்கும் திருவாளர்
வேய்ந்த வாகைக் குமார ரத்ன வேணு டுடையார் ஓய்வின்றி
வாய்ந்த மேன்மைத் திருப்பணிசெய் மகிபர் வாழ்க பல்லாண்டே

முன்னாள் மரபுப் புலவர்சொன்ன மூவா தமிழின் முறைகாத்து
இன்னுள் தெய்வப் பணியுடனே இலக்கியத்தை நனிபோற்றி
மன்னுள் புகழ்வே ணுடர்தொன்மை மகிமை தோன்ற அச்சிட்டு
நன்னுள் நல்கும் குமாரரத்ன நல்வே ணுடர் வாழ்க நன்றே

அருளப் பரமர் தென்னீசர் அருமை ரத்னமூர்த்தியருள்
திருவின் வேந்தர் பல்பணிகள் செப்பமுறவே செயும்செல்வர்
பெருமைக் கொங்குத் திருநாட்டின் பேற்றி காக்கும் பெரியகுல
மருமான் குமார ரத்தினவேல் மதிவேணுடர் வாழ்க நன்றே

பத்துமலையில் குகன்திருத்தாள் பணிந்து போற்றி வழிபடுவார்
ஒத்த உணர்வால்மேல்கீழாவோர் எவருமில்லை எனும் உணர்வைச்
சித்தத்திருத்தும் திருப்புகழ்ப் பாச்சேரும் ஆறுபடை வீட்டில்
சித்தநாதன் பக்தர் குழாம் சேவடி போற்றும் நிலை வேண்டும்.

அடிகளார் பாடிய முதலிபாளையம் - பிள்ளையார் பாடல்

நலம்சேர்முதலிபாளையத்தில்நாளும் உழைத்து பயிர் விளைக்கும்
நிலம் சேர் உழவர்குடிமக்கள் நினது கோயில் புதுப்பித்து
வலம் வந்துன்னை வழிபட்டு மனதில் கவலை பிணி நீங்கத்
தலம்சேர் மூத்த பிள்ளையார்தாளைப் பணிந்து போற்றுகின்றோம்

உள்ளன்புடைய ஊரார்கள் ஒட்டுக் கூடத்துனைப் போற்றி
கள்ளமற்ற வாழ்வருளக் கருதி ஒன்றாய் வழிபடுவார்
தெள்ளுதமிழின் குருவருளைத் தேடும் கீரநத் தத்தில்
வள்ளல் மருதாசல அடிகள் வாழ்த்துப் பெற்றார் நின்கோயில்

நற்றொண்டர் தம் பணியேற்று ஞானக்கொழுந்தாம்ஆனைமுகன்
பொற்பாதங்கள் போற்றியன்பால் பொருந்தும் உழவுத் தொழில்
உற்றார் ஊரார் நலம்பெறவே உனதருளை வேண்டுகின்றோம்

ஆனைமுகனே நின்னடியை அருகம்புல்லால் அருச்சித்து
ஊனை உருக வழிபட்டு உயர்வோம் எங்கள் குடும்பங்கள்
ஏனையோரும் செல்வநலம் எய்தி வாழஅருள்புரிவாய்
தேனேநிகர்த்த தமிழாலே திருத்தாள் போற்று வாழ்வருளே

அன்பால் போற்றும் எங்களுக்கு ஆயுள் வளமும் மனநலமும்
துன்பம் துயரம் இல்லாத தூயவாழ்வு தந்த டியார்
முன்பெற்றிடு நற்பேறுகளும் முறையாய்த் தருவாய் ஐங்கரனே
நன்மை அணைத்தும் தந்தருள்க ஞானத்தமிழால் போற்றுகின்றேன்

முதலிபாளையம் - மாரியம்மன் - மாகாளியம்மனுக்கு அடிகளாரின் பாடல்

அருமைத்தாயே மாரியம்மா அன்பால் உன்னை போற்றுகின்றோம்
கருணைசேரும் திருமுகக் கருத்திலிருத்திக் கவலைநீங்கக் கருணை நல்காய்
பெருமைசேரும் கோயில்தனில் பேரருள் புரிவாய் அடிபோற்றி
உருகிப் போற்றும் எமக்கு நலம் எல்லாம் தருவாய் வணங்குகின்றோம்.

அன்பாய் முதலிபாளையத்தில் அடியார் போற்ற மாரியெனும்
இன்வடிவாய் எமது குறைதீர்த்தருள் போற்றி
நன்மையனைத்தும் எல்லோருக்கும் நல்கித் துயர்தீர்த்து அருள் போற்றி
ஒன்றாய் அன்பாய் போற்றுகின்றோம் உயர்மாரித்தாய் அடி போற்றி

எல்லைத் தெய்வம் மாகாளி எங்கள் குடும்பம் தனைக் காப்பாய்
பல்வகை நலமும் தந்திடுவாய் பசிபிணிபோக்கும் மருந்தாவாய்
கல்விச் செல்வம் மனஉறுதி கருதியுன்தாள் போற்றுகின்றோம்
அல்லல் இல்லா வாழ்வருள்வாய் அன்னை வீரத்தாய் போற்றி

நன்மை தருநாகேசுவரன் நலங்கள் எல்லாம் தரவேண்டும்
அன்பால் மலர்கொண்டுனைப் போற்றும் ஆர்வம் மனதில் உறவேண்டும்
பொன்னும்பொருளும் நல்மனம் பொருந்து வாழ்வுதர வேண்டும்
தென்னாடுடைய சிவனே! உன் திருவடி போற்றி போற்றி

முதலிபாளையம் - முருகப்பெருமானுக்கு அடிகளார் பாடிய பாடல்

கந்தா! இளமைக் கருணை வடிவே
சிந்தாமணியே செல்வம் தருவாய்
வந்தார்வத்தால் போற்றும் அன்பர்
சிந்தை மகிழச் செய்வாய் போற்றி

எனவரும் பாக்களால் மண்ணின் மணம் கமழத் தாம் பிறந்த ஊரில் குடிகொண்டுள்ள தெய்வங்களையும், தமது பாக்களின் திறத்தால் படைத்து, எல்லோரும் இனிது வாழ இறைவன் அருள்புரிய வேண்டும் என இறையருளை அடிகள் அவர்கள் வேண்டுகிறார்.

இவ்வாறாக நம்தம் அடிகள் பெருந்தனை அவர்கள் படைப்பாற்றலில் சிறந்த விளங்கியது போன்றே கவிதைபாடுவதிலும் வல்லவர்! வல்லுநர்! என்பதைப் பல பாடல்களின்வழி தெளிவாக அறியலாம். கவிதைச் செறிவில் சிறந்த உணர்ச்சி நயம், ஒலிநயம், எதுகை, மோனைச் சிறப்பு, யாப்பு நுட்பம், கருத்து விளக்கம், பாடல்களின் கருதுபொருள், வடிவம் ஆகிய அனைத்துப் படிப்போர் சிந்தனையில் தெளிவு உண்டாகும் வகையில் அமைத்துக் காட்டியுள்ளார்.

எல்லாப் பாக்களிலும் அறச்சிந்தனையும், செம்பொருள் பேணும் சிறப்பும், வழிபாட்டு நோக்கமும், தமிழ் வழிபாட்டின் சிறப்பும் விரிவாக இடம்பெற்றுள்ளன. நமது அருட்தந்தை அவர்களின் கவித்துவம் போற்றி அவர்நெறியில் நிற்போமாக!

கொங்கு வேளாளர் சமுதாயம் குறித்து கர்நாடக காராளர் இதழுக்கு அடிகளின் நேர்காணல் செய்தி

காராளர் ஆசிரியர் பவளன் கிருஷ்ணசாமி கடந்த 04–02–2005 அன்று பேரூர்த்திருமடம் சென்றிருந்தார். அங்கு கயிலை மாமுனி தவத்திரு சாந்தலிங்கராமசாமி அடிகளாரோடும் இளையபட்டம் தவத்திரு மருதாசல அடிகளாரோடும் சந்திப்பு நடத்தி நாள் முழுவதும் மடத்தில் தங்கியிருக்கும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. இருவரோடும் நிகழ்த்திய உரையாடல்களில் தவத்திரு சாந்தலிங்க அடிகளாரோடு நடத்திய உரையாடல் இங்கே பதிவு பெறுகிறது. நமது எல்லா வினாக்களும் அடிகளார் அவர்கள் பொறுமையாகவும், பரிவோடும் பதில் தந்தார்கள். அடிகளாரின் அனுபவச் செழுமையையும் ஆன்மீக ஆழத்தையும் இந்த ஒரு சிறு இதழில் வெளிப்படுத்தி விட முடியாது. எந்த ஒரு வினாவுக்கும் அவர் அளித்த பதிலை விட இன்னும் ஏராளமான செய்திகள் அவரிடம் இருந்தன. அவரது பேச்சின் தமிழ் இனிமை கேட்டுக் கொண்டே இருக்கும்படி செய்வது; இந்த உரையாடலின் பெரும்பகுதி கொங்குநாட்டின் வரலாறு, பண்பாடு, சமூகம் பற்றி அமைந்திருக்கிறது.

காராளர் : கொங்குவேளாளர் மரபு சைவமரபு என்று கொண்டால் அவர்கள் அதிலிருந்து எப்படி மாறினார்கள்? குலப்பெயர்களின் மூலம் தெரிந்து கொள்ளலாமா?

அடிகளார் : சைவ மரபில் புலால் மறுத்தல் போன்ற கட்டுப்பாடுகள் உண்டு. அது அவர்களுக்குப் பிடிக்காமல் இருந்திருக்கலாம். வேட்டுவர்களோடு கொண்ட தொடர்பு காரணமாக புலால் உண்ணும் பழக்கத்தை மேற்கொண்டிருக்கலாம். அத்தோடு முத்தன் கூட்டத்தில் முத்துக்குமாரசாமி, செல்வக்குமாரசாமி, வீரக்குமாரசாமி என்போர் இருந்தார்கள். இவர்களுக்கெல்லாம் வீரவழிபாடு உண்டு. இவ்வழிபாடு பிற்காலத்தில் முருக வழிபாடாக மாறியது. ஒரு சமூகத்தின் வரலாற்றுப் போக்கில் இப்படியெல்லாம் நிகழ்வது இயல்பு. கொங்கு வேளாளர்கள் தொன்மையான தமிழ்மரபோடு தொடர்புடையவர்கள் என்பதற்கு அவர்கள் குலப்பிரிவுகளே ஆதாரம், சாத்தந்தை, செங்கண்ணி, வெண்டுவன், அந்துவன் என்பவற்றை எடுத்துக்காட்டாகக் காட்டலாம். சேரகுலம்,

பாண்டியகுலம் என்பவை அந்தந்த அரசர்கள் கொடுத்த பட்டங்களாகக் கருதலாம். பறவைகளை வைத்து குலப் பெயர்கள் வைக்கப்பட்டன என்பது பொருத்தமாக இருக்காது. காடவன் என்பது தான் காடை என்ற வந்திருக்கும், காலப்போக்கில் மாற்றம் என்பது தவிர்க்க முடியாதது.

காராளர் : கர்நாடகத்திற்கும், கொங்கு நாட்டிற்குமுள்ள தொடர்பு.....

அடிகளார் : பல நூற்றாண்டுகளாக இந்த தொடர்பு உண்டு. ராஜேந்திர சோழனது கல்வெட்டு சத்தூர் மடத்தில் இருக்கிறது. சாந்தலிங்கர் காலத்தில் கன்னட அரசன் குமாரதேவன் வந்தபோது சிவையன், மாதையன் போன்றோர் இங்கு ஆண்டிருக்கிறார்கள். இசுலாமியர் ஆட்சிக்கு முன்பு அவர்கள் ஆட்சி இருந்திருக்கிறது. அக்காலத்தில் மைசூர்ப்பகுதி எருமைநாடு என்று அழைக்கப்பட்டது.

காராளர் : உயிர்ப்பலி என்பது நமது மரபு இல்லை என்று எப்படிச் சொல்லமுடியும்?

அடிகளார் : வேளாளருக்கு சைவ மரபு என்பது தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. பழைய மரபில் கார்காத்தார், தொண்டை மண்டலத்தார் ஆகியோர் சைவர்களே, காலப்போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம்.

காராளர் : சிறுபான்மையினர் மடங்களெல்லாம் முறையாக ஒழுங்கு செய்யப்பட்டவையாக இருக்கின்றன. அவை பாரம்பரியமாகவே செல்வாக்குடையவாக இருக்கின்றன. ஆனால் நமது மடங்கள் அப்படி பரந்துபட்ட வளர்ச்சி அடையவில்லையே.

அடிகளார் : அதற்குக்காரணம் அந்தந்த சமூகங்களின் ஆதரவு. அவர்கள் தங்கள் மடங்களின் செயல்பாடுகளில் பங்கு கொள்வதை கடமையாகக் கருதுகிறார்கள். அவர்களுக்கு அரசின் ஆதரவும் இருக்கிறது. சிறப்பு உரிமைகள் இருக்கின்றன. அவர்கள் விஷயங்களில் அரசு தலையிடாது. ஆனால் நாம் ஒவ்வொன்றுக்கும் அரசின் அனுமதியை எதிர்பார்க்கிறோம். அதோடு கூட சமூகமும் தனது ஆதரவைத் தரவேண்டும். பேரூராதீம் இளம் துறவிகளை உருவாக்குவதற்கு 'தவநெறிச் சாலை' என்று ஒரு குருத்துவப்பள்ளியை நிறுவ முயற்சி செய்து கொண்டிருக்கிறது. ஆனால் அப்பள்ளிக்கு பிள்ளைகள்

வேண்டுமில்லையா? பிள்ளைகளைத் தர சமூகத்தார் தயங்குகிறார்கள். நான் எப்போதும் சொல்வேன்! "ஏன் ஒரு குழந்தைகள் பெற்று எங்களுக்குத் தாருங்கள் என்று நாங்கள் கேட்கிறோம். என்னை வணங்குவதற்கு எத்தனையோ பேர் வருகிறீர்கள். உங்கள் பிள்ளைகளையும் நாங்கள் வணங்கத்தக்கவர்களாக மாற்றித்தருகிறோம். உங்கள் பிள்ளை குடிகாரனாகவோ, கெட்டவனாகவோ மாற்றிவிட்டால் அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் இறைப்பணிக்கு, சமூகப்பணிக்கு அவனை ஆட்படுத்தத் தயங்குகிறீர்கள் என்று நாம் பல மேடைகளில் கொஞ்சம் கடுமையாகவே சொல்கிறோம். எந்தச்சமூகத்திலிருந்து பிள்ளைகள் வந்தாலும் நாங்கள் எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். நமது சமூகத்தாரிடம் கொஞ்சம் உரிமையெடுத்துக் கொண்டு கேட்கிறோம். மக்கள் தொகைக்கு ஏற்றபடி இப்படிப்பட்ட பொது ஊழிய மடங்கள் இருக்கவேண்டும். அதை நடத்திச் செல்ல போதுமான அளவு ஆள்வசதியும் இருக்க வேண்டும். அப்போது தான் பல வகைகளிலும் நாம் முன்னேற முடியும்.

காராளர் : நீங்கள் சொல்கிறபடியான நிலைமை இப்போதைக்கு வருமென்று தோன்றவில்லை. சமூகப்பணிக்கன்று நமது சமூகத்தில் மிகக்குறைந்த எண்ணிக்கையிலேயே ஆட்கள் கிடைக்கிறார்கள். கிறிஸ்தவர்களில் இருக்கக்கூடிய பாதிரிமார்கள், கன்னியாஸ்திரீகள் என்பவர்களை ஒப்பிடும்போது நம்மிடம் ஒன்றுமே இல்லை. இத்தனைக்கும் நம்மில் பெரும்பாலோர் கிறிஸ்துவ நிறுவனங்களில் பங்கு கொண்டும், பலன் அடைந்து கொண்டும் தான் இருக்கிறார்கள்.

அடிகளார் : நிலைமை அவ்வளவு மோசமாக இல்லை. நம்மவர்கள் நிச்சயம் நிலைமையை உணர்வார்கள். காலப் போக்கில் இது சரியாகும். ராமகிருஷ்ண இயக்கங்கள், சித்பவானந்தர் தொடங்கி வைத்த பணி என்பவை சில மாற்றங்களை உண்டு பண்ணியிருக்கின்றன. அதில் எல்லா சமூகத்தவர்களும் பங்கு கொண்டிருக்கிறார்கள்.

காராளர் : ஆனால் நாம் அவர்களுக்குத்தரும் பயிற்சி உலகளாவியதாகவும் மாறிவரும் சமூக, பொருளாதார, பண்பாட்டுச்சூழலுக்கு ஏற்றதாகவும் இருக்குமா?

அடிகளார் : சைவசித்தாந்தம் தான் அதற்குச் சரியான வழி. சைவசிந்தாந்தம் பல சமயக் கோட்பாடுகளை ஆய்ந்தறிந்து அதற்கு மேலானவற்றைச் சொல்வது. இதை சாந்தலிங்கர் சொல்லியிருக்கிறார். பிறசமயங்கள் சொல்வதைக் கவனிக்கவேண்டும் கவனித்து இதைவிட உயர்ந்த நிலையில் ஒரு சமயம் இருக்கிறது. அதுதான் சைவம் என்று சொல்லவேண்டும். உலகை மறந்திருக்கக்கூடிய நிலையை எய்தலாம். அதற்கு அடுத்தநிலைய எய்தவேண்டுமானால் எமது குருமார்கள் வழித்தோன்றல்கள் எனக்கு வழிகாட்டியவர்கள் அவர்களுக்கு எனது பணியைச் செய்வதாக இருக்கும். அதற்கும் அடுத்தநிலை குலகுரு இருந்தார். காலப்போக்கில் அது மலையாள பிராமணர் மடமாக மாறிவிட்டது. ஞான சிவாச்சாரியார் மடம் என்பது அதன் பெயர்.... பேரூர் மடமும் இடைக்காலத்தில் அரசியல் காரணங்களால் தளர்ச்சியுற்றிருந்தது. சாந்தலிங்கர் பெயரால் இம்மடம் சிறப்புப்பெற்றது. சாந்தலிங்கருடைய இரண்டு நூல்கள் வைராக்கிய சதகம், வைராக்கியதீபம் என்னும் இரண்டு நூல்கள் தான் தமிழ்நாட்டிலுள்ள வேதாந்த மடங்களுக்கு வழிகாட்டியாக இருக்கின்றன. கொலைமறுத்தல், அவிரோகவுந்தியார் என்னும் நூல்களை சைவசித்தாந்த மடங்கள் தங்கள் வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டிருக்கின்றன. வேதாந்தமடங்கள் முற்றிலும் தமிழர் மடங்களாகக் கருதப்படுபவை. சுமார் 50 மடங்கள் தமிழ்நாட்டில் உண்டாயின. சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்னால் இந்த மடத்திற்கு வந்த தண்டபாணி சுவாமிகள் இம்மடத்தைப்பற்றி விரிவாக எடுத்துச்சொல்லியிருக்கிறார்.

காராளர் : வீரசைவம் என்பது தற்போது கர்நாடகத்தில் அதிக செல்வாக்குப் பெற்றதாக இருக்கிறது. கொங்குநாடு சக்தி வழிபாட்டு மரபைக் கொண்டதாக இருக்கிறது....

அடிகளார் : வீரசைவம் என்பது சைவ சித்தாந்தம் தான். நீண்டகாலச் சக்தி வழிபாடு எந்தச்சிவன் கோயில்களிலும் இருந்தது கிடையாது. தஞ்சை மன்னர்கள் காலத்தில் கூட அம்மனுக்கென்று கோயில்கள் கிடையாது. நால்வார்கள் காலத்தில் கிடையாது. நாயக்கமன்னர்கள் காலத்தில் தான் அம்மனை உடன்வைத்து வழிபடுகிற மரபு ஏற்படுகிறது. சிவத்திலேயே சக்தி அடக்கம் என்பது தான்

வீரசைவத்தின் நோக்கம், சிவலிங்கத்தின் பீடமே சக்தி தான். கி.பி.9ம் நூற்றாண்டு வரை இதுதான் நிலைமை, பிராமணர்களுக்கும் சிலவழிபாட்டுக்கும் தொடர்பு இல்லை. பிராமணர்கள் நெருப்பு மூலம் வழிபடுகிறவர்கள். சிவன் என்று கூட சொல்லாமல் 'ருத்ரன்' என்கிற பெயரால்தான் யாகம் செய்தனர். கொடிநிலை, கந்தழி, வெள்ளி என்பதில் கொடிநிலை நிலையிலிருந்து சோதி வழிபாட்டைக் கொண்டு வருகிறார்கள். சில வழிபாடு மிகப்பழமையானது. தனக்கென வாழா பிறர்க்குரியாளன் என்பது தான் சிவ வடிவம். பிறருக்காக 'நஞ்சுண்டமைந்தவன்' தான் சிவன், 'நீலமணிமிடற்று ஒருவனைத்தான் பெரிதாகக் கருதினோம். சக்தி வழிபாடு பிற்காலத்தது. வீரசைவம் ஏக வழிபாட்டு மரபாக இருந்தது. தற்போது கிறிஸ்தவர்கள் சிலுவை அணிந்திருப்பதைப் போல இங்கே லிங்கம் அணிந்திருந்தார்கள். ஆரியர் வரவால் இதில் மாற்றங்கள் ஏற்பட்டன. வழிபாடு சிவ வழிபாடு. தமிழர்கள் பழமையை விட புதுமையை மிகவிரைவில் ஏற்றுக்கொண்டு விடுவார்கள். இதனால்தான் சிக்கலான சடங்குகளை ஏற்றுக்கொண்டார்கள்.

காராளர் : வீரசைவ நெறிக்கும், கொங்கு வேளாளர் பண்பாட்டுச் சடங்குகளுக்கும் உள்ள தொடர்பு...

அடிகளார் : நீத்தார் ஈமச்சடங்குகளைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். வீரசைவமரபில் சடலத்தை எரிப்பதில்லை. புதைப்பது தான். கொங்குநாட்டிலும் இது பின்பற்றப்படுகிறது. இதுதான் திருமூலர் மரபும் கூட. வள்ளலார் மரபும் அது தான். சங்ககாலம் தொட்டு எரித்தலும் பழக்கத்தில் உண்டு. 'முதுமக்கள் தாழி' யில் தான் பிணத்தைப் போட்டுப்புதைத்தார்கள். ஒரு புலவர் இந்த தாழையைச் செய்யும் குயரை பார்த்து 'கலஞ்செய் கோவே! கலஞ்செய் கோவே!' என்று விளித்து "நீ இவரைத்தாழியில் இட்டுப் புதைத்தாலும் இவர் புகழை அழிக்க முடியாது" என்று ஒருவள்ளலின் புழைப்பாடுகிறார். நமது வாழ்வியல் சடங்குகளை 'பெருங்கதை' எழுதிய கொங்குவேளிர் சிறப்பாகக் கூறுகிறார். கோயில், விளையாட்டுகள், நுண்கலைகள், இசை நுட்பக்கருவிகள் முதலியவை பற்றிய செய்திகள் இந்த மண்ணினோடு தொடர்புடையவை. திருமணத்தில் மணமகன் மணமகள் வீட்டிற்கு 'கட்டிலேறிப் போதல்' என்பது இப்போதும் பழக்கத்திலுள்ளது. உயிர்களுக்கு நன்மை

செய்வதாக இருக்கவேண்டும். இதுதான் சாந்தலிங்கர் கோட்பாடு. உடல் பெற்ற பயன் என்பது பிற உயிர் மேம்படவேண்டும் என்பது தான். சுயநலம் கொண்டு தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்று நினைக்கக்கூடாது.

காராளர் : பாலகங்காதரநாத சுவாமிகளோடு அடிகளாருக்கு ஏற்பட்ட தொடர்பு பற்றி....

அடிகளார் : கடந்த பத்தாண்டுகளாக எமக்குப் பழக்கம். அவராகவே கேள்விப்பட்டு வந்தார். சத்தூர் மடத்தோடு எமக்கு பல்லாண்டுகளாகத் தொடர்பு உண்டு. அந்த சுவாமிகள் நமது மடத்திற்கு வருவார். மைசூர் அரண்மனையோடு அவருக்கு தொடர்பு உண்டு. எங்களையெல்லாம் மைசூர் மன்னரிடத்திலே அழைத்தச் சென்றிருக்கிறார். அது ஜெயச்சாமராஜேந்திர உடையார் காலம். நாங்கள் எல்லோரும் மன்னரோடு அளவளாவியிருந்தோம். திருச்சி சுவாமிகள் தான் பாலகங்காதர நாத சுவாமிகளை ஆதிசுஞ்சளிகிரிக்கு அனுப்பினார். (திருச்சிசுவாமிகள் மைசூர் – பெங்களூர் சாலையில் அமைந்திருக்கும் ராஜராஜேஸ்வரி நகரில் ஆசிரமம் அமைத்து பல்லாண்டு காலம் இறைப்பணி புரிந்து சமீபத்தில் இயற்கை எய்தினார். அப்போது ஆதிசுஞ்சனகிரிமடம் இவ்வளவு வளர்ச்சி அடைந்திருக்கவில்லை அதைப்போலவே தேவாங்க செட்டியார்களுக்கென்று ஒரு மடம் ஏற்படுத்தி, சுவாமியை நியமித்து, திருமூர்த்தி மலையில் அம்மடம் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மைசூர் பக்கத்தில் இன்னொரு மடமும் இப்போது முறையாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. சுத்தூர் மடம் வீரசைவமடம் என்பதால் சுத்தூர் மடம் மூலமாகவே எங்கள் தொடர்புகள் ஏற்பட்டன. இதற்கு முன்னோடியாக இருந்தவர் முன்னாள் குடியரசு துணைத்தலைவர் திரு.ஜாட்டி, மயிலம் மடத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் அவரைச் சந்தித்தோம். நமது மடத்திற்கு அழைத்தோம். தமிழ்நாடு – கர்நாடக மாநில மடங்கள் தமக்குள் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு ஒன்றினைந்து செயல்படவேண்டும் என்று அவர் விரும்பினார். பிறகு கார்நாடகத்தின் புகழ்பெற்ற மடமான மூருகசாவிர மடத்தோடும் எமக்குத் தொடர்பு ஏற்பட்டது. இங்கே பேரூரிலேயே வீரசைவ அடிகளார் மாநாடு நடத்தினோம். அப்போது திரு.ஜாட்டி புதுவை ஆளுநராக இருந்தார். நாமும். கர்நாடகத்தின் பலமடங்களுக்குச் சென்றிருக்கிறோம். சித்ரதுர்கா மடத்தைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

காராளர் : மடங்களும், அடிகளார்களும் தீவிர அரசியலில் ஈடுபடுவது குறித்து.......

அடிகளார்: தீவிர அரசியலில் ஈடுபடத்தேவையில்லை, அதே சமயம் அரசியல் வாதிகள் மதிக்கும்படியும், மரியாதை செலுத்தும்படியும் மடங்கள் விளங்கவேண்டும். எங்கேயோ ஒடுங்கி இருந்தால் அவர்களால் எந்தப்பயனும் இல்லை என்று நினைத்து விடுவார்கள். இவர்களுக்கு மக்களை நெறிப்படுத்தக்கூடிய, மக்களைக் கட்டுப்படுத்தக் கூடிய வல்லமை இருக்கிறது என்று அவர்களுக்குத் தெரிய வேண்டும். இதை நமது அறப்பணிகள் மூலமாகத்தான் செய்து காண்பிக்க வேண்டும்.

காராளர் : மடங்கள் தற்போது கல்வி, மருத்துவம் முதலிய துறைகளில் பல நிறுவனங்களை ஏற்படுத்திக் கொண்டு மக்கள் கவனத்தைப் பெறுபவையாக இருக்கின்றன.

அடிகளார் : ஆமாம்... இதை மக்கள் ஒத்துழைப்போடு சாதிக்க முடியும். மக்களை நாம் ஆன்மீக வழியிலும் அறவழியிலும் செலுத்துகிறபோது இவை தானாகவே உருவாகிவிடும்.

காராளர் : கொங்கு நாட்டில் திருமடங்களின் எண்ணிக்கை குறைவாகவே இருக்கிறது.

அடிகளார் : ஆமாம்... குறைவு தான்... இருந்தமடங்களெல்லாம் குடும்பம் சார்ந்தவையாக இருந்தன. மடாதிபதிகள் குலகுருக்களாக இருந்தார்கள். இதில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியது. கூளப்பட்டியில் உள்ள மாணிக்கவாசகர் மடம். இங்கே பேரூரிலேயே ஒரு மடம் இருந்தது. 'கட்டில்' என்பது யானை, குதிரை என்னும் வாகனங்களின் மேல் போடப்படும் ஆசனம். முடிதிருத்துபவரைப் பற்றி செய்திகளும் தற்போதும் நாம் காண்பவை. கொங்கு வேளாளர் நூல் கொங்கு வேளாளர் பண்பாடு பற்றியதுதான். சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் கொங்கு நாட்டுக்காரர் தான். இருப்பினும் சோழநாட்டார் போல, தொண்டைநாட்டார் போல இவற்றை நாம் வெளிச்சம் போட்டுக்காட்டியதில்லை. கம்பர் கொங்கு நாட்டுக்காரர் என்று சொல்ல முடியாது. அது ஒரு புலவர் மரபாக இருந்திருக்கலாம்.

காராளர் : கொங்கு நாட்டு வழிபாட்டு மரபுகள், சடங்குகளின் தனித்தன்மை பற்றி....

அடிகளார் : சாணத்தை வடிவமைத்து 'பிள்ளையார்' ஆக்குகிறார்கள். அறுவடைக்களத்தில் மல்லாண்டை என்பதை வைக்கிறார்கள். மல்லு ஆண்டவன் என்றால் எதிர்த்து நிற்பவன் என்று பொருள். இது எளிய முறையிலான சிவ வழிபாட்டு மரபு உருவமில்லாதது.

சக்தி வழிபாடு என்பது காவல் தெய்வ வழிபாடு. அன்னை வழிபாடு. கொங்குவேளாளரில் முத்தன் கூட்டத்தாருக்கு பெரியநாச்சியம்மன் தான் குலதெய்வம். பெரியநாச்சியார் என்பது சோழீஸ்வரன் கோயிலில் இருக்கிற அம்மனின் பெயர். காடேஸ்வரர் என்பது முழுக்காதன் கூட்டத்தாரின் குலதெய்வம். பிறகுதான் காவல் தெய்வங்கள் தோன்றின.

காராளர் : பொன்னர் – சங்கரின் குலதெய்வம் பெரிய காண்டியம்மன் என்று வரலாறு சொல்கிறது. கொங்கு வேளாளரின் முதன்மைக் குலதெய்வம் மதுக்கரைச் செல்லாண்டியம்மன் என்கிறார்கள். இச்செய்திகளுக்கும் சைவ மரபுக்குமுள்ள தொடர்பு....?

அடிகளார்: சிலப்பதிகாரத்தில் 'நஞ்சுண்டு கறுத்தகண்டி' என்று வருகிறது. நஞ்சுண்டு கறுத்த கடி (கழுத்து) யை உடையவன் சிவனே அல்லவா? கண்டியம்மன் என்பது, காண்டியம்மன் – அதுவே பெரிய காண்டி. சிறியகாண்டி என்று மாறுகிறது. 'செல்' என்பது செல்லாண்டியம்மன் என்பவள் மேகத்தை ஆள்பவள். வேளாளருக்கு மழையருள் புரிந்து வழிநடத்துபவன் என்பதால் செல்லாண்டியாளாள். கொங்கு வேளாளரில் 'முழுக்காதன் கூட்டம்' என்றொரு கூட்டம் உண்டு. இவர்கள் மரபாக சீர்க்காரர் என்று நியமிக்கப்பட்டவர்கள். பல வகையான சீர்கள், சடங்குகள் செய்வதற்கு இவர்களுக்கு முறையான பயிற்சி அளிக்கப்பட்டிருந்தது. உண்மையில் 'முதுகாதர்' என்பதே 'முழுக்காதர்' என்பது முதிர்ந்த சொற்களைக் கேட்டு வளர்ந்தவர்களுக்கான பெயர். இவர்கள் தவிர பெருந்தனக்கார்கள் இருந்தார்கள். அவர் சமூகத்தை வழிநடத்திச் செல்பவர்களாக இருந்தார்கள். அந்நிய ஆட்சி வந்தபிறகு இந்த மரபு மாறியது. கொங்குவேளாளருக்குள்ளேயே உள்சண்டைகள் இருந்தன. ஒரு பண்பாடு – இயல்பான பண்பாடு குன்றுகிறபோது வேறு

பண்பாடுகள் அந்தச் சமூகத்தாராலேயே அறிமுகப்படுத்தப்படும். இது தான் நிகழ்ந்தது.

காராளர் : ஆனால் பேரூர்த்திருமடம் தனது தனித்தன்மையை எப்போதும் காத்து வந்திருக்கிறது.

அடிகளார் : அதற்கு சாந்தலிங்க அடிகளார் காட்டிய ஞானமார்க்கம் தான் காரணம். இதற்கு ஆட்பட்டுத்தான் கன்னட அரசன் குமாரதேவன் வந்தாள். முதலில் மடத்தினர் அவனை ஏற்றுக் கொள்ளவில்லை. மாட்டுக்குப் புல்லறுத்தல், தொழுவம் பேணுதல் முதலிய அடிப்படைப் பணிகளைச் செய்து தன்னை அடியாராக நிரூபித்த பிறகு தான் அவன் ஏற்றுக் கொள்ளப்பட்டான்.

பேரூர் தமிழ் கல்லூரியில் பதிப்பகத்துறையில் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

தமிழ்கூறும் நல்லுலகம் செய்த தவப்பயனாக பதினேழாம் நூற்றாண்டில் தோன்றிவந்த தவத்திரு சாந்தலிங்க அடிகள். இவர் இயற்றி அருளிய நூல்கள் கொலை மறுத்தல் வைராக்கிய சதகம் வைராக்கிய தீபம் அவிரோத, உந்தியார் என நாளாகும்.

சாந்தலிங்க அடிகளின் வழிவந்த அடிகளும் சீடர்களும் அடிகளின் சைவசித்தாந்தத்தைப் பின்பற்றி அடிகளின் வழியில் பல நூல்கள் இயற்றி வந்துள்ளனர். சாந்தலிங்கர் திருமடத்தின் சார்பில் 1815ம் ஆண்டு முதல் 2000ம் ஆண்டு வரை பல நூல்கள் வெளியிடப்பட்டு வந்துள்ளன.

1967ஆம் ஆண்டு தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகள் திருமடத்தின் குருமுதல்வர் ஆன பின்பு அடிகள் தமிழ்க்கல்லூரி நிர்வாகத்தை நடத்தி வந்த காலத்தில் அடிகள் பாரம்பரிய பழந்தமிழ் இலக்கியங்களையும் பழைய ஏட்டுச் சுவடிகள் ஓலைச்சுவடிகள் வரலாற்று பட்டையங்களையும் சேகரித்து அவைகளை ஆய்வு செய்து இவைகளை நூல்களாக பதிப்பித்து வெளியிடும் பணியில் அடிகளார் தீவிரமாக செயல்படத் தொடங்கினார்.

சாந்தலிங்கர் மடத்துடன் நெடுங்கிய தொடர்பு கொண்டுள்ள வரலாற்று ஆய்வாளர்கள் புலவர்களை அடிகளார் மடத்துக்கே அழைத்து வரலாற்று நூல்கள் சம்பந்தமாக கலந்து பேசி வரலாறு சம்பந்தமான பழங்காலத்து தமிழ் புராண இலக்கியநூல்களை சேகரித்துக் கொடுக்குமாறு ஆய்வாளர்களையும் புலவர்களையும் அடிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க பழைய நூல்களும் ஓலைச் சுவடிகளும் அடிகளிடம் வந்து சேர்ந்தன. வந்த செய்தி ஆய்வு செய்து வெளியிட வேண்டிய நூல்களை பதிபித்து அடிகளார் வெளியிட்டு வந்தார்.

அடிகளார் அவர்களின் வேண்டுதலின் படி அதிகப்படியான ஓலைச்சுவடிகள் ஏட்டுச்சுவடிகள் பட்டையங்கள் புராண வரலாற்றுச் செய்திகள் அதிகமாகத் திருமடத்துக்குக் கொடுத்து உதவியவர் எழுமாத்தூர் புலவர் வே.ரா.தெய்வசிகாமணி கவுண்டர் ஆவார்.

கவுண்டர் தவத்திரு மாணிக்க அடிகள் அவர்களிடமும் சிரவையாதீனம் தவத்திருகந்தசாமி அடிகளிடமும் நெருங்கிய நட்பு கொண்டவராக இருந்துள்ளார். கவுண்டர் தேடிச் சேகரித்த பல நூல்களை உ.வே.சாமிநாத ஐயரிடமும் தருமபுர ஆதீனத்துக்கு கொடுத்துள்ளார்.

பேராசிரியர்க்கு அருணாசலக்கவுண்டர் அவர்கள் கண்டு எடுத்த தக்கை இராமாயணத்தை அடிகளார் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். ஆசிரியர் போளுவாம்பட்டி ஐ.இராசாமி அவர்கள் பல வரலாற்று சுவடிகளை அடிகளாரிடம் கொடுத்துள்ளார். இன்னும் சில வரலாற்று ஆய்வாளர்களும் புலவர்களும் பல வரலாற்றுச் செய்திகளை அடிகளிடம் கொடுத்து உதவி செய்துள்ளனர். கவுண்டரின் மாணவர்களான நீதிபதி செங்கோட்டு வேலன் புலவர் இராசுமுனைவர் நடனகாசிநாதன் முனைவர் பூங்குழல் முனைவர் கலைக்கோவன் டாக்டர் நாகசாமி இன்னும் பல வரலாற்று, அறங்காவலர் பெருமக்களும் அடிகளாரின் வரலாற்று நூல் பதிப்பிற்கு உதவிகள் செய்து வந்துள்ளனர். அடிகள் அருளாட்சிக் காலத்தில் பாடுபட்டு சேகரித்துப் பதிப்பித்து வைத்த நூல்கள் அனைத்தும் சாந்தலிங்கர் தமிழ்க் கல்லூரியில் கல்லூரி மாணவர்களுடன் உறவாடி வருகிறது.

அடிகள் வெளியிட்ட நூல்களின் சிலவற்றைக் காண்போம்

1. வைராக்கிய சதகம்
2. வைராக்கிய தீபம்
3. அவிரோத உந்தியார்
4. கொலை மறுந்தல்
5. எங்கள் நாட்டுப்புறம்
6. கோவைக்கிழாரின் சமய நோக்கு
7. கணிப்பொறி கற்க
8. ஞான அம்மானையும் அகவல்களும்
9. நாளும் சிவநெறி
10. நியாயக் களஞ்சியம்
11. பெருங்கதை ஆய்வு மாலை
12. புறப்பாட்டுரை
13. கொங்கு நாட்டு வரலாறு

14. கோயிலும் தமிழும்
15. கொங்கு நாடும்?
16. தமிழாகமம் திருக்குட நன்னீராட்டு விழா
17. சிவஞான போதத்திரு நெறியுரை
18. திருவிளக்கு வழிபாடு
19. சாந்தலிங்கரின் மெய்யியல் கோட்டுபாடுகள்
20. நால்வர்களும் கல்வெட்டுக்களும்
21. சிறுவர் சிவஞானம்
22. வண்ணத்தியல்பு
23. கொலை மறுத்தல் உரைநடை
24. கொங்கு தேச ராசாக்கள்
25. கொங்கு மண்டலச் சதகம்
26. தவத்திரு சாந்தலிங்கர் வரலாறு
27. தக்கை இராமாயணம்

ஆகிய நூல்களை அடிகளார் பதிப்பகம் செய்து வெளியிட்டுள்ளார்.

அடிகளாரைப் போற்றிடும் புலவர் செ.இராசு

அறுபது ஆண்டுகட்கு முன்பே (1955) என் பள்ளிப் பருவத்திலேயே என்குருநாதர் பெரும்புலவர் வேரா.தெய்வசிகாமணிக்கவுண்டர் அவர்கள் பேரூர் ஆதீனம் பற்றியும், அதன் சமயப்பணி, தமிழ்ப்பணி பற்றியும் என்னிடம் கூறுவார்கள். பேரூர் ஆதீனம் பற்றிக் குறிப்பிடும்போது ஆர்வம் பொங்க

கொங்கு மண்டலத்தில் சைவ மணங்கமழும் ஞானத்தமிழும் பூஞ்சோலையாகிய பேரூர் சாந்தலிங்க சுவாமிகளின் திருமடம் என்று கூறுவார்கள். அதனால் திருமடத்தின் மீது எனக்கு ஆர்வம் பிறந்தது. சமயம் வாய்க்கும் போதெல்லாம் அங்கு செல்வேன்.

1966க்குப் பின்னர் தவத்திரு அடிகளார் அவர்களைச் சந்திக்கும் பேறு பெற்றேன். ஆதீனமே ஒரு ஆலயம். அடிகளார் இருப்பிடம் கருவறை. அருள்பாலிக்கும் ஆண்டவன் அடிகளாக! சந்திக்கும் போதெல்லாம் ஏதாவது புதிய கண்டுபிடிப்புப் பற்றிக்கூறுவேன். கேட்டுப் பாராட்டுவார்கள். நீங்கள் எடுத்துக் கொண்ட துறை மிகவும் சிறந்தது என்று ஊக்கமூட்டுவார்கள்.

என் ஆய்வுத் தொடக்க காலத்திலேயே என்னை மிகவும் கவுரவித்தார்கள். 1977ஆம் ஆண்டு என்னை அழைத்துப் பலபடப் பாராட்டிப் பலர் முன்னிலையில் "பேரூராதீனப் புலவர்" "கல்வெட்டறிஞர்" என்ற பட்டங்கள் அளித்தார்கள். என் வாழ்நாளில் நான் பெற்ற முதல் பட்டமும், முதன்மைப்பட்டமும் அதுவேயாகும்.

கோயில், குலம் இவற்றோடு கூடிய உள்ளூர் வரலாறுகள் பல எழுதும் வாய்ப்பைப் பெற்றேன். அதில் சில ஊர் வரலாறு முழுதும் எழுதும் பணி அடிகளார் அவர்கள் மூலம் கிடைத்தவையாகும் அந்நூல்கள் பலவற்றிற்கு அடிகளார் அவர்கள் செய்யுளாகவும், உரைநடையாகவும் வாழ்த்தி எழுதியுள்ளார்கள். விதரி அத்திப்பாளையம் செம்பூத்தகுலத்து வரலாற்று நூலில்.

செப்ப மாகச் செம்பூத்தர் வரலாற் றுடனே நாட்டுயர்வு
செப்பும் கல்வெட்டாராய்ச்சி செப்பேடு உயர்வாம் பாடல்கள்
முப்பால் உணரும் புலமைமிகுஇராசு முயன்று நூலாக்கி
இப்பா ரிடையே உலவிவிட அளித்தார் இவர்தம் புகழ்வாழி
என்று எழுதியுள்ளார்கள். காடையூர் வரலாற்று நூலில்.

"நமது ஆதீனப் புலவர் சிவத்திரு செ.இராசு வாழ்வியல் வரலாற்று அறிஞர். கொங்குநாட்டுக் குலக்கோயில்கள் பற்றியப் பல சான்றுகளுடன் ஆராய்ந்து நூல்களைத் தந்த பெரும்புலவர். வரலாற்று ஆராய்ச்சியாளர். தமிழகம் எங்கும் சென்று வரலாற்று அடிச்சுவடுகளைக் கல்வெட்டு, செப்பேடு – பட்டயம் ஆகியவற்றின் மூலம் நுண்ணிதின் ஆராய்ந்த பேராசிரியர். இவரது பணிகள் தமிழகத்துக்குப் பெருமை தருவன. சிறப்பாகக் கொங்கு நாட்டுக்குக் கிடைத்த சிந்தனைச் சுரங்கம் எனலாம்" என்று எழுதியுள்ளார்கள்.

ஒருசமயம் கல்லூரிப் பேராசிரியர்கள் ஓரிருவரைத் தவிர எல்லோரும் தேர்வுப் பணிக்குச் சென்றனர். கல்லூரிக்கு விடுமுறை விடலாம் என்று கூறியபோது 'இரண்டு நாள் புலவர் அவர்களை அழைத்து மாணவர்கட்கு கல்வெட்டு, செப்பேடு, ஓலைச்சுவடிகள் பற்றிப் பேசச் சொல்லுங்கள்' என்றாராம் அப்படியே நடைபெற்றது.

மாணவர்கள் வரலாற்றுச் செய்திகள் அறிய வேண்டும் என்ற சிறந்த நோக்கமும் என்மீதுள்ள நம்பிக்கையும் இதன் மூலம்

வெளிப்பட்டது. எப்பொழுது சந்தித்தாலும் வரவேற்று இன்னுரையாடி மகிழ்ந்து பிரகாசத்துடன் நூல்களும் அளிப்பார்கள்.

1967இல் என்னுடைய முதல் நூல் 'எங்கள் பவானி' அந்நூலை அருளாட்சி ஏற்றுக்கொண்ட அடிகளார் அவர்கட்குக் காணிக்கையாக்க விரும்பினேன். அருள் பாலித்தார்கள்.1998ல் நான் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் ஒய்வு பெற்றபின் அருட்செல்வர் நா.மகாலிங்கம் அவர்கள் பேரூராதீனத்தில் தங்கி ஆய்வு செய்யுங்கள். அங்கு ஓலைச் சுவடிகள் ஏராளமாக உள்ளன. நீங்கள் வழக்கமான உங்கள் ஆய்வையும் மேற்கொள்ளலாம் என்றார்கள். ஈரோடு என்னை விடவில்லை.

1986இல் தமிழ்ச் சமுதாயத்திற்கு அரும்பணியாற்றிய அடிகளார் அவர்களின் மணிவிழாவினை அன்பர்கள் சீரும் சிறப்புமாகக் கொண்டாடி மகிழ்ந்தனர். அதனையொட்டி 22.2.1986 அன்று கார்மேகக் கவிஞர், வாலசுந்தரக் கவிராயர், கம்பநாதர் மூவரின் கொங்கு மண்டல சதகங்களும் ஒன்றாக இணைத்து வெளியிடப்பட்டது.

2010ஆம் ஆண்டு கோவையில் நடைபெற்ற செம்மொழித் தமிழ் மாநாட்டையொட்டி மீண்டும் கொங்கு மண்டல சதகத்தைச் செம்பதிப்பாக வெளியிட வேண்டும் என்றும் பாடல்கட்குத் தேவையான புது விளக்கங்கள் அளிக்கப்படவேண்டும் என்று அடிகளார் எண்ணினார்கள். அப்பணியை எனக்களித்தார்கள். அடிகளார் அவர்கள் எனக்கு இந்தப் பணியை அளித்தனர் பெரும் பேறாகக் கருதி என்னால் இயன்றவரை அப்பணியை நிறைவு செய்தேன். தொடக்கத்தில் அடிகளார் அவர்கள் அளித்த அறிவுரைகள், ஆலோசனைகள் மிகமிக உதவின.

செந்தமிழ்க்கும் சைவத்துக்கும் அடிகளார் அவர்கள் ஆற்றிய மிகப்பெரும் பணி மொழி, சமய வரலாற்றில் சிறப்பிடம் பெறும். அடிகளார் அவர்களின் அருட்பார்வைக்கு ஆட்பட்ட அடியார்களில் நானும் ஒருவன் ஆகியது வாழ்நாளில் கிடைத்த பெரும் பேறு.

பெரும்புலவர் வே.ரா.தெய்வசிகாமணிக் கவுண்டர் அடிகளுக்கு கொடுத்து உதவிய பாரம்பரிய ஓலை சுவடிகள்

வாழ்நாள் முழுவதும் ஏடுகள் தேடிக்காத்தல், பெயர்த்து எழுதுதல், நுல்களாக வெளியிடுதல் என்பதையே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டவர் பெரும்புலவர் வே.ரா.தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்கள்.

ஈரோடு வட்டம் எழுமாத்தூரை அடுத்துள்ள வேலம்பாளையத்தில் இராமசாமிக்கவுண்டர் – அங்கம்மாள் தம்பதியினர்க்கு 15.12.1903 ஆம் ஆண்டு பிறந்தவர் தெய்வசிகாமணிக்கவுண்டர். இவர் தமிழ்க் கல்வி கற்க மிக ஆர்வம் காட்டியவர் இவரின் தாய்வழிப்பாட்டனார்ர க.கு.சின்னத்தம்பிக் கவுண்டர் அவர்கள் ஆவர்.

இளமையில் கரியாக்கவுண்டன்வலசு திண்ணைப் பள்ளியிலும், அய்யகவுண்டம்பாளையம் கருமண வாத்தியாரிடமும் கல்வி கற்றார். சிதம்பரம் ஆறுமுக நாவலர் கலாசாலையில் பயின்று மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வில் வெற்றி பெற்று கொடுமுடி, கோபிசெட்டிபாளையம், இராசிபுரம், ஈரோடு ஆகிய இடங்களில் பள்ளித் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.

தருமபுரம் ஆதீனம் திருக்குறள் உரை வளத்திற்கு பரிப்பெருமாள், காலிங்கர், பரிதியார், உரை ஏடுகளைத் தத்துதவினார். திருப்பனந்தாள் காசி மடம் வெளியிட்ட திருமுருகாற்றுப்படை உரைக்கொத்திற்கும், அண்ணாமலைப் பல்கலைக் கழகக் கம்பராமாயணப் பதிப்பிற்கும் பல சுவடிகளை உதவினார்.

அழிந்து போனதாகக் கருதப்பட்ட சங்க கால இசை நூல் அறிவனாரின் “பஞ்ச மரபு” தேடி அருட்செல்வர் டாக்டர் நா.மகாலிங்கம் அவர்கள் உதவியால் அச்சிட்டார். தமிழகப் புலவர் குழு உறுப்பினராக விளங்கினார். பஞ்சமரபு பதிப்பிற்கு அண்ணாமலை அரசர் விருது பெற்றார். ஓய்வு பெற்ற பின்னரும் பல பதிப்புப் பணிகள் செய்தார். பெரும் புலவரான அவர் இயற்றி வெளிவந்த நூல்கள், 1.அறச்சலூர் நாகமலையாண்டவர் தலபுராண வசனம் 6.சர்வலோக நாயகி ஒருபா ஒரு பஃது, 7.சீவக்கொழுந்து மாலை, 8. சிவகிரிச் சண்முக மாலை, 9.சிவகிரி

வேலாயுதசுவாமி ஊஞ்சல், 10. வேலாயுதசுவாமி இரட்டை மணிமாலை, 11.சென்னிமலை முருகன் புலவராற்றுப்படை, 12.ஞானச்செல்வியம்மன் பதிகம், 13.பவானி வதரியாற்றுப்படை, 14.மகிமாவீசுரர் பதிகம் 15.வடிவுள்ள நாயகி பஞ்சரத்னம், 16.வாரணியம்மன் வருகைப்பதிகம் முதலியன.

அவர் பதிப்பித்து நூல்கள் 1.உதயணன் கதை, 2. ஐயனாரப்பன் பள்ளு, 3.கல்வியொழுக்கம். 4.கருணையந்தாதி, 5.கொங்கு மண்ட சதகம், 6.கொன்றை வேந்தன் வெண்பா, 7.சித்திரமடல், 8.சிவஞானபோதத் திருவிருத்தம், 9.சிவமலைப் பிள்ளைத்தமிழ், 10. சென்னிமலைத் தலபுராணம், 11.சென்னிமலை யாண்டவர் பிள்ளைத்தமிழ், 12.சோழீசுவரர் மல்லைக்கோவை, 13.தாயுமானவர் மடல், 14.திங்களூர் தொண்டி நாடகம், 15.திருச்செங்கோட்டுப் பிள்ளைத் தமிழ், 16. திருத்தணிக்கை வெண்பா உரை, 17. திருவேரகம், 18.தேவிமான்மியம், 19. நட்டாற்றீசுவரன்கோயில் தலவரலாறு, 20.பரதசங்கிரகம், 21.பஞ்ச மரபு, 22.புறத்துரை விளக்கம் 23.மாணிக்கவாசகர் நிலைமண்டில ஆசிரியப்பா, 24.முப்பொருள் உண்மை, 25.முன்மொழி முப்பது, 26.மேழிவிளக்கம், 27.கோமனரியப்ப முதலியார் முதலியன.

22.10.1976ல் அமரரானார். அவர் தொகுத்த ஏடுகள், கையெழுத்துப்படிகள் பேரூர்த் திருமடத்தில் பாதுகாக்கப்படுகின்றன.

கொங்கு நாட்டில் சமய, சமுதாய, கல்வித் தொண்டில் ஈடுபட்டுவரும் புகழ்பெற்ற நிறுவனம் திருப்பேரூர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடம் ஆகும். பல்லாண்டுகளாக இத்திருமடம் ஆற்றிவரும் தொண்டினைத் தமிழுலகம் நன்கறியும். இப்பொழுது இத்திருமடத்தின் ஆதீனத் தலைவராக விளங்கும் கயிலைப் புனிதர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களுக்கு இந்த ஆண்டில் (1986) அறுபதாவது ஆண்டு நிறைவெய்துகின்றது.

கொங்கு நாட்டின் சமய சமுதாய வளர்ச்சிக்கும், கல்வி வளர்ச்சிக்கும் அடிகளார் அவர்கள் மிகப்பெருந் தொண்டாற்றி வருகின்றார்கள். சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழு உறுப்பினராக (1972–1978) அடிகளார் அவர்கள் பணியாற்றியபோது தமிழ் மொழி வாயிலாகவே அனைத்து அலுவல்களும் நிகழவேண்டும் என்பதில் பேரார்வம் கொண்டு உழைத்தார்கள். தமிழ்க் கல்லூரிகளில் பி.லிட்.

பாடத்தைக் கொண்டுவந்து தமிழ்க் கல்லூரிகளைக் கலைக்கல்லூரிகளுக்கு இணையாக நிலைக்கு உயர்த்திய பெருமை அடிகளார் அவர்களையே சாரும். கொங்குநாடு முழுவதும் அனைத்து ஊர்களிலும் சமய சமுதாய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வருபவர் அருளாளர் பெருந்தகை அடிகளார் அவர்கள். அவர்கள் திருவடி படாத ஊர்களே கொங்கு நாட்டில் இல்லை எனலாம். சமயத்தையும் சமுதாயத்தையும் இரு கண்களாகக் கொண்டு அவர் ஆற்றிவரும் பணிகள் அழைப்பில், அவர்தம் அருட்பார்வையால் நலம் பெற்றோர் பலராவர்.

அன்பர்கள் அவர்தம் மணிவிழாவைப் பெரு விழாவாகக் கொண்டாட விழைந்தனர். எனவே மணி வழி நிவைகக் "கொங்குமண்டல சதகங்கள்" என்னும் இப்பெருநூலை வெளியிடுவதில் பெரிதும் மகிழ்கின்றோம். கொங்கு நாட்டுக்காக உழைத்துவரும் அடிகள் பெருந்தகை அவர்கள், கொங்கு மண்டல சதகங்கள் என்னும் இந்நூலினை எங்கள் காணிக்கையாக ஏற்று வாழ்த்துமாறு வேண்டுகின்றோம்.

இத்தொகுப்பு நூல் கார்மேகக் கவிஞர், வாலசுந்தரக் கவிராயர், கம்பநாதசுவாமி ஆகியோர் இயற்றிய கொங்கு மண்டல சதக நூல்கள் மூன்றினையும் கொண்டதாகும். இத்தொகுதியுள் கொங்கு மண்டல ஊர்த்தொகையும் தொடர்பு கருதிச் சேர்க்கப்பட்டுள்ளது.

ஏறத்தாழ அறுபது ஆண்டுகட்கு முன்னர் 1923ஆம் ஆண்டில் திரு.முத்துச்சாமிக் கோரை அவர்கள் மிக அரிதின் முயன்று கார்மேக் கவிஞரின் கொங்கு மண்டல சதகத்தை உரையுடன் வெளியிட்டார்கள். அந்நூலுடன் அவர்கள் கொங்கு மண்டல ஊர்த்தொகையையும் தந்துள்ளார்கள். பெரும்புலவர் எழுமாத்தூர் திரு.வே.ரா.தெய்வ சிகாமணிக் கவுண்டர் அவர்கள் 1971 ஆம் ஆண்டில் உரைவிளக்கக் குறிப்புகளுடன் வாலசுந்தரக் கவிராயரின் கொங்கு மண்டல சதகத்தை வெளியிட்டுள்ளார்கள். பெரும்புலவர் அவர்கள் தொகுத்து வைத்த சுவடிகளினின்றும் இப்பொழுது கம்பநாதசாமிகளின் கொங்கு மண்டல சதகமும் கிடைத்துள்ளது. எனவே இவை அனைத்தையும் தொகுத்து ஒரு பெருநூலாகப் பதிப்பித்தால் ஆய்வாளருக்குப் பெரிதும் பயன்படும் என்று

கருதி இப்பதிப்பை வெளியிடுகின்றோம். இத்தொகுப்பிற்குப் பல சான்றோர் பெருமக்கள் துணை நின்றார்கள். வாலசுந்தரக் கவிராயரின் சதகப் பாடல்களுள் 1 முதல் 19 வரைக்குமான பாடல்களக்கு மேலும் விளக்கங்கள் தந்து உதவியவர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர் டாக்டர். ந.இரா.சென்னியப்பன் அவர்கள்; இக்கரை போளுவாம்பட்டி தமிழாசிரியர் புலவர் ஐ.இராமசாமி அவர்கள் கம்பநாத சாமிகளின் நூலைச் சுவடியினின்றும் படியெடுத்து எழுதி உதவினார். செல்வி.வே.செல்லாத்தாள், எம்.ஏ., எம்.பில்., அவர்கள் கார்மேகக் கவிஞரின் சதகநூல், ஊர்த்தொகை ஆகியவற்றைப் படியெடுத்து உதவினார். இவை அனைத்தையும் தொகுத்து இப்பதிப்பினைப் பதிப்பித்தவர் சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர்.இ.சுந்தமூர்த்தி அவர்கள். இவர்கள் அனைவருக்கும் விழாக் குழுவினரின் நன்றி என்றும் உரியதாகும்.

தவத்திரு சாந்தலிங்க அடிகளாரின் மணிவிழா நினைவாக வெளியிடப்படும் இந்நூலினைத் தமிழ்கூறும் நல்லுகம் ஏற்றுப் போற்றும் என நம்புகின்றோம்.

அடிகளாரை வாழ்த்திடும் அருட்செல்வர் மகாலிங்கம் அய்யா அவர்கள்

பழம் பெருமை மிக்க சென்னைப் பல்கலைக்கழகத்தின் 150ஆவது பட்டமளிப்பு விழாவில் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள் பெருமனுக்கு முதுமுனைவர் பட்டம் வழங்கியதைப் பாராட்டி

6.1.2008 ஞாயிறு அன்று கோவை ஈச்சனாரியில் உள்ள இலட்சுமி திருமண மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அருள்செல்வர் அய்யா நா.மகாலிங்கம் அவர்கள் அடிகளாரை வாழ்த்திய வாழ்த்துரை.

இந்தியாவின் முதல் மத்திய நிதியமைச்சராக விளங்கிய டாக்டர் ஆர்.கே.சண்முகம் செட்டியார், 'சைவச்செம்மல்' வி.சி.சுப்பைய கவுண்டர், தமிழக அறநிலையத் துறையின் முதல் ஆணையராக விளங்கி சி.எம்.இராமச்சந்திரன் செட்டியார் என்கிற கோவைகிழார் ஆகிய சான்றோர்களின் பெருமுயற்சியால் 1956ல் உருவானதுதான் பேரூர் ஆதீன வளாகத்தில் அமைந்துள்ள தமிழ்க் கல்லூரி.

50 ஆண்டுகளுக்கு முன்பு உருவான இத்தமிழ்க் கல்லூரி, தொடர்ந்து செயல்பட்டு வளர்ந்தோங்கி வருகிறது. சாந்தலிங்கர் திருமடம் மற்றும் சாந்தலிங்கர் தமிழ்க் கல்லூரி தொடர்பான எனது மலரும் நினைவுகள் இன்றைக்கும் எனக்கு மகிழ்ச்சி தருகின்றன.

52 ஆண்டுகளுக்கு முன்பு எனது 30களில், நான் பொள்ளாச்சி எம்.எல்.ஏ–வாக இருந்ததால், பொதுவாழ்க்கையில் அதிக நேரத்தைச் செலவிட்டு வந்தேன்.

எனது தந்தையின் ஆன்மிக வழிகாட்டுதலால் என் வாழ்க்கையில் சமயம் சார்ந்த சிந்தனைகளும் இழையோட்டமாக இருந்து வந்தன.

1954இல் எனது தந்தையின் மறைவுக்குப் பிறகு எனது தொகுதிக்குரிய அரசியல் பணியுடன் தமிழ்ப் பணியும், இலக்கியப் பணியும், சன்மார்க்கப் பணியும் என்னுடன் இயல்பாக இணைந்தன.

அக்காலக் கட்டத்தில் சன்மார்க்க சங்கம் காரணமாக எனது தந்தையாரின் நண்பரான சைவச் செம்மல் வி.சி.எஸ். அவர்களோடு எனக்குத் தொடர்பு ஏற்பட்டது. சைவச்செம்மல் அவர்கள் டாக்டர் ஆர்.கே.சண்முகம் செட்டியாருக்குப் பின்னர் பேரூர் தமிழ்க் கல்லூரியின் தலைவராகப் பொறுப்பேற்றவர். சிறந்த தமிழறிஞரான கோவைகிழார் என்ற சி.எம்.இராமச்சந்திரன் செட்டியார் தமிழ்க் கல்லூரியின் முதல் (பிரின்ஸ்பால்) முதல்வராகப் பொறுப்பேற்றவர்.

சைவச்செம்மல் வி.சி.எஸ். அவர்களின் மறைவுக்குப் பிறகு, இராமச்சந்திரன் செட்டியார் தலைவராகவும் புலவர் நடேசகவுண்டர் முதல்வராகவும் பொறுப்பேற்றனர். தமிழ்க் கல்லூரியின் தலைவர் கோவைகிழார், என்னைத் துணைத் தலைவராக நியமித்தார்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு, கோவைக்கிழார் ஓய்வுபெற்ற நிலையில், அவரே என்னைத் தலைவராக நியமித்தார்.

தற்போது தமிழ்க் கல்லூரியின் பொருளாளராக நான் பொறுப்பு வகித்து வருகிறேன்.

இவ்வாறு, என் பழைய மலரும் நினைவுகள் என் மனத்திரையில் அஇத்தருணத்தில் ஓடிக் கொண்டிருக்கின்றன. ஏனெனில், இத்தருணம் மிகவும் சிறப்பானது. சென்னைப் பல்கலைக் கழகம் உருவான தனது **150**வது ஆண்டு நினைவாக தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடியகளாருக்கு டாக்டர் பட்டமான "முதுமுனைவர்" பட்டத்தினை வழங்கிச் சிறப்பித்துள்ளது.

தவத்திரு. இராமசாமி அடிகளார் பேரூர் தமிழ்க் கல்லூரியின் முதல்வராகவும், தாளாளராகவும் செயல்பட்டவர். தற்போது தலைவராகச் செயல்பட்டு வருகிறார்.

அரை நூற்றாண்டு வரலாற்றைக் கொண்ட இத்தமிழ்க் கல்லூரி தமிழ்நாட்டிலுள்ள சிறந்த தமிழ்மொழிக் கல்லூரிகளில் ஒன்றாக விளங்கி வருவது கொங்குநாட்டுக்குப் பெருமையாகும்.

பேரூர் சுவாமிகள் தமது சமயப் பணிகளால் சாந்தலிங்கர் திருமடத்துக்குப் பெருமை சேர்த்து வந்ததைப் போலவே, இத்தமிழ்க்

கல்லூரி பெருமை பெறுவதற்காகவும் சுவாமிகள் பாடுபட்டு வந்துள்ளர் என்றால், அது மிகையல்ல.

தமிழ் வேறு சைவம் வேறு என்றில்லாமல் தமிழும், சைவமும் ஒன்றுதான் என்பதற்கு சாட்சியாக இத்தமிழ்க் கல்லூரி, ஆதீன வளாகத்திலேயே அமைந்துள்ளது.

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களும், சிரவை ஆதீனம் தவத்திரு சுந்தரசுவாமி அடிகளார் அவர்களும் இணைந்து நின்று கொங்கு மண்டலத்தில் ஆயிரக்கணக்கான கிராமத்துக் கோயில்களுக்குக் குடமுழுக்குச் செய்து, பக்தி இயக்கத்தை மறுமலர்ச்சி செய்த பெருமைக்குரியவர்கள் என்பதை எவரும் மறக்க முடியாது.

அதுமட்டுமல்ல தமிழ்நாட்டில் தமிழ் மாமுனிவராக விளங்கிய குன்றக்குடி அடிகளார் அவர்களுடன் இணைந்து அவருடைய ஆன்மிகப் பணிகள் அனைத்திலும், பேரூர் சுவாமிகள் செயல்பட்டு வந்தார். பக்தி உலகம் இதனை என்றென்றும் பசுமையாகப் போற்றி வருகிறது.

பேரூர் சுவாமிகள் இன்னும் எத்தனையோ பெருமைகளுக்கு உரியவர். இன்றைய பாராட்டு விழாவில் பல சான்றோர்கள் அப்பெருமைகளை எல்லாம் எடுத்துக்கூற இருக்கிறார்கள்.

பேரூர் சாந்தலிங்கர் திருமடம் சமயத் துறையிலும், தமிழ்த் துறையிலும் முத்திரை பதிக்கத்தக்க செயல்பாடுகளைச் சாதிக்க வேண்டுமென்று விரும்பியவர்களில் நானும் ஒருவன்.

ஆகம சாஸ்திரம், சிற்ப சாஸ்திரம், கல்வெட்டு ஆராய்ச்சி, தேவாரப் பண்ணிசை ஆகிய அனைத்திலும் ஒரு மறுமலர்ச்சியைத் தமிழ்நாட்டில் உருவாக்க வேண்டுமென்பது, இளமைப் பருவத்திலிருந்தே எனது விருப்பமாக இருந்து வந்தது.

இத்தமிழ்க் கல்லூரியுடன் ஏற்பட்ட தொடர்பு, என்னை அத்திசையில் மேலும் சிந்திக்கவும் செயல்படவும் தூண்டி வந்தது.

கல்லூரி நிர்வாகக் குழுவின் கூட்டங்களில் கலந்து கொள்ள பேரூருக்கு வந்தபோதெல்லாம் இக்கருத்துக்களை வலியுறுத்தியும் வந்துள்ளேன். ஏனெனில் ஆகம சாஸ்திரம், சிற்ப சாஸ்திரம். கல்வெட்டு

ஆராய்ச்சி, தேவாரப் பண்ணிசை ஆகிய அனைத்தையும் கற்றுக் தருவதற்கும், கற்பதற்கும் உரிய சூழல் அன்றைக்கு இல்லை.

அண்மைக் காலமாக தமிழ் என்றால் இலக்கியம் மட்டுமே என்பதாகவும் ஆகிவிட்டது. இலக்கணம்கூட பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டது.

அதன் காரணமாக, நல்ல தமிழை இன்றைக்கு நம் தமிழ் நாட்டிலேயே உரிய தமிழ்மொழி வளர்ச்சிக்கு அதுவே ஒரு தடையை ஏற்படுத்திவிட்டது.

பள்ளிகளில் கூட தமிழைத் தவிர்த்து, ஆங்கில மொழியில் படிப்பதற்கே மாணவர்களின் பெற்றோர்கள் ஆர்வம்காட்டும் சூழல் வளர்ந்து வருவது வருத்தம் அளிக்கிறது.

கல்வித் துறையில் மட்டுமல்ல இந்த அவலநிலை. இசைத் துறையில் தமிழிசை ஆபூர்வமாகிவிட்டது.

இவையெல்லாம் சுதந்திரம் அடைந்த பிறகு நமக்கு ஏற்பட்ட பின்னடைவுகள் என்கிற போது, நாம் மேலும் வருத்தமடைய வேண்டியுள்ளது. இத்தருணத்தில் மகாகவி பாரதியாரும், அவருக்கு முன்னோடியாக இருந்த வள்ளலாரும் தமிழைப் பற்றி எப்படியெல்லாம் சிந்தித்தார்கள் என்று திரும்பவும் நினைவுகூர்வது நம் அனைவருக்குமே பயன்தரும்.

பேரூர் தமிழ்க் கல்லூரி கடந்த 50 ஆண்டுக் காலமாக அதன் வளர்ச்சியை வேறு ஒரு கோணத்தில் உருவாக்கியது. கிராமப்புறச் சூழலில் அமைந்த இக்கல்லூரி, கிராம மக்களுக்குச் சேவை செய்யும் நோக்கத்தில் ஆரம்பப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி ஆகியவற்றை உருவாக்கிறது. பேரூர் கிராம மக்களுக்கு சுவாமிகளின் இக்கல்வி பணி மிகுந்த பயன் அளித்தது.

பின்னர், கல்லூரிக் கல்வி இயக்குநராக இருந்து ஓய்வுபெற்ற டாக்டர். கா.மீனாட்சிசுந்தரம் அவர்கள். இக்கல்லூரியின் செயலராகப் பொறுப்பேற்றார். அவருடைய முயற்சியால், இக்கல்லூரியில் பி.காம்., பி.எஸ்.சி., முதலிய பட்டப் படிப்புகள் தொடங்கப்பட்டன. ஆங்கில வழி உயர்நிலைப் பள்ளி வகுப்புகள் சிலவும் தொடங்கப்பட்டன.

இவ்வாறு, கல்வித் துறையிலேயே தனது வளர்ச்சியைத் தமிழ்க் கல்லூரி மேற்கொண்டு வந்தது. தொடர்ந்து மேற்கொண்டும் வருவது நம் அனைவருக்கும் தெரியும்.

சைவத்தின் கேந்திரமாக பேரூர் ஆதீனம்:

எனது ஆசை, வீரசைவ மரபில் உருவான பேரூர் திருமடம் சைவசமயத்தின் ஞானக் கேந்திரமாக விளங்கி "மேண்மைகொள் சைவநெறி"யை உலகமெல்லாம் பரவும் வகை செய்ய வேண்டும் என்பதுதான்.

இதற்கு ஏற்ப பல்வேறு சமயங்களைப் பற்றிய ஆய்வுகளும் ஆகமங்களைப் பற்றிய ஆய்வுகளும் இத்திருமடத்தின் தமிழ்க் கல்லூரியில் தொடர்ந்து நடைபெற்று வர வேண்டும் என்பதும் எனது ஆசை.

நமது புராணங்களையும், இதிகாசங்களையும் புளுகுகள் என்றும், கற்பனைகள் என்றும் பகுத்தறிவுப் பார்வையில் நோக்கி ஒதுக்கிவிடாமல், அவற்றில் பொதிந்துள்ள கதைகள் தருகின்ற நீதிநெறிகளை, வெளிப்படுத்துமாறு நமது ஆய்வுகள் அமைந்திட வேண்டும்.

இன்றைக்கு உணவாலும், உடையாலும் மட்டுமே ஒரு குழந்தையை உருவாக்கிட முடியாது. உணவு, உடை போல அவர்கள் உணர்வாலும் உருவாக்கப்பட வேண்டும். அந்த உணர்வுகள் ஒழுக்க உணர்வுகளாக அமைய வேண்டும்.

அந்த ஒழுக்கங்களை சமயம் சார்ந்த நெறிகள்தான் வழங்குகின்றன. அந்த நெறிகள் நீதிபோதனை தரும் கதைகளாக நமது இதிகாசங்களிலும், புராணங்களிலும் இடம்பெற்றுள்ளன.

அத்தகைய கதைகளைக் குழந்தைகளுக்குச் சொன்னால், ஆர்வத்தோடு அவர்கள் கேட்டு இரசிப்பார்கள். அவர்களின் அறிவு வளர்ச்சிக்கும், ஒழுக்க மேம்பாட்டிற்கும் இவை மிகவும் தேவை.

சுவாமி சித்பவானந்தர் இப்படி நிறைய புராணக் கதைகளை மாணவர்களுக்குச் சொல்லியிருக்கிறார். பீமனைப் பற்றி, இராமனைப் பற்றி, சீதையைப் பற்றிய சித்பவானந்தருடைய சிறுசிறு புத்தகங்கள் படிப்பதற்குச் சுவை தருபவை.

தமிழின் பழமை:

நமது தமிழ்மொழி உலக மொழிகளிலேயே பழமையானது என்கிறார் உலகமொழி அறிஞர் நோவோம் சாம்ஸ்கி, தமிழறிஞர் துடிசைகிழாரும் இவருக்கு முன்பே இதனை நிறுவியுள்ளார். அவர் கோவை அருகிலுள்ள துடியலூரில் வாழ்ந்தவர். 'தமிழ்ச் சங்கங்களின் வரலாறு' என்ற அவருடைய நூல், தமிழ்மொழியின் பழமையைப் பற்றிச் சிறப்பாகப் பேசுகிறது.

30 ஆயிரம் ஆண்டுகள் பழமையான தமிழ்ச் சங்கங்களின் வரலாற்றை அந்நூல் வரிசைப்படுத்தித் தொகுத்து அளிக்கிறது. நாம், தமிழ்ச் சங்கங்கள் மூன்றுதான் என்கிறோம். அவரோ, 11 தமிழ்ச் சங்கங்கள் இருந்தன என்கிறார்.

இறையனார் களவியல் என்ற நூலுக்கு உரைகண்டவர் நக்கீரர். மூன்று தமிழ்ச் சங்கங்களைப் பற்றி அதில் அவர் குறிப்பிட்டுள்ளார். இவற்றையெல்லாம் துடிசைக்கிழார் தமது நூலின் பதிவுசெய்து நமது பழமையை நிறுவியுள்ளார்.

தமிழ்நாட்டின் எல்லை இமயம்:

தமிழ்நாட்டின் எல்லைகள் நமது காலத்திலே குறுகிவிட்டன. ஆனால், நமது சங்கத் தமிழ் இலக்கியங்களில் இன்றைய திருப்தி வரை, அன்றைய தமிழ்நாடு இருந்திருக்கிறது என்பதற்கு ஆதாரமாக

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ்கூறு நல் உலகத்து"

எனத் தொல்காப்பியப் பாயிரத்தில், பனம்பாரனார் குறிப்பிட்டுள்ளார்.

"நெடியோன் குன்றமும்
தொடியோள் பௌவமும்
தமிழ் வரம்பறுத்த தண்புனல் நந்நாடு"

எனச் சிலப்பதிகாரத்தில் புகார்க் காண்டம் குறிப்பிட்டுள்ளது.

திருப்பதி வரை அல்ல, உண்மையில் இமயம் வரைக்குமே தமிழ்நாடு பரவியிருந்தது என்கிறார்கள். பதிற்றுப் பத்து இதனை,

"வடதிசை எல்லை இமயமாகத்

தகைய ஆர்ப்பெழ தென்னங் குமரியொடு
ஆயிடை அரசர்"
எனக் குறிப்பிடுகிறது.

பழந்தமிழ் நாட்டை நிலவியல் எல்லைகளை மட்டும் வைத்து நிர்ணயம் செய்யாமல், அதனுடைய கலாச்சார எல்லைகளின் பரப்பையும் பார்த்தால்தான் அந்தப் பழந்தமிழ்நாட்டின் நாகரிகத்தை நாம் முழுமையாகத் தெரிந்துகொள்ள முடியும்.

டாக்டர் எஸ்.ஆர்.ராவ் ஆய்வு:

மொகஞ்சாதாரோ எழுத்துக்களைத் தமிழ் என்று சொல்லி இப்பொழுது டாக்டர் மதிவாணன் நிர்ணயம் செய்திருக்கின்றார். நீண்ட நாளாக அதைத் திராவிட நாகரிகத்தின் சின்னம் என்றும் திராவிட மொழியாகத்தான் அது இருக்க வேண்டும் என்று உலக அறிஞர்கள் பலர் கூறிவந்திருக்கிறார்கள். டாக்டர் மதிவாணனின் ஆய்வு அதனை மெய்ப்பிக்குமாறு அமைந்துள்ளது.

ஆனால் குஜராத்திலுள்ள எஸ்.ஆர்.ராவ் அதனை சமஸ்கிருதமாக இருக்கலாம் என்று கூறுயிருக்கிறார். இவ்வாறு இது சம்ஸ்கிருதமா? தமிழா? என்று பல்வேறு விவாதங்கள் எழுந்துள்ளன.

உண்மையில், தொல்காப்பிய இலக்கணம் பூர்வ இலக்கணம் அல்ல. அது சற்று பின்னர் உருவான இலக்கணம்தான். தொல்காப்பிய இலக்கணத்திற்கு முன்பாகவும் தமிழ் மொழியில் இலக்கண, இலக்கியங்கள் இருந்துள்ளன.

அந்த ஆதித் தமிழ் மொழியில் எத்தனை எழுத்துக்கள் இருந்தன என்பதைப் பற்றி யாரும் ஒரு நிர்ணயமாகச் சொல்ல முடியவில்லை.

அகத்தியர் ஓர் இலக்கணம் கொடுத்ததாகக் கூறுகின்றோம். அந்த இலக்கணப்படியும் தமிழ்மொழியில் எத்தனை எழுத்துக்கள் இருந்தன என்று நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை.

மொகஞ்சாதாரோ எழுத்துக்களை வைத்துக் கொண்டு கணக்குப் பார்த்தோமானால், பாரதத்திலிருந்து பிரிந்துபோன பாகிஸ்தான் கூட அன்றைய விசால இந்தியத் தமிழ்நாட்டில்தான் இருந்திருக்கிறது. குஜராத்தும் இருந்திருக்கிறது.

இமாலயம், மத்தியப் பிரதேசம் இப்படி இந்தியா முழுவதையும் டாக்டர். மதிவாணன் சுற்றிப் பார்த்தவர். எல்லா மாநிலங்களிலும் மொகஞ்சதாரோ எழுத்துக்கள் இருந்திருக்கின்றன என்கிறார்.

மத்தியப் பிரதேசத்துப் பெண்கள் மொகஞ்சதாரோ எழுத்துக்களை தங்கள் நெற்றியில் பொட்டாக வைத்துக் கொள்கின்றனர். சில இடங்களில் வீடுகளுக்கு அலங்காரம் செய்வதுகூட இந்த எழுத்துக்களாக இருக்கின்றன. அந்த அளவுக்கு அப்பகுதிகளில் இந்த எழுத்துக்கள் இலகுவாக அகப்படுகின்றன.

தமிழ்நாட்டுக் கல்வெட்டுகளிலும் இந்த எழுத்துக்களைக் கண்டுபிடித்துள்ளனர். பல தாழிகளிலும் இந்த எழுத்துக்கள் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன.

தமிழுக்கு எழுத்துக்கள் எத்தனை?

தமிழ்மொழி பழமையானது என்கிறபோது தமிழ்மொழிக்கு எழுத்துக்கள் 30 என்றும், 33 என்றும் பேசி வருகிறார்கள்.

உண்மையில் தமிழ் மொழியில் எழுத்துக்கள் எத்தனை? எழுத்தைப் பற்றிய ஆராய்ச்சி கடந்த 50 ஆண்டுகளில் நாம் செய்யவே இல்லை.

பேரூர் தமிழ்க் கல்லூரி அப்பெரும் பணியில் ஈடுபடுமானால் வரவேற்புக்குரியதாகத் திகழும்.

பழைய இலக்கியமான திருமந்திரத்தில்,

"ஆதி எழுத்து அவை ஐம்பதோடு ஒன்றென்பர்"

என்கிறார் "திருமூலர்" அகாரம் முதலாக ஐம்பத்தொன்றாகி என்றும் அவரே கூறியுள்ளார்.

சந்தம் நிறைந்த திருப்புகழை அருளிய அருணகிரிநாதரின் திருப்புகழில் அட்சரம் 51 என்று அவரும் கூறுகிறார்.

வேள்வியில் ஓதப்படும் 'ஓம் க்ரீம்' என்ற பீஜ மந்திரங்கள் 51 உள்ளன.

51 எழுத்துக்களைக் கொண்ட கிரந்தத்தில்தான், சிற்ப சாஸ்திரமும் ஆகம சாஸ்திரமும் உள்ளன. ஆனால், தொல்காப்பிய இலக்கணப்படி

தமிழில் 33 எழுத்துக்கள்தான் உள்ளன. தொல்காப்பியத்திற்கு முன்பு வழங்கிலிருந்த 51 எழுத்துக்களைப் பற்றிய ஆய்வினையும், மொழியியல் அறிஞர்கள் வெளிக்கொணர்ந்தால், சமஸ்கிருதத்தில் இருப்பதைப் போலவே தமிழிலும் 51 எழுத்துக்கள் இருந்து வந்தன என்பதை காட்ட முடியும்.

ஏனெனில், கிரந்தத்தில் எழுத்துக்கள் 51 என இருந்து வருகின்றன.

முன்பு தமிழ்மொழி கிரந்தத்திலும் எழுதப்பட்டு வந்தது பலருக்கும் தெரியும். கிரந்தம் சமஸ்கிருதம் அல்ல.

தொல்காப்பியத்திற்கு முந்தைய பண்டைய தமிழ் மொழியில், 51 எழுத்துக்கள் இருந்திருக்கலாம் என்பது ஒரு கருத்தோட்டம்தான். ஆய்வு மூலம்தான் அதனை உறுதி செய்ய முடியும்.

கலாம் வருகை:

மேதகு அப்துல்கலாம் அவர்கள் 5 ஆண்டுகளுக்கு முன்பு பொள்ளாச்சிக்கு வந்திருந்தபோது 80 ஆண்டுகள் நிறைந்த எனக்கு இன்னும் ஏதேனும் கனவு உண்டா என்று எதார்த்தமாக என்னிடம் கேட்டார்.

“ஆமாம், எனக்கு ஒரு கனவு உண்டு. பண்டைய தமிழ்மொழிக்கு எழுத்துக்கள் எத்தனை இருந்தன என்பதை கண்டுபிடிக்க வேண்டும் என்பதே அக்கனவு” என்று அவரிடம் கூறினேன்.

வியந்துபோன கலாம் காண முடியுமென்று இளைஞர்களிடம் கூறினார். இதனை அவருடைய எழுச்சி தீபங்கள் நூலின் பக்கம் 149ல் அப்படியே எழுதியும் வைத்துள்ளார்.

ரோமன் லிபியில் உலக மொழிகள்:

இங்கே வேறொன்றையும் குறிப்பிட்டாக வேண்டும். ஐரோப்பிய நாடுகளில் பல மொழிகள் பேசப்பட்டாலும் அவை அனைத்திற்கும் ஒரே எழுத்து ரோமன் லிபி மட்டுமே பொதுவாக உள்ளதை நாம் அறிவோம்.

அதேபோல, இன்றுள்ள தமிழ் எழுத்துக்களுக்கு மாற்றாக, ரோமன் எழுத்துப் பயன்படுத்தினால், உலகம் முழுவதும் உள்ள தமிழரின்

குழந்தைகளும் பிற மொழியாரும் தமிழை எளிதாகப் படித்துக்கொள்ள முடியும்.

ரோமன் எழுத்துக்களை இந்தி மொழிகள் அனைத்திற்கும் பயன்படுத்துவோமானால், இந்தியா முழுவதும் எல்லாரும் எல்லா மொழிகளையும் எளிதில் கற்கவும் பேசவும் முடியும்.

தொல்காப்பியரும், நோவாம் சாம்ஸ்கியும்:

எழுத்துகளுக்கு ஒலிதான் முக்கியம். இந்த ஒலியன்கள் 33 என வரையறுத்து அதற்குரியதாக தமிழ் எழுத்துக்களைத் தொல்காப்பியர் சுமார் 9 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அமைத்துள்ளார்.

தொல்காப்பியத்தைப் பற்றியே தெரியாத மொழியியல் மேதை சாம்ஸ்கி அவர்களும் 33 ஒலியன்கள் (phoneme) கொண்ட மொழிதான் முழுமையான மொழி என்று இன்றைக்குத் தனது ஆய்வின் மூலம் தெளிவுப்படுத்தியுள்ளார்.

மொழியியல் மேதை சாம்ஸ்கி கண்ட அறிவியல் உண்மையை, தொல்காப்பியர் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கண்டறிந்தார் என்பதை அறியும்போது நமக்கு வியப்பாக இருக்கிறது.

இத்தகைய பண்டைய சிறப்பைப் பெற்றுள்ள மொழி, நமது தமிழ்மொழி என்பது நமக்குப் பெருமையாகும்.

பண்டைய சேர - சோழ நாடுகள்:

பண்டைய தமிழ்மொழிக்கு 51 எழுத்துக்கள் இருந்திருக்கலாம். என்பதை ஆய்வு செய்து பார்க்கலாம் என்பதுபோல, பண்டைய சேர, சோழ நாடுகள் எங்கிருந்தன என்பதைப் பற்றியும் ஆய்வு செய்து பார்க்கலாம். ஏனெனில், அதற்குரிய காரணிகள் நமது கைவசம் இருந்து வருகின்றன.

மகாபாரத யுத்தத்தில் பாண்டவ – கௌரவப் படையினருக்குப் பெருஞ்சோற்று உதியன் என்னும் சேர மன்னன் சோறு அளித்ததாக புறநானூற்றுப் பாடல் ஒன்று கூறுகிறது. இன்றைய கேரளமான சேர நாட்டிற்கும், வட இந்தியாவிலுள்ள குருக்ஷேத்திரத்திற்கம் உள்ள நெடுந்தூரத்திற்கு உணவு கொண்டு சென்று உதவியிருப்பார் என்பது சாத்தியமில்லை.

அப்படியானால், சேரநாடு என்பது குருக்ஷேத்திரத்திற்க அருகாமையில் இருந்த நாடாகத்தான் இருந்திருக்க வேண்டும்.

அத்தோடு, கடைச்சங்க காலத்திற்கு பிற்பட்ட சேரநாடான இன்றைய கேரளம் அரிசி மற்றும் தானியப் பற்றாக்குறை உள்ளதாகவும், பிற மாநிலங்களிலிருந்து உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்கிற மாநிலமாகவும் இருப்பதைக் காண்கிறோம்.

. அதனால், இன்றைய சேரநாடு வேறு. மகாபாரத சேரநாடு வேறு என்பதாக நினைக்க வேண்டியுள்ளது. இன்றைய சேரநாடு கேரளா. குருக்ஷேத்திரத்திற்குப் பக்கத்தில் நெல்லும், தானியங்களும் நன்றாக விளையும் வயல்வெளிகளை உடையதாகத்தான் மகா பாரத சேரநாடு இருந்திருக்க வேண்டும்.

குருக்ஷேத்திரத்திற்குப் பக்கத்தில் இத்தகைய வளமுள்ளதாக பஞ்சாப் மாநிலம்தான் உள்ளது. எனவே, பஞ்சாப் பகுதி பண்டைய சேர நாடாக இருந்திருக்கலாம்.

சோழ நாடு பற்றியும் இதேபோல் ஆய்வு செய்து பார்க்கலாம். வால்மீகி அருளிய ராமாயணத்தில், தசரத சக்ரவர்த்தியின் சபைக்கு வந்திருந்த பல்வேறு அரசர்களில் சோழ மன்னனும் இருந்ததாக அதில் கூறப்பட்டுள்ளது.

தசரதன் அரசாண்ட அயோத்திக்கும் இன்றைய தஞ்சைத் தரணியான சோழ நாட்டிற்கம் இடையே 2000கி.மீ. தொலைவு இடைவெளி உள்ளது. எனவே, அன்றைக்கு தசரதனோடு நட்புக் கொண்ட சோழ மன்னன். இங்கிருந்து அயோத்தி சென்றிருப்பதற்கான வாய்ப்புக் குறைவு.

கங்கைக் கரையும் வேளாளர்களும்:

வரலாற்று ஆசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் சிந்துவெளியிலிருந்து 18 வகை வேளாளர் கூட்டத்தார் தெற்கே வந்தார்கள் என்று எழுதியிருக்கிறார். அவர்கள் திருநெல்வேலி வரை போய், பிறகு காவிரி பக்கம் உள்ள தஞ்சைக்குத் திரும்பியதாகத் தெரிகிறது.

இதிலிருந்து, ஒரு காலத்தில் தமிழர்களில் ஒரு பிரிவினர், வடக்கிலிருந்து தெற்கே வந்தார்கள் என்று கருதவும் இது இடம் தருகிறது.

கொங்குநாட்டிலுள்ள கொங்கு வேளாளர்களின் வரலாற்றைப் பார்க்கும்போது அவர்கள் கங்கைப் பக்கமிருந்த சோழ நாட்டிலிருந்து குடிபெயர்ந்ததாகக் கூறப்படுகிறது.

கொங்கு வேளாளர் திருமணங்களில் பாடப்படும் மங்கல வாழ்த்துப் பாடலில் 'கங்கா குலம் விளங்கக் கம்பர்' சொன்ன வாழ்த்துரை இதனை உறுதிப்படுத்துமாறு அமைந்துள்ளது.

"கங்கை பாலகர் காராளர் தங்க
மங்கலகரமான மணமது முடிக்க"

என்று வரும் இப்பாடல் அடிகளில், கங்கைக் கரையிலிருந்து கொங்கு வேளாளர்கள் இங்கு வந்தார்கள் என்ற குறிப்பு கிடைக்கிறது.

வேளாளர்கள் கங்கைக் கரையிலிருந்து வந்தார்கள் என்றால், அவர்களது தாயகமான சோழநாடும் கங்கைக் கரையில்தான் இருந்திருக்க வேண்டும். அவர்கள் அங்கிருந்து ஏன் வந்தார்கள் என்பதும் ஆய்வுக்குரியது சேர,சோழநாடு போல பண்டையபாண்டிய நாடு இல்லை. காரணம் பாண்டியநாடு குமரிக்கண்டமாக இருந்து, கடலில் மூழ்கிப் போய்விட்டது.

இவ்வாறாக, பழந்தமிழ் நாடு என்பது இன்றைக்குள்ள குறுகிய தமிழ்நாடு அல்ல. இன்றைய இந்தியா முழுமையுமே சேர, சோழ நாடாக விளங்கிற்று. மொகஞ்சதாரோவின் புதைபொருள்களும் இவற்றை நிரூபிக்கின்றன.

'மூ' (MU) இனம்

இரண்டு லட்சம் வருடங்களுக்கு முன்பு 'மூ' (MU) இனம் கிழக்காசிய நாடுகளிலிருந்து தென்னகத்தை நோக்கிப் பிரவேசித்ததாகக் கூறப்படுகிறது. அவ்வாறு அவர்கள் இடம்பெயரக் காரணம், அப்போது அப்பகுதியில் ஏற்பட்ட கடல்கோள்தான் என்கிறார்கள்.

கிறிஸ்துவுக்கு முன்பு நோவாவின் காலத்தில் ஏற்பட்ட பிரளயம் போல, அந்தக் கடல் கோளும் நிகழ்ந்தாகக் கருதப்படுகிறது. அதில்தான் லெமூரியாக் கண்டம் மூழ்கியதாகவும் கருதப்படுகிறது.

அங்கிருந்து இடம்பெயர்ந்த 'மூ' இனத்தாரின் எழுத்தும், மொகஞ்சதாரோ எழுத்தும் ஒன்றாக இருக்கிறது என்றும் ஓர் ஆராய்ச்சி உள்ளது.

அந்த ஆராய்ச்சி சரியானதா? தவறானதா? என்பதைப் பற்றிய தெளிவு இன்னும் ஏற்படவில்லை.

பண்டைய இலக்கியங்களில் புறச்சமயத் தாக்கம்:

நமது பண்டைய தமிழ் இலக்கியங்களில் பௌத்தசமய, சமண சமயத்தாக்கங்கள் அதிகமாக உள்ளன. ஐம்பெருங் காப்பியங்கள் என்று போற்றுப்படுகின்ற சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியவற்றில், மணிமேகலை பௌத்த காப்பியமாகவும், மற்றவை சமணக் காப்பியங்களாகவும் இருப்பதாக கூறுகின்ற ஆய்வுகள் பற்றி மேலும் நாம் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

இவ்வாறு இந்தியா முழுவதும் பரவியிருந்த தமிழினத்தினுடைய பண்டைய இந்திய சரித்திரத்தைப் புதிதாக உருவாக்க வேண்டிய கடமை நம்முடையதாகும். அப்படி ஒரு வரலாறு வருமானால், செம்மொழித் தகுதியைப் பெற்ற தமிழுக்கு இந்திய அளவில் மேலும் புகழ் சேரும்.

ஒரு புதிய முயற்சி தேவை

நமது சங்க இலக்கியங்கள் தமிழ்மொழியில் மட்டுமே தமிழ்நாட்டில் உலவி வருகின்றன. சிலவற்றை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்ப்பு செய்துள்ளோம். இனிமேல் இவற்றை மொழிப்பெயர்ப்பு செய்யாமல் ஒலிப்பெயர்ப்பு (Transliteration) செய்ய வேண்டும். மொழிப்பெயர்ப்பு அவசியமில்லை.

மூலத் தமிழில் உள்ள சங்க இலக்கியங்களையும், பிற்கால சமய இலக்கியங்களையும் அப்படியே அங்கிலத்தில் ஒலிபெயர்த்துப் பதிப்பித்துவிடலாம். ஒலிபெயர்ப்பு சொற்களுக்கு அகராதிகள் மூலம் விளக்கம் தந்து விடலாம்.

இந்த முயற்சியை முதலில் தென்னகத்திலுள்ள மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய மூன்று மாநில மொழிகளிலும் செய்து பார்ப்பது மற்றவர்களும் பின்பற்றுவதற்கு உதவுவதாக அமையும்.

ஆங்கில மொழிக்கு ரென் & மார்டின் இருப்பதுபோல, தமிழ் மொழிக்கு ஒரு இலக்கண நூல் தேவை. உரைநடையை வாசிக்கத் தெரிந்த அனைவரும் இலகுவாக மொழி இலக்கணத்தைக் கற்றுக்கொள்ள முடியும்.

எளிதாகப் புரிந்துகொள்கிற உரைநடை இலக்கண நூல்கள் தமிழ்மொழிக்கு இல்லை. தொல்காப்பியமும் நன்னூலும் நூற்பா என்ற சூத்திரங்களைக் கொண்டு படிப்பதற்குக் கடினமாக விளங்குகின்றன. இதற்கு மாற்றாக எளிய இலக்கண நூல் அவசியம்.

தமிழ் இலக்கணத்திற்குத் தனிச் சிறப்பு உண்டு. எழுத்து சொல் என்பதுடன் நமது தமிழ் இலக்கணம் நின்றுவிடாமல் பொருள் (வாழ்வியல்) பற்றியும் பேசுகிறது. மற்ற மொழிகளின் இலக்கணங்களில் இந்தப் பார்வை இல்லை.

தமிழுக்கு இந்த வாய்ப்பு வந்ததற்குத் தக்க காரணம் உண்டு. தமிழ்நாட்டின் நிலப்பரப்பை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே 5 வகையாக குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனப் பிரித்து காட்டியிருக்கிறோம்.

இவற்றில் குறிஞ்சியும், முல்லையும் மட்டும் முரண்பட்டு திரியுமானால், அதனைப் பாலைநிலம் என்றும் சேர்த்து ஐவகை நிலப் பண்புகளை நாம் பேசியிருக்கிறோம்.

நிலத்திற்கு நாம் வரையறை செய்திருப்பதைப் போல, அந்தந்த நிலம் சார்ந்த மக்கள் வாழ்க்கைக்கும் வரையறை செய்து வைத்துள்ளோம்.

இவ்வாறு தமிழ் இலக்கணம் எழுத்தையும் சொல்லையும் பற்றி மட்டும் பேசாமல், மொழியைக் கையாள்கிற மக்களின் வாழ்வியலைப் பற்றியும் பேசுமாறு அமைந்துள்ளது.

கொங்குநாட்டில் அமைந்துள்ள சாந்தலிங்கர் திருமடம், சைவசமயத்தின் கொடு முடியாகவும், சாந்தலிங்கர் தமிழ்க் கல்லூரி பண்டைய ஆய்வுகளின் சிகரமாகவும் விளங்கிட வேண்டும் என்பதே எனது அவா.

"என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாய்த் தமிழ் செய்யுமாறே"

என்ற திருமூலரின் திருவாசகங்களைக் கூறி எனது உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

இந்து சமயப் பாதுகாப்பு இயக்கத்தில் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

நாடு விடுதலை பெற்ற பின் தாய்ச்சமயத்தைக் காக்கவும், தாய்ச்சமயப் பண்பாட்டை வளர்த்துப் பேணவும் அயற்சமயங்களின் மதமாற்றம் போன்றவை மிகாமல் பார்த்துக் கொள்ளவும், இந்த சமயப் பேரமைப்பு; பேரியக்கம் ஒன்று இன்றிமையாததாயிற்று.

இந்நிலையில் 1964 ஆம் ஆண்டில் சுவாமி சின்மயானந்தா அவர்களால் விசுவ இந்து பரிஷத் என்ற பேரமைப்பு (பம்பாயில் அவரது சாந்தி பணி சாதனாலயத்தில்) தொடங்கப்பெற்றது.

விசுவஇந்து பரிஷத் அகில உலக அமைப்பு. இதன் தலைமையகம் டெல்லியில் உள்ளது. "மார்க்க தர்ஷக் மண்டல்" (அறவழிகாட்டும் ஆன்றோர் பேரவை), "தர்மஸம்ஸத்" (துறவியர் பேரவை) என்ற அமைப்புகள் மடாதிபதிகளையும் துறவியர்களையும் கொண்டவை. இவற்றில் பேரூரடிகளாரும் நாமும் பெரும்பங்கு கொண்டிருந்தோம்.

தமிழ்நாட்டில் மாநில அளவில் மார்க்க தர்சக் மண்டல் (அறவழிகாட்டும் அன்றோர் பேரவை) மாநாடுகள் இதுவரை 10 (பத்து) மாநாடுகள் நடத்தப் பெற்றுள்ளன.

முதல் மாநில மாநாடு சிதம்பரம் 1983
இரண்டாவது மாநில மாநாடு திருஆனைக்கா 1984
மூன்றாவது மாநில மாநாடு மதுரை 1985
நான்காவது மாநில மாநாடு திருவண்ணாமலை 1986
ஐந்தாவது மாநில மாநாடு இராமேஸ்வரம் 1991
ஆறாவது மாநில மாநாடு கும்பகோணம் 1992
மகாமகம்
ஏழாவது மாநில மாநாடு மயிலாடுதுறை 1994
எட்டாவது மாநில மாநாடு மதுரை 1997
ஒன்பதாவது மாநில மாநாடு கும்பகோணம் 2004
பத்தாவது மாநில மாநாடு தருமபுரி ஆதீனவளாகம் 2007

இப்பத்து மாநாடுகளிலும் மடாதிபதிகள் துறவியர்கள் ஆன்றோர்கள் பலர் கலந்துகொண்டவர். ஊர்வலம் பொதுக் கூட்டம் முதலிய அங்கங்களுடன் மிகச் சிறப்பாக இருநாள் மாநாடுகளாக இவை நிகழ்ந்தன. ஒன்பதாவது மாநாடு ஒன்றைத்தவிர ஏனைய எல்லா மாநாடுகளிலும் அடிகளார் கலந்துகொண்டு சிறப்புப் பங்கேற்றார்கள். பத்தாவது மாநாட்டுக்கு அடிகளார் சார்பில் இளையபட்டம் மருதாசல அடிகளார் வந்திருந்தார்கள்.

பேரடிகளாரும் நாமுமே இம்மாநாடுகளின் அமைப்பாளர்கள். எங்கள் இருவர் கையொப்பத்துடனேயே மாநாட்டு அழைப்பிதழ் வெளியாகும். எல்லா மாநாடுகளிலுமே தொடக்கத்தில் அறிமுக உரை எம்முடையதாக (ஊ.அ) இருக்கும். இறுதியில் தீர்மான விளக்கவுரையில் துறவியர் சார்பில் நாமும், பரிஷத் சார்பில் ஆர்.வி.பி.எஸ்.மணியன் அவர்களும் உரையாற்றுவது வழக்கம்.

1993ல் தென்னாங்கூர் தட்சிண ஹாலாஸ்யத்தில் ஸ்ரீ ஞானானந்தகிரிபீடம் பீடாதிபதி குருஜி ஸ்ரீ சுவாமிஹரிதாஸ்திரி அவர்கள் சாதுக்கள் சம்மேளனம் ஒன்றைச் சிறப்பு நிகழ்ச்சியாக நடத்தினார்கள். காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு சங்கராசாரிய சுவாமிகள் முதலாக மடாதிபதிகள் துறவியர்கள் பலர் கலந்துகொண்ட இச்சம்மேளனத்தில் நாமும் பேரூரடிகளாரும் முக்கிய பங்கு கொண்டோம்.

அகில இந்திய அளவில் ரிஷிகேஷம், ஹரித்துவாரம், டெல்லி, காசி, அயோத்தி, வடமதுரை, கர்ணாவதி (ஆமதாபாத்) உடுப்பி, திருப்பதி, திருவனந்தபுரம், வர்க்கலை முதலிய இடங்களில் நிகழ்ந்த அகில இந்திய துறவியர் பேரவையின் மாநாடுகள் (தர்மசம்சத்) ஆலோசனைக் கூட்டங்கள் முதலியவற்றில் அடிகளாரும் நாமும் தமிழகத்தின் சார்பில் முக்கிய பங்காற்றினோம்.

கன்னியாகுமரியிலிருந்து சென்னை வரை (குமரிமுதல் கோட்டை வரை) 1000 கிலோ மீட்டர் பாதயாத்திரையொன்று 01.05.1988 முதல் 31.05.1988 முடிய ஒரு மாத காலப் பாதயாத்திரையாக நடத்தப்பெற்றது. இந்து சமய அறநிலையத் துறை அரசின் ஒரு துறையாக இருப்பதை மாற்றித் தனித்தியங்கும் ஒரு வாரியமாக அமைக்கவேண்டும் என்பதை வற்புறுத்திச் செய்யப்பெற்ற இந்த யாத்திரையில் துறவியர்கள் பலரும் தொண்டர்கள் பலரும் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர். கௌமார

மடம் சுந்தரசுவாமிகளும் பேரூரடிகளாரும் நாமும் முக்கிய பங்காற்றினோம். பாதயாத்திரையில் வந்த அனைவருக்கும் 23.05.1985இல் வடலூரில் எமது இடத்தில் மாகேசுவர பூஜை செய்துவைத்து இரவு தங்கவும் ஏற்பாடு செய்து சிறப்பித்தோம்.

கிராமக்கோயில்கள் பூசாரிகள் பேரவை என்ற ஓர் அமைப்பு விசுவ இந்து பரிஷத்தால் ஏற்படுத்தப் பெற்றது. பூசாரிகள் மாநில முதல் மாநாடு திருச்சிராப்பள்ளியில் நிகழ்ந்தது (1995). சென்னையில் நிகழ்ந்த இரண்டாவது மாநில மாநாட்டில் (1996) அன்றைய முதலமைச்சர் மாண்புமிகு ஜெ.ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்து முழுமையான ஆதரவை வெளிப்படையாக அறிவித்தார். மூன்றாவது மாநில மாநாடு திருச்சிராப்பள்ளியில் 1999ல் நிகழ்ந்தது. 2001இல் மதுரையில் நிகழ்ந்த நான்காவது மாநில மாநாட்டில் முதலைமைச்சர் டாக்டர் மு.கருணாநிதி அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார். ஒருசிலவைகளில் தமது அரசின் ஆதரவைத் தெரிவித்தார். மாநில மாநாடுகள் தவிர மாவட்ட மாநாடுகளும் ஆங்காங்கே நடந்தன. கிராமக்கோயில் பூசாரிகளுக்கான பயிற்சி முகாம் வகுப்புகளை வி.இ.ப. வெற்றிகரமாகப் பல்வேறு இடங்களில் நடத்திற்று. இன்றும் நடத்தி வருகிறது. இவற்றின் பயனாக, முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் கிராமக்கோயில் பூசாரிகள் பேரவை அரசின் ஆதரவையும் அங்கீகாரத்தையும் பெறுவதாயிற்று. கிராமக்கோயில் பூசாரிகள் நலவாரியம் பூசாரிகளுக்கு அடையாள அட்டை மற்றும் நலத்திட்ட உதவிகளக்கான குறிபேடு வழங்கும் விழாவை இந்து சமய அறநிலையத்துறையே அழைப்பிதழ் வெளியிட்டு நடத்திற்று. அறநிலையத் துறை அமைச்சர், செயலர், ஆணையர் ஆகிய மூவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பேரூரடிகளாரும் குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரும் வாழ்த்துரை வழங்கினார். "பூசாரி முரசு" என்றொரு மாபெரும் வெளியீட்டையும் வி.இ.ப.வின் பூசாரிகள் பேரவை தொடங்கியுள்ளது. உடுக்கடிக்கும் பூசாரிகள் இப்போது முரசு முழங்குகிறார்கள்.

இவ்வாறெல்லாம் பல்வேறு வகைகளில் இந்து சமயத்திற்குச் சிறந்த பணிகளை ஆற்றிவரும் விசுவ இந்து பரிஷத்திற்கு ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளக்கு மேலாகப் பேரூரடிகளார் முக்கிய பங்களிப்பை வழங்கியிருக்கிறார்.

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் அயல் நாட்டுப் பயணங்கள்

அயல்நாட்டுப் பயணம் அதிகம் செய்தவர்கள் குன்றக்குடி அடிகளாரும் பேரூர் அடிகளாரும்தான். அடிகளாரின் முதல் அயல்நாட்டுப் பயணம் 1960ல் குன்றக்குடி அடிகளாருடன் தான் தொடங்கிற்று. அதன்பின் இன்றுவரை பல்வேறு நாடுகளக்கு அடிகளார் சென்று வந்திருக்கிறார்கள்.

1960 இலங்கை குன்றக்குடி அடிகளாருடன் விமானப்பயணம்

1973 இலங்கை கப்பல் பயணம்

1980 இலங்கை கண்டி – நாவலடிப்பிட்டி

1982 இலங்கை கொழும்பு இந்துமத மாநாடு

1986 அமெரிக்கா வர்ஜீனியா தாமரைக்கோயில் திறப்புவிழா, அருட்செல்வர் திரு நா.மகாலிங்கம் அவர்களுடன்

1986 மலேசியா, சிங்கப்பூர் உலக இந்து மகளிர் மாநாடு

1996 தென்னாப்பிரிக்கா உலக சைவ 5ஆவது மாநாடு

1998 பாரிஸ், லண்டன்

1999 ரோம், அஜிசிமலை, அமெரிக்கா வாஷிங்கடன் அருட்செல்வர். நா.மகாலிங்க அவர்களுடன் முருகன் கோயில், வர்ஜினியா சச்சிதானந்தரின் தாமரைக்கோயில்

2001 லண்டன் மேற்குல சைவ மாநாடு பிரிட்டானிய சைவத் திருக்கோயில் ஒன்றியம்

பாரிஸ் ஸ்ரீ விநாயகர் தேர்விழா

மொரிஷியஸ் 8ஆவது உலக சைவ மாநாடு

கென்யா, தென்னாப்பிரிக்கா, மொரிஷியஸ் உலக அறநெறிப் பயணம் (விஸ்வ இந்து பரிஷத் ஏற்பாட்டில் விஸ்வ தர்ம யாத்திரை)

2002 லண்டன் வைத்திருக்கோயில்களின் ஒன்றியம், ஐந்தாவது சைவ மாநாடு

இங்கிலாந்து லண்டன் மாநகரில் லண்டன் வாழ் சைவ மெய்யன்பர்கள் சைவத்திருக்கோயில்கள் பலவற்றைக் கட்டி வழிபட்டு வருகின்றனர். சைவத்திருக்கோயில்கள் பலவற்றையும் இணைத்து சைவத்

திருக்கோயில்களின் ஒன்றியம் என்ற ஓர் அமைப்பினையும் ஏற்படுத்தி உள்ளனர். அதன் சார்பில் ஆண்டுதோறும் சைவ மநாடுகளை நடத்தி வருகின்றனர். முதலாவது மாநாடு 1998. இரண்டாவது மாநாடு 1999. இதில் அடிகளார் கலந்து கொண்டார். மூன்றாவது மாநாடு 2000. இதில் இளையபட்டம் மருதாசல அடிகளார் கலந்து கொண்டார். இந்த மாநாட்டின் போதுதான் சைவத்தமிழ்ப் பேரறிஞர் பண்டித வித்துவான் டாக்டர். கு.சுந்தரமூர்த்தி அவர்கள் லண்டனுக்குச் சென்று, மாநாட்டிலும் கலந்து கொண்டு, வேறு பல இடங்களிலும் சொற்பொழிவுகள் ஆற்றி, வகுப்புகள் நடத்தித் திரும்பினார். 2001,2002ஆம் ஆண்டுகளில் நான்காவது ஐந்தாவது மநாநாடுகள். இம்மாநடுகளுக்கு அடிகளாரே சென்று வந்தார்.

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் மணிவிழா

அடிகளாரின் அறுபதாம் ஆண்டு நிறைவு நாள்மங்கல விழா 10.11.1985, 11.11.1985 இரண்டு நாள்களும் திருமுறை முற்போதல், கலசம் நிறுவி வேள்வி செய்தல், அபிடேகம் முதலியவற்றுடன் ஆன்மார்த்த விவாக நடத்தப் பெற்றது.

சாந்தலிங்கர் குருபூசை விழா, சாந்தலிங்கர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுவிழா, சத்வித்யா சன்மார்க்க சங்கப் பவளவிழா ஆகிய்வற்றுடன் அடிகளாரின் மணிவிழா, சிறப்பு விழாவாக 19.02.1986 முதல் 24.02.1986 முடிய ஆறு நாள் விழாவாகக் கொண்டாடப் பெற்றது.

முதல்நாள் 19.02.1986 புதன்கிழமை விழாத் தொடக்கம், முதற்கால வேள்வி, இரண்டாம் நாள் 22.02.1986 காலை மாலை இரண்டாம்கால மூன்றாம் கால வேள்விகள், வீரசைவக் கருத்தரங்கம். மூன்றாம் நாள் 21.02.1986 காலை திருக்கோயில் குடநீராட்டுவிழா. திருக்கயிலைத் தோரணவாயில் திறப்பு. மாலையில் துறவியர் கருத்தரங்கு. நான்காம் நாள் 22.02.1986 சனிக்கிழமை அடிகளார் மணிவிழா. ஐந்தாம் நாள் 23.02.1986 ஞாயிறு காலை தமிழ்க் கல்லூரி ஆண்டு விழா, பிற்பகல் சத்வித்யா சன்மார்க்க சங்கத்தின் 70ஆம் நிறைவுப் பவளவிழா. ஊரன் அடிகள் தலைமையில் சிந்தனை அரங்கம். சாந்தலிகர் கண்ட அவிரோதம் என்ற தலைப்பில் டாக்டர் வை.இரத்தினசபாபதி, வள்ளலார் கண்ட சன்மார்க்கம் என்ற தலைப்பில் பேராசிரியர் இருசுப்பிள்ளை, தாயுமானவர்கண்ட சமரசம் என்ற தலைப்பில் டாக்டர் பொன்சௌரிராஜன் சிந்தனை உரை. இரவு

சோ.சத்தியசீலன் தலைமையில் வழக்காடுமன்றம். ஆறாம் நாள் 24.02.2008 திங்கட்கிழமை குருபூசைவிழா. இரவு சாந்தலிங்கப் பெருமான் திருவீதி உலா, அடியார் குழத்துடன் அன்பர்கள் நகர்வலம் – தேவார இன்னிசை வாணவேடிக்கை முதலிய சிறப்புகளுடன் ஆறுநாள் விழாவாக நிகழ்ந்த இப்பெருவிழாவில் மடாதிபதிகள், பிரமுகர்கள், அறிஞர்கள் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர். மணிவிழாமலர் ஒன்ற வரலாற்றுக் குறிப்புகள் செறிந்தததாக வெளியிடப் பெற்றது.

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் அருளாட்சி விழா

1967ல் அடிகளார் மடாதிபதியாக அருளாட்சி ஏற்றார்கள். 1992ல் அடிகளாரின் ஆட்சிகுகக் கால்நூற்றாண்டு, இருபத்தைந்து ஆண்டுகள் ஆயின. அருளாட்சி வெள்ளிவிழா நான்கு நாள் விழாவாக மிகச்சிறப்போடு கொண்டாட பெற்றது.

24.09.1992 வியாழன் முதல்நாள் விழா பேரூரில் திருமடத்திலேயே சிவப்பிரகாசர் திருநாளாக அடிகளார் நாண் மங்கல விழாவாக நிகழ்ந்தது அன்றுதான் இளையபட்டமாக மருதாசல அடிகள் நியமிக்கப்பெற்றுப் புனிதநீராட்டுப் பெற்றார். தொடர்ந்து மூன்று நாளும் கோயம்புத்தூர் மணி மேல்நிலைப் பள்ளியின் நாளி கலையரங்கத்தில் விழா நிகழ்ந்தது.

25.09.1992 வெள்ளி – சாந்தலிங்கர் திருநாள் – சமுதாய விழா
26.09.1992 சனி – குமாரதேவர் திருநாள் – தமிழ் விழா
27.09.1992 ஞாயிறு – சிதம்பர சுவாமிகள் திருநாள் சமயவிழா

குன்றக்குடி, தொண்டைமண்டலம், குடந்தை, மயிலம் விருத்தாசலம், திருப்போரூர், சிதம்பரம், சிரவணபுரம் ஆதீனகர்த்தர் மடாதிபதிகள் கலந்து கொண்டார்கள்.

அருட்செல்வர் மகாலிங்கம் உள்ளிட்ட பெருந்தகையாளர்கள், அறிஞர்கள், பேராசிரியர்கள், சான்றோர்கள், துறவிகள் பலர் கலந்துகொண்டனர். சமயம், சமுதாயம், மொழி குறித்த அறிவார்ந்த கருத்தரங்கங்கள் இடம்பெற்றன. சொல்லின் செல்வர் சுகிசிவம் நடுவராக ஒரு பட்டிமன்றமும் பாங்கோடு நடந்தது, நிறைவுநாள் நான்காம்நாள் மாலையில் ஊர்வலமும் மாபெரும் பொதுக்கூட்டமும் நிகழ்ந்தன.

அருளாட்சி வெள்ளிவிழா மலர் ஒன்று சிறந்த நறுமலராக் வெளியிடப் பெற்றது. அடிகளாரின்பேரில் பழனி சித்திரகவிப்புலவர் இல.பழனிச்சாமி அவர்கள் பாடிய பிள்ளைத்தமிழ் இம்மலரில் இடம்பெற்றுள்ளது. தவத்திரு சாந்தலிங்க இராசாமி அடிகள் பிள்ளைத்தமிழ் என்று பெயர் பருவத்துக்கு ஐந்தாக ஐம்பது பாடல்களைக் கொண்டது.

“நந்தி அருள்நெறி” என்ற பெயரில் திங்களிதழ் ஒன்றைத் தொடங்கும் திட்டம் ஒன்றும் இவ்வருளாட்சி வெள்ளி விழாவில் இடம்பெற்றது. பின்னே அதுதான் “சிவசாந்தலிங்கர்” என வெளிவருவதாயிற்று.

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் பவளவிழா

சாந்தலிங்க அடிகளார் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு பெருவிழா, குருபூசைவிழ சத்வித்யா சன்மார்க்க சங்க 80ஆவது ஆண்டு விழா அடிகளார் பவளவிழா (70நிறைவு) ஆகிய விழாக்கள் 29.02.1996 முதல் 04.03.1996 முடிய ஐந்து நாட்கள் சிறப்புற நிகழ்ந்தன. இவ்விழாவில் இளைய அடிகளுக்குக் கல்லாடை வழங்கப்பெற்றது.

மகளிர் மாநாடு, இளைஞர் மாநாடு, மகளிர் நடத்தும் 1008 திருவிளக்கு வழிபாடு, கல்வி நிலையங்கள் ஆண்டு விழா. கட்டிடங்களின் திறப்பு விழா, துறவியர் சமயச் சான்றோர் பேரவை, இவ்வாறு அனைத்தும் சேர்ந்து ஒரு பெரிய மாநாடாகவே இவ்வைத்து நாள் விழா அமைந்தது.

மடாதிபதிகள், துறவியர், சான்றோர்கள், அறிஞர்கள், பெருந்தகையாளர்கள் நூற்றுக்கு மேற்பட்டோர் பல்வேறு நிலைகளில் பங்கேற்றுச் சிறப்பித்த இப்பெருவிழா மிகவும் பயனுடையதாக அமைந்தது.

03.03.1996 ஞாயிறு காலையில் தொடங்கிய துறவியர் சமயச் சான்றோர் பேரவை நம்முடைய அறிமுக உரையோடு தொடங்கிற்று. சைவ வீரசைவ வேதாந்த மடாதிபதிகள் துறவியர்களோடு மேல்சித்த மூர்சைனந்திருமடம் இலட்சுமிசேன பட்டராக அடிகளார் அவர்களும் கலந்து கொண்டது. ஒரு தனிச்சிறப்பாக அமைந்தது.

ஒன்றது பேரூர் வழிஆறு அதற்குள

என்பது போன்ற இருமுச்சமயமும்
நன்றிது தீதிது என்றுரை யாளர்கள்
குன்று குரைத்தெழு நாயை ஒத்தார்களே

என்று திருமூலர் திருமந்திரத்தை எடுத்துக்காட்டிப் பேரூரில் ஆறுசமயத்தாரும் கூடியிருந்த அடிகளார் பவளவிழாவில் சமயப்பேரவை நிகழும் அற்புதத்தை விளக்கி, சமய உலகில் சென்றகாலம் நிகழ்காலம் எதிர்காலங்களைக் குறிப்பிட்டு நாம் ஆற்றிய அறிமுக உரை சிந்தனை பேருரையாக அமைந்தது.

04.03.1996 திங்கள் பிற்பகல் சத்வித்யா சன்மார்க்க சங்க 80ஆவது ஆண்டு விழாவில் சிவகளை மு.சுப்பையா அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் விழா மலரை வெளியிட்டுத் தலைமையுரையாற்றினார்கள்.

ஐந்து நாள் விழாவின் ஒரு சிறப்பு நிகழ்ச்சியாக 03.03.1996 ஞாயிறு மாலை கோம்புத்தூர் நகரில் தேவாங்கர் மேல்நிலைப்பள்ளி விளையாட்டுத் திடலில் பவளவிழாப் பாராட்டு நிகழ்ச்சி அருட்செல்வர் பத்மபூஷன் டாக்டர்.நா.மகாலிங்கம் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. கிறிஸ்துவப் பாதிரியர்கள் இருவர், இஸ்லாமிய மௌல்வி ஒருவர், ஜெயின் சங்கத் தலைவர் சீக்கிய குருத்வாரா தலைவர் சீக்கிய குருத்வாரா தலைவர் ஆகியோரும் கலந்துகொண்டு பாராட்டுரை நிகழ்த்திய இந்நிகழ்ச்சியை, கோவையைச் சார்ந்த சமய அமைப்புகள், இலக்கிய அமைப்புகள், சமுதாய அமைப்புகள், ஆன்மீக அமைப்புகள், சன்மார்க்க சங்கம் ஆக 21 அமைப்புகள் விழாக்குழுவாக அமைத்து நடத்தின.

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் நடத்திய ஆய்வு மாநாடு

1.சிவப்பிரகாசர் இலக்கிய ஆய்வு மாநாடு – 2002

2. பெருங்கதை ஆய்வு மாநாடு – 2003

பேரூராதீனத்தில் அடிகளார் நடத்திய இவ்விரு ஆய்வு மாநாடகளும் சிறப்பானவை.

பேரூர் ஆதீனமும் தமிழ்ப்பல்கலைக்கழக ஓலைச்சுவடித் துறையும் சிதம்பரம் மெய்யப்பன் தமிழாய்வகமும் களம்பூர் கோவிந்தசாமி அடிகளார் அறக்கட்டளையும் இணைந்து நடத்திய, அனைத்திந்திய அளவிலான

சிவப்பிரகாசர் இலக்கிய ஆய்வுமாநாடு, பேரூராதீனத்தில் 12; 13; 14.07.2002 மூன்று நாட்கள் நடைபெற்றது. பேராளர்களும் பார்வையாளருமான மூந்நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்துகொண்டனர். எட்டு அமர்வுகளில் தொண்ணூற்றாறு கட்டுரையாளர்கள் கட்டுரை வாசித்தனர். 126 கட்டுரைகளைக் கொண்ட சிவப்பிரகாசசர் ஆய்வு மாலை நூலாக வெளியிடப் பெற்றது. த.கோ.பரமசிவம், கோ.ப.நல்லசிவம், ம.மனோன்மணி ஆகிய மூவரும் பதிப்பாளர்கள். இவ்வாய்ப்பு மாநாடு பேரூராதீனத்தின் செலவிலேயே நடந்தது. ஆய்வுமாலை பெரிதும் பயனுள்ள வெளியீடு.

பேரூராதீனமும் அதன் தமிழ்க்கல்லூரியும் பாரதியார் பல்கலைக்கழத் தமிழ்த்துறையையும் மகாலிங்கம் மாரியம்மாள் அறக்கட்டளையும் இணைந்து அனைத்திந்திய அளவிலான பெருங்கதை ஆய்வுமாநாட்டை 2003 ஜனவரி 11,12 இரண்டு நாள் மாநாடாக நடத்தின. பொள்ளாச்சியில் டாக்டர் மகாலிங்கம் பொறியியல் கல்லூரி வளாகத்தில் இம்மாநாடு நிகழ்ந்தது. ஆய்வாளர்களின் கட்டுரைகள் தொகுக்கப்பெற்றுப் பெருங்கதை ஆய்வுமாலை இரண்டு தொகுதிகள் வெளியாயின.

பத்துப்பாட்டு எட்டுத்தொகை ஆகிய சங்க இலக்கியங்களுக்குப் பின்பு தோன்றியவை பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும் ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுகாப்பியங்கள் முதலிய காப்பியங்களுமாம். ஐம்பெருங்காப்பியம் ஐஞ்சிறு காப்பியம், பெருங்கதை, கொங்குவேளரிர் என்ற கொங்குநாட்டுப் பெரும் புலவரால் இயற்றப் பெற்றது. இவரது ஊர் விஜயமங்கலம், சேலம் கோயம்பத்தூர் நெடுஞ்சாலையில் ஈரோட்டுக்கும் கோயம்புத்தூருக்கும் இடையில் உள்ளது. சாலையின் மீதே சாலையின் இருபுறமும் அமைந்துள்ள இவ்வூரில் சந்திப் பிரபதீர்த்தங்கரின் சமணக்கோயில் உள்ளது. விஜயமங்கலம் சமணத்தலம், பெருங்கதை சமணக்காப்பியம், முந்நாளில் கொங்குநாட்டில் சமணம் பரவலாக விளங்கியது. பெருங்கதை கொங்குநாட்டிற்கு அணி செய்யும் ஒரு சிறந்த, இனிய, காப்பியம். டாக்டர் உ.வே.சாமிநாதயரவர்களின் சிறந்த பதிப்பு இதற்கு உண்டு. கொங்கு நாட்டுக்குப் பெருமைதரும் பெருங்கதைக்கு ஓர் ஆய்வு மாநாட்டை

நடத்திய, ஆய்வு மாலையை வெளியிட்ட, பேரூராதீனத்தின், பேரூரடிகளாரின் பெரும்பணி பெருமைக்குரியது, பாராட்டத்தக்கது. அருட்செல்வர் மகாலிங்கம் அவர்களுக்குப் பெருங்கதை விடயத்தில் ஒரு தனிப்பற்று உண்டு. ஆதலின் அவரும் இணைந்து இம்மாநாட்டைச் செய்தார்.

பேரூராதீனம் நடத்தும் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க் கல்லூரிக்கு 2003ஆம் ஆண்டு பொன்விழா ஆண்டாதலின், பொன்விழா ஆண்டின் நிறைவு விழா 14.02.2003 முதல் 17.02.2003 முடிய நான்கு நாள் பெருவிழாவாக, உரையரங்கம் ஆய்வரங்கம் கருத்தரங்கம் கவியரங்கம் சிந்தனையரங்கம் ஆகிய பல்வேறு அங்கங்களுடன் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் தலைமையில் கருவூர் சுவாமி ஆத்மானந்தர் முதலிய துறவியர் பெருமக்கள் சான்றோர்கள் அறிஞர்கள் பெருந்தகையாளர்கள் பலர் கலந்து கொள்ளும் பெருவிழாவாக மிகச் சிறப்பாக நடத்தப் பெற்றது.

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் முத்துவிழா

அடிகளாரின் 80–ஆம் அகவை நிறைவு விழா, 2004இல் 80 ஆம் அகவைத் தொடக்கத்திலும் 2005இல் 80ஆம் அகவை நிறைவிலும், முத்துவிழா – தொடக்கவிழா நிறைவு விழா என்று சிறப்புற நிகழ்ந்தது.

2004 அக்டோபர் 8;9;10 மூன்று நாளும் நிகழ்ந்த தொடக்க விழாவில் உள்ளூர் உள்நாட்டு அன்பர்கள் பெருந்திரளாகக் கலந்துகொண்டு சிறப்புற நடத்தினர்.

2005 செப்டம்பர் 29, 30; அக்டோபர் 1 ஆகிய மூன்று நாளும் நிகழ்ந்த 80 நிறைவு விழாவில் கடல்கடந்த நாடுகளிலிருந்தும் அன்பர்கள் பலர் வந்து கலந்து கொண்டு சிறப்பித்தனர். இலண்டன், மலேசியா, தென்னாப்பிரிக்கா நாடுகளிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்திருந்த சைவமெய்யன்பர்களான பெருந்தகையாளர்கள் பலர், பேரூருக்கும் வந்து அடிகளார் முத்துவிழாவில் மகிழ்வுரையாற்றி போற்றினர்.

இலங்கையிலிருந்து, இந்து சமயக் கலாச்சார அமைச்சரின் மதியுரைஞர் செல்வி மகேஸ்வரி வேலாயுதம் அவர்கள் இதற்கென்றே வந்து கலந்துகொண்டு சிறப்பித்தார். இதற்குச் சில திங்களுக்குமுன் இலங்கையில் நிகழ்ந்த உலக சேக்கிழார் ஐந்தாம் மாநாட்டுக்கு யாமும் தொண்டைமண்டல ஆதீனமும் பேரூரடிகளாரும் சென்றிருந்தபோது அடிகளார் விடுத்த அன்பு அழைப்பை ஏற்றுப் பெருந்தகை மகேஸ்வரி வேலாயுதம் அவர்கள் அடிகளாரின் முத்துவிழாவுக்கென்றே வந்திருந்து சிறப்பித்தமை ஒரு தனிச்சிறப்பாகும்.

சமயப்பணி, இலக்கியப்பணி, கல்விப்பணி, சமுதாயப்பணி என்ற நால்வகையிலும் முத்துவிழாத் திட்டங்கள் எனச் சிறந்த திட்டங்கள், தவநெறிச்சாலை, துறவியர் பயிற்சி மையம், திருமுறைப் பாடசாலை, அருள்நெறிப் பயிற்சிமையம், கூட்டு வழிபாட்டு மையம், மகளிர் சுயஉதவிக்குழு அமைத்தல், மகளிர் தொழிற்பள்ளி, ஒடுக்கப்பட்டோர் முன்னேற்றம் முதலிய திட்டங்கள் தீட்டப்பெற்றன. முத்துவிழாத் திட்டங்கள் முழுமையாக நிறைவேறின் அதுவே அடிகளாரின் பிறவிப் பெரும்பயனாக இருக்கும்.

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் டாக்டர் பட்டம்:

அடிகளார் தமிழ்ப்புலவர், மயிலம் தமிழ்க்கல்லூரியில் படித்துச் சென்னைப் பல்கலைக் கழகத்தின் வித்துவான் பட்டம் பெற்றவர்.

சைவ அறிஞர், வீரசைவ மடாதிபதி மடத்தில் தமிழ்க்கல்லூரி தோற்றுவித்து நடத்தி வருபவர். தாமே பேராசிரியராகவும் முதல்வராகவும் இருந்து பாடம் நடத்தியவர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் பேரவை (செனட்), ஆட்சிக்குழு (சிண்டிகேட்), கல்விக்குழு (அகாடமிக் கவுன்சில்) பாடத்திட்டக்குழு, ஆட்சிக்குழுவின் பல்வேறு குழுக்கள் ஆகியவற்றில் உறப்பினராக விளங்கி உருப்படியான பணிகள் பலவற்றைச் செய்தவர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் பட்டம் புலவர் பட்டமாக மாற்றப் பெறுவதற்கு வித்திட்டவர், வேண்டிய பணிகளைச் செய்தவர். புலவர் கல்லூரிகளைப் பி.லிட். பட்டப் படிப்புக் கல்லூரிகளாக மாற்றப் பெறுவதற்கு வேண்டியவற்றைச் செய்தவர். பி.லிட். கல்லூரிகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை ஆராய்வதற்காக ஏற்படுத்தப்பெற்ற குழுவின் உறுப்பினர். இக்குழுவிற்குத் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி

அடிகள் குழு என்றே (Thavathiru Ramaswami adikal committe) பெயர். அடிகளாரின் பல்கலைக்கழகப் பணிகளைப் பற்றி, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைத் துணைவேந்தர் டாக்டர்.சி.பாலசுப்பிரமணியன் அவர்களே பாராட்டி எழுதியுள்ளார். சி.பா. சென்னைப் பல்கலையில் தமிழ்த்துறைத் தலைவராகச் சிறப்புடன் விளங்கியவர், அடிகளார் பணியை நேரில் அறிந்தவர். அவரே போற்றிப் புகழ்ந்து எழுதியுள்ளார் எனில் அதற்குமேல் என்ன வேண்டும் எதுவும் வேண்டுவதின்று இத்தகைய பெருந்தகையாளர் அடிகளாருக்கு டாக்டர் பட்டம் அளிக்கப் பெறுதல்வியப்போ? தமிழ்நாட்டின் முதல் பல்கலைக்கழகம் மூத்த பல்கலைக் கழகம் சென்னைப் பல்கலைக்கழகம் 150 ஆண்டுகளைக் கடந்த முதுபெரும் பல்கலைக்கழகம். ஏனைய எல்லாப் பல்கலைக்கழகங்களுக்கும் தாய்க்கழகம்.

அத்தகைய பழம்பெருமைமிக்க சென்னைப் பல்கலைக்கழகம் தனது 150 ஆவது ஆண்டு பட்டமளிப்பு விழாவில் அடிகள் பெருமகனாருக்கு முதுமுனைவர் பட்டத்தை வழங்க சிறப்பித்து. பட்டமளிப்பு விழாநாள் 12.11.2007.

அடிகளார் முனைவர் பட்டம் பெற முழுமையும் தகுதியானவர். முதன்முதலில் டாக்டர் பட்டம் பெற்ற சைவ ஆதீனகர்த்தர் குன்றக்குடி அடிகளார். முதன்முதலில் டாக்டர் பட்டம் பெற்ற வீரசைவ மடாதிபதி பேரூடிகளார். டாக்டர்பட்டம் இவர்களுக்குத் தகுதியறிந்து வழங்கப் பெற்ற பட்டம்.

திருச்சிராப்பள்ளித் தமிழ்ச்சங்கம் 09.02.2008 சனிக்கிழமை மாலை திருச்சிராப்பள்ளியில் மன்றத்தில் சிறப்பானதோர் பாராட்டுவிழாவை நடத்திற்று. திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மாண்பமை பொன்னவைக்கோ அவர்கள் பதிவு பாராட்டுரை வழங்கிச் சிறப்பித்தார்.

குன்றக்குடியும் பேரூரும்:

குன்றக்குடி அடிகளாரும் பேரூரடிகளாரும் ஒத்த அகவையினர் (சமவயதினர்). குன்றக்குடி அடிகளார் பிறந்தது 1925–இல் பேரூரடிகளார் பிறந்தது 1926–இல் குன்றக்குடி அடிகளார் இளவரசுப் பட்டத்திற்கு வந்தது

1949 இல் பேரூரடிகளார் இளவரன் பட்டத்திற்கு வந்தது 1950இல். குன்றக்குடி அடிகளார் மடாதிபதியாகப் பட்டத்திற்கு வந்தது 1952ல் பேரூரடிகள் பட்டத்திற்கு வந்தது 1967இல் குன்றக்குடி அடிகளார் இளவரசுப் பட்டத்திலிருந்து காலம் மூன்றே ஆண்டுகள், பேரூரடிகள் இளவரசுப் பட்டம் வகித்த காலம் பதினேழு ஆண்டுகள். குன்றக்குடி அடிகளார் இளவரசுப் பட்டத்தற்கு வந்தபோது ஆட்சிப் பொறுப்பில் பங்கில் பேரூரடிகளார் இளவரசுப் பட்டத்திற்கு வந்தபோதே மடத்தின் நிர்வாகப் பொறுப்பு முழுமையாக இவர் கைக்கு வந்துவிட்டது. மடாதிபதி ஆறுமுக அடிகளார் பெயரளவுக்கே மடாதிபதியாக இருந்தார். முழுபொறுப்பையும் இளைய பட்டமான இவரிடமே விட்டுவிட்டார். குன்றக்குடி அடிகளார் பேரூரடிகளார் நட்பு அருள் நெறித்திருக்கூட்ட காலத்திலேயே தொடங்கிவிட்டது. அப்போது குன்றக்குடி அடிகளார் ஆதீன மடாதிபதி, பேரூரடிகளார் பேரூர் இளைய பட்டம். தெய்வீகப் பேரவை தொடக்கத்தில் (1966) இருவர் நட்பும் இறுகுகிறது.அடுத்தமூன்றாண்டுகளில் (1969இல்) குன்றக்குடி அடிகளார் தெய்வீகப்பேரவையின் தலைவராக வந்துவிட்டார். அப்போது பேரூரடிகளாரும் பெரிய பட்டத்திற்கு வந்துவிட்டிருந்தார். இருவரும் துறவுச் சகோதரர்களாக, மடாதிபதிச் சகோதரர்களாக இணைந்தார்கள். இருவருக்குமே சைவமும் தமிழும் இருகண்காக இருந்தன.

“சைவமும் தமிழும் தழைத்தினிதோங்குக” என்றொரு பழமொழி சைவ உலகில் தொன்றுதொட்டே வழங்குகிறது. எனினும் சைவ மடங்களில் சமஸ்கிருதத்திற்கும் தமிழுக்கும் சமஸ்தானமே இருந்து வந்தது. (சமஸ்தானம் –சமஇடம்) பேச்சு அளவில் தமிழுக்கு முதலிடம் இருந்தது. செயல் (கிரியை –காரியம்–சடங்குகள்–சம்பிரதாயங்கள்) அளவில் சமஸ்கிருதத்துக்கே முதலிடம் இருந்தது. அன்னிய மொழியாகிய ஆங்கிலம் ஆட்சிமொழி ஆகையால் அன்றும் இன்றும் பெரிதாக மதிக்கப்படுவதுபோல, அன்று ஆரியமே பெரிதாக மதிக்கப்பட்டது. அர்ச்சனாதி வழிபாடுகளெல்லாம் சமஸ்கிருத்திலேயே நடந்தன. குன்றக்குடி அடிகளார் தமிழ் அருச்சனை விடயத்தை எழுப்பினார் (கிளப்பினார்) ஆதரவும் எதிர்ப்பும் இருந்தன. ஆதரவு அமைதியுடன் இருந்தது. எதிர்ப்பு ஆரவாரத்துடன் வெளிப்பட்டது. பெரியவர்

(முதலமைச்சர்) பக்தவத்சலத்தையே திருப்திப்படுத்தி, அவரும் முழுமையாகத் திருப்தியுற்றுத் தமிழருச்சனை அரங்கேறியது.

இத்தகைய சீர்திருத்தங்களிலெல்லாம் குன்றக்குடி அடிகளாருக்குப் பேரூரடிகளார் பக்கபலமாக இருந்தார். இருவருமே தமிழ்வழிபாட்டுப் போராளிகள், அன்று குன்றக்குடி அடிகளார் தமிழருச்சனைப் போராளி என்றால் இன்று பேரூரடிகளார் தமிழ்க்கும்பாபிஷேகப் போராளியாக எழுந்திருக்கிறார்.

கருவிலே திருவுடைய பேரூரடிகளார் இயல்பாகத் தாமே பெருநிலைக்கு வரக்கூடியவர் எனினும், அவரது இன்றைய பெருநிலைக்கு ஆதிகாரணராக அன்று குன்றக்குடி அடிகளார் விளங்கினார். பேரூரடிகளாரும் கௌமார மடம் சுந்தர சுவாமிகளும் அன்று குன்றக்குடி அடிகளாரால் வளர்த்து விடப்பட்டனர். இவர்களின் வளர்ச்சிக்குக் குன்றக்குடி அடிகளாரின் தோழமையும் முன்னிலைப்படுத்தலும் சிலபல வகைகளில் காரணங்களாக அமைந்தன.

பேரூரடிகளாருக்கு அவருடைய இடத்தில் இருந்த சில வாய்ப்புகள் குன்றக்குடி அடிகளாருக்கு அவருடைய இடத்தில் இருப்பதற்கல்லை. ஆர்.கே.சன்முகம் செட்டியார், சி.எம்.இராமச்சந்திரஞ்செட்டியார், வெ.சி.சுப்பையகவுண்டர், நீதிபதி செங்கோட்டுவேலன், அருட்செல்வர் நா.மகாலிங்கம் போன்ற மிகப்பெரிய மனிதர்களின் (திவான்பகதூர் ராவ்பகதூர்களின்) நட்பு கூட்டுறவு போன்றவை குன்றக்குடி அடிகளாருக்கு அமையவில்லை. காரைக்குடி சா.கணேசன், ஈரோடு மீனாட்சி சுந்தர முதலியார் போன்ற மெய்யன்பர்களும் பெரியார் தொடர்புக்குப்பின் (குன்றக்குடி) அடிகளாரிடமிருந்து விலகிச் சென்றுவிட்டனர். குன்றக்குடி அடிகளாருக்கு இரண்டு பக்கமும் இடி. பேரூரடிகளாருக்கு எந்தப்பக்கமும் இடி இல்லை. இப்போதுதான் ஒருபக்கம் சிறிது இடி தோன்றியிருக்கிறது. குன்றக்குடி அடிகளாருக்குப்பின், பொன்னம்பல அடிகளாரின் நட்பு, பரம்பரை நட்பாகக் கருத்தொருமித்த நட்பாக நீடிக்கிறது. நாட்டை ஆளும் அரசின் ஆதரவும் இருக்கிறது. குன்றக்குடி பேரூர் அடிகளார்கள் அரசறிய, அரசு மதித்து போற்ற, ஆதவளிக்க தங்கள் தமிழ்ச்சமயப் பணியைத் தொடர்கிறார்கள்.

அடிகளார் நடத்திய வளர் தமிழ் மாநாட்டில் முன்னாள் குடியரசு தலைவர் அ.பெ.ஜெ.அப்துல்கலாம் ஆற்றிய சிறப்புரை

அன்பு நண்பர்களே, இன்றைக்கு தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியில் தமிழ்க் கல்லூரி மணிவிழாவை முன்னிட்டு வளர்தமிழ் ,யக்கம் நடத்தும், தமிழ்ப் பயிற்றுமொழி – வழிபாட்டு மொழி மாநில மாநாட்டை தொடங்கி வைப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இக்கல்வி நிறுவனம் ஒரு சமய நிறுவனத்தோடு இணைந்துள்ளது மகிழ்ச்சியைத் தருகிறது. சீர்வளர்சீர் இராமசாமி அடிகள் அவர்களது தலைமையில் நடைபெறும் இக்கல்லூரி தமிழுக்காக நடந்து வருவது பெருமைக்குரியது. தவத்திரு அடிகளார் அவர்கள் இதுவரை ஐயாயிரம் தமிழ்ப் புலவர்களை உருவாக்கி நமது தமிழ் உலகிற்கு வழங்கியுள்ளார். அவர்களின் அரும்பணியை அகமகிழ்ந்து வணங்குகிறேன். இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் பங்கு பெறும் தமிழார்வலர்களும், சமய, மொழி, இலக்கிய அமைப்பினர்களுக்கும், தமிழ் அறிவியலார்களுக்கும், சிறப்பு அழைப்பாளர்களுக்கும் மற்றும் கல்லூரி மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள். இரண்டு நாட்கள் நடக்கும் இவ்விழாவில், தமிழ்வழிக் கல்வியும் வேலைவாய்ப்பும், கல்வி நிறுவனங்களில் தமிழ் – சிக்கல்களும் தீர்வுகளும், ஆட்சித்துறையில் தமிழ், ஊடகங்களில் தமிழ், நீதித்துறையில் தமிழ், வாழ்வியல் வழிபாட்டு நிகழ்வுகளில் தமிழ் என்று பல்வேறு அமர்வுகளில் கலந்து கொண்டு தமிழாய்ந்த கருத்துக்களை அறிவார்ந்த முறையில் பகிர வருகை தரும் தமிழ் அறிஞர் பெருமக்களை நான் வாழ்துதுகிறேன். உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்கள். இன்றைக்கு உங்களுடன் “தாய் மொழி அறிவை வளர்க்கும், நாட்டை வளப்படுத்தும்” என்ற தலைப்பில் உரையாட விரும்புகிறேன்.

தாய்மொழிக் கல்வி:

நான் எனது ஆரம்ப கல்வியை தமிழ் வழிக்கல்வி மூலம் நான் பயின்றேன். என் ஆரம்ப கல்வியை தமிழ் மொழியில் படித்ததினால், எனக்கு கணிதத்தை கண்போல் படிக்கவும், அறிவியலை ஆழ்ந்து விளங்கி படிக்கவும் மிகவும் உதவியாக இருந்தது. வரலாற்றை வாழ்ந்து அனுபவித்து படிப்பது போல் படிக்க தமிழ் உதவியாக இருந்தது. புவியியலைப் புரிந்து படிக்க உதவியது. என் தாய் மொழி தமிழில் நான் படித்ததினால் தான்

என்னால் மேற்படிப்பு ஆங்கிலத்தில் இருந்தாலும், இணைப்பு மொழியைக் கற்று அடிப்படை அறிவியல் தத்துவத்தைத பற்றி உணர்ந்து கொள்ள மிகவும் உதவியது. பிற்காலத்தில் ஆராய்ச்சி திறனை மேம்படுத்த என் ஆரம்ப தமிழ் கல்விதான் அடிப்படையாக இருந்தது என்று சொன்னால் மிகையாகாது. When I was a young boy, தமிழ் ஊடகமான தினமணி நாளிதழை தினமும் Madras மெயிலில் எடுதுது விநியோகம் செய்தேன். ஊடகத்தில் தமிழ் என்னை நாட்டைப் பற்றி அறிந்து கொள்ள உதவியது. உங்களுடன் நான் எழுதிய கவிதையை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

என் தாய்மொழி தமிழ்

என் தாய்மொழி தமிழ் உலக பொது மறையை உலகிற்கு தந்தது.
ஆட்சிக்கும், நீதிக்கும், மக்கள் வாழ்க்கைக்கும் வழி சொன்னது.
தாய் மொழி தமிழ் ஆழ்ந்த கல்விக்கு அடித்தளமிட்டது.
ஊடகத் தமிழ் அறிவை விரிவடையச் செய்தது.
ஆட்சியில் தமிழ் மொழி அரசுக்கும் மக்களுக்கும் இணைப்புப் பாலமானது.
தாய்தமிழ் தரமான வளர்ச்சிப் பாதையில்தொழில் வளர உதவும்.
தாய்மொழி நீதி நிர்வாகம் சீர்பெற்று விரைவான நீதிக்கு வழிவகுக்கும்
வழிபாட்டு தலத்தில் தாய்மொழி மக்களுக்கும் இறைவனுக்கும் உள்ள
இடைவெளியைக் குறைத்து மனதில் அமைதி பிறக்க வைக்கும்

எனவே, தாய் மொழி அறிவு மக்களுக்கும், பள்ளிகளுக்கும், அரசிற்கும், நீதி நிர்வாகத்திற்கும் ஒரு அடிப்படையாகும். எனது கிராமப்புற தாய்மொழிக்கல்வியின் அனுபவத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

அருள் நிறைந்த அடிகளார் துறவு பூண்டு தவவாழ்வில் உயர்வு கொண்டு ஐயா சாந்தலிங்க இராமசாமி அடிகள் தமிழ் மொழி மீது பற்றுக் கொண்டு தமிழ்மொழி வளர்ச்சிக்கு தன்னை அற்பணித்துக் கொண்டு தொடர்ந்து பணி செய்து வரும் அடிகள் வளரும் தமிழ் இயக்கத்தின் மாநாட்டை சாந்தலிங்கர் தமிழ் கல்லூரியில் சிறப்புடன் நடத்தி தமிழ் வளர்ச்சிக்கு பணியாற்றி வரும் அடிகளின் அழைப்பின் பேரில் நான் இந்த மாநாட்டிற்கு வந்து உள்ளேன். தாய்மொழி, தமிழ்மொழி வளர்ந்திட வாழ்த்துகிறேன் என்று கூறி தமிழ் மொழி குறித்து சிறப்புயாற்றினார்.

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் தொண்ணூறாவது அகவை மரகத விழா

மெய்கண்டார் வழிவழி சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளரின் மணிவிழா 1986 ஆம் ஆண்டு பேரூர் ஆதீனத்தில் வெகு விமர்சியாக கொண்டாடப்பட்டது போல் முத்து விழா 2004, 2005ஆம் ஆண்டு நடைபெற்றது. 90ஆம் ஆண்டு நான் மாங்களம் மரகத விழா திருவள்ளுவர் ஆண்டு 2046ல் புரட்டாசி திங்கள் 8.10.2015ல் தொடங்கி 10,10,2015 முடிய மூன்று நாட்கள் பேரூர் ஆதீனத்தில் மிகச்சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.

இவ்விழா நிகழ்ச்சி தொகுப்பு வருமாறு.

திரைகாட்டிய கேள்விக்கு விடை நாமே தருதல் வேண்டும்.

வெளியே வந்ததும் பதற்றத்துடன் எதிர்வருகின்றார் புவியரசு அடிகளாரின் ஆதி மாணவர், நிறைவுநாளில் தனது வருகைப்பதிவினை அடிகளரிடம் அளித்த அன்பு மாணவர், கைபிடித்து அவரின் ஆதியான அடிகள் குறித்துக் கூறியபோது ஆதிமாணவர் இறுதி நாளில் உகுத்த முதல் கண்ணீரே அனைத்தும் உரைத்தது.

முன்றிலில் அடிகள் வைத்த முல்லை பூத்தது. முல்லைப் பூத்தியோ பேரூர் நாட்டில் என்று கையறுநிலைக்கு வழிகாட்டி நகை தந்தது. அடிகளின் திருவடிகளை வணங்க மலர்ந்த முதல் பூ. அடிகள் திருவடிப்பேறில் கலந்ததைக் காற்று அறிவித்தது. மாலையில் மழை பொலிந்தது.

அடிகள் வானுறையும் தெய்வமாய்....

அருட்சமாதியில் குறைநீக்கிக் காக்கும் கடவுளாய்.....

திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழி வழி பேரூராதீனம் சீர்வளர்சீர் கயிலைக்குருமணி அவர்களின் தொண்ணூறாவது அகவை நிறைவு மரகத விழா அழைப்பிதழ்

தருமகந் தோறும்நாண் மங்கலம் குருபூசை தவறாதுஇயற்றி விழைவாய்
சத்வித்ய சன்மார்க்க நெறிகொண்ட பலவிழாச் சால்புறச் செய்து கனிவாய்
அருமைமிகு சைவசித் தாந்தமா நாடுநனி யமைவுறச் செய்து வந்தாய்
அன்புடன் தென்றமிழின் அற்புத விழாக்கள்நல லார்வமொ டியற்றி மகிழ்வாய்
பெருமைமிகு மணிபொன் விழாநல்ல முத்துடன் பெறுபவள மேலுமிசை வாய்
பேணுபல் லாலயப் பெருவிழா செய்யும்நின் பெற்றிமைசொலற்கெளி யாதோ
திருமிகும் பேரூரின் ஆதீன அதிபனே சிறுதேர் உருட்டி யருளே
சிந்தைமகிழ் செந்தமிழ் நலந்தழைய வந்தகுரு சிறுதேர் உருட்டி யருளே

பேரன்புடையீர்,

அருள்மிகு சாந்தலிங்கப் பெருமான் இன்னருள் பெருக. இடையறாப் பேரன்பும் மழைவாரும் இணைவிழியும் உழவாரத்தின் மடையாத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சும் நடையறாப் பெருந்துறவும் சிவவேடப் பொலிவழகோடு ஏழாம் நூற்றாண்டில் திருஅவதாரம் செய்து 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' எனச் சமயப்பணியும் சமுதாயப்பணியும் ஆற்றிய திருநாவுக்கரசர் பெருமானின் மறு அவதாரமென இந்த நூற்றாண்டில் தோன்றி நாம் நடந்துசெல்ல நல்வழிகாட்டும் திருக்கயிலாயமரபு மெய்கண்டார் வழிவரி பேரூராதீனம் குருமகாசந்ததிதானம் கயிலைக் குருமணி முதுமுனையவர் சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களின் 90ஆம் அகவை நிறைவு விழா நிகழும் திருவள்ளுவராண்டு 2046 புரட்டாசித் திங்கள் 22 ஆம் நாள் 09.10.2015 வெள்ளிக்கிழமை மகம்நாளில் நடைபெறவுள்ளது.

அதையொட்டி திருவள்ளுவராண்டு 2046 புரட்டாசிதிங்கள் 21ஆம் நாள் (08.10.2015) வியாழக்கிழமை திருவாசமுற்றோதல் விழா, தமிழ்வளர்ச்சி மையத்தொடக்கவிழா, வீரசைவச்செந்நெறிக் கருத்தரங்கு, புரட்டாசித்திங்க் 21ஆம் நாள் (09.10.2015) வெள்ளிக்கிழமை 90 அகவை நிறைவு நாண்மங்கலவழிபாடு, அடிகள் பெருமகனார் அருளிய நூல்கள் வெளியீடு, புரட்டாசித்திங்கள் 11ஆம் நாள் (10,10,2015) சனிக்கிழமை 'தமிழைத்துறக்காத தனிப்பெருந்துறவி' கவியரங்கம், மருத்துவமையத் தொடக்கவிழா ஆதியவை நிகழ்ச்சி நிரலில் காணப்பெற்றவாறு நிகர்வுறும். இவ்விழாக்களில் வணக்கத்திற்குரிய ஆதீனத்தலைவர்கள், டாதிபதிகள், மேதகு ஆளுநர் பெருமக்கள், அன்றோர்கள், சான்றோர்கள்

கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். பெறற்கரிய பேறாக இவ்விழாவில் கலந்துகொண்டு கண்ணினால் நல்விழாப்பொலிவும்; செவியினால் திருமுறைப்பணிசைப் பெலிவும் கண்டு கேட்டு உண்டு இன்புற தாங்கள் தவறாது கலந்துகொள்ளக் கேட்டுக்கொள்கிறோம்.

திருவாசக முற்றோதல்

நாள்	:	08–10–2015 வியாழக்கிழமை
நேரம்	:	காலை 8 மணி முதல்
இடம்	:	திருமுறை மண்டபம்

திருவிளக்கேற்றுதல் :

கௌமாரச்செல்வி ஆ.மரகதம் அவர்கள், பேரூராதீனம்.
புலவர் பொன்மணிதேவி அவர்கள்
புலவர் பங்கசம் கோவிந்தராசன் அவர்கள்
புலவர் நெய்வாந்தாள் சுப்பிரமணியம் அவர்கள்
புலவர் பாப்பாபி பிரகாசம் அவர்கள்
புலவர் பாப்பாயி ரங்கநாதன் அவர்கள்
புலவர் கஸ்தூரி அவர்கள்
புலவர் தீலகவதி சண்முகசுந்தரம் அவர்கள்
புலவர் காலவதி கந்தசாமி அவர்கள்
புலவர் ந.அங்கயற்கண்ணி அவர்கள்

இறைவணக்கம் : சிவமிகு. சிவ.பசோதா அவர்கள், திருவாசகப் புனிதர் பேரவை, குருந்தம்.

முதற்றோதல் நிகழ்த்துவோர் : பஞ்சவண்ணசாமி வழிபாட்டு மன்றம், அருள்மிகு ஐவண்ணநாதர் திருக்கோயில், உறையூர். அருட்கலைக்கழகம், பேரூர், திருநெறிய தமிழ் மன்றம், கோவை, திருவாசகர் புனிதர் பேரவை, வடவள்ளி, திருஅண்ணாமலையார் வழிபாட்டுக் குழு, புஞ்சைபுளியம்பட்டி, பேரூராதீனத் தமிழ்க்கல்லூரி மேனான் மாணவர்கள் குழு.

திருவாசக முற்றோதல் நிறைவு, பேரொளி வழிபாடு.

சாந்தலிங்கர் விருந்தினர் இல்லத் திறப்பு

நேரம் : பிற்பகல் 2.00 மணி

தலைமை : மாண்புமிகு யோ.சுவாமிநாதன் அவர்கள் மத்திய அமைச்சர், இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை, மொரீசியசு

முன்னிலை : சிவமிகு. பழ.செந்தில்ராசு அவர்கள், கத்தார்.

திறப்பாளர்கள்:

தவத்திரு.இராமலிங்க அடிகளார் அறை :

சிவமிகு. சுந்தரம் அவர்கள், சுந்தரர் சிவயோக ஆசிரமம், மலேசியா

தவத்திரு. மாணிக்க அடிகளார் அறை :

சிவமிகு. கே.வி.கணேசமூர்த்தி அவர்கள், செயலர், திருக்கோயில்கள் ஒன்றியம் இலண்டன்.

தவத்திரு ஆறுமுக அடிகளார் அறை : சிவமிகு கந்த.சிவக்குமார் அவர்கள், அமெரிக்கா

வீரசைவக் கருத்தரங்கம்

நேரம் : பிற்பகல் 2.30 மணி இடம் : முத்தமிழரங்கம்

திருவிளக்கேற்றுதல் :

சிவமிகு கங்காவதி போசராசன் அவர்கள்
சிவமிகு பானுமதி சிவப்பா அவர்கள்
சிவமிகு சைலசா விவேகானந்தன் அவர்கள்
சிவமிகு நிர்மலா சுப்பிரமணியம் அவர்கள்
சிவமிகு கலைவாணி சக்திவேல் அவர்கள்
சிவமிகு பானுமதி மோகனராசு அவர்கள்
சிவமிகு மனோரஞ்சிதம் சண்முகம் அவர்கள்
சிவமிகு மங்கம்மாள் அவர்கள்
சிவமிகு செல்லம்மாள் சாந்தலிங்கம் அவர்கள்
சிவமிகு சண்முகப்பிரிய சரவணக்குமார் அவர்கள்

இறைவணக்கம் : சிவமிகு. து.சுரேசுபாபு அவர்கள் சண்டி கேசுவர நாயணனார் நற்பணி மன்றம்

வரவேற்புரை : தவத்திரு. மருதாசல அடிகளார் அவர்கள் இளையபட்டம், பேரூராதீனம்

கருத்தரங்கை தொடங்கி வைத்து ஆசியுரை : சீர்வளர்சீர் சகத்குரு சிவராத்திரி நேசிகேந்திரா மகாசுவாமிகள் அவர்கள், கத்தூர் திருமடம், மைசூரு.

தலைமையுரை : சீர்வளர்சீர் சிவஞானபாலய சுவாமிகள் அவர்கள், இருபதாம் பட்டம், மயிலம் பெரம்மபுர ஆதீனம்

வணக்கவுரை : மாண்புமிகு. பொன்.இராதாகிருஷ்ணன் அவர்கள், மத்திய கப்பல் மற்றும் சாலைப் போக்குவரத்துத்துறை இணை அமைச்சர்

நூல்கள் வெளியீடு

திருநெறிய தெய்வத்தமிழ்ப் பாமாலை

நூல் வெளியிடுதல் : சீர்வளர்சீர் மௌன சுந்தரமூர்த்தி அடிகளார் அவர்கள், தில்லையாதீனம், சிதம்பரம்.

நூல் பெறுதல் : தவத்திரு சிவலிங்கேசுவர அடிகளார் அவர்கள், காமாட்சிபுரி ஆதீனம் கோவை

தவத்திரு இராசு அடிகளார் அவர்கள், சிவனானந்த தவக்கடில், கோவை.

சிவமிகு கே.பி.சுப்பிரமணியம் அவர்கள் கோத்தகிரி.

சிவமிகு சி.பி.சிவப்பா அவர்கள் கோவை.

“தொண்டார்தம் பெருமை சொல்லவும் பெரிதே” (வண்ணப் படங்களுடன்)

நூல் வெளியிடுதல் : சீர்வளர்சீர் சிவசண்முக ஆறுமுக மெய்ஞானசிவாச்சாரிய அடிகளார் அவர்கள், 9ஆம் பட்டம் ஞானயார் திருமடம்

நூல் பெறுதல் : தவத்திரு கங்காதர அடிகளார் அவர்கள், பெரியமடம், கும்பகோணம், சிவமிகு வீரமணி அவர்கள், மதுரை
சிவமிகு போசராாசன் அவர்கள், தொழிலதிபர், கோத்தகிரி.
சிவமிகு எம்.மோகனராசு அவர்கள், கோவை

நூல் புரவல் : சண்டிகேசுவர நாயனார் நற்பணி மன்றம்

“கொலைமறுத்தல் – உரைச்சாரம் ஆங்கில மொழிபெயர்ப்பு”

நூல் வெளியிடுதல்	:	தவத்திரு சிவானந்த சுவாமிகள் அவர்கள், அன்னதானேசுவர திருமடம் மைசூரு
நூல் பெறுதல்	:	தவத்திரு சித்தராம சைதன்யா சுவாமிகள் அவர்கள், ஆதிசங்கரர் திருமடம், தும்கூர் தவத்திரு சிவக்குமாரசுவாமிகள் அவர்கள் பசவேசர் திருமடம் இட்டக்கல். முனைவர் அ.சிவபெருமாள் அவர்கள், சித்தாதேசுவர ஆதீனம், குகையூர் சிவமிகு மோ.இராசேசு சுந்தர் அவர்கள், கோத்தகிரி.
மொழியாக்கம்	:	முனைவர் தேன்மொழி பாலசுப்பிரமணியன் அவர்கள், வடவள்ளி
நூல் புரவலர்	:	சிவமிகு பூமா பத்மநாபன் அவர்கள், தொழிலதிபர், திருப்பூர்.
தொகுப்பு	:	சிவமிகு அருள். சீனிவாசன் அவர்கள்
சிறப்புரை	:	முனைவர். கே.சிவக்குமார் அவர்கள், கொளஞ்சியப்பர் அரசு கலைக்கல்லூரி, திருமுதுகுன்றம்
நன்றியுரை	:	முனைவர் பெ.கு.சாந்தகுமார் அவர்கள்

கலை நிகழ்வுகள்

திருக்கயிலாயமரபு மெய்கண்டார் வழிவழி பேரூராதீனம் கயிலைக்குருமணி சீர்வளர்சீர் குருமகா சந்திதானங்கள் அவர்களின் 90ஆவது அகவை நிறைவு, 91 ஆவது நாண்மங்கலவிழா

திருவள்ளுவராண்டு 2043 புரட்டாசித் திங்கள் 22ஆம் நாள் (09–10–2015) வெள்ளிக்கிழமை

காலை 6.00 மணி	:	ஆடைக்கொடை, சிவபூசை
முன்னிலை	:	சொர்ணா சோமசுந்தரம், நிறுவனர், திருநெறிய தமிழ் மன்றம்
காலை 7.10 மணி	:	வேள்வித்தொடக்கம், வேள்வி நிறைவு, திருமஞ்சனம்
காலை 9.30 மணி	:	சீர்வளர்ச்சீர் குருமகாசந்திதானங்கள்

அவர்களிடம் அன்பர்கள் ஆசிபெறுதல்

காலை 11.30 மணி : பேரொளி வழிபாடு, அன்னம்பாலிப்பு

ஒருங்கிணைப்பு : தவத்திரு மருதாசல அடிகளார் அவர்கள், சிவமிகு ஆடியபாதம் அவர்கள்

நூலாக்கம் : முனைவர்.ம.மனோன்மணி அவர்கள், மேனான் முதல்வர், தமிழ்க்கல்லூரி

நூல் புரவலர் : முனைவர் வே.இராசேசுவரி அவர்கள், தமிழ்த்துறைத்தலைவர்

"சீர்வளர்சீர் பேரூரடிகளார் அவர்களின் மரகத விழாமலர்"

நூல் வெளியிடுதல் : முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள், மேனாள் துணைவேந்தர், தமிழ்ப்பல்கலைக்கழகம்

நூல் பெறுதல் : சிவமிகு சரசுவதி கண்ணையன் அவர்கள், இந்துதான் கல்லூரி, கோவை

சிவமிகு.எ.அழகிரிசாமி அவர்கள், தணிக்கையாளர்கோவை

சிவமிகு. ஈ.எஸ்.கதிர் அவர்கள், தாளாளர், கதிர் கல்லூரி

சிவமிகு.இராமசாமி அவர்கள், விவேகானந்தா கல்வியகம்

கருத்தரங்க நிறைவுரை : சீர்வளர்சீர் தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக பரமாச்சாரிய அடிகளார் அவர்கள், திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி.

நன்றியுரை : பாவலர் பழ.தரும.ஆறுமுகம் அவர்கள்

கலைநிகழ்வுகள்

தமிழைத் துறக்காத தனிப்பெருந்துறவி—கவியரங்கம்

நாள் : 10—10—2015 சனிக்கிழமை நேரம் : முற்பகல் 9.30 மணி

திருவளக்கேற்றல் :

சிவமிகு யசோதா ரத்தினசாமி அவர்கள்
சிவமிகு மரு.சத்யா செந்தில் அவர்கள், கத்தார்
சிவமிகு வாசுகி பரமசிவம் அவர்கள்
சிவமிகு விசயலட்சுமி வேலுசாமி அவர்கள்
சிவமிகு லோகநாயகி சுந்தரமூர்த்தி அவர்கள்
சிவமிகு இராசேசுவரி பழனிச்சாமி அவர்கள்
சிவமிகு பாக்கியலட்சுமி பாலசுப்பிரமணி அவர்கள்

சிவமிகு வேணிதிருவடி அவர்கள்

சிவமிகு. மவுளாதுரைசாமி அவர்கள்

சிவமிகு. மரு.குந்தவிதேவி பெரியசாமி அவர்கள்

இறைவணக்கம் : சிவமிகு. நி.ஞானமூர்த்தி ஒதுவார் அவர்கள்

முன்னிலை : முதுமுனைவர் இரா.இளங்குமரனார் அவர்கள்

சிவமிகு ந.துரைசாமிக்கவுண்டர் அவர்கள், கணபதி

சிவமிகு. சு.செந்தில்நாதன் அவர்கள் திருப்பூர்

சிவமிகு. சி.தினமணி அவர்கள், கோவை மருத்துவ மையம்

வரவேற்புக் கவிதை : கவிஞர் இளங்கிரன் அவர்கள்

தலைமை : கவிஞர் புலமைப்பித்தன் அவர்கள்

கவிபாடும் குயில்கள்

கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணயன் அவர்கள்

கவிஞர் பெ.சிதம்பரநாதன் அவர்கள்

புலவர் சிங்காரவேலன் அவர்கள்

புலவர் பூ.அ.ரவிந்திரன் அவர்கள்

கவிஞர் புவனாசிவானந்தம் அவர்கள்

புலவர் வே.பூ.பழனிசாமி அவர்கள்

புலவர் சுரேந்திரன் அவர்கள்

புலவர் தியாகசீலன் அவர்கள்

கவிஞர். கா.திருநாவுக்கரசு அவர்கள்

கவிஞர். சோ.நடராசு

செல்வன்ச.மோகன்ராசு

செல்வி.ந.பவித்ரா

நன்றிக் கவிதை : புலவர் பட்டணம் பழனிச்சாமி அவர்கள்

நண்பகல் 1 மணி அன்னம்பாலிப்பு

பேரூர் ஆதீனம் சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அறக்கட்டளை, மருத்துவ மையத் தொடக்க விழா

நேரம் : பிற்பகல் 3.30 மணி இடம் : முத்தமிழரங்கம்

திருவிளக்கேற்றுதல் :

சிவமிகு கருணாம்பிகை வாணவராயார் அவர்கள்

சிவமிகு தவமணி பழனிச்சாமி அவர்கள்

சிவமிகு கௌரி மாணிக்கம் அவர்கள்

சிவமிகு விசயலட்சுமி ஆனந்த் பழனிச்சாமி அவர்கள்

சிவமிகு இராசாமணி அருச்சுனராக அவர்கள்

சிவமிகு ஆர்.கே.உமாதேவி அவர்கள்

சிவமிகு செயந்தி அழகிரிசாமி அவர்கள்

சிவமிகு பழனியம்மாள் கந்தசாமி அவர்கள்

சிவமிகு காந்திமதி இரகுபதி அவர்கள்

சிவமிகு மதுரா அருண் அவர்கள்

நாட்டுப்பண்

இணைவணக்கம்	:	சிவமிகு கண்ணப்பன் ஒதுவார் அவர்கள்
வரவேற்புரை	:	திருமிகு எஸ்.வி.பாலசுப்பிரமணியம் அவர்கள், தலைவர், பண்ணாரியம்மன் குழுமம்
அருளுரை	:	கயிலைக்குருமணி சீர்வளர்சீர் பேரூரடிகளார் அவர்கள்
முன்னிலை	:	சீர்வளர்சீர் குமரகுருபர அடிகளார் அவர்கள், சிரவையாதீனம் கௌமார மடாலயம் சிவஞானபோதக் திருநெறிஉரை நூலினை வெளிட்டுத்
தலைமையுரை	:	திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம் இருபத்து நான்காவது குருமகா சந்திதானங்கள்

சீர்வளர்சீர் அன்பலவான தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்

நூலினைப் பெறுதல் :

மருந்துவர். சண்முகநாதன் அவர்கள், தலைவர், கங்கா மருத்துவமனை

திருமிகு.ஓ.ஆறுமுகசாமி அவர்கள், தலைவர், செந்தில் குழுமம்

திருமிகு. பூ.ஆர்.சி.தேவராசு அவர்கள், யூ.ஆர்.சி.குழுமம், ஈரோடு

திருமிதி வனிதா மோகன் அவர்கள், நிர்வாக அறங்காவலர், சிறுதளி அமைப்பு

திருமதி அனுசாரவி அவர்கள், தலைமைச் செயல் அலுவலர், பார்க் கல்வி நிறுவனங்கள்

திருமதி. மரு.பத்மினி கபாலி அவர்கள், சிதம்பரம்

பேரராதீனம் சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அறக்கட்டளை மருத்துவ மையத் திட்டக் கல்வெட்டைத் திறந்து வைத்துச் சிறப்புரை :

மேதகு ஆளுநர்.ப.சதாசிவம் அவர்கள், ஆளுநர், கேரளமாநிலம்

அறக்கட்டளை ஆவணம் அறிமுகம் :

திருமிகு.ம.மாணிக்கம் அவர்கள், தலைவர், சக்தி குழுமம்

மருத்துவமனைத் திட்ட அறிமுகம் :

மருத்துவர். நல்லா.க.பழனிச்சாமி அவர்கள் தலைவர், கோவை மருத்துவ மைய மருத்துவமனை பழங்கோயில்கள் திருமஞ்சன வழிபாட்டுத் திட்ட அறிமுகம் :

திருமதி.ச.மலர்விழி அவர்கள், தலைவர், கிருஷ்ணா கல்விநிறுவனங்கள்

நன்றியுரை : திருமிகு. கி.இராமசாமி அவர்கள், தலைவர், ரூட்சு நிறுவனங்கள், கோவை

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு :

முனைவர்.சொ.சேதுபதி அவர்கள், பாண்டிச்சேரி

நாட்டுப்பண்

குருமகாசந்திதானங்களுக்கு அன்பர்கள் மாலைகள், பொன்னாடைகள் அணிவிப்பதைத் தவிர்க்க அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். சந்நிதானங்களின் திருமுன்பு உதிரி மலர்கள் வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அன்பர்கள் அதைத் திருவடிகளில் இட்டு வணங்கலாம். பொன்னாடை, சால்வைகளுக்குப் பதிலாக துணிவகைகள் அளித்தால் நலிவுற்றவர்களுக்கு வழங்க வாய்ப்பாக அமையும்.

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள் அருள்பணி ஆன்மீகப் பணியோடு தாய் தமிழை வளர்த்திட அடிகள் அல்லும் பகலும் பணியாற்றி வந்துள்ளவர் என்பதற்கு எடுத்துக்காட்டாக சாந்தலிங்கர் தமிழ் கல்லூரியில் தமிழ் வளர்ச்சி பெருவதற்கு வளர் தமிழ் இயக்கம் தொடங்க செயல்பட்டதோடு தமிழ் சான்றோர்கள் அறிஞர் பெருமக்களை கல்லூரிக்கு அழைத்து தமிழ் குறித்த சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்து வந்தார். சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ் கல்லூரி மணிவிழாவை மன்னிட்டு வளர்தமிழ் இயக்கத்தின் சார்பில் இரண்டு நாள் மாநாடு அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளின் இறுதி காலம்

அகிலம் போற்றிடும் அருளாளர் ஆன்மீகம் வளர்த்த சித்தர் இறைவன் இறைவிகளின் திருக்கோயில்களின் திருப்பணிச் செம்மல் இந்து சமயக் கோயில்களின் காவலர் இனிய தாய்த்தமிழின் தந்தை கல்விக்கு கண்திறந்த கர்மவீரர் உழவுத் தொழிலுக்கு ஊக்கம் அழித்தவர் சாதிபேதம் பாராத சற்கரு அனைத்து மக்களுக்கும் அனைத்தும் கிடைத்தும் கிடைத்திட வேண்டும் என்று அனுதினமும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுதல் செய்துவந்த மெய்கண்டார் வழி வழி சீர்வளர்சீர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களின் இறுதிக்காலம் குறித்து சாந்தலிங்கர் கல்லூரி முதல்வர் **க.திருநாவுக்கரசு** அவர்கள் அடிகளாரின் உள்ளத்தை நன்கு அறிந்தவர். அடிகளாரின் எழுத்துகளுக்கு விளக்கம் கொடுத்து எழுதுபவர். அடிகளாரின் இறுதிக்காலம் குறித்து உள்ளம் உருகும் வகையில் கூறும் செய்தி.

வணங்கச் சொல்கிறது மெய்யில்
வருந்தச் சொல்கிறது வாழ்வியல்
என்செய்வேன் இடும்பை கூர் மனமே.
ஆனால் அழுவதை அடிகள் சொல்லித் தரவில்லை
ஏனெனில் அவர் துறந்ததில் அழுகையும் ஒன்று
மரணத்தின் விழும்பிலும் அவர்தம் கண்கள்
தூய பெரும் நெருப்பினைத்தான் சிந்தியது
கண்ணீரை அல்ல. நான் கற்றுக்கொண்டதும் அதுவே.
ஆனால் மிக எளிய மனிதர்கள்
எப்படிப் பின்பற்றுதல் இயலும்.
எம் கண்ணீரின் ஈரம் அந்தச் சூரியக்கண்களின்
வெப்ப வெளிச்சத்தில் காய்ந்து காய்ந்து விடுகிறது.
ஆனால் அழுதேன். அழுவேன். அது என் உரிமையன்றோ,
அவர் என் சோற்றில் இட்ட உப்பு
கண்ணீராய்க் கடமை செய்கிறது.

இடையில் நிகழ்ந்தவை ஏராளம். என் நினைவு அணுக்கள் கனக்கின்றன. எழுதவும், சொல்லவும் எழுத்தும், சொல்லும்

தொடருமின்றித் தவிக்கிறேன். தனித்தும், பொதுவிலும் பேசியபோது எல்லாம் வரலாற்றை அல்லவா வழங்கினார். என் மூளையின் நினைவுப் படுக்கையில் இந்த விதைகள் மட்டும் தானே மிகக் கடுமையாய் இருக்கிறது.

இறக்கி வைத்தால் தானே தாம் அது நூலாக இருக்கட்டும் வேறு எதுவாக இருக்கட்டும் இறப்பதற்குள் எழுதிவிடுவேன். ஏனெனில் அடிகளவர் உழைத்ததும், உரைத்ததும், உருவாக்கியதும், உணர்ந்ததும், உணர்த்தியதும் சில நேரங்களில் வரலாற்றில் பக்கங்கள். பல வேளைகளில் வரலாற்றின் புத்தகங்கள். அவர் அருள் வாழ்வை விளைய வைத்தால் உலகம் நலம் பெறும்.

இம்மலர் அடிகளின் நினைவுக்காக கட்டமைப்பிக்கப் பெறுவது. ஆதலின் அடிகள் மரணத்தைத் திருவடிப்பேற்றினை, முத்திப்பேற்றினை எப்படி ஏற்றுக்கொண்டார். ஏதோ ஒரு தெளிவான, செறிவான முன்தயார் படுத்துதல்களை அன்பர்கள் உணர்ந்தோம்.

இயற்கை எய்துதலை, அதாவது இயல்பு நிறைந்த இறையை எய்துவதை, எளிமையாக இயல்பாக வலிநீக்கி, எய்த வேண்டும். இறுதியாய்த் துறக்க வேண்டிய உயிரினை எப்படித் துறந்தார் அந்த தவராசத்துறவி, திருப்பெருந்துறவி. அது குருவின் உபதேசம் அல்லவா, நிறைமொழி மாந்தராய் அமைந்து கிளந்த மறை மொழி அல்லவா. மந்திரம் தந்த மாண்பு அல்லவா.

மூப்பின் அடையாளம் உடல் உணர்த்திய போது தனிமைத்தவத்தின் தேவை உணர்ந்தார் அடிகள். ஓசை, ஒலி அற்ற மௌனப் பெருவெளியாய் அவர் அமைத்துக் கொண்ட அனந்தாசிரமம் மேற்கு மலைத்தொடர் அடிவாரத்தில் அமைந்த தென்பயிலைநாதர் தவநெறிச்சாலை ஆகும். முத்திநெறி போன்றே நீண்டு கிடக்கும் வழி: அடையக்கூடிய ஒளிநெறியாய் அடிகள் அமர்ந்தருளும் அருளிடம். அங்கே வீசும் காற்று ஊனினைக் குறைக்கும். உள்ளொளி நிறைக்கும், அருளாட்சிச் செங்கோல் பிடித்த அருட்கரங்களால் எளிய மூங்கிற்கோவினைப் பிடித்து வாழ்ந்தது சில காலம். அங்குதான் தவச்சிங்கத்தைப் பல யானைக்கூட்டங்கள் வந்து சந்தித்தது. அடிகள் தந்த தவிடு பிண்ணாக்குகளை உண்டு சென்றதும் உண்டு. ஆனைமுகப் பெருமான் வடிவம் யானை வந்து செல்லுவார்கள். இடர்கள் ஏற்படுத்த மாட்டார்கள் என்றுரைத்த இடம்.

தென்கயிலைத் தவநெறிச்சாலையில் புலவர்காலை 3 மணி ஆகும். திருமுறை ஓதும் ஒலி கேட்டும் அடிகளின் வாழ்வியல் முறைகளில் ஒன்று. 4 மணிக்குக் கண் விழித்ததும் திருமுறை ஓதியுணர்ந்தே கண் மலர்ந்து எழுவார்.

அங்கும் அவ்வாறே நிகழ்ந்தது. சூரியன் ஒளி ஒருப்பட்டு தென்கயிலை நாதர் மீது விழும்போது வெளியே வருவார். வெள்ளியங்கிரி மலை மீது உள்ள பெருமானைக் கண்டு வணங்கவே ஒரு சாளரம் அமைத்திருந்தார். அது திறந்த வேளையில் காலைக் கதிரொளியில் பொன்னார் மேனியனை வேற்றாகி விண்ணாகி எனத் திருநெடுந்தாண்டகம் கொண்டு போற்றுவார். இதனைப் பெரிதும் விரும்பினார். பிரும்பாதவர் விரும்புவது தானே கயிலைக் காட்சி. இது அடிகள் பேணிய தென்கயிலைக் காட்சி.

பொதுவில் நடமாடும் பெருமான் தானே இவர் வணங்கும் தெய்வம். ஆகவே அடிகள் எப்போதும் தனியறையில் அதிகம், இருந்ததில்லை. பொதுவில் தான் பெரும்பாலும் இருந்தார். சிம்மாசனத்தில் நிறையக் காட்சி அளித்தது இல்லை. ஒரு துணி சாய்வு நாற்காலியே தான் சிங்காதனம்.

நாள்முழுதும் அந்த மௌனப் பெருவெளியில் அமர்ந்து அவர் செய்து கொண்டிருந்த தவம் அளப்பரியது. ஆற்றலுடையது, அந்தத் தவத்தின் ஆகுதிக் குச்சிகள் புத்தகங்கள் ஆகும். படித்துக் கொண்டே இருக்க வேண்டும். சமாதி அடைவதற்கு மூன்று நாள் முன் வரை படித்தார். (இறுதி மூன்று நாளும் சீனிவாசன் ஏற்பாடு செய்த திருமுறை ஒலிப்பேழை ஒலித்ததைச் செவியேற்று அருளினார்).

சென்ற புரட்டாசி மாத நாண்மங்கல வழிபாடு நிறைந்து தென்கயிலை தவநெறிச்சாலை புறப்பட்டபோது, இளைய சன்னிதானங்கள் ஆதிய அன்பர்கள் முதன்முதலாய் அடிகளிடம் வலியச் சொன்னோம். அடிகள் உடல் நலம் கருதிப் பேரர் உறையவேண்டும் என்று, மெதுவாய்ச் சிரித்தார். பார்க்கலாம் என்றார். ஆறுச்சாமி வண்டி எடு என்றார். அங்கு சென்றார்.

ஆயினும் அன்பும் பண்பும் வலியுடையது அன்றோ. அதுகாட்டியே, பல்லோரும் பல்முறை உரைத்தார். இந்த தளர்ந்த உடலைப் பாதுகாக்க

எல்லாரும் முயற்சி செய்கிறீர். வினைப் பயனே தேகங்கண்டாய் பாடல் தெரியுமா உனக்கு என்றார். சிவபோகசாரம் என்றேன். பொருள் உரைத்தார்.

எப்போதும் நல்லது நடைபெற வேண்டும் என்று கண்டிப்புடன் இருப்போம் ஒழிய யாரையும் இழிவு செய்வதும் துன்பம் செய்வதும் இல்லை. ஆதலின் உடலில் நோய் நின்று வருத்தாது. ஆனால் மூப்பிற்குரிய தளர்வு தாங்கிக் கொள்ளக் கூடியதே என்றார்.

நிறைவு ஆண்டு : அடிகளாரின் அடித்தொண்டன் என்ற பெருமை பெற்றவர் கோவை மருத்துவ மையத் தலைவர் நல்ல.பழனிசாமி அவர்கள். அடிகளார் பெயரில் தனி மருத்துவமனை உருவாக்கிய பெருமைக்குரியவர். சென்ற ஆண்டு மருத்துவப் பரிசோதனைக்குப் பிறகு இளைய சன்னிதானங்களிடம் இவ்வாறு கூறினார், அடிகள் எவ்வகை நோயும் உடலில் இல்லை. மூப்பின் காரணமான இயல்பு தளர்ச்சியே. இருப்பினும் நான் அவரது இறுதி காலத்தில் அவரை உடனிருந்து பேணுவதைப் பெருமையாகக் கருதுகிறேன். ஆகவே மருத்துவமனையில் விரிவான தனி அறை அடிகளாருக்கென்றே பூசை அறைபோல அமைந்திருந்தார்.

அங்கு இருந்தபோது எல்லாம் அடிகள் அனைவரிடமும் நல்ல பழனிசாமி நமது அன்பர். உடனிருந்து பேண மிக விரம்புகிறார். ஆதலின் மருத்துவமனை இருக்க வைத்து விடுகின்றார் என்றே பல நேரங்களில் அவரது அன்பிற்கு இணங்கியே அங்குறைந்தார்.

இருப்பினும் சித்த மருத்துகளையும் தமது உயர் அறிவால் ஆராய்ந்து எடுத்து கொள்வார். ஒருமுறை மருத்துவமனையில் ஒரு மருத்துவர் வயது மூப்பின் காரணமாக சுவாசம் சிக்கல் ஏற்படும். ஆதலால் திருநீறு அதிகம் இடவும் வழங்கவும் வேண்டாம். சிக்கலிலும் அடிகள் சிரித்தார். மருத்துவர் அவர்பணி செய்யபட்டும். நீறு வழங்குவது எம் பணி அதுவும் நடக்கும். அதற்கு இடையூறு இன்றி மருத்துவம் செய்க என்றார்.

நிறைவுத் திங்கள் (ஆவணி 1–15): இளைய சன்னிதானம் தனது உள்ளூர், வெளியூர், அயல்நாடு என்ற அனைத்தும் விலக்கி தம் முதல் குருவின் திருவடித் தாமரையில் தவமே உருவாய் உடனிருந்தார். இவரின்றி யார்? அவரே இவராய், இவரே அவராய், அமைந்ததும் ஒரு அருங்காட்சி.

பாதம் துலக்கி, பல் துலக்கி, செவ்வாடை செம்மை செய்வது, உடல் தூய்மை பேணிப் பெருமை பெற்றார்.

பேரூரடிகளைப் பேணிய இளைய அடிகளின் செயல் சீடருக்கு உண்டான சிறந்த பாடம், செம்மை உண்டான சிறந்த தத்துவம்.

மீண்டும் வருவார் அஞ்சாதீர் என்று மருத்துவர்க்கு உரைத்தார்.

நிறைவாய் ஒரு அம்பலவாணர் அபிடேகம் : மூச்சுக் குழாய் வீக்கம் இருக்கிறது. சளி நிறைந்திருக்கிறது. ஒருவாரம் தொடர் சிகிச்சை செய்யலாம். உணவு செல்லுவதில் சிக்கல். ஆதலால் மூக்கு வழி, குழாய் அமைத்து திரவ உணவுகள் மட்டும் வழங்கலாம் என்று மருத்துவர் குழு அறிவுரை வழங்கினர். சனிக்கிழமை அம்பலவாணர் திருமஞ்சனம் சென்று வழிபாடு நடத்த அடிகள் அருளாணை இடுகின்றார். மருத்துவர்கள் அதிர்ந்தனர். தலைவர் எங்களைக் கடிந்து கொள்வார் என்றனர். நான் சொல்லிக் கொள்கிறேன் என்று ஆதீனம் வந்து சேர்ந்தார். உடன் ஆதீன அன்பர் மருத்துவர். செந்தில்ராசு மற்றும் உடனிருந்து பேண மருத்துவக் குழுவினரும் வந்தனர். கட்டிலுக்கு வந்ததும் அடுத்த ஆணை அதிர்வாய் வந்தது. சனிக்கிழமை நல்லெண்ணெய் தேய்த்து தலைக்கு குளிக்க வேண்டும். ஆன்மார்த்தப் பூசனை இயற்ற வேண்டும். மலர் நிறைய வேண்டும். சரியாக 10 நிமிடங்கள் பிறகு எழுந்தார். உயிர்க்கு உள்ள உறுதி, உடல் தளர்வை வென்றது. மூப்பு ஒன்றும் அஞ்சத் தகுந்தது அல்ல என்று அடிகளார் உணர்த்தினார்.

பூசனை முடிந்ததும் அம்பலவாணத் திருமஞ்சனம் முழுமையாய் கலந்து கொண்டார். நிற்பது கடினமாக இருந்ததால், ஓர் இருக்கை கொண்டு திருமஞ்சனம் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தார். தூய்மையின் பெருமையாய்ப் பேரொளி தீபத்தினை வழங்கினார்.

மாகேசுவரப் பூசனை நடைபெறும் நேரம் மருத்துவர்கள் வாய் வழியாக திட உணவு மிகக் குறைவாக வழங்க அறிவுரை தந்தனர். தலைவாழை இலை விரித்து அனைத்து அமுது வகைகளும் மிகச் சிறிய அளவில் வைத்தோம். அன்னம்பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம் என அன்பர்கள் உரக்கப்பாட அடிகள் உதடுகள் அப்பாடலை முணுமுணுத்தது. நீர் சுற்றி பஞ்சாமிர்தம் வைக்கும் இடைவெளியில் இளைய

சன்னிதானங்கள் தயிரமுதை இலையிலிருந்து எடுக்கச் சொன்னார். உச்சிவேளையில் அன்னம்பாலிப்பு நிறைந்தது.

அடிகள் அறைக்கு வந்ததும், மருத்துவமனை செல்லலாம் என்றனை மருத்துவக் குழுவினர். அப்போது மாகேசுவரப் பூசையில் தயிரமுது வைக்கப்படவில்லை சிறிது எடுத்து வர இளைய சந்நிதானங்களுக்கு ஆணை தந்தார். அம்பலாணர் திருவடியில் இருந்து சிறிது ததயிரமுது கொண்டு சென்று, இளைய அடிகள் முதன்முறையாகத் தன்கரங்களில் அமுதினை அடிகள் திருவாயில் தந்தார். அடிகளாரும் தன்சீடர் வழங்கிய நிறைவு அமுதத்தை உள்வாங்கி நிறைந்தார் மகிழ்ந்தார். அதுவே அவரின் இறுதித் திட உணவு.

படுக்கையிலிருந்து எழுந்து தனது முதன்மை நுழைவு வாயிலை அடைந்த போது நிறுத்தச் சொல்லி முதன்மை நுழைவு வாயில் மேற்புறச் சுவரில் அமைந்துள்ள குருமுதல்வர் ஆறுமுக அடிகள் அவர்களின் திருவுருவத்தினை நோக்கினார். அதிலிருந்த பழைய நூல் மாலையைத் தூய்மைக்காக நீக்கி வைத்திருந்தேன். சரியான அடிகள் பார்வை என் பக்கம் திரும்பியதை பார்த்து ஓடிச் சென்று புதுமாலை அணிவித்தோம் வணங்கிச் சென்றார்.

இவ்வாறு ஒவ்வொன்றிலும் உயரிய பாடம் வைத்திருந்தார். சில நேரங்களில் பாடங்களை நேரடியாகச் சொல்வார். பல நேரங்களில் ஓதாது உணர்த்துவார். உணர்ந்து கொண்டோர் உயரச் சென்றுள்ளனர்.

அன்று மருத்துவமனைக்குச் சென்றவர் அன்பர் குழாயின் அழுத்தத்தில் ஆவணி 11ம் நாள் திங்கள் கிழமை (26.8.2018) மற்றும் செவ்வாய்கிழமைகளில் மருத்துவப்பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினார். ஆதீனம் செல்லலாம் என்று உரைத்தார். புதன் அன்று புலவர் காலையில் தனது சிம்மக்குரலால் அதிர்ந்து ஆணையிட்டார். மருத்துகள் வேண்டாம், மருத்துவமனை வேண்டாம் ஆதீனம் செல்லவில்லை எனில் உணவு உண்ணேன். எல்லோரையும் உண்ணச் சொல்லும் அடிகள் பெருமாள் உண்ணமாட்டேன் என்ற போது அன்பர்கள் கூட்டம் உருகி நின்றது. அருளாணையின் அழுத்தம் தாங்காமல் ஆதீனத்தில் எழுந்தருளச் செய்தோம்.

கால் சிறிது பிடித்து விட அருளினார். திருமேனி எப்படித் தீண்டுவது? ஆனால் முப்போதும் திருமேணி தீண்டுவாராய் முத்தமிழ் மக்கள் மாற்ற வேண்டும் என்றல்லவா புரட்சி செய்தார், பாடுபட்டார். ஆதலின் உணர்ந்து செம்பஞ்சுப் பூங்காவி உடை கொண்டு போர்த்தித் திருவடித்தாமரையைப் பிடித்த போது; செம்மையாய பதம் பற்றிய போது தீக்குள் விரலை விட்டால் நந்தலாலா நின்னைத் தீண்டும் இன்பம் தோன்றுதையா எனும் வரிகளுக்கு ஒதாது உரையை உணர்ந்து கொண்டோம்.

சிரவையாதீனம் சன்னிதானங்கள் மற்றும் பழனியாதீனம் சன்னிதானங்களை இரவுப் பொழுதே காண வேண்டும் என்று உரைத்தருளினார்கள். இரவின் பொழுதில் இரு பெரும் சன்னிதானங்கள் எழுந்தருளினர். இளைய சந்நிதானங்கள் உடனிருந்தார்.

அடிகள் தம் தெளிவான சொற்களால் தன் சமாதி நிலை அமைய வேண்டியதை அருளினார்கள். ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும் பண்பு மரணத்தைத் தெளிவுடன் வழங்கிய அருள்ஞானம். உடனிருந்த பேணிய மருத்துவக் குழுவினர் நுட்பக் கருவிகள், பேணுதல் தொடர்ந்தது. அடியார்களைக் கண்டு அடிகள் உதிர்த்தது ஆழப் புன்னகை ஒன்று மட்டுமே.

ஆவணித்திங்கள் 12ஆம் நாள் காலையில் உடல் தூய்மை நீரால் அமைத்து பூசைனையைத் தானே செய்ய வேண்டும் என்றார். இளைய சன்னிதானங்கள் உடனிருந்து உதவினார். இருக்கையில் அமர இயலாதபோதும் பூசனை இயற்றினார். திருமுறை ஓதினார்.

அன்றைய நாளில் பெரும் எண்ணிக்கையுடைய அன்பர்கள் வந்தனர். அப்போது உயிர்வளிக்கலனைக் கழற்றி அன்பர்கள் உணருவந்தச் செல்லவேண்டும். மதிய உணவுக்கு என்ன வகையான உணவு என்பதை அறிந்து கேட்டனர். அருணனை அழைத்து வடையும், பாயசமும் இருக்க வேண்டும் என்று ஆணை தந்தார். எம் முதல் குரு எதைச் சிந்திக்கிறார், செயல்படுத்துகிறார். அன்பர்கள் அறியாது கலங்கினர். ஆனால் அடிகள் எண்ணிய எண்ணியாங்கு எய்தும் திண்ணியராக விளங்கினார்.

ஆவணித்திங்கள் 13ஆம் நாள் வெள்ளிக்கிழமை புலர்காலையில் பூசனை நிகழ்த்தி அனைவருக்கும் அருள்திருநீறு வழங்கினார். கல்லூரி மேனாள் முதல்வர் முத்துக்குமார ஐயாவை அழைத்துச் சென்றோம். முத்துக்குமாரசாமி என்ற மென்மையாகக் கூறி வாழ்த்தினார். இனி எல்லாம் இயல்பாகும் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் இருந்தது. 9.30 மணிக்கு கல்லூரிக் கூட்டுவரிபாட்டில் அபிராமியம்மைப் பதிகம் ஐம்பெரும்புராணம் ஓதி வழிபட்டோம். மாலையில் அடிகள் நலம்பெற கோவைச்சமய அமைப்புகள் கூட்டு வழிபாட்டிற்கு ஏற்பாடு செய்திருந்தன.

9.50 மணிக்கு அடிகள் அறைக்குச் சென்றபோது மோனதவப்பொலிவில் இருந்தார். பாதம் தொட்டு வணங்கியதும் திருநீறு தேடித்தந்து வாழ்த்தினார். மருத்துவர் செந்தில்ராசு அங்கிருந்தார். பூச நீறுபோல் உள்ளும் புனிதரின் ஞான நெற்றியில் வியர்வை முத்துக்கள். மருத்துவரின் அனுமதி பெற்ற குளிர்பதனக் காற்றை முடுக்கிவிட்டு அறையில் வெளிச்சம் குறைக்கப்பெற்றது.

மாசில் வீணையைப் போன்று திருமுறை ஒலிப்பேழையிசை, மாலை மதியமாய் அடிகள் ஒளி வீசும் திருமுகம். வீசு தென்றலாய்க் குளிர்க்காற்று. இளவேனில் போன்று சுற்றுக்சூழல். வண்டறைப் பொய்கை போல் வெளியில் அன்பர்கூட்டம். ஈசன் எந்தை இணையடி போற்றும் எந்தம் அடிகள். ஒலி எழுப்பாமல் வெளியே வந்து சிறுசன்னலின் திரைவிலக்கத் திருவடித்தாமரை தெரிந்தது. அசைந்தது, பரஞானமும், அபரஞானமும் அருளும் திருவடியினை நிறைவாய்ப் பார்த்த கணம் பேற்றிற்குரியது.

11.30 மணிக்குப் படுக்கைத் திரையினை விலக்கச் சொல்கிறார். மாணிக்க அடிகளின் திருவுருவத்தினையும் ஆறுமுக அடிகளின் திருவுருவத்தினையும் வணங்கி மகிழ்ந்து எழும்பொழுது அம்பலானரின் திருவடியிலிருந்து சரியும் செந்தாமரை போலச் சரிகின்றார். தளர்ந்த எம்பிரானை இளைய சன்னிதான தாங்கிப் பிடிக்கின்றார். மருத்துவக்குழு தன் மருந்துத் திறத்தைக் காட்ட எதையும் ஏற்கவில்லை.

செய்தி அறிந்ததும் உள்ளே ஓடிவருகின்றேன். திருமேனிக்கு அருகில் நின்று யாரைக் கேட்பது, எதனைக் கேட்பது, திகைத்து நின்றபோது, இதயத்துடிப்பு முதலின காட்டும் மருத்துவக்கருவித் திரை நீண்ட சங்கநாதம் போல் ஒலி எழுப்பியது.

புறக்கருவிகள் பொய் சொல்லாதே. ஆனால் அந்தக் கருவியில் மன்று நிலை இருக்கும். அலை வடிவாய் இரண்டு, எண் வடிவாய் ஒன்று அக மூன்று தரவுகள் இருக்கும். ஆனால் அந்த அரை நிமிடத்தில் அவை இரண்டும் எண்ணும் கோடுகளாயின. திரை மூன்று கோடுகளைக் காட்டியது. ஆம். சர்வமம். அடிகள் சர்வசமம் ஆனார் என்பதைக் கருவியே கத்திச் சொன்னது. இன்னும் அந்தத் திரையில் ஒரு கேள்விக்குறி தெரிந்தது.

சந்திதானங்களின் கேள்விகளை வலியுறுத்தியது

1. தமிழுக்கு ஏதாவது செய்வீர்களா?
2. சமயநிலை உயரப் பணிபுரிவீர்களா?
3. மனித வாழ்வு வளம் பெற என்ன பணி ஆற்றுவீர்கள்?

திரைகாட்டிய கேள்விக்கு விடை நாமே தருதல் வேண்டும்.

வெளியே வந்ததும் பதற்றுத்துடன் எதிர்வருகின்றார் புவியரசு, அடிகளாரின் ஆதி மாணவர். நிறைவுநாளில் தனது வருகைப்பதிவினை அடிகளிடம் அளித்த அன்பு மாணவர். கைபிடித்து அவரின் ஆதியான அடிகள் குறித்துக் கூறியபோது ஆதிமாணவர் இறதி நாளில் உகுத்த முதல் கண்ணீரே அனைத்தும் உரைத்தது.

முன்றிலில் அடிகள் வைத்த முல்லை பூத்தது. முல்லைப் பூத்தியோ பேரூர் நாட்டில் என்று கையறுநிலைக்கு வழிகாட்டி நகை தந்தது. அடிகளின் திருவடிகளை வணங்க மலர்ந்த முதல் பூ. அடிகள் திருவடிப்பேறில் கலந்ததைக் காற்று அறிவித்தது. மாலையில் மழை பொலிந்தது.

அடிகள் வானுறையும் தெய்வமாய்...
அருட்சமாதியில் குறைநீக்கிக் காக்கும் கடவுளாய்...
உச்சிகூப்பிய கையினராய் அடியார்கள்...

திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழிவழி பேரூராதீனம் கயிலைக்குருமணி முதுமுனைவர் சிர்வளர்சீர் குருமகாசந்நிதானங்கள், கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி அற்புக் கோலம் நிடி அருமறை சிரத்தின் மேலாம் சிற்பர வியோமம் ஆகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழலைத் திருக்கயிலையிலே போற்றுகின்றார். புனிதரின் திருவடியை நாம் போற்றுகின்றோம்.

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளின் வரலாற்று நூலுக்கு செய்தி கொடுத்து உதவிய நூல்கள்

ஞாலம் போற்றும் ஞானத்தந்தை ஆசிரியர் முனைவர் : திருமதி.ம.மனோன்மணி

வேளாளர் புராணம் ஆசிரியர் கந்தசாமிக் கவிராயர்.

கொங்கு மண்டல சதகம் பேரூர் மடாலயம் வெளியீடு

முத்தூர் தலைமாண்பு ஆசிரியர் எம்.வி.குப்புச்சாமிக்கவுண்டர்

முத்தூர் வரலாறு ஆசிரியர் புலவர் செ. இராசு

காட்டம்பட்டி சாந்தலிங்கர் பள்ளி பொன்விழா மலர்.

அடிகளாரின் மரகத விழா, ஒளி விழா மலர்கள்

தமிழ் வழிபாடு மாநாட்டு மலர்

விசைய பாரதம் வார இதழ்.

கொங்கு குலத்தெய்வக் கோயில்கள் குலச்செய்தி இதழ்.

கர்நாடக கொங்கு வேளாளக் கவுண்டர்கள் வெயிடும் காராளர் மாத இதழ்.

